# நிலவே நீ சாட்சி

முத்துலட்சுமி ராகவன்



தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

# நிலவே நீ சாட்சி

முத்துலட்சுமி ராகவன்

அறிவாலயம்
தபால் பெட்டி எண்: 667
புதிய எண்: 32/7, பழைய எண்: 107/7,
கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-14.
போன்: 28353520

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : நிலவே நீ சாட்சி |
| ஆசிரியர் | : முத்துலட்சுமி ராகவன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : அக்டோபர், 2009 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 204 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அறிவாலயம்<br>பு.எண்.32/7, ப.எண்: 107/7,<br>கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர் ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : **எஸ்.எஸ்.கிராபிக்ஸ்**<br>**சென்னை - 14. செல் : 98412 76209** |

**விலை: ரூ.75.00**



# நிலவே நீ சாட்சி

# நிலவே நீ சாட்சி

## 1

களங்கமில்லா பெண் நிலா

கானகத்தில் தொலைந்த நிலா

காவல் தேடிப் பரிதவித்ததற்கு,

கடவுள் தேடி ஓடியதற்கு

நிலவே நீ சாட்சி!

அமைதியாய் கண்களை மூடிப் பரவசத்துடன் வேண்டிக் கொண்டிருந்தாள் காவ்யா. கைகளைக் குவித்து வணங்கிக் கொண்டு இருந்தவளை "பிரசாதம் வாங்கிக் கோங்க" என்ற அர்ச்சகரின் குரல் கண்களைத் திறக்க வைத்தது. லட்சுமி தேவியைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டு பிரசாதத்திற்குக் கை நீட்டினாள். பூவும் குங்குமமும் இணைந்து வந்தது.

பக்கத்தில் நின்று கொண்டிருந்த வயதான அம்மாள். "லட்சுமி பூவும் பொட்டும் கொடுத்திருக்கும்மா. உனக்கு யோகம்தான்'' என்று சிரித்துக் கொண்டே கூறினாள். பதிலுக்கு மரியாதையுடன் சிரித்த காவ்யா, ஹரிதாவுடன் வெளியே வந்தாள். அலைகள் கொஞ்சும் கடலோரம் அமைந்துள்ள வெண்மை நிற அஷ்டலட்சுமி கோவில். தூரத்தில் தெரிந்த கடலருகில் சென்று மணலில் அமர்ந்து கொண்டபோது மனம் எதிரே தெரிந்த அலைகடலாய் ஆடியது. யானையின் தந்தம் போல் வெந்நிறக் கடைச லுடன் கூடிய அஷ்டலட்சுமி கோவிலை திரும்பப் பார்த்த காவ்யா பெருமூச்சு விட்டாள்.

"என்ன காவ்யா! ஏக்கமா பெருமூச்சு விடறே. ஒவ் வொரு வெள்ளிக்கிழமையும் அஷ்டலட்சுமிகளை தரிசனம் பண்ண வந்திடுவே. நாளைக்கு ஊருக்குப் போயிட்டால் அது முடியாதேன்னு வருத்தமா?'' என்றாள் ஹரிதா?

"ஆமாம் ஹரிதா! நேற்றுப் போல் இருக்கிறது. திருநெல் வேலியில் இருந்து வந்து நான் சென்னையில் காலேஜில் சேர்ந்தது. ஆச்சு. கண்ணை மூடித் திறக்கறதுக்குள்ளே காலம் எவ்வளவு வேகமாய் ஓடுது பார்த்தாயா? அதுக் குள்ள மூன்று வருசம் ஓடியே போய்விட்டது. இன்னை யோட ஃபைனல் எக்ஸாமும் முடிந்து விட்டது. நாளைக்கு நீயும், நானும் ஆளுக்கொரு திசையில் பிரியணும்.''

"மூன்று வருடங்கள் சேர்ந்தே இருந்திட்டோம். நாளை யோடு நம்ம பிரண்ட்சிப் கட்டாயிடும் அப்படித்தானே...?''

"தெரியலை ஹரிதா. எதையும் உறுதியாச் சொல்ல முடி யலை. ஆண்கள் எத்தனை வருடங்கள் ஆனாலும் நட்பை வாட விடாமல் காத்து வருகிறார்கள். பெண்கள் ஆசா

பாசங்களை விடுவதைப்போல் நட்பையும் ஒரு ஸ்டேஜில் துறக்கத்தான் வேண்டியிருக்கிறது.''

''பசங்களோட உலகமே தனி காவ்யா. ஏதாவது ஒரு பாலத்தைக் கடக்கும்போது அதன் பக்கச் சுவர்களில் ஜாலியாக உட்கார்ந்து கொண்டு அரட்டையடிக்கும் பசங் களைப் பார்க்கும்போது நம்மால் இப்படி உட்கார்ந்து அரட்டை அடிக்க முடியுமான்னு ஏக்கமாயிருக்கும் தெரி யுமா?''

''உன் வீட்டில் உனக்குச் சுதந்திரம் அதிகம் கொடுத்து வளர்த்து வருகிறார்கள் ஹரிதா. உனக்கே இப்படியென் றால் எங்கள் வீட்டில் கட்டுப்பாடுகள் அதிகம். எனக்கு எப்படியிருக்கும் சொல்லு?''

''மேலே என்ன செய்யப் போகிறே காவ்யா? பி.ஜி. பண் ணப் போகிறாயா? இல்லை வேலை தேடப் போகிறாயா?''

''தெரியலை ஹரிதா.''

''ஏண்டி? பிரண்ட்சிப் கட் ஆயிடுமான்னு கேட்டால் தெரி யலை என்றாய் சரி. ஆனால் எதிர்காலத் திட்டம் என்னன்னு கேட்டால் அதற்கும் தெரியலைன்னு சொல்கிறாயே?''

''உண்மையாகவே தெரியாது ஹரிதா. நான் மேலே என்ன செய்யணும்னு அம்மா, அப்பா, அண்ணாதான் முடிவெடுக்கணும்.''

''நீயாய் எதையும் யோசிக்க மாட்டாயா?''

''யோசிச்சுப் புண்ணியமில்லை ஹரிதா. என் முடிவு என் வீட்டிற்குப் பிடிக்காமல் போய் விட்டால் பிரளயமே வந்து விடும். அது தேவையான்னு நான் என்னைப் பத்தி எதுவுமே யோசித்ததில்லை. அவங்க என்ன சொன் னாலும் கேட்டுக்குவேன். எனக்குன்னு தனிப்பட்ட எதிர்பார்ப்புகளை வைத்துக் கொண்டதில்லை.''

"போடி, பூம்பூம்மாடு! இப்படியொரு பெண் இந்தக் காலத்தில் இருப்பாளா? சுயசிந்தனையில்லாத பெண் ணாக எப்படியடி உன்னால் இருக்க முடிகின்றது? வகுப் பில் 'புத்திசாலி' என்று பெயர் வாங்கியிருக்கிறாய். முதல் ரேங்கில் மார்க் வாங்குகிறாய். அப்புறம் ஏண்டி இப்படிச் சொதப்புற?"

"அது அப்படித்தான். குடும்பம் போர்க்களமாகக் கூடாது என்றால் நாம் ஜீரோவாக தாராளமாக இருக்கலாம். தப் பில்லை. குடும்ப அமைதிதான் முக்கியம். சரி என்னை விடு. நீதான் சுயமாய் முடிவெடுக்கும் அதிர்ஷ்டம் இருக் கிறவளாயிற்றே. நீ என்ன செய்யப் போகிறாய்?"

"மேலே... மேலே... படித்துக் கொண்டே இருப்பேன் காவ்யா. எனக்கு இந்த பி.எஸ்ஸி., எம்.எஸ்ஸி. பட்ட மெல்லாம் போதாது, ஐ.ஏ.எஸ். பண்ண வேண்டும். கலெக்டர் ஆக வேண்டும். அதுதான் என் லட்சியம். ஆனால் காவ்யா... நீ என்னை விட அதிகம் மார்க் வாங்கு கிறவள். உனக்கு இந்த மாதிரி லட்சியம் எதுவும் இல்லையா?"

"நான்தான் சொல்லுகிறேனே. ஒரு பெண்ணிற்கு இந்த அளவுப் படிப்பு போதும் என்று என் வீட்டில் சொல்லுவார் கள். பி.எஸ்ஸி. படிக்க விட்டதே கல்யாண மார்க்கெட்டில் வெறும் + 2 என்றால் மதிப்பில்லை என்றுதான். இதற்கு மேல் படிக்க வைக்க மாட்டார்கள்."

"இதுவரை ஒரு தடவை கூட உன் மனம் சொன்னபடி நீ நடந்து கொண்டது இல்லையா?"

"இல்லை - என் வீட்டில் என்ன சொல்வார்களோ அதைத்தான் செய்வேன்" என்று பதில் சொன்னாள் காவ்யா,

எதிர்காலத்தில் அவளது இந்த வார்த்தைகள் பொய்த்துப் போகப் போவதை அறியாதவளாய்.

''என்னமோ போடி. உன்னோடு நான் ஒரே ரூமில் மூன்று வருடம் கழித்து விட்டேன். உன்னை மாற்றவே முடியலை. ஆமாம். உன்னை ஒண்ணு கேட்கணும்.''

''ஏன் இரண்டு கேட்க மாட்டாயா?''

''ஜோக்கா...? ஹாஹா... போதுமா. சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்கிறாயா?''

''என் காதை உன்னிடம் எப்படியடி கொடுக்க முடியும்?''

''கடவுளே! இவள் ரோதனை தாங்க முடியவில்லையே.''

''சரிசரி சொல்லு'' என்று சிரித்தாள் காவ்யா.

''நேத்து சாயந்திரம் வினோத் என்கிட்ட வந்து பேசினான்.''

''ஓகோ. இதைச் சொல்லத்தான் இவ்வளவு பீடிகையா? வா போகலாம்'' என்று காவ்யா எழுந்திருக்க முயல ஹரிதா அவளை தோளைப் பிடித்து அழுத்தி அமர வைத்தாள்.

''பொறுடி. அவன் என்ன பேசினான்னு கேட்டுட்டு எழுந்திரு.''

''அவன் உன்கிட்டப் பேசினது உன் சொந்த விசயம். அதை நான் ஏன் கேட்கணும்?''

''இதுதானே வேணாம்கிறது. அவன் உன்னிடம் உன்னைத் திருமணம் பண்ணிக்கணும்னு விரும்பிக் கேட்டானாம். நீ மறுத்திட்டியாமே?''

''ஆமாம். அது முடிந்து போன விசயமாச்சே. இன்னும் ஏன் அவன் அதைப் பேசிக் கொண்டு திரிகின்றான்.''

"ஏண்டி. உன் வீட்டில் சம்மதிக்க மாட்டாங்கன்னு நினைக்கறியா? அவங்க மாட்டேன்னு சொல்லவே மாட்டாங்களே. வினோத் பணக்காரன். படிப்பை முடித்ததும் அவனோட கம்பெனியின் எம்.டி. உன் இனம்தான். வீட்டில் பெரியவர்களிடம் சொல்லி முறைப்படி பெண் கேட்டு வரேன்னு தவமிருக்கிறான். ஏன் வேண்டாம்கிற."

"சும்மாயிரு ஹரிதா. உனக்கு ஒண்ணும் தெரியாது. பணம் இருந்தால் போதுமா? குணம் வேண்டாமா?"

"அவன் குணத்திற்கு என்னடி குறைச்சல்? அவனுக்காக எத்தனை பெண்கள் ஏங்குகிறார்கள் தெரியுமா?"

"ஆமாம் உன்கிட்ட எல்லாப் பெண்களும் வந்து நாங்க ஏங்குகிறோம்ன்னு சொன்னாங்க. நீ கேட்டுட்டு வந்து என்கிட்ட சொல்கிறாய். ஏண்டி...? இப்படிப் பெண்களை அசிங்கப்படுத்தறே. ஊரில் இருக்கிற பெண்கள் எல்லாம் வேலை வெட்டி இல்லாமல் இவனை நினைத்துக்கிட்டு இருக்கிறது போல இருக்கு உன் பேச்சு."

"சரி சரி. நான் பெண்களைத் தப்பாச் சொல்லவில்லை. அவன் பெண்கள் விரும்பும் ஹீரோ என்று சொன்னேன் அவ்வளவுதான். என்னைக் காய்ச்சியது போதும். அவன் கண்ணில் தண்ணி விடுகிறான் தெரியுமா?"

"நீ அதில் படகு விடு. இப்போ நான் எழுந்து ஓடா விட்டால் அந்த பஸ்ஸை விட்டு விடுவேன். வாயை மூடிக்கிட்டு என்னோடு ஓடி வந்தா அந்தப் பஸ்ஸைப் பிடித்து விடலாம். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டவாறு காவ்யா எழுந்து விரைய ஹரிதா ஓட்டமும் நடையுமாய் அவளைப் பின் தொடர்ந்தாள். இருவரும் ஹாஸ்டல் வந்து சேர்ந்த பின்னர் இரவு வெகுநேரம் வளவளத்துக்

கொண்டு இருந்து விட்டு விடியும்போது உறங்கிப் போனார்கள்.

மறுநாள் காலையிலிருந்து மாணவிகள் தனியாகவும் அவர்களை அழைத்துப் போக வந்திருந்தவர்களுடனும் கிளம்பிப் போய்க் கொண்டிருந்தனர்.

"என்னடி காவ்யா இரண்டு பெட்டிகள் மட்டும்தானா?" என்று ஹரிதா கேட்டாள்.

"பக்கெட்டை கூட்டுகிற முனியம்மாவிடம் கொடுத்து விட்டேன். போர்வை தலையணையை வாட்ச்மேன் தாத்தாவிடம் கொடுத்து விட்டேன். டிரஸ்ஸையெல்லாம் போன செமஸ்டர் லீவில் ஊருக்குப் போனபோது முக்கால் வாசி கடத்திக் கொண்டு போய் வைத்து விட்டு வந்து விட்டேன். திருநெல்வேலி வரை டிரெய்னில் போகணும். அதிக சுமை எதற்கு? எனக்கு உன்னைப்போல் சுமந்து போக காரா வரப்போகுது?" என்றாள் காவ்யா.

"ஐடியா மன்னிதான் போ."

"மன்னியா? உனக்கு அண்ணனில்லையே. ஒத்தைக் காட்டு ரோஜாவாச்சே நீ? அப்புறம் மன்னின்னு கூப்பிடு கிறே?"

"வாஹ்ரே வா! இங்கே பாருடா. ஊமை கூட வாயடிக் கிறது. என்ன மேடம்...? அண்ணனிருந்தா மன்னியாக ரெடி யாக்கும். சரி எனக்குத்தான் அண்ணனில்லை. உனக்கு இருக்கிறாரே. நான் மன்னியாக... இல்லையில்லை... உன் அண்ணியாக வரவா?"

"நீ செய்தாலும் செய்வாய்டி. நீதானே மன்னின்னு சொன்னே?"

"மன்னனுக்குப் பெண்பால் மன்னிதானே. ஐடியா மன்னனுக்குப் பெண்பால் ஐடியா மன்னிதானே."

"என்ன ஒரு தமிழ்ப் புலமை. புல்லரிக்கிறது போ. தமிழ் அகராதியை உன்னைக் கேட்டு எழுதாமல் போய் விட்டார்களே."

"இப்போ என்னடி கெட்டுப் போய் விட்டது? நான் மாற்றி எழுதி விடுகிறேன்."

"நீ செய்தாலும் செய்வேடிம்மா. இந்த ஐடியா எனக்குச் சொந்தமில்லை. என் அண்ணனுக்குத்தான் சொந்தம்."

"அதுதானே. நீயாவது சுயமாய் யோசித்துச் செய்வதாவது?"

"சரிதான் போடி. எனக்கும் சேர்த்து நீ இரு சுயம்மாய்."

இருவரும் சேர்ந்து சிரித்துக் கொண்டிருந்தபோது ஹரிதாவின் அப்பா வந்துவிட ஹரிதா கவலைப்பட்டாள்.

"என்னடி காவ்யா. அப்பா வந்து விட்டார். இன்னும் உன் வீட்டில் இருந்து யாரும் வரவில்லையே."

"அண்ணன் கட்டாயம் வந்து விடுவார். ஏன் லேட்டுன்னு தெரியலை. நீ கிளம்பு ஹரிதா. நான் அண்ணன் வந்ததும் போய்க் கொள்கிறேன்."

பெங்களூர் போக வேண்டிய ஹரிதாவை அனுப்பி விட்டு காவ்யா யோசனையாய் நின்றபோது,

"காவ்யாம்மா. உனக்குப் போன் வந்திருக்கு" என்ற முனியம்மாவின் சத்தம் கேட்டது. காவ்யா விரைந்து சென்று தொலைபேசியை எடுத்தாள்.

"ஹலோ! காவ்யா! அண்ணன் பேசுகிறேன்ம்மா. இங்கே கிளம்பும் போது அப்பாவுக்கு சின்ன ஆக்ஸிடெண்ட்ம்மா. தலையில் அடிபட்டிருக்கு. ஆஸ்பிடலில் அட்மிட் பண்ண வேண்டியதாப் போச்சு. நான் வந்து

உன்னைக் கூட்டி வர முடியாது. நீ உடனே கிளம்பி வந்து விடு. என்ன சரியா?'' என்றான் ஆனந்தன். காவ்யாவின் அண்ணன்.

''அப்பாவுக்கு என்னன்னா ஆச்சு. அடிபலமா?'' என்று பதறினாள் காவ்யா.

''அப்படியில்லைம்மா. லேசான காயம்ன்னு அலட்சியமா இருக்கக் கூடாதில்லை. அதிர்ச்சியில் மயக்கம் போட்டு விட்டார். இரண்டு நாளில் வீட்டுக்கு வந்திடுவார். நீ கவலைப்படாதே. நானும் அம்மாவும் பார்த்துக் கொள் வோம். நீ மட்டும் பத்திரமாய் கிளம்பி வா'' என்றான் ஆனந்தன்.

''சரிண்ணா'' என்று கூறிவிட்டுப் போனை வைத்த காவ்யா ஹாஸ்டலில் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு வாட்ச்மேன் தாத்தா பிடித்து வந்த ஆட்டோவில் ஏறினாள்.

''எக்மோருக்குப் போங்க'' என்றாள் காவ்யா ஆட்டோ டிரைவரிடம்.

ஆட்டோ அரை வட்டமடித்துத் திரும்பிச் சென்றது ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் திசைக்கு எதிர் திசையில்...

## 2

விதைத்த விதை முளைத்துவந்து

செடியாகி நிற்கையிலே

காக்க ஒரு சொந்தமில்லை

தானாய் அது மரமானதற்கு

நிலவே நீ சாட்சி!

எப்போதும் போலவே அதிகாலையில் விழிப்பு வந்து விட்டது அசோகனுக்கு. உள்ளங்கைகளை விரித்து அதில் பார்த்துக் கொண்டவன் கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தபடி எழுந்தான். அறையின் கதவுக்குக் கீழே பேப்பர் பையன் தள்ளி விட்டிருந்த பேப்பர் பாதி உள்ளே பாதி வெளியேயென்று இருந்தது. குனிந்து பேப்பரை எடுத்துக் கொண்டவன் அறை ஜன்னல் திரையை விலக்கி சாலையின் எதிர்புறம் தெரிந்த காபி ஸ்டாலைப் பார்த்தான். கடைக்காரப் பையன் நிமிர்ந்து மாடி ஜன்னலில் தெரிந்த அசோகனைப் பார்த்து கை ஆட்டினான். பதிலுக்குக் கையாட்டிவிட்டுப் பேப்பரைப் பார்த்துக் கொண்டே அறையின் மூலையில் கிடந்த சேரில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தபோது கதவு தட்டப்பட்டது. திறந்தான்.

''காபி'' என்றான் ரங்கன். காபி ஸ்டால் பையன்.

''படுவேகம் தான் போ'' என்று பாராட்டுதலாய் கூறிய படி காபியை வாங்கிக் கொண்ட அசோகன் அதை அருந் தியபடி பேப்பரில் மூழ்கினான். பேப்பர் கப்பை அறையின் மூலையிலிருந்த குப்பைக் கூடையில் போட்டவன் எழுந்து குளித்து உடை மாற்றி தலையை வாரிக் கொண்டு கீழே இறங்கினான். மாடிப்படியில் இறங்கும்போது மாடிப் படியின் அடியில் கடையமைத்து எஸ்.டி.டி. பூத் நடத்தும் கல்யாண சுந்தரம்.

''குட்மார்னிங் சார்'' என்றான்.

''என்ன கல்யாணம் காலையிலேயே வந்திட்டபோல'' என்று கேட்டான் அசோகன்.

"ஆமாம் சார். நைட் பார்க்கும் பையனை அனுப்பனுமே. அவன் காலேஜ் படிக்கிற பையன். பார்ட் டைமா இங்கே வேலை பார்க்கிறவன். சீக்கிரம் அனுப்பினாத்தானே அவனும் காலேஜுக்குப் போக முடியும்."

"இப்போ இருக்கிற வயசுப் பிள்ளைகளெல்லாம் ரொம்பத் தெளிவா இருக்கிறாங்க. படிக்கும்போதே தன் செலவுக்கு சம்பாதிக்கிறான் பார். பிழைச்சுக்குவான்" என்று கூறிய அசோகன் விடை பெறும் பாவனையில் கல்யாண சுந்தரத்திடம் தலையாட்டி விட்டு சாலையில் இறங்கி நடந்தான்.

பேன்ட் பாக்கெட்டில் இரு கைகளையும் விட்டபடி சீழ்க்கையடித்துக் கொண்டே நடந்த அசோகன் கறுப்பு நிறத்தினன். உயரமாய், ஆஜானுபாகுவாய், கம்பீரமாய் தோற்றமளிப்பவனுக்கு ஒரு முரட்டுத் தோற்றத்தையும் சேர்த்து அளிப்பது அவன் நெற்றியில் புருவத்தின் மேலேயிருந்து வரும் அகலமான நீண்ட தழும்பு.

இளம் வயதிலேயே ஒரு விபத்தொன்றில் சிக்கியபோது ஏற்பட்ட தழும்பு அது. அந்த விபத்தில் தாய் தந்தையை இழந்து அநாதையானவன். வசதியான பெற்றோர் நகரத்தின் மையத்தில் ஒரு மாடி வீட்டையும், சில கடைகளையும், கிராமத்தில் ஒரு வீட்டையும் பத்து ஏக்கர் நிலத்தையும் கணிசமான பேங்க் பண இருப்பையும் விட்டுப் போயிருக்க அந்த வங்கிப் பணத்தின் வட்டியில் படித்து முடித்தான். கிராமத்து நிலங்களை குத்தகைக்கு விட்டு விட்டு கிராம வீட்டைப் பார்த்துக் கொள்ள ஆள் நியமித்து, குத்தகை வருமானத்தில் அவனுக்குச் சம்பளப் பணமும் அளித்தான். மீதமுள்ள வருமானம் வருடம் தோறும் வங்கியில் சேரும். அவனுடைய வீட்டின் கீழ்தளத்தையும், மாடித்

தளத்தையும் வாடகைக்கு விட்டு விட்டு மாடியில் ஒரு அறையில் தான் குடியிருக்க வசதி செய்து கொண்டு வசித்து வருகிறான். கடைகளை வாடகைக்கு விட்டிருக் கிறான்.

மாடிப்படியின் அடியில் ஒரு கடையமைத்து அதையும் எஸ்.டி.டி. பூத் மற்றும் ஜெராக்ஸ் எடுக்கும் கடையாக மாற்றி வாடகைக்கு விடும் அளவிற்கு யோசித்துச் செயல் படும் கெட்டிக்காரன். படித்து முடித்தவுடன் வேலை தேடாமல் சொந்தமாய் வங்கிப் பணத்திலிருந்து பாதி எடுத்து 'டிராவல் ஏஜன்ஸி' ஆரம்பித்து வெற்றிகரமாய் நடத்தி வருகிறான். அவனது டிராவல் ஏஜன்ஸியில் பத்து கால் டாக்ஸிகள், எட்டு டாடா சுமோ வண்டிகள், ஆறு வேன்கள் மற்றும் இரண்டு டூரிஸ்ட் பஸ்கள் இருக்கின்றன.

இருபது பேருக்கு வேலையளித்து மாதச் சம்பளம் கொடுக்கும் முதலாளி. கடைகள், வீடுகள், கிராமத்து குத்தகைப் பணம் ஆகியவை சேர்ந்து அவன் பாங்க் இருப்பை உயர்த்திக் கொண்டிருக்க டிராவல் ஏஜன்ஸி மூலமும் பணத்தை அள்ளிக் கொண்டிருக்கும் சிறு தொழிலதிபன். திருமணத்தில் ஆர்வமில்லாதவன். வாழ்க்கையை அதன் போக்கில் வாழ்பவன். சிறு வயதி லேயே தனித்து வளர நேர்ந்ததால் எதையும் முரட்டுத் தனமாய் எதிர்கொள்பவன். அதே சமயம் மிக நேர்மையான வன். மிக மிக நல்லவன்.

சற்றுத் தொலைவில் தெருமுனையிலிருந்த 'சீதாலட்சுமி மெஸ்'ஸில் நுழைந்தான் அவன்.

''வாடாப்பா! அசோகா!'' என்று வரவேற்றாள் மெஸ் மாமி.

அவளது இயற்பெயர் சீதாலட்சுமி. மெஸ் நடத்தி வந்த அவளது கணவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு படுக்கையில் விழ அவருக்கு உதவி செய்து வந்த மாமி வாழ்க்கையை நடத்த மெஸ் நடத்தும் பொறுப்பை மேற்கொண்டாள். குழந்தையில்லாதவள். கணவர் நோயில் விழுந்த போது அவள் பரிதவித்து நிற்கும்போது பெற்ற பிள்ளை போல் கை கொடுத்தவன் அசோகன். சீதாலட்சுமியின் கணவர் கோதண்டராமனின் வைத்தியச் செலவை ஏற்றுக் கொண்டு மருத்துவம் பார்த்தது முதல் மீண்டும் மெஸ் நடத்த மாமிக்கு பண உதவி செய்தது வரை அவன் சீதாலட்சுமிக்கு செய்த உதவிகள் மிக அதிகம்.

''இந்தப் பணத்தை எப்போ, எப்படிடா திருப்பி அடைப்பேன்'' என்று மாமி கண்ணீர் விட்டபோது,

''என்ன திருப்பிக் கொடுக்கப் போறீங்களா? உங்க பிள்ளைன்னு என்ன நினைச்சா எனக்கு உதவி செய்கிற கடமையிருக்குன்னு பேசாம வேலையைப் பாருங்க. இல்லைன்னு நினைச்சா அதை திருப்பிக் கொடுக்கிறதைப் பத்தி யோசியுங்க.'' என்று தாய், மகன் பந்தத்தில் அவளைச் சிக்கச் செய்து கடன் பட்ட உணர்விலிருந்து அவளைத் தப்புவித்தவன் அசோகன்.

மகனாய் அவன் நினைக்கும் சீதாலட்சுமி கடவுளுக்கு அடுத்தபடி கணவரை நேசிப்பவள், கணவருக்கு அடுத்த படி பெற்ற பிள்ளையாய் அசோகனை நேசித்தாள். அவன் மேல் அவள் காட்டும் வாத்சல்யம் சொல்லில் அடங்காதது. மெஸ் நடத்தும் மாமி என்ற பெயர் மருவி 'மெஸ் மாமி' என்று ஆகி இப்போது அவளது இயற்பெயர் அனைவராலும் மறக்கப்பட்டு 'மெஸ் மாமி' என்ற பெயரே நிலைத்து விட்டது.

"என்ன மாமி! ஊத்தாப்பம் ரெடியா?" என்றபடி இலையின் முன் அமர்ந்தான் அசோகன்.

"இதோ ரெடியாயிடுத்து" என்றவாறே இலை போட்டுப் பரிமாறினாள் மெஸ் மாமி. பசேலென்ற இலையில் வட்ட வடிவமாய் விழுந்த ஊத்தாப்பமும் தொட்டுக் கொள்ள தேங்காய் சட்னியும், தக்காளி சட்னியும் துணைக்கு சாம்பாரும் அணிவகுத்து பார்க்க அழகாகவும் நாவில் உமிழ் நீரை ஊற வைப்பதாகவும் இருந்தது.

ஏறக்குறைய அசோகன் சாப்பிட்டு முடிக்கும் நேரம் மெஸ்ஸின் வாசலில் சத்தம் கேட்டது. நிமிர்ந்தான். பலவேசம்! குடிகாரன். என்ன வேலை செய்கிறானென்று அந்தத் தெருவிலும், சுற்று வட்டாரத்திலும், போலீஸிலும் உள்ளவர்களுக்கு நன்கு தெரியும். தினந்தோறும் யாரையாவது அடித்துச் சம்பாதிக்கும் 'அடியாள்' அந்தத் தெருவில் நடந்த கலாட்டாக்களில் நிறைய முறை அசோகன் அவனை எச்சரித்திருக்கிறான். 'இங்கே எதற்கு வந்தான்?' என்ற யோசனையுடன் எழுந்து கைகழுவி விட்டு வந்தபோது பலவேசம் மெஸ் மாமியிடம் உரத்த குரலில் கத்திக் கொண்டிருந்தான்.

"ஏய்ய்...! நான் கேட்கிறது காதில் விழுகலையா? சிக்கன் பிரியாணியும், மீன் வறுவலும் கொண்டு வான்னு கத்திக்கிட்டு இருக்கேன். மரமாட்டம் நிற்கிற. போ, போய் கொண்டு வா."

"ஏண்டாப்பா, காலங்கார்த்தாலே வந்து என் பிராணனை வாங்கணுமா? இங்கே அது மாதிரியெல்லாம் சாப்பாடு கிடையாதுடாப்பா."

"பின்னே ஏன் முனியாண்டி விலாஸ் நடத்துற?"

“ராமா! முனியாண்டி விலாஸ் போக வேண்டியவன் இந்த மாமி மெஸ்ஸுக்கு வந்து கத்துறானே பெருமாளே! இது என்ன சோதனை! நாராயணா! நான் புலம்பறது உன் காதில் விழுகலையா?”

“இன்னாம்மே! ஓராளு, ரெண்டாளு, மூணாளு பேரு சொல்லி என்னை மிரட்டுற? யாரு அந்த ராமு, பெரு மாளு, நாராயணா வரச் சொல்லு அந்த மூணு பேத்தையும்... என்னா! அவங்க என்ன என்னைவிடப் பெரிய வஸ் தாத்தா? இந்தப் பேட்டைக்கே தெரியும். பலவேசம்ன்னா யாருன்னு... அவங்க மூணு பேத்தையும் ஒத்தையா நின்னு வெத்தல பாக்கு போட வைக்கல என் பேரு... என் பேரு...” என்று தள்ளாடியவன் அருகே சென்று கொண்டிருந்த வனைப் பிடித்து நிறுத்தி,

“என் பேரு என்னடா” என்றான் குடிபோதையில் தன் பெயரையே மறந்தவனாய். அவன் தலையில் அடித்துக் கொண்டு விலகிச் செல்ல மாமி திணறிப் போனாள். அவள் பார்வை உதவிக்காக அசோகனைத் தேடியது. பேண்ட் பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்து கைகளை யும், வாயையும் துடைத்துக் கொண்ட அசோகன் அதை பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டே பலவேசத் திடம் போனான்.

“வெளியே போடா” என்றான் பலவேசத்திடம்.

“ஏய்ய்... யாருடா நீ? என்னை வெளியே போகச் சொல்ல நீ யாருடா?”

“ம்ம்ம். நான்தாண்டா அந்த ராமன், பெருமாள், நாரா யணன்.”

“என்னாது...” என்று கண்கள் மேல் கைகளை விரித்து அசோகனின் முகத்தைப் பார்த்த பலவேசம் குடிபோதை யில் தள்ளாடியவாறு.

“யாரை ஏய்க்கப் பார்க்கிற. மூணு பேரு வரணுமே. நீ ஒத்தை ஆளுள்ள நிற்கிற” என்றான்.

“மூணு பேரும் சேர்ந்து ஒரே ஆளா வந்திருக்கேண்டா. வெளியே போடா குடிகார நாயே! குடிச்சா உனக்கு அறிவு இல்லாமப் போயிடுமா? எத்தனை தடவை சொல்லியிருக் கேன்டா மகனே! இந்த மாதிரி வாலாட்டாதேன்னு... சாப்பிடுற இடத்தில் வந்து கலாட்டாவா பண்றே... வா வெளியே...” என்று பேசிக் கொண்டே அசோகன் பல வேசத்தை நெட்டி வெளியே தள்ளிக் கொண்டு வந்தான். வெளியே அவன் தள்ளிய வேகத்தில் நிற்க முடியாமல் குடி போதையில் தள்ளாடிய பலவேசம் தெருவில் விழுந் தான். விழுந்த வேகத்தில் போதை தெளிய எழுந்தவன்,

“ஏய்ய்... யாரைத் தள்ளி விடுற” என்று கத்தியவாறு அசோகன் மேல்பாய அசோகன் ரௌத்ரமானான். இரு வரும் மாமி கடை வாசலில் கட்டிப் புரண்டார்கள். கடைசி யில் தோற்றுப் போன பலவேசம்.

“டேய்ய். ராத்திரி வந்து ஒன்ன பொலி போடறேண்டா. ஒன்ன ரெண்டுல ஒண்ணு பாக்கலேன்னா இந்தப் பல வேசம் ஆம்பள இல்லடா” என்று கத்திக் கொண்டே போனான்.

“போடா போ. யாரை யார் பொலி போடறாங்கன்னு பார்ப்போம்” என்றவாறு கை, கால்களில் தூசி தட்டிக் கொண்டிருந்த அசோகனை கையெடுத்துக் கும்பிட்டாள் மெஸ் மாமி.

“உனக்கு ஆயிரம் கோடி நமஸ்காரம்டா குழந்தே! எவ்வளவு வசதியான பிள்ளையாண்டான் நீ. இந்த மாமிக் காக குடிகாரனோடு ரோட்டில் கட்டிப் புரண்டு சண்டை போட்டியே. நீ சொன்ன மாதிரி நீ பெருமாள் தாண்டா

குழந்தை! சாட்சாத் அந்த விஷ்ணுவே வந்து என்னைக் காப்பாத்தின மாதிரி தோணுதுடா. நீதாண்டா என் பிள்ளை."

"சரி சரி விடுங்க மாமி. இது பெரிய விசயமா? மதியம் சாப்பிட வரமாட்டேன். ராத்திரி சாப்பாட்டை கேரியரில் ரூமுக்குக் கொடுத்து விடுங்க" என்றவாறு தனது இரு சக்கர வாகனத்தில் ஆரோகணித்தான் அசோகன்.

டிராவல் ஏஜன்ஸியை அடைந்து உள்ளே சென்று அமர்ந்தபோது அவனது செல்போன் மணியடித்தது.

"ஹலோ! அபிராமி டிராவல் ஏஜன்ஸி" என்று தனது அம்மா அபிராமி பெயரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் டிராவல் ஏஜென்ஸியின் பெயரைச் சொன்னான் அசோகன்.

"தியாகு பேசறேண்டா" என்றது மறுமுனை.

"அடடா. நம்பரைப் பார்க்க மறந்திட்டேன்டா."

"உனக்கு மறதியே வராதே. டியூட்டி கான்சியஸ்னு சொல்லு. டிராவல் ஏஜன்ஸிக்கு வந்திட்டால் தொழில் ஞாபகம்தான்" என்றான் தியாகு என்ற தியாகராஜன். அசோகனின் உயிர் நண்பன். பள்ளியிலிருந்து கல்லூரி வரை சேர்ந்தே படித்தவர்கள். பட்டம் பெற்றதும் அசோகன் 'அபிராமி டிராவல் ஏஜன்ஸி'யை துவக்கி விட்டான். தியாகராஜன் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் படித்தான். இன்று நகரில் உள்ள திறமையான இளம் வக்கீல்களில் அவனும் ஒருவன். அன்பான தாய், அழகான இளம் மனைவி, சமீபத்தில் பிறந்த பெண் குழந்தையென்று வாழ்க்கையில் செட்டிலானவன்.

"சும்மா வாராதேடா வக்கீல். என்ன காலையிலேயே போன் பண்ணியிருக்க? இந்நேரம் கோர்ட்டில் கேஸ் கட்டுக்களோடு குடும்பம் நடத்திக்கிட்டு இருப்பியே?"

“இப்போ வீட்டில் குடும்பம் நடத்திக்கிட்டு இருக்கேன். என் மாமனார் கிராமத்திலிருந்து வந்திருந்தார். அவரை ஊரில் விட்டு விட்டு வர வேண்டும். கார் ரிப்பேர் டாக்ஸி வேண்டும்.”

“டேவிட், மணி ரெண்டு பேரும் ரெண்டு டாக்ஸி யோட போயிட்டாங்க. வல்லரசு வேனை எடுத்துட்டுப் போயிட்டான். மத்தவங்க ஆன் லைன்... ம்ம்... சரி. நானே ஒரு வண்டியை எடுத்துக்கிட்டு வரேன்.”

“சிரமமில்லையே.”

“அடச்சீ! என்னடா சிரமம். உன் மாமனார். உமாவோட அப்பா. அவரை ஊரில் விட்டு விட்டு வருவது என் கடமையில்லையா?” என்றான் அசோகன். உமா, தியாக ராஜனின் மனைவி. அசோகனின் உடன் பிறவா தங்கை.

நண்பனின் மாமனாரை அவரது கிராமத்தில் விட்டு விட்டு திரும்பி வரும்போது இருட்டத் தொடங்கி யிருந்தது. டேப்பில் பாட்டைப் போட்டு விட்டு கூடவே மெலிதாகப் பாடிக் கொண்டு வண்டியை ஒட்டிக் கொண் டிருந்தான். சென்னை நகரின் எல்லை ஆரம்பமாகியிருந்தது. தூரத்தில் ஒரு இளம் பெண் பெட்டிகளோடு நடு ரோட் டில் நிற்பது போல் தெரிந்தது.

‘என்னடா இது நட்ட நடு ரோட்டில் நிற்கிறாள். பயமே யில்லையா’ என்று நினைத்தவன், ‘ஒருவேளை மோகினிப் பிசாசோ’ என்று எண்ணமிட்டான்.

‘நடுராத்திரியை விட்டு விட்டு பொழுது மங்கினவுடன் மோகினிப் பிசாசு வந்துவிடுகிறது போல’ என்று நினைத் துச் சிரித்துக் கொண்டான். கூடவே ‘எந்த மோகினிப் பிசாசு பெட்டிகளோடு நிற்கும்’ என்ற எண்ணமும் வர சிரிப்பு

அதிகமாகியது. வண்டி நெருங்க, நெருங்க உண்மையிலேயே ஒரு இளம் பெண் கைகளை ஆட்டியபடி வண்டியை நிறுத்த முயன்று கொண்டிருந்தது தெரிந்தது. நிறுத்துவது போல் அருகில் வண்டியைக் கொண்டு போன அசோகன் அந்தப் பெண் ஓடி பெட்டிகளை எடுக்கும்போது ஆக்ஸிலேட்டரை அழுத்தினான்.

கார் நிற்காமல் பறந்தது.

## 3

பூங்கொடியோ புயலினிலே
புண்பட்டு நிற்கையிலே
காட்டுமரம் துணைக்கு வந்து
காவலுக்கு நின்றதற்கு
நிலவே நீ சாட்சி!

அப்பாவின் உடல்நிலை பற்றிய கவலையும் தனியாக இரவுப் பயணம் செய்து பழக்கமில்லாதவள் இன்று தனித்துப் பயணம் செய்ய வேண்டி வந்ததால் தோன்றிய இனம் புரியா பதட்டம் நிரம்பிய பயமும் கொண்டிருந்த காவ்யா வெகு நேரம் கழித்துத்தான் ஆட்டோ பாதை மாறிப் போவதைக் கவனித்தாள்.

"டிரைவர்! என்ன இது? இது எக்மோர் போகும் பாதையில்லையே?" என்று கேட்டாள். ஆட்டோ டிரைவரிடமிருந்து பதிலேதும் வரவில்லை. இப்போது ஆட்டோ சாலையிலிருந்து மேடு பள்ளமான பாதைக்கு மாறியிருந்தது. கலவரமாகிப் போன காவ்யா.

''ஏய்ய்! வண்டியை நிறுத்து'' என்று கூச்சலிட்டாள். ஆட்டோ வேகம் கூடியதேயொழிய நிற்பதாக இல்லை. ஆட்டோவிலிருந்து குதிக்க முடியாத வேகம். திகி லெடுத்தது காவ்யாவிற்கு. முன்னால் சாய்ந்து ஆட்டோ டிரைவரின் சட்டையைப் பற்றி உலுக்கினாள். அவன் தள்ளிய வேகத்தில் பின் சீட்டில் விழுந்தவளின் பின்னந் தலையில் எதுவோ இடித்தது. எடுத்துப் பார்த்தாள். இரும்புக் கம்பி. எடுத்த வேகத்தில் ஓங்கி ஒரு போடு போட்டாள். ''ஆ''வென்ற சத்தத்துடன் தலையைப் பிடித்துக் கொண்டான் அவன். ஆட்டோ ஒரு மரத்தில் மோதி நின்றது.

அப்படியே முன்னே சாய்ந்தான் அவன்.

இறங்கி பெட்டிகளைத் தூக்கிக் கொண்ட காவ்யா ஒரே ஓட்டமாய் திரும்பிப் பார்க்காமல் ஓடினாள். தூரத்தில் சாலை தெரிந்தது. வண்டிகள் போய்க் கொண்டிருந்தன. பதட்டத்துடன் சாலையை அடைந்தவள் வாகனங்களை நிறுத்த முயன்று கையை ஆட்டிக் கூச்சலிட்டாள். எந்த வண்டியும் நிற்கவில்லை. பதைப்புடன் பின்னால் திரும்பிப் பார்த்தாள். தூரத்தில் அவன் வருவது தெரிந்தது. அதிர்ந்தாள். 'கடவுளே காப்பாற்று' என்று வேண்டிக் கொண்டவள் நடுச்சாலைக்குப் போய் நின்று கொண்டாள். ஒன்று அடுத்து வரும் வண்டி நிற்க வேண்டும். இல்லா விட்டால் அவள் அடிபட்டுச் சாக வேண்டும்.

கார் ஒன்று வருவது தெரிந்தது. இரு கைகளையும் ஆட்டி நிறுத்த முயன்றாள். நிறுத்துவது போல் வேகம் குறைத்த கார் அவள் ஓடிப் பெட்டிகளை எடுக்க முயலும்போது வேக மெடுத்துப் பறந்தது. அதே நேரம் அவள் தோளில் அருகே நெருங்கியிருந்த ஆட்டோ டிரைவரின் கை விழுந்தது.

நெருப்புப் பட்டவளாய் அவன் கையை உதறிய காவ்யா பெட்டிகளைப் போட்டுவிட்டு அப்படியே ஓட ஆரம் பித்தாள். பின்னால் அவன் துரத்திவர புலியின் கையில் அகப்படாமல் பறந்தோடும் மானின் வேகத்தோடு ஓடியவள் எதன் மீதோ மோதி நின்றாள்.

அதே நேரம் பின்னால் துரத்தியவன் அருகே வந்து விட நடுங்கிய காவ்யா மீண்டும் ஓட முயல அவனின் கரம் பற்றி நிறுத்தியது. அசோகனின் கரம். காரின் முன் விளக்குகளைப் போட்டவன் துரத்தி வந்தவனை நிமிர்ந்து பார்த்தான். அசோகனை லட்சியம் செய்யாமல் காவ்யாவை நெருங்கியவனை விரல் சொடுக்கி அழைத்தான் அசோகன். அவன் திரும்பிப் பார்க்க,

"போய்விடு" என்றான் ஒற்றைச் சொல்லாய்.

"போகலைன்னா...?"

"போக வைப்பேன்."

"அவளை விடு போகிறேன்."

"இவள் யார்? உன் தங்கையா?"

"அந்த உறவு முறையெல்லாம் சொல்லாதே."

"வேறெந்த உறவு முறை? நீதான் சொல்லு. கேட்போம்."

"அவன் எனக்கு எந்த உறவு முறையுமில்லை" என்றாள் காவ்யா. மழையில் நனைந்த கோழிக் குஞ்சாய் நடுங்கிய படி.

"பின்னே ஏன் இவன் கூட வந்தாய்?" என்றான் அசோகன்.

"இவன் ஆட்டோ டிரைவர். இவன் ஆட்டோவில் எக்மோர் போக ஏறினேன். நான் இவன் கூட வரவில்லை. இவன் ஆட்டோவில் வந்தவள்."

"அப்படிப் போடு. ஐயா எக்மோருக்குப் போகாமல் ராங்க் ரூட்டில் போகிறார். அப்படித்தானே?"

"ஆமாம்."

"ஏன்டா அறிவு கெட்ட நாயே! உன்னை நம்பித்தானே உன் ஆட்டோவில் ஏறியிருக்கிறாள். நீயானால்... ச்சீ" என்று காரி உமிழ்ந்த அசோகன் காவ்யாவின் கையைப் பிடித்து அழைத்தபடி திரும்பி நடக்க முயல அவன் முன்னே வந்து மறித்தான். இப்போது அவன் கைகளில் கத்தி முளைத்திருந்தது.

"மரியாதையாய் அவளை விட்டுவிடு. இல்லைன்னா..." என்றபடி கத்தியை மேலும், கீழும் ஆட்டினான் அவன்.

"ஏண்டா. நீ செய்யறதே ஈன வேலை. இதில் மரி யாதை வேறு கேட்குதா உனக்கு? மரியாதையில்லாமல் சொல்றேன். நான் இவளை விட்டுப் போக மாட்டேன். என்னடா செய்வே?"

"கீசிடுவேன் கீசி..."

"சரியாப் போச்சு போ. இன்னைக்குக் காலையில் முழிச்ச முழி சரியில்லைப்பா. எல்லோரும் என்னை பொலி போடவும் கீசவும் அலையறாங்க."

பேசிக் கொண்டே அவன் சற்றும் எதிர்பாராத வண் ணம் அவன் மேல் பாய்ந்த அசோகன் அவனின் கைகளைப் பற்றி பின் பக்கம் கொண்டு போய் முறுக்கிக் கத்தியைக் கீழே போட வைத்தான். மேற்கொண்டு அசோகன் அவனை பிழிந்து எடுத்து துவைத்து விட்டான்.

கிழிந்த துணிச்சுருளாய் சாலையில் கிடந்தவனை எட்டி உதைத்து விட்டுக் காவ்யாவைப் பார்த்து,

''இவன் ஒருவனை வைத்து ஆட்டோக்காரர்களைத் தவறாக நினைத்து விடாதே. ஆட்டோவில் தவற விட்ட கல்யாண நகைகளை வீடு தேடிப் போய் கொடுத்து விட்டு வரும் ஆட்டோக்காரர்கள்தான் அதிகம். இவனைப் போல இருக்கிறவர்கள் சொற்பம்'' என்றான். மழையில் நனைந்த கோழிக் குஞ்சு போல் ஏற்கனவே நடுங்கிக் கொண்டு இருந்தவள் அவன் சொன்னதற்கு 'சரி'யென்பதாய் தலையாட்டினாள்.

காரின் பின் கதவைத் திறந்து ஏறிக் கொள்ளச் சொன்னதும் தயங்கிக் கொண்டே ஏறி பின் சீட்டில் ஒடுங்கி அமர்ந்தாள். காரில் ஏறி அதை ஸ்டார்ட் செய்த அசோகன் அரை வட்டமடித்துக் காரைத் திருப்பி வந்த வழியே ஓட்டினான்.

''என்... என்னது... இது... காரும் வேறு பாதையில் போகுதே'' என்று காவ்யா பதறினாள்.

''மெள்ள... மெள்ள... காரிலிருந்து குதிச்சுராதீங்க. உங்க பெட்டியை நடு ரோட்டில் போட்டு விட்டு வந்திருக்கீங்களே. எடுத்துக்கலாமா, வேண்டாமா?''

''ஐ ஆம் சாரி!'' அவள் முகம் வெட்கத்தில் கன்றியது.

''தப்பா நினைக்காதீங்க. நான் ரொம்ப பயந்து போயிருக்கிறேன். அதுதான் அப்படிக் கேட்டு விட்டேன்'' என்றாள் மன்னிப்புக் கேட்கும் குரலில்.

''இட்ஸ் ஆல்ரைட்'' என்றபடி இறங்கிப் பெட்டிகளை எடுத்து அவளிடம் கொடுத்தான். அவற்றை வாங்க கை நீட்டியவளை காரின் உள்புற வெளிச்சத்தில் முதன் முறையாக நன்றாகப் பார்த்தவன் அயர்ந்து போனான். என்ன ஒரு மென்மையான அழகு! மருண்ட விழிகளின்

கண்ணீர் பார்வை அவன் மனதைப் பிழிந்தது. பார்வைக்கு நல்ல குடும்பத்துப் பெண் போல் குடும்பப் பாங்காய் இருந்தாள்.

'ரயில்வே ஸ்டேசன் போக வேண்டியவள் இந்த அத்துவானக் காட்டில் மாட்டிக் கொண்டு... ஐயோ பாவம்!' என்று எண்ணிக் கொண்டான்.

'சுதந்திரம் வாங்கி அறுபது ஆண்டுகள் ஆகி என்ன... காந்தி கண்ட கனவு சுதந்திரம் வரவேயில்லையே' என்று மனதிற்குள் கூறிக் கொண்டவன் காரை விரைவாய் செலுத்தினான். சென்னை மாநகரில் கார் நுழைந்தது.

''இப்போ எக்மோருக்கு வண்டியை விடவா'' என்று கேட்டான் அசோகன்.

''திருநெல்வேலி டிரெய்ன் போயிருக்குமே'' என்றாள் காவ்யா.

''திருநெல்வேலி தான் உங்க ஊரா?''

''ஆமாம்.''

''சென்னைக்கு எதற்காக வந்தீங்க?''

''காலேஜ் படிக்க. இங்கேதான் டிகிரி படித்தேன். ஹாஸ்டலில் தங்கிப் படித்தேன். நேற்று ஃபைனல் எக்ஸாம் முடிந்து விட்டது. இன்று அண்ணன் வந்து என்னைக் கூப்பிட்டுப் போவதாக இருந்தது. அப்பாவுக்கு திடீர்னு ஆக்ஸிடெண்ட் ஆகிவிட்டதால் அண்ணன் போன் பண்ணி என்னைக் கிளம்பி வந்து விடச் சொன்னார்.''

''காலையில் போயிருக்கலாமே. இரவில் தனியாகக் கிளம்பலாமா?''

''தப்புத்தாங்க. இப்பத்தான் புரியுது. அப்பாவுக்கு என்ன ஆச்சோன்னு பதட்டத்தில் தனியாகப் போகிறோம்கிறதை மறந்திட்டுக் கிளம்பிட்டேன்.''

''அங்கே திருநெல்வேலியில் காலேஜ் இல்லையா?''

''அண்ணனுக்கு திடீர்னு மெட்ராஸுக்கு மாறுதல் வந்து விட்டது. அதனால் இங்கே காலேஜில் இடம் வாங்கிச் சேர்த்து விட்டார்கள். கடைசி நிமிடம் டிரான்ஸ்பர் கேன்சலாயிருச்சு. திருநெல்வேலியில் காலேஜில் இடம் கேட்கப் போனால் முடிஞ்சிருச்சுன்னு சொல்லிட்டாங்க. அதனால் இங்கேயே ஹாஸ்டலில் தங்கிப் படிச்சேன்.''

''இங்கே எந்தக் காலேஜில் படிச்சீங்க?''

அவள் காலேஜின் பெயரைச் சொன்னாள். கேள்விகளுக் குச் சரளமாய் பதிலளித்துக் கொண்டே வந்தாலும் அவளது குரல் அழுகையுடன் நலிந்து ஒலித்தது. நடந்த நிகழ்ச்சி யின் பாதிப்பிலிருந்து அவள் இன்னும் வெளிவரவில்லை யென்பதை உணர்ந்த அசோகன் அவளை சகஜமாக்க மேலும் கேள்விகளைக் கேட்கலானான்.

''என்ன படிச்சுக்கிட்டு இருந்தீங்க.''

''பி.எஸ்ஸி. மேத்ஸ்.''

''ஒகோ. இப்போ திருநெல்வேலிக்குப் பஸ்தான் உடனே கிடைக்கும். பஸ் ஸ்டாண்டு வரை வந்து பஸ் ஏற்றி விடுகிறேன். போய் விடுவீர்களா?''

''சார்...'' அவள் தயக்கமாய் அழைத்தாள்.

''சொல்லுங்க.''

''அது... வந்து... வந்து...'' அவள் தயங்கினாள்.

''என்னம்மா?'' என்றான் அவன் கனிவான குரலில்.

அந்தக் கனிவில் தைரியம் பெற்றவளாய் காவ்யா தயங்கித் தயங்கிக் கூறினாள்.

''எனக்குப் பயமாக இருக்கிறது. ஒரு வேளை அவன் திரும்பவும் பின்னாடியே வந்து விட்டால்... அதனால்...''

"அதனால்...?"

"அதனால்... நீங்களும் என் கூட துணைக்கு திருநெல் வேலி வரை வர முடியுமா?"

அவள் படாரென்று கேட்டு விட்டாள். அவன் யோசித் தான். அவன் யோசிப்பதைக் கண்டு பயந்தவள்.

"உங்களுக்கும் சேர்த்து நான் டிக்கெட் எடுத்து விடு கிறேன் சார். திரும்பி வர பஸ் சார்ஜும் கொடுத்து விடு வேன்" என்றாள்.

அவனுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. வாய் விட்டுக் கடகடவென்று சிரித்தவன் திரும்பி அவளைப் பார்த்தான். எதுவும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்த குழந்தையைப் போலிருந்தாள். அவனது பண பலம் தெரி யாத அவளது எளிமை உணர்வு அவனைக் கவர்ந்தது. காரை நிறுத்தாமல் வேகம் கூட்டி ஓட்ட சீக்கிரத்தில் நகரத்தைப் பின்னுக்குத் தள்ளி விட்டுச் சாலையில் வேகமெடுத்து கார் ஓட ஆரம்பித்தது.

"ஐயோ. கார் பஸ் ஸ்டாண்டிற்குப் போகலையே" என்று அவள் பதற,

"ஆமாம் பஸ் ஸ்டாண்டிற்குப் போகலை. திருநெல் வேலிக்குப் போகிறது" என்று புன்முறுவலுடன் பதில் சொன்னான் அவன்.

"காரிலேயே திருநெல்வேலி போகிறோமா?"

"ஆமாம்" என்றவாறு காரை ஓட்டியவாறு செல்போனை எடுத்தவன் உதவியாளர்களுக்கு அவன் இல்லாதபோது மேற்பார்வை செய்து வேலையை நடத்தக் கட்டளைகள் பிறப்பித்தான். அவன் பேசுவதைக் கவனித்துக் கொண் டிருந்தவளுக்கு அவனது பணபலம் புரிந்தது. அவனிடம்

பஸ் சார்ஜ் கொடுக்க எண்ணி அதையும் பாய்விட்டுச் சொல்லிய தன் முட்டாள் தனத்தை நினைந்து வருந்தியவள்,

''ஐ ஆம் சாரி. நீங்கள் இவ்வளவு வசதியானவர்னு தெரியாமல் நான் சிறு பிள்ளைத்தனமாய் பேசிட்டேன்'' என்று கூறினாள்.

''அதனால் பரவாயில்லை. உங்களைப் பத்திரமாய் திருநெல்வேலியில் உங்கள் வீட்டில் விட்டு விட்டுத் தான் திரும்பி வருவேன். நல்லவேளை பெட்ரோலுக்குப் பணம் கொடுக்கிறேன்னு சொல்லிச் சிரிப்பை மூட்டப் போறீங்கன்னு நினைச்சேன். பரவாயில்லை. சுதாரிச்சிட்டிங்க. இப்போதைக்கு பயப்படாமல் தூங்கிக்கிட்டு வாங்க'' என்றான்.

அவள் எல்லையற்ற நன்றியுடன் அவனைப் பார்த்தாள். வெகு நேரத்திற்குப் பின் கிடைத்த பாதுகாப்புணர்வில் நிம்மதியாய் கண் மூடினாள். மேலே நிலவு பொழிந்தது. பௌர்ணமியாக இருந்ததால் முழு நிலவாய் காட்சி தந்து காருடன் சேர்ந்து வருவது போல் உடன் நகர்ந்தது. அந்த ஒரு இரவு நேரப் பயணம் அந்த இருவரின் வாழ்க்கைப் பயணத்தையே மாற்றியமைக்கப் போகிறது என்பதை அறிந்த காலமும் அந்தக் காருடன் சேர்ந்து நகர்ந்தது.

## 4

இரவோடு இரவாக நிழலோடு நிழலாக
தொடராமல் தொடர்ந்து சென்றான்
இடர் நேராமல் சுடர்கொடுத்தான்

சுடர் கொடுத்த வள்ளலுக்கு
இடர்கொடுத்த மனிதர்களுக்கு
நிலவே நீ சாட்சி!

ஆனந்தன் பரபரத்துக் கொண்டிருந்தான். இன்னும் முப்பது நிமிடத்தில் அவன் குளித்துச் சாப்பிட்டுப் போயாக வேண்டும். இரவு மருத்துவமனையில் தந்தைக்குத் துணை யாக தங்கியிருந்தவன் காலையில் நர்ஸை துணைக்கு வைத்து விட்டு அவசரமாய் வீட்டுக்கு வந்திருந்தான். போகும் வழியில் தாயை மருத்துவமனையில் விட்டு விட்டு அவன் அலுவலகம் செல்ல வேண்டும்.

''அம்மா. சீக்கிரம் இன்னும் சமையல் ரூமில் என்ன பண்றீங்க. கிளம்புங்க'' என்று சமையலறையைப் பார்த்துக் கத்தினான் ஆனந்தன்.

''அடடா. கொஞ்சம் பொறுடா. நீ கத்துற கத்தில சுடுகாப்பியை கையில் ஊத்திக்கிட்டேன். உங்க அப்பா ஒருத்தர் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறது பத்தாதா? நானும் போய் துணைக்கு அட்மிட் ஆகணுமா?'' என்று சலித்துக் கொண்டாள் பர்வதம்.

''ஏம்மா. நான் ஒருத்தனா ஆஸ்பத்திரிக்கும், வீட்டுக் கும் ஆபீஸுக்கும் பறந்துக்கிட்டு இருக்கேன். இறக்கை மட்டும் தான் இல்ல. சமையலை சீக்கிரம் செய்யணும்னு என்னமேயில்லாம இப்படி அமைதியா எப்படிம்மா பேச முடியுது?''

''கொஞ்சம் பொறுமையாப் பேசுடா. இதோ காபியை பிளாஸ்க்கில் ஊத்திட்டேன். காலை டிபனையும், மதியச் சாப்பாட்டையும் கேரியரில் எடுத்து வைச்சிட்டேன். உன்னோட டிபன் பாக்ஸ் இந்தா எடுத்துக்க'' என்றவாறு

சாப்பாட்டுக் கூடையை எடுத்துக் கொண்டு முன்னறைக்கு வந்த பார்வதம், ''ஆனந்தா...'' என்று மெதுவான குரலில் அழைத்தாள்.

''என்னம்மா. இன்னும் என்ன விசயம்?''

''காவ்யா இன்னும் வரலையேடா. அவள் வந்த பின் கிளம்பலாமே.''

''ஏம்மா உங்க பெண்ணுக்குத்தான் அறிவில்லைன்னா உங்களுக்குமா இல்லாமல் போய் விட்டது. மனுசன் இருக்கிற நிலைமை என்ன... இப்போப் போய் தொண தொணன்னு...'' என்று சலித்துக் கொண்டவன் என்ன நினைத்தானோ, ''ஒரு போனாவது பண்ணலாமில்லை. இது வரைக்கும் தனியாகவே வந்ததில்லை. நான் என்னன்னு நினைப்பேன். வீட்டுக்கு ஒரு போன் பண்ணக் கூடவா நாம் சொல்லித் தரணும். வரவர காவ்யாவிற்கு பொறுப்பே இல்லை'' என்று பொரிந்தான்.

''நல்லாயிருக்குடா உன் நியாயம். அவளுக்கு ஒரு செல்போன் வாங்கித்தாடான்னா பெண் பிள்ளைகள் செல்போன் வைத்துக்கக்கூடாதுன்னு சொல்லிட்டே. இப்போ எங்கே போய் போன் பண்ணுவாள்?''

''ஏம்மா, தெருவுக்கொரு காயின் போனிருக்கு. அங்கேயிருந்து ஒரு போன் பண்ணக்கூடாதா? அவளுக்குத்தான் செல்போனில்ல. எனக்கு இருக்குல்ல?'' என்று எரிந்து விழுந்தான் ஆனந்தன்.

''ஆனந்தா. எனக்கு என்னவோ பயமாயிருக்குடா. அவள் பத்திரமா வீடு வந்து சேர்ந்ததைப் பார்த்திட்டுக் கிளம்பினால் எனக்கு நிம்மதியாயிருக்கும்.''

''அம்மா! எனக்கு மட்டும் கவலையில்லையா? ஆனால் அப்பா இப்போது இருக்கும் நிலைமையில் அவர்

தானே முக்கியம். அவரைத் தனியாக விட்டு விட்டு வந்திருக்கிறேன். ஒரு காபி கூட அவர் இன்னும் குடிக்கவில்லை. நீங்கள் கிளம்புங்கள். பக்கத்து வீட்டில் சாவியைக் கொடுத்துவிட்டுக் காவ்யா வந்ததும் எனக்குப் போன் பண்ணச் சொல்லிவிட்டுப் போகலாம். அவள் வந்ததும் எனக்குப் போன் பண்ணுவாள். நான் உடனே கூப்பிட்டு வந்து ஆஸ்பத்திரியில் விட்டு விடுகிறேன். போதுமா. இப்போது கிளம்புங்கள்" என்று சமாதானப்படுத்தினான் ஆனந்தன். பார்வதம் கால் மனதாய் கிளம்ப முனையும் போது வாசலில் கார் சத்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். காவ்யா இறங்கிப் பெட்டிகளை எடுத்துக் கொண்டவள் இறங்காமல் அமர்ந்திருந்த அசோகனிடம்,

"என்ன சார் இறங்காமல் உட்கார்ந்திருக்கீங்க. இறங்கி உள்ளே வாங்க சார். இதுதான் என் வீடு. என் அம்மாவும், அண்ணாவும் உள்ளே இருக்கிறாங்க. வாங்க சார். இவ்வளவு தூரம் என்னை பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றி சென்னையிலிருந்து திருநெல்வேலி வரைக்கும் உங்க காரிலேயே பாதுகாப்பாய் கூட்டி வந்து என் வீட்டில் பொறுப்பாய் விட்டிருக்கீங்க. வாசலோடு போனால் எனக்கு மனதுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கும் சார். ப்ளீஸ் எனக்காக இறங்கி வந்து ஒரு கப் காபி சாப்பிட்டு விட்டு என் அம்மாவையும் அண்ணாவையும் பார்த்து விட்டுப் போங்க சார். ப்ளீஸ்" என்று கெஞ்சினாள்.

தயக்கத்துடன் இறங்கிய அசோகன் அவளைப் பின் தொடர்ந்து வீட்டுக்குள் செல்லப் போனான். வாசலில் காய்கறிக்காரரிடம் பேரம் பேசி வாங்கிக் கொண்டிருந்த பக்கத்து வீட்டம்மாள் அவ்வளவு நேரமாய் காய் வாங்குவதை நிறுத்திவிட்டு ஏதோ நாடகம் பார்ப்பது போல்

காவ்யாவும் அசோகனும் பேசிக் கொள்வதைப் பார்த்துக் கொண்டிருந்தவள், காய்க்காரர்.

"ஏம்மா கத்தரிக்காய் எவ்வளவு போட கால் கிலோவா, அரைக்கிலோவா" என்று கேட்பதைக் கவனிக்காதவளாய் காவ்யாவிடம்,

"வாம்மா காவ்யா! இப்போதுதான் வந்தாயா? காரில் வந்திருக்க போல..." என்று கேட்டவாறு காவ்யாவை விட்டு விட்டு அசோகனை மேலும் கீழும் ஆராய்ச்சியாய் பார்த்தாள்.

"ஆமாம் ஆன்ட்டி" என்று நின்று பதில் சொன்ன காவ்யாவிடம்,

"கார் யாருதும்மா? தம்பியோடதா? தம்பி கூடத்தான் காரில் வந்தாயா? தம்பி யாரு... உங்க சொந்தமா...?" என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தாள்.

"அப்புறமாய் இதற்கெல்லாம் பதில் சொல்லுகிறேன் ஆன்ட்டி. இப்போது காய் வாங்குவதைக் கவனியுங்கள்" என்று பதில் கொடுத்த காவ்யா, "நீங்க வாங்க சார்" என்று அசோகனிடம் கூறிவிட்டு உள்ளே விரைந்தாள்.

அவளை உடனே தொடர்ந்து உள்ளே செல்லாமல் நிதானித்த அசோகன் பக்கத்து வீட்டு அம்மாள் பக்கம் பார்வையைத் திருப்பினான். அவள் தன்னை ஏற இறங்க அளவிட்டுக் கொண்டிருந்ததைக் கவனித்தான் கேலியாய் புருவத்தை 'என்ன'வென்னும் பாவனையில் உயர்த்தினான். அவனின் இந்தச் செய்கையை எதிர்பார்க்காத அந்தப் பெண்மணி அவசரமாய் காய் பேரத்தைத் தொடர்ந்தாள்.

'அடுத்தவர் வீட்டை எட்டிப் பார்த்துக் கேள்வி கேட்கும் இந்தக் குணம் என்றுதான் நம்மவர்களை விட்டுப்

போகுமோ?' என்று எண்ணமிட்டபடி அசோகன் காவ்யா வின் வீட்டிற்குள் நுழைந்தான். காவ்யாவைக் கண்டதும் பர்வதம் மகிழ்ச்சியுடன்.

''இதோ காவ்யா வந்திட்டாளே'' என்று கூறியபடி வந்து பெட்டிகளை வாங்கிக் கொண்டாள்.

''ஏம்மா இவ்வளவு லேட். ஒரு போன் பண்ணியிருக்கக் கூடாதா?'' என்று ஆனந்தன் மனத்தாங்கலாய் கேட்டான்.

''இல்லைன்னா... அது வந்து...'' என்று காவ்யா விவரம் சொல்ல ஆரம்பிக்கும்போது அசோகன் உள்ளே வந்தான்.

''யாரும்மா இவர்?'' என்று ஆனந்தன் விசாரிக்கும்போது ''உட்காருங்க சார்'' என்று அவனை உட்கார வைத்த காவ்யா,

''அம்மா சாருக்கு உடனே காபி கொண்டு வாங்க'' என்றாள்.

பர்வதம் புரியாதவளாய் ஆனந்தனைப் பார்த்து விட்டு உள்ளே சென்று காபி கொண்டு வந்து அசோகனிடம் கொடுத்தாள். அவன் குடித்து முடிக்கும் வரை காத்திருந்த ஆனந்தன்.

''இப்போச் சொல்லு யார் இவர்...?'' என்றான் கண்டிப் பான குரலில். காவ்யா நடந்ததைச் சொன்னாள். கேட்டு முடித்ததும் அவர்கள் அசோகனுக்கு நன்றி சொல்வார்கள் என்று அவள் எதிர்பார்க்க, ''அடிப்பாவி!'' என்று அலறி னாள் பர்வதம்.

''என்னலே சொல்றே? ராத்திரி முழுவதும் இவன் கூட தனியாவா காரில் வந்தே...?'' என்று பர்வதம் முறைக்க,

''காவ்யா! நீ சின்னப் பெண்ணா? சென்னையில் படிச்சு பட்டம் வாங்கினவ ஒழுங்காய் ஒரு டிரெய்னோ, பஸ்ஸோ

பிடித்து ஊர் வந்து சேர முடியலைன்னு சொல்கிறாயே. நான்சென்ஸ்'' என்று ஆனந்தன் வார்த்தைகளைக் கொட்டி னான்.

''அண்ணா! நான் எக்மோருக்குப் போகத்தான் ஆட் டோவில் ஏறினேன். ஆட்டோக்காரன்...'' என்று காவ்யா பதற்றத்துடன் ஆரம்பிக்க.

''சும்மா நிறுத்து. அதையே சும்மா தொண தொணன்னு சொல்லி மானத்தை வாங்கிக்கிட்டு... உன்னை யாரு ஆட் டோவில் ஏறச் சொன்னது. பஸ் பிடித்து எக்மோருக்குப் போக முடியாதா?''

''அண்ணா! ஹாஸ்டலைக் காலி செய்து விட்டுப் பெரிய பெரிய பெட்டிகளாய் இரண்டு பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு பஸ் ஸ்டாண்ட் வரை எப்படிப் போவ துன்னு யோசிச்சுப் பார்த்தீங்களா?''

''ஏன் ரெண்டு பெட்டிகளைத் தூக்கிக்கிட்டு உன்னால் நடக்க முடியாதா?''

விக்கித்துப் போனாள் காவ்யா. அவள் என்ன குற்றம் செய்தாள்? குற்றவாளி போல் தாயும், தமையனும் விசா ரிக்கக் காரணம் என்ன? எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து தப்பித்து வந்திருக்கிறாள். அவர்கள் சொல்வது போல் ஆட்டோவில் ஏறியது அவள் தவறென்றாலும் ஆபத்தில் மாட்டி மீண்டு வந்தவளை இப்படிக் குற்றம் சாட்டுவது சரியா? அவ்வளவு கொடுமையான ஆபத்திலிருந்து காப்பாற்றி வீடு வரை கொண்டு வந்து விட்டவனுக்கு ஒரு நன்றி சொல்ல வேண்டாம். அவன் முன்னாலேயே இப்படி விசாரித்தால் அவன் என்ன நினைப்பான்? வாசலோடு போக இருந்தவனை வீட்டுக்குள் அழைத்தது

தவறாகி விட்டதே. காவ்யா தவித்துக் கொண்டிருக்கும் போது,

''பர்வதம்'' என்று நீட்டி முழக்கியபடி பக்கத்து வீட்டம்மாள் வந்தாள்.

''கொஞ்சம் முறுக்கு உலக்கு இருந்தால் தருகிறாயா? முறுக்குப் பிழியணும். எண்ணெய்ச் சட்டியை அடுப்பில் வைத்து விட்டுப் பார்த்தால் அவசரத்திற்கு முறுக்கு உலக்கு கிடைக்குதா. அதுதான் உன்கிட்டே இருக்குமேன்னு ஓடிவந்தேன். ஆமாம். இந்தத் தம்பி உனக்கு என்ன முறையில் சொந்தம்? சென்னையிலிருந்து காவ்யாவை அழைச்சுக்கிட்டு வந்திருக்கிறாரே. காரிலிருந்து ரெண்டு பேரும் ஒன்னா இறங்கி வாரதைப் பார்த்தேன். அதான் கேட்டேன்'' என்று விடாக் கண்டியாய் துருவினாள்.

''சென்னையிலிருந்து எங்க காவ்யா பஸ்ஸில் தான் வந்திருக்கா அக்கா. தம்பி நம்ப ஆனந்தன் கூட வேலை பார்க்கிறவரு. நம்ப ஆனந்தனப்பாவைப் பற்றி விசாரிக்க வீட்டுக்கு வந்துக்கிட்டு இருந்தவர் காவ்யா பஸ் ஸ்டாப் புல நிற்கிறதைப் பார்த்திட்டு கூட்டிக்கிட்டு வந்தாராம்'' என்று அவசரமாய் கதை பிணைந்த பர்வதம், ''இந்தாங்க அக்கா முறுக்கு உலக்கு. பாவம் எண்ணெயை காய வைச் சுட்டு வந்திருக்கீங்க. ரொம்ப வேலையிருக்கும் எடுத் துட்டுப் போங்க'' என்று விரட்டாத குறையாய் கூறினாள்.

ஆனால் அந்த அக்கா அசையவில்லை.

''அது எப்படி ஆஸ்பத்திரியில் இருக்கிற ஆனந்தனோட அப்பாவை வீட்டில் வந்து விசாரிக்கறாங்க. அவரை விசா ரிக்க ஆஸ்பத்திரிக்குத்தானே போகணும்'' என்று கொக்கிப் போட்டாள்.

''வீட்டில் வந்து என்னைக் கூட்டிக்கிட்டு ஆஸ்பத்திரிக் குப் போகலாம்ன்னு வந்தார் ஆன்ட்டி. நாங்க கிளம்பணும். இப்ப நீங்க கிளம்பறீங்களா'' என்று ஆனந்தன் கோபமாய் முறைக்க,

''ஒகோ'' என்று நம்பாத தன்மையுடன் பார்த்தபடி முறுக்கு உலக்கு வாங்காமலே அந்த அம்மாள் சென்றாள்.

''பார்த்தாயா... உன் கண் குளிரப் பார்த்தாயா... அந் தம்மா பார்வையையும் பேச்சையும் பார்த்தாயா? கேட் டாயா...? போதுமா? உன்னால் அம்மாவும், நானும் மாறி மாறி பொய் சொல்லி நாடகம் ஆடி... அப்பா அங்கே ஆஸ்பத்திரியில் கிடக்கிறாரேயென்ற வருத்தம் கொஞ்சம் கூட இல்லாமல் நீ செய்திருக்கிற வேலை இருக்கிறதே... ச்சே...! உன்னை... போ... கண்காணாமல் என் முன் நிற்காமல் உள்ளே போய்விடு'' ஆனந்தன் கோபத்தில் உடல் நடுங்க வெறுப்புடன் வார்த்தைகளை உதிர்த்தான்.

''அண்ணா!'' என்று விதிர்த்துப் போனாள் காவ்யா. 'ச்சே'யென்று யாரைப் பார்த்துச் சொன்னான்? அவளைப் பார்த்தா... 'அண்ணா, அண்ணா' என்று பணிவாய் அழைத்து அவன் கிழித்த கோட்டைத் தாண்டாமல் இருப்பாளே. அந்தத் தங்கையைப் பார்த்து இப்படி ஒரு வார்த்தையைச் சொல்லலாமா? அடுத்தவர்கள் ஆயிரம் பேசலாம். பெற்றவர்களும் உடன் பிறந்தவனும் அந்தச் சொல்களி லிருந்து காப்பாற்ற வேண்டியதை விட்டு விட்டு அவர் களைப் போலவே இவர்களும் பேசலாமா? தந்தைக்கு உடல்நலம் சரியில்லை என்பதால்தானே அவள் அவசர மாய் புறப்பட்டாள். அவளுக்கு அவர் கவலையில்லை என்று கூறலாமா? இவள் என்ன தவறு செய்து விட் டாளென்று 'ச்சே'யென்று கூறிவிட்டான். வாழ்க்கையில் முதல் முறையாக காவ்யாவின் குரல் உயர்ந்தது.

''முட்டாள் தனமாய் பேசாதீர்கள். நான் என்ன ஆபத்து வரவேண்டுமென்று ஆசைப்பட்டா அந்த அயோக்கிய ராஸ்கலின் ஆட்டோவில் ஏறினேன்? ஆபத்து வந்து விட்டது. தப்பிப் பிழைத்து வந்திருக்கிறேன். அதையா குற்றம்ன்னு பேசறீங்க'' என்று அவள் காட்டமாய் கேட்க அந்தக் கேள்வியின் உண்மை உறைத்ததில் ஆனந்த னுக்கு இயலாமையுடன் கூடிய கோபம் வந்தது. அந்தக் கோபத்துடன் ஓங்கி ஒரு அறை விட்டான். காவ்யா அறை யின் மூலையில் சுருண்டு விழுந்தாள்.

பார்வதம், ''ஐயோ! என் பொண்ணை அடிக்காதேலே. பாவி. அவள் சொன்னதில் என்னலே தப்பிருக்கு. எப்பேர்ப்பட்ட கொடுமையிலிருந்து என் புள்ள தப்பிச்சு வந்திருக்கா. நினைச்சுப்பாருலே'' என்றவாறு மகளிடம் ஓடினாள்.

அதைக் காதில் வாங்காதவனாய் மீண்டும் ஆனந்தன் கையை ஓங்க அவ்வளவு நேரம் குடும்பத்தினரின் வாக்கு வாதத்தில் நுழைந்து சமரசம் செய்ய சமயம் பார்த்துக் காத்துக் கொண்டிருந்த அசோகன் சடாரென்று பாய்ந்து அவன் கைகளைப் பிடித்துத் தடுத்தான்.

''எதிர்த்தா பேசுற? எதிர்த்துப் பேசுகிற அளவுக்கு வளர்ந்திட்டயா? இவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்தது? யார் கொடுத்தது? தொலைத்து விடுவேன் தொலைத்து'' என்று பொறுமிக் கொண்டிருந்த ஆனந்தனிடம்,

''தப்புத்தான் சார். தப்புத்தான். மன்னித்து விடுங்கள். அவங்க பஸ்ஸில் போகிறேன்னுதான் சொன்னாங்க. நான் தான் தனியாப் போனால் திரும்பவும் ஆபத்தில் மாட்டி விடுவாங்களோன்னு பயந்துக்கிட்டு கூட்டி வந்தேன். எனக்கும் இங்கே ஒரு வேலை இருந்ததால் காரில் கொண்டு வீட்டில் பாதுகாப்பாய் விட்டு விடலாம்ன்னு

நினைத்துத்தான் கூட்டி வந்தேன். இவ்வளவு பிரச்னை வரும்ன்னு தெரியாமப் போச்சு. மன்னித்து விடுங்கள்'' என்று நயந்து பேசினான் அசோகன்.

''வழியில் போறவங்க ஆயிரத்தைச் சொல்வாங்க. இவளுக்கு எங்கே போச்சு புத்தி. நீயென்ன சொந்தமா; பந்தமா? உன் கூட ஏன்லே என் தங்கை தனியா வரணும். இவளைக் கொன்னு புதைச்சாத்தான் என்ன?'' என்று ஆனந்தன் பாய,

''பொறுடா. நீ போடற சத்தத்தில் அக்கம் பக்கத்தில் என்னவோ ஏதோன்னு நினைச்சிரப் போறாங்க. ஆனந்தா! நடந்தது நடந்துப் போச்சுலே. அவசரத்தில் புள்ள தெரி யாம தப்புப் பண்ணிட்டா. அதையே பெரிசு பண்ணா தேலே. விட்டுடு'' என்று பர்வதம் கெஞ்சினாள்.

காவ்யா பதறிப் போனாள். அம்மா சமாதானப் படுத்து கிற லட்சணம் அவளுக்குத் தலையில் அடித்துக் கொள்ள லாம் போல் அவமானத்தைத் தந்தது. என்ன நடந்தது?... எதைப் பெரிது பண்ணாமல் விட்டு விட வேண்டும்? 'அம்மா' என்று மனதிற்குள் பல்லைக் கடித்துக் கொண் டவள், அடுத்து அசோகன்,

''அம்மா சொல்வது சரிதான். அக்கம் பக்கம் தப்பாக நினைத்துக் கொள்வார்கள். விட்டு விடுங்கள் சார். நடந்தது தவறென்று நீங்கள் நினைத்தால் அதன் முழு பொறுப்பையும் நான் ஏற்கிறேன். உங்கள் கோபத்தை என் மேல் காண்பியுங்கள், தயவு செய்து என் தவறை மன்னித்து விடுங்கள்'' என்று கை கூப்பி மன்னிப்பு கேட்கவும் பதறிப் போனாள்.

''சார். நீங்கள் ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்'' என்று அவள் பதறுவதைக் கவனிக்காதவன் போல்

விடுவிடென்று அந்த வீட்டை விட்டு வெளியேறிக் காரில் ஏறிக் கொண்டான் அசோகன்.

அவனது கார் கிளம்பும் ஓசை கேட்ட காவ்யா ஓடி வந்து ஜன்னல் கதவைத் திறந்து பார்த்தாள். அவனது கார் புழுதி பறக்கச் சென்று விட்டது. அவனது கார் சென்ற திசையை ஜன்னல் வழி பார்த்தபடி அசையாது நின்ற காவ்யாவின் விழிகளில் கண்ணீர் பெருகி வழிந்தது.

## 5

**வைரக்கல்லை பரிசளித்தான்**

**பாறாங்கல்லால் தாக்கப்பட்டான்**

**பண்பட்ட இளையவர்கள் பாரினிலே இமயவர்கள்**

**புண்பட்டு நின்றதற்கு**

**நிலவே நீ சாட்சி**

வீடு நிசப்தமாக இருந்தது. மேலே பேன் சுழலும் ஓசை மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது. காவ்யா சரிந்து தரையில் அமர்ந்து இருந்தாள். அசோகன் வெளியேறிய வுடன் ஆனந்தனும், பர்வதமும் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிச் சென்று விட்டனர். காவ்யா குளித்தாளா, சாப்பிட்டாளா என்று கேட்கக் கூட ஆளில்லாமல் தனித்து விடப்பட் டாள். நின்று மகளிடம் பேசக்கூட பர்வதத்தை விடாமல் ஆனந்தன் அதட்டி அழைத்துச் சென்று விட்டான். காவ்யா தண்ணீர் கூட அருந்தாமல் அசோகனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

'என்ன தவறு செய்தான் அவன்? கண் முன்னே கொலை நடந்தாலும் கண்டு கொள்ளாத உலகில் கன்னிப் பெண்ணொருத்தியின் மானத்தைக் காப்பாற்றினான். நூற்றுக் கணக்கான மைல்களைக் கடந்து வந்து அவளை அவள் குடும்பத்தாரிடம் பத்திரமாகச் சேர்த்தான். அவனைக் கையெடுத்துக் கும்பிட்டு நன்றி சொல்லிப் பாராட்டுவதை விட்டு அவன் கையெடுத்துக் கும்பிட்டு மன்னிப்புக் கேட்கும்படி நோகச் செய்து அனுப்புவதா? இது தெய்வத்திற்கு அடுக்குமா?'

காவ்யா நினைத்து நினைத்து வருந்தினாள். அவன் செய்த உதவி ஈடு இணையற்றது. அதற்கு எந்த வகையிலும் நன்றி செலுத்த முடியாது. வெறும் வாய் வார்த்தையில் கூட அவனுக்கு நன்றி சொல்ல முடியாத தன் நிலையை எண்ணி அவளுக்குக் கண்ணீர் சுரந்தது. ஏதேனும் ஓர் வகையில் அவனுக்குத் தான் பட்ட நன்றிக் கடனைக் கழிக்க முடிந்தால்... முடியுமா? அவ்வாறு முடிந்தால்தான் அவளுக்கு நிம்மதி கிடைக்குமென்று நிச்சயமாக அவளுக்குத் தோன்றியது.

இங்கே காவ்யா கலங்கிக் கொண்டிருக்க காரைக் கிளப்பிக் கொண்டு போன அசோகனின் கண் முன்னே காவ்யாவின் அதிர்ந்து நின்ற கோலமே கண் முன் நிழலாடியது. எவ்வளவு மென்மையான குணம் படைத்த பெண். தமையனின் பேச்சாலும், நடத்தையாலும் அவமானத்தில் கூனிக் குறுகிப் போன அவளது தோற்றமும், தமையனின் அடியில் கன்றிச் சிவந்த அவளது முகமும் அவன் மனதில் தோன்றி வேதனையைத் தந்தன. இப்படிப்பட்ட குணம் படைத்தவன் அவனது அண்ணன் என்று முதலிலேயே தெரிந்திருந்தால் அவளை பஸ்ஸில்

அனுப்பிவிட்டு பாதுகாப்பாய் பின் தொடர்ந்திருப்பான். இல்லை திருநெல்வேலியில் நுழைந்தவுடன் ஓர் ஆட்டோவில் ஏற்றி விட்டு விட்டு பஸ்ஸில் வந்ததாகக் கூறச் சொல்லியிருப்பான். ஆனால் மடியில் கனம் இருந்தால் தானே வழியில் பயம் வரும்? மனதில் எந்த விதமான சலனமும், வேறுபாடும் இல்லாதவர்கள் அவர்கள் இருவரும். இருவருமே பொய் சொல்லி அறியாதவர்கள். பொய் சொல்ல விரும்பாதவர்கள். காவ்யாவின் களங்கமில்லா பிள்ளை முகம் நினைவில் வந்தது. 'பாவம் பொய் சொல்லி அறியாதவள். மெய் சொல்லி விட்டு என்ன பாடு பட்டு விட்டாள்' பெருமூச்செரிந்தான் அசோகன்.

நேர்மையான நடத்தைக்கு என்று தான் மதிப்பிருந்திருக்கின்றது?

ஒரே யோசனையுடன் வண்டியைச் செலுத்தியவன் மதுரையை அடைந்ததும் உடல் சோர்வையும், பசியையும் உணர்ந்தவனாய் வண்டியை 'பாண்டியன்' ஒட்டலுக்குள் செலுத்தினான். முதல் நாள் காலையில் காரை எடுத்தவன் ஏறக்குறைய முப்பது மணி நேரமாய் நிற்காமல் ஒட்டிக் கொண்டிருக்கிறான். ஒய்வுக்கு உடலும் மனமும் கெஞ்சின. காரை ஒட்டலில் பார்க் பண்ணி விட்டு இறங்கியவன் அங்கேயே ரூம் போட்டுத் தங்கி ஓய்வெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தான். அவனால் இனி ஒரு வினாடி கூட கண் விழிக்க முடியாது என்ற நிலைமை. ஒட்டல் ரிசப்ஷனில் அறையை பதிவு பண்ணி சாவியை வாங்கிக் கொண்டவன் ரூமிற்குள் போனதும் உடனே குளித்து விட்டு உணவை வரவழைத்துச் சாப்பிட்டான். வயிற்றில் உணவு விழுந்தவுடன் அசதி உடம்பை அழுத்த நிச்சிந்தையாய் கட்டிலில் படுத்தவன் அண்ணாந்து விட்டத்தை வெறித்தான்.

அறையின் ஏஸி குளிர் உடலுக்கு இதமளித்தாலும் மனம் மட்டும் வெம்மையாகவே இருந்தது. 'என்ன மாதிரியான அனுபவம் இது?' அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவனுக்கான இந்த விநோதமான அனுபவம் அவனுக்கு மன வருத்தத்தைத் தரவில்லை. இந்த உலகின் முரட்டுத் குணங்கள் அவன் அறிந்தவை. ஆனால் அவள்... காவ்யா... அந்தக் குழந்தை முகத்தின் கண்கள் கலங்கி நின்ற தோற்றம் அவன் மனதில் நெருஞ்சி முள்ளாய் தைத்தது. 'மிக நல்ல பெண்' என்று நினைத்துக் காண்டான்.

அசோகனின் வாழ்வில் அவன் அறிந்த பெண்கள் மிகச் சிலர். அவனது இளம் வயதில் தெரிந்தது தாயின் முகம். அந்தக் கொடுப்பினை மறைந்தவுடன் அதை இட்டு நிரப்பியவளாய் வந்தது அவனது உயிர் நண்பன் தியாகராஜனின் அன்னை மங்களத்தின் முகம். அதன் பின் அன்ன பூரணியாய் அன்னமளித்த மெஸ் மாமி சீத்தா லட்சுமியின் தாய்மை நிறைந்த முகம் அறிமுகமானது. உடன் பிறவா தங்கையாய் அவன் வாழ்வில் வந்தது தியாகராஜனின் மனைவி உமா. இவர்கள் தவிர வேறு எந்தப் பெண்ணிடமும் அவன் ஓரிரு வார்த்தைகளுக்கு மேல் நின்று பேசினதில்லை. முதன் முதலாய் ஒரு பெண் ணிடம் அதிக நேரம் பேசி அறிமுகமானது காவ்யாவிடம் மட்டும்தான்.

'சென்னையில் டிராவல் ஏஜென்ஸியில் என்ன நடந் ததோ என்னவோ? ஒரு போன் பண்ணி விசாரிக்க வேண் டும்' என்று எண்ணமிட்டவன் நினைத்ததைச் செயலாற்ற முடியாமல் கண்கள் செருக அப்படியே அசந்து உறங்கி விட்டான். மாலை மயங்கும் நேரம் விழிப்புத் தட்ட எழுந்தவன் ரூம் சர்வீஸை அழைத்து காபி கொண்டு வரச்

சொல்லி விட்டு முகம் கழுவிக் கிளம்பினான். காபி வரவும் குடித்து விட்டு ரூமைக் காலி செய்து ரிசப்ஷனில் சாவியை ஒப்படைத்துக் கணக்கைச் சரி பார்த்துக் கொடுத்த பின் காரைக் கிளப்பி அதிவேகமாய் சென்னை நோக்கிப் பறந்தான்.

குடித்த காபியும், தூங்கிய தூக்கமும் புத்துணர்வைத் தர இப்போது காலையில் ஏற்பட்ட அனுபவத்தின் விளை வாக மனதில் தோன்றியிருந்த வேதனை மறைந்திருந்தது. நடந்த சம்பவத்தை சம்பந்தமேயில்லாதது போல் நினைத் துச் சீர் தூக்கிப் பார்க்க முடிந்தது. மத்திய தர குடும்பங் களில் பெண்களை வளர்ப்பது மிகப் பெரிய பொறுப்பு என்று கூட அவனால் நினைக்க முடிந்தது. அந்தப் பக்கத்து வீட்டம்மாள் தேவையில்லாமல் அநாகரிகமாய் மூக்கை நுழைக்காமலிருந்திருந்தால் ஒரு வேளை காவ்யாவின் அண்ணன் அமைதியாக பேசியிருந்திருக்கலாம்.

இவ்வாறு ஆயிரம் 'இருக்கலாம்'களை யோசித்தவாறு வண்டியைச் செலுத்தியவன் நெடுஞ்சாலையின் இடை யில் கட்டப்பட்டிருந்த மோட்டல்களில் ஒன்றில் இரவு உணவை முடித்தான் நள்ளிரவைத் தாண்டிய நேரத்தில் சென்னையில் அவன் வீடு இருந்த தெருவில் நுழைந்தது அவனது கார். வீட்டின் முன்னால் காரை நிறுத்திப் பூட்டி விட்டு மாடியேறி அவனது அறையின் பூட்டைத் திறக்க முயன்றபோது கதவுகள் தானாகத் திறந்தன. பளீரென்று விளக்குகள் எரிந்தன. திடீர் வெளிச்சத்தில் கண்கள் கூசி யவன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு சுதாரிப்ப தற்குள் அவனைச் சுற்றி நான்கு போலீசார் சூழ்ந்து கொண்டனர். அவன் கைகளில் விலங்கை மாட்டிய அந்த சப் - இன்ஸ்பெக்டர் கூறினார்.

“யு ஆர் அன்டர் அரெஸ்ட்.”

# 6

தென்றலுக்குத் துணை சென்று
சிறைச்சாலை கண்டவனே!
உன் துணைக்கின்று
யார் வருவார்? நியாயம்தனை யாருரைப்பார்?
அந்த இரவுக்கு ஒளிகொடுத்து
புது உறவுக்கு பாலமிட்ட
நிலவே நீ சாட்சி

அசோகனுக்கு எதுவும் புரியவில்லை. என்ன நடக்கின்றது இங்கே? போலீசார் இங்கே எதற்கு வந்தார்கள்? பூட்டிய வீட்டில் எப்படி நுழைந்தார்கள்? ஏன் அவனை கைது செய்கிறார்கள் என்று திகைத்தவனாய் அந்த எஸ்.ஐ.யிடம் கேட்டான்.

''என்னைக் கைது செய்கிறீர்களா? எதற்கு சார்? நான் என்ன குற்றம் செய்தேன்?''

''என்ன குற்றம் செய்தாயா? கொலைக் குற்றம் செய்தாய்?''

அசோகன் அதிர்ந்து போனான். கொலைக் குற்றமா? அவன் மீதா? அவன் யாரைக் கொலை செய்தான்?

''பலவேசத்தை கொலை செய்தாயே. அந்தக் கொலை குற்றத்திற்காக...'' என்றார் எஸ்.ஐ. அவன் மனதைப் படித்தவர் போல்.

''என்னது பலவேசம் செத்து விட்டானா? எப்போது?''

''நேற்று ராத்திரி... எப்போது... நேற்று ராத்திரி... நீ காணாமல் போய்விட்டு திரும்பி வந்திருக்கிறாயே... அந்த ராத்திரியில்... நீ அவனைக் கொன்றது... நேற்று ராத்திரி'' அந்த எஸ்.ஐ. ஏற்ற இறக்கத்துடன் நாடக பாணியில் அழுத்தம் கொடுத்துப் பேசினார்.

''சார் நேற்று அவன் செத்து விட்டால் நான் எப்படி அதற்குப் பொறுப்பாவேன்? என்னை எப்படி நீங்கள் குற்றம் சொல்லலாம்? அவன் ஒரு ரௌடி. நான் சொசைட்டியில் கண்ணியமான வாழ்க்கை வாழ்பவன். அவனைக் கொன்றவனைத் தேடுவதை விட்டு விட்டு என் மேல் அபாண்டமாய் குற்றம் சொன்னால் நான் சும்மாயிருக்க மாட்டேன்.''

''ந்தா. சும்மா இந்த உதாரையெல்லாம் என்கிட்ட காட்டுகிற வேலையை விட்டுவிடு. நான் எல்லாவற்றை யும் விசாரித்துவிட்டுத்தான் உன்னை அரெஸ்ட் பண்ணி யிருக்கிறேன்... அப்படியே நல்லவன்போல் என்னமா ஆக்ட் கொடுக்கிற கண்ணு நீ... ம்ம்... நடிகர் திலகம்ன்னு வேணும்னால் பட்டம் கொடுக்கிறேன். ஆனால் உன் நடிப்பை நம்ப மாட்டேன்.''

''சார். மேலே மேலே பேசிக்கிட்டே போறீங்க சார். நீங்க போலீஸ்ங்கிறதுக்காக என்ன வேணும்னாலும் பேசி விடுவதா? என்ன விசாரித்தீர்கள்? உங்களுக்கு என்னதான் தெரியும்?''

''எனக்கு எல்லாம் தெரியும்பா. பலவேசம் ரௌடி தான். ஆனால் நீ என்னவோ இந்தத் தெருவிற்கே காக்கும் கடவுளாமே... அவனை நிறைய முறை அடித்திருக்கிறா யாம்.. உண்டா... இல்லையா?''

''சார் அவன் ரௌடித்தனம் பண்ணினான். தட்டிக் கேட்டேன் அது தப்பா?''

''அது சரியா, தப்பாங்கிறது இப்பப் பிரச்னையில்லை. உனக்கும் அவனுக்கும் அடிக்கடி சண்டை வருமாமே. அதுதான் பிரச்னை.''

''சரி. ரௌடிக்கும் எனக்கும் ஆகாதுன்னா எனக்கு என்ன பிரச்னை வரும் சார்? அவனுக்கு வேண்டியவனா நான் இருந்தால் அவன் சம்பந்தப்பட்ட விஷயங்களில் எனக்குத் தொடர்பிருக்கும். என்னை நீங்கள் விசாரிக்கலாம். ஆகாதுன்னு ஆனவனைப் பத்தி என்கிட்ட என்ன சார் விசாரணை?''

''பொறு. பலவேசம் செத்த அன்னைக்கு அதாவது நேற்று காலையில் உனக்கும் அவனுக்கும் தகராறு வந்ததா இல்லையா?''

''வந்தது சார் ஆனால்...''

''அப்போது நீயும் அவனும் சினிமாவில் வருவது போல் அடித்துக் கொண்டு ரோட்டில் கட்டி உருண்டு சண்டை போட்டீர்களா இல்லையா?''

''ஆமாம் சார். ஆனால்...''

''அவன் உன்னைப் பார்த்து இன்னைக்கு ராத்திரி உன்னைப் பொலி போடலேன்னா இந்தப் பலவேசம் ஆம்பளை இல்லைடா'ன்னு கத்திட்டுப் போனானா இல்லையா?''

''அவன் தானே சார் கத்தினான். நானா கத்தினேன்?''

''ஆமாம். அவன் தான் கத்தினான். நீ நேத்து ராத்திரி வரும்போது உன்னை வழி மறிச்சு கொல்ல வந்திருக்கான். நீயும், அவனும் போட்ட சண்டையில் நீ அவனைக் கொன்று விட்டு ஓடி விட்டாய்.''

"சார். அவனை நான் பார்க்கவேயில்லை சார்."

"அவன் உன்னைப் பார்க்கக் கட்டாயம் வந்திருப்பான்."

"ஆனால்..."

"தம்பி. இந்த ஆனா, ஆவன்னாவையெல்லாம் வேறு ஆள் கிட்ட வைத்துக் கொள். எனக்கு லைன் கிளியரா இருக்கு."

"என்னத்தை சார் கிளியரா இருக்கு. கோணல் மாணலா இருக்கு."

"சரி. என்ன கோணல் நீயே சொல்லு பார்க்கலாம்" என்ற எஸ்.ஐ. நிதானமாய் சேரில் சாய்ந்து அமர்ந்து கொண்டார்.

அவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் அமர்ந்து இருந்தார்கள். சந்தேகத்தின் பெயரில் கைது செய்திருந்த சப்-இன்ஸ் பெக்டர் கறாராய்ப் பேசினாலும் அசோகனை மரியாதை யாகவே நடத்தினார். பலவேசம் அந்த ஏரியாவில் பெரிய ரௌடி. அவன் நேற்று இரவு கொலை செய்யப்பட்டிருக் கிறான். அவனைக் கொலை செய்ததைப் பார்த்த சாட்சி யாரும் இல்லை. வழக்கமாக இந்த முறையில் ஒரு ரௌடி கொலை செய்யப்பட்டுக் கிடந்தால் போலீஸ் அதை அவ்வளவாகக் கண்டு கொள்ளாது. அதிலும் இந்த பலவேசம் என் கவுண்டரில் போடப்பட வேண்டிய ஆள். என் கவுண்டர் லிஸ்டில் அவன் பெயர் இருந்தது. சமயம் பார்த்து போலீஸ் துறை காத்துக் கொண்டிருக்க அவன் தானாய் கொலையுண்டு கிடந்தான். தலைவலி மிச்சம் என்று எதிர் கோஷ்டி தகராறு என்று கேஸை முடித்து விட லாம் என்று பார்த்தால் இரண்டு சிக்கல்கள் முளைத்தன. ஒன்று பலவேசத்தின் அரசியல் பின்புலம். இரண்டு

அவனுடன் காலையில் சண்டை போட்ட அசோகன் கண்ணில் படாமலிருந்து மறுநாள் நள்ளிரவில் திருடன் போல வந்தது. அசோகனைப் பற்றி விசாரிக்கும்போது யாருமே அவனைப் பற்றித் தவறாக ஒரு சிறு வார்த்தை கூடக் கூறவில்லை. மாறாக எல்லோருமே ஏதேனும் ஒரு வகையில் அவன் செய்த நன்மைகளைப் பட்டியலிட்டனர்.

இந்தக் காலத்தில் இப்படி ஒரு மனிதன் இருக்க முடியுமா? என்று ஆச்சர்யப்பட்டுப் போனார் சப்-இன்ஸ்பெக்டர். ஆனால் விசாரணை என்று வரும்போது அசோகன் மேல் உண்மையிலேயே குற்றமில்லை என்று நிரூபிக்க ஒரு சாட்சி வேண்டும் அவருக்கு. அந்த இரவில் அவன் எங்கு இருந்தான்? அந்த சாட்சி கிடைக்காத வரை இந்த வழக்கில் அசோகன் தான் குற்றவாளி.

''அவனைக் கொல்ல எனக்கு காரணமில்லை சார்'' என்றான் அசோகன்.

''அதில் தான் தம்பி பாயிண்டே இருக்கு. உங்களுக்கு அவனைக் கொல்ல காரணமில்லை. ஆனால் அவனுக்கு உங்க மேல் விரோதம் இருந்தது. உங்களைக் கொல்லு வேன்னு கத்தியிருக்கான். அவன் உங்களைத் தாக்கும் போது தற்காப்பு முயற்சியாய் நீங்கள் அவனைத் திருப்பித் தாக்கியிருக்கலாம். அதனால் உண்மையை ஒப்புக் கொள் ளுங்கள். உங்களுக்கு தண்டனை குறைத்துக் கிடைக்கும் படி நான் வழக்கைப் பதிவு செய்கிறேன்.''

''நன்றாகக் கதை சொல்லுகிறீர்கள் சார். நான் தான் நேற்று காலையிலிருந்தே சென்னையில் இல்லையே சார்.''

''ஒரு திருத்தம். நேற்று ராத்திரியிலிருந்து அதாவது பலவேசம் கொலை செய்யப்பட்ட நேரத்திலிருந்து சென்னையில் இல்லை.''

''சார் நேரில் பார்த்தது போல் அபாண்டமாய் பேசா தீர்கள்.''

''குறுக்க, குறுக்க நீதான் பேசுற. நீதான் கொலை செய்துட்டு ஊரை விட்டு ஓடிட்டேன்னு நான் நிச்சயமாய் சொல்றேனே. 'அப்புறம் நான் ஊரிலில்லை சார்'ன்னு என் னத்தை வியாக்கினம் பேசுற. நேற்று ராத்திரி கொலை செய்துட்டு ஓடினவன் இன்னைக்கு பூராவும் தலை மறைவா இருந்திட்டு இப்போ பணமெடுக்கிறதுக்காக நடு ராத்திரிக்கு மேல் திருடன் மாதிரி மறைஞ்சு மறைஞ்சு வந்தே. என் வலையில் மாட்டிக்கிட்ட.''

தான் வலை விரித்து கொலைகாரனைப் பிடித்த கதையைப் பெருமையாகச் சொல்வதுபோல் வேண்டு மென்றே எஸ்.ஐ. பேச 'ஐயோ' என்றிருந்தது அசோக னுக்கு.

''சார் பணம் எடுக்க ரூமிற்கு வர வேண்டிய அவசியமே யில்லை. ஏன்னா... நான் ரூமில் பணம் வைப்பது கிடை யாது.''

''அப்புறம் ரூமுக்கு எதுக்கு வந்தே?'' என்று ஆராய்ச் சியாய் பார்த்தபடி கேட்டார் எஸ்.ஐ.

''என் ரூமிற்கு எதற்கு வருவேன் சார். தூங்க, குளிக்க என்று என் வேலைகள் ஆயிரம் இருக்கும். நீங்கள் உங்கள் வீட்டிற்கு ஏன் போகிறீர்கள் என்று கேட்பது எவ்வளவு அபத்தமோ அவ்வளவு அபத்தம் நான் ஏன் என் ரூமிற்கு வந்தேன் என்று கேட்பது'' எரிச்சலுடன் பதில் சொன் னான் அசோகன்.

''நாங்க வேலையை முடித்துட்டு வீட்டிற்குப் போகி றோம்.''

''நானும் அப்படித்தான் என் வேலையை முடித்து விட்டு என் ரூமிற்கு வந்தேன்.''

''அப்படியா... ம்ம்ம்.. என்ன வேலை? டிராவல் ஏஜன் ஸியில் நேற்று காலையிலிருந்து நீ இல்லை. ஒரு காரை எடுத்துக் கொண்டு போய் விட்டாய்ன்னு சொன்னாங்க.''

''சார் அதுதான் நேற்று காலையிலிருந்தே நானில் லைன்னு காட்டுக் கத்தலா கத்திக்கிட்டு இருக்கேனே சார். நீங்களும் அதைத்தானே சொல்கிறீர்கள். தெரிந்துக்கிட்டே கேட்கிறீர்களே சார்.''

''தெரியும் மேன். நேற்று ராத்திரி நீ சென்னையிலிருந்து வெளியூருக்கு அவசர வேலையாப் போறேன்னு உன் டிராவல் ஏஜென்ஸிக்கு போன் பண்ணியதும் தெரியும்.''

''ஆமாம் சார். நான் வெளியூரில் வேண்டியவங்க ஒருத் தரை விட்டு விட்டு வரப் போயிருந்தேன்.''

''அப்படி நீ சொன்னால் நான் நம்பிரணுமா?''

''நம்பித்தான் சார் ஆகணும். அதுதான் உண்மை...''

''அப்படியா? அப்படின்னா நீ கூட்டிக் கொண்டு போய் விட்டு விட்டு வந்த 'வேண்டியவங்க' யார்?... எந்த ஊரில் கொண்டு போய் விட்டாய்... ஊம்ம்ம்... சொல்லு... ஊர் பெயர், ஆள் பெயர், அட்ரஸ் எல்லாம் சொல்லு. கூப்பிட்டு விசாரிக்கிறேன். நீ சொல்வது உண்மையாயிருந்தால் உன்னை விட்டு விடுகிறேன்.''

''அவங்க பெயர்...'' என்று ஆரம்பித்த அசோகனின் வாய் அடைத்துப் போனது. சட்டென்று மௌனம் அவனைச் சூழ்ந்தது. எப்படிச் சொல்வது? ஓர் இரவு தனியாக அவனுடன் காரில் பயணம் செய்தது பக்கத்து வீட்டுக்குக் கூடத் தெரியக் கூடாது என்று நினைக்கும் அவளது

குடும்பம் இவனோடு நேற்று இரவு பயணித்தது தான் தான் என்பதை போலீஸ் ஸ்டேஷனில் வந்து காவ்யா சொல்லி ஒப்புக் கொள்வதை விரும்புமா? அவளை அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பது மட்டுமன்றி இப்படியொரு நெருக்கடியை உண்டு பண்ணிக் கொண்டதற்காக அவள் அண்ணன் ஆனந்தன் அவளை அடித்தே கொன்று விடுவான். வேண்டாம். அவள் பெயரை போலீஸ் ஸ்டேஷன் வரை இழுக்கக் கூடாது.

எவருக்கும் நன்மையே செய்யும் முரட்டுத் தோற்றம் கொண்ட அந்த இளைஞன் கொலைப் பழி தன் மீது விழுந்தும், தன்னைக் காப்பாற்ற ஒரு பெண்ணின் நிம்மதியைப் பணயம் வைக்க விரும்பாமல் வருவதை எதிர்கொள்ளத் தயாரானான்.

## 7

அலை கடலில் சிறு மலரே
அலைக்கழிந்து போகாமல்
கட்டு மரம் காத்து நின்று
கரைக்கு வந்து சேர்த்ததற்கு
நிலவே நீ சாட்சி

**வி**னாடிப் பொழுதில் முடிவெடுத்த பின் மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்தான் அசோகன். அவனது உடனடித் தேவை ஒரு வக்கீல் என்பதை அவனது அறிவு உணர்த்திக் கொண்டிருக்கையில்,

''சொல்லுப்பா ஏன் வாயடைச்சுப் போய் நிற்கிறே'' என்று எஸ்.ஐ. இளக்காரமாய் கூறுவது போல் உசுப் பேற்றினார்.

''சார் நான் என் நண்பனுக்கு ஒரு போன் பண்ண லாமா?'' என்று அசோகன் கேட்க,

''அவசியமேயில்லை நானே வந்துவிட்டேன்'' என்றது பின்னாலிருந்து தியாகராஜனின் குரல். திகைப்புடன் திரும்பிப் பார்த்த அசோகன்,

''உனக்கு எப்படிடா தெரியும்?'' என்றான்.

''மெஸ் மாமி காலையில் வீட்டுக்கு ஓடி வந்தாங்கடா. அவங்க சொல்லித்தான் ஓடி வரேன். என்னடா இதெல் லாம்?''

''இவங்க என் மேல் கொலைப்பழி போடறாங்கடா.''

''சார். நான் லாயர் தியாகராஜன்'' என்றவாறு எஸ்.ஐ. யிடம் கை குலுக்க கை நீட்டினான் தியாகராஜன்.

''அப்படியா சரி. சொல்லுங்க என்ன வேணும் உங் களுக்கு'' என்றார் அவர் கை கொடுக்காமல்.

''என் நண்பனிடம் தனியாகப் பேச வேண்டும்.''

''பேசுங்கள் பேசுங்கள். உங்களிடமாவது உண்மையை ஒத்துக் கொள்கிறாரான்னு பார்ப்போம்'' அசுவாரஸ்யமாய் கூறினார் எஸ்.ஐ.

அசோகனைத் தனியாக தள்ளிக் கொண்டு போனான் தியாகராஜன்.

''சொல்லுடா அசோக். என்ன பண்ணித் தொலைச்சே?''

''இரண்டு நாள்களா நான் சென்னையிலேயே இல் லைடா தியாகு. நேற்று நடு ராத்திரிக்கு மேல் ஆயிருச்சு.

நான் திரும்பி வர. வந்து பார்த்தால் ரூம் திறந்து கிடக்கு. உள்ளே நுழைந்தால் இவங்க என்னை அரெஸ்ட் பண்ணி இங்கே கொண்டு வந்திட்டாங்க.''

''ம்ம்ம். மெஸ் மாமி எல்லாத்தையும் சொன்னாங்க. அவங்க கடையில்தான் அந்த ரௌடியோடு சண்டை போட்டாயாம்... அது சரி நீ நேற்றே திரும்பியிருக்கணுமே. வேறு எதுவும் வாடகைக்குப் போனாயா?''

அசோகன் மௌனமானான். தியாகராஜனின் கூர் விழிகள் அவனது மௌனத்தை அவதானித்தது.

''சொல்லுடா அசோக். உன்னைத்தான் கேட்கிறேன்.''

''தியாகு... உங்க மாமாவை அவர் ஊரில் விட்டு விட்டு நேற்று சாயந்திரமே நான் வந்திட்டேண்டா. ஆனால் வரும்போது...''

''ம்ம் சொல்லு வரும்போது...''

''வரும் வழியில் ஒருத்தரைப் பார்த்தேன். அவங்களை திருநெல்வேலி வரை கொண்டு போய் விட்டு விட்டு வர வேண்டியதாகி விட்டது.''

''அது போதுமே! அவர் யாருன்னு சொல்லு. திரு நெல்வேலியில் அவர் அட்ரஸ் எதுன்னு சொல்லு. நான் எஸ்.ஐ.யிடம் பேசி...'' என்று பேசிக் கொண்டே போன வனை இடைமறித்துப் பேசினான் அசோகன்.

''இல்லை தியாகு அவங்க வந்து சாட்சி சொல்ல முடியாது.''

''ஏண்டா பைத்தியக்காரா? உன் நிலைமை என்னன்னு தெரியுமாடா உனக்கு?''

''தெரியும் தியாகு! ஆனால் அந்தப் பெண் வந்து சாட்சி சொல்ல முடியாது. அவங்க வீட்டில் விட மாட்டாங்க.''

"பெண்ணா...?" என்று கண்களை விரித்த தியாக ராஜனைப் பார்த்து,

"அப்படிப் பார்க்காதேடா. நீ நினைப்பது போல் இல்லை. நான் வரும் வழியில் அந்தப் பெண் ஒரு முரடனிடம் மாட்டிக் கொள்ளவிருந்தாள். நான் காப்பாற்றினேன். தனியாக ஊருக்குப் போகப் பயந்தாள். என் காரில் திரு நெல்வேலி வரை கொண்டு போய் விட்டு விட்டு வரு கிறேன்."

"நீ நல்லது தானேடா செய்திருக்கிறாய்? பின்னே ஏன் அந்தப் பெண் வராது?"

"அவள் வீட்டில் விட மாட்டார்கள் தியாகு. நேற்றே அவளை என்னோடு காரில் தனியாக வந்ததற்கு அடித்து விட்டான். அந்தப் பெண்ணின் அண்ணன். நான்தான் தலையிட்டு மன்னிப்புக் கேட்டு விட்டு வந்தேன்."

"உனக்கென்ன தலை எழுத்தாடா? யாரு எக்கேடு கேட்டா உனக்கென்னடா வந்தது? சென்னையிலிருந்து திருநெல்வேலி வரைக்கும் வேலையற்றுப் போய் அவமானப்பட்டு வந்தானாம்... உன்னை என்ன செய்தால் என் கோபம் ஆறும்? அறிவு கெட்டவனே! அவளைக் காப்பாற்றப் போய் இப்போது இவ்வளவு பெரிய ஆபத்தில் மாட்டியிருக்கிறாயேடா. இப்போது உன்னை யாருடா காப்பாற்றுவாங்க?"

"நான் கொலை செய்யவில்லை தியாகு. இது சத்தியம். நீ என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது. அவளைத் தொந்தரவு செய்யாமல் என்னைக் காப்பாற்று."

நண்பனைப் பார்க்க பாவமாக இருந்தது தியாக ராஜனுக்கு. உயிர் நண்பன். பெற்றோரில்லாதவன்.

தியாகராஜனின் தாய், தந்தையைத்தான் 'அம்மா, அப்பா' வென்று அழைத்து வந்தான். ஹாஸ்டலில் தங்கிப் படித்தவன் லீவு விடும் போதெல்லாம் அந்த விடுமுறை நாள்களை தியாகராஜனின் வீட்டில் தான் கழிப்பான். தியாகராஜனுக்கு எத்தனையோ முறை நெருக்கடியான சமயங்களில் பண உதவி செய்து காப்பாற்றி இருக்கிறான். இத்தனைக்கும் சிகரம் வைத்தாற் போல் தியாகராஜன் ஒரு கேஸ் விஷயமாக வெளி மாநிலம் சென்றிருந்தபோது அவனுடைய தந்தை இறந்து விட தியாகராஜன் வரத் தாமதம் ஆனதால் அவருக்கு அசோகன் தான் கொள்ளி வைத்தான். தியாகராஜன் திரும்பி வரும் வரை எல்லாக் காரியங்களையும் அவன் தான் கவனித்துக் கொண்டிருந் தான். தியாகராஜனின் தாய்க்கு அசோகனும் ஒரு மகன் தான். இன்று அசோகனுக்கு இவ்வளவு பெரிய ஆபத்து வந்திருக்கும்போது தியாகராஜன் தன் உயிரைக் கொடுத் தாவது அசோகனைக் காப்பாற்றியாக வேண்டும் தான். ஆனால் அவனும் தான் என்ன செய்வான்? எப்படிக் கேட்டாலும் அந்தப் பெண் யாரென்று அசோகன் சொல்ல மறுக்கிறானே. அவனை அவன் வழியிலேயே போய் மடக்க நினைத்த தியாகு,

"அவ ஏண்டா அந்த நடுக்காட்டுக்குப் போனாள்... ஒரு வேளை... ஒரு மாதிரிப் பெண்ணோ?" என்றான்.

"சேச்சே என்னடா தியாகு இப்படிப் பேசற?"

"பின்னே என்னடா... முயல் பிடிக்கிற நாயை முகத்தைப் பார்த்து தெரிந்துக்கலாம்ன்னு அம்மா அடிக்கடி சொல்வாங்க. அவ முகத்தில் விழித்த நேரம்... நீ எங்கே வந்து நிற்கிற பாரு" என்றான் தியாகராஜன் உண்மையான ஆதங்கத்துடன்.

''தியாகு! நீ என் மேல் இருக்கிற அன்பில் அவசரப் பட்டுப் பேசற. அவள் முகம் நிலவு முகம்டா. களங்கமில்லாத நிலவு முகம்'' என்றான் அசோகன் கனிவுடன்.

''அப்போ அந்த நிலவை வந்து சாட்சி சொல்லச் சொல்லுடா'' என்றான் தியாகராஜன் கோபத்துடன்.

''வரும்டா. எனக்கு இப்படி ஒரு ஆபத்து வந்திருக்குன்னு தெரிந்தால் அந்த நிலவு நிச்சயம் சாட்சி சொல்ல வரும். ஆனால் நான் அதை அனுமதிக்க மாட்டேன். இந்த விஷயம் அந்தப் பெண் காதுக்கு போகக் கூடாது.''

''சரி சரி விடுடா. என்னவோ நான் அந்தப் பெண்ணிடம் போய் நின்று 'நிலவே நீ சாட்சி'ன்னு சொல்லி சாட்சி சொல்லக் கூப்பிட்டுக்கிட்டு வரப்போவது போல் பதறுகிறாயே. நீ இவ்வளவு சொல்லும்போது நான் அதை மீறவாப் போகிறேன். விடு நான் வேறு வழி ஏதாவது யோசிக்கிறேன். ஆனால் அவளை நீ எங்கே பார்த்தே? எப்படிப் பார்த்தே? அதையாவது இந்த நண்பன் கிட்ட சொல்லலாமில்லையா?''

''காவ்யா இங்கே காலேஜில் படிக்கிறவடா. முந்தா நாள் தான் கடைசி பரிட்சை எழுதி முடித்திருக்கிறாள். நேற்று ஊருக்குக் கிளம்பினாளாம்.''

''சரி அவள் ஊரென்ன நடுக்காட்டிலயா இருக்கிறது?''

''ஆட்டோக்காரன் தப்பான ஆளாயிருந்துட்டா ஊருக்குப் போக நினைக்கிற பெண்கள் நடுக்காட்டுக்கு போக வேண்டியதுதான்.''

''உன்கிட்ட கதை எதுவும் விட்டாளோ?... முறைக்காதே... வக்கீல் பார். எல்லா கேள்வியும் கேட்பேன்.''

“அந்தப் பெண்ணை சந்தேகப்படாதே தியாகு” என்று கோபமான அசோகன் அவள் படிக்கும் கல்லூரியின் பெயரைக் கூறினான்.

“அந்தக் கல்லூரியா? ஹிஸ்டிரி ஸ்டூடண்டா. ஏன்னா கதை பெரிசா இருக்கே.. என் கணக்கு என்னன்னா...”

“டேய் வக்கீல். நீ வேணும்னா ஹிஸ்டிரி படிச்சுட்டு கணக்குப் போடலாம். காவ்யா மேத்ஸ் படிச்சுட்டு கதை சொல்ல மாட்டாள்.”

“சரி சரி. என்னமோ எல்லாத்தையும் தெரிந்துகிட்டால் எனக்கு நிம்மதின்னு கேட்டேன். நீ இவ்வளவு பெரிய ரிஸ்க் எடுக்கிறன்னா அவ நல்ல பெண்ணாத்தான் இருப்பாள். நீ ஒண்ணும் கவலைப்படாதே. நான் அவள் பெயரை இழுக்காமல் ஏதாவது செய்கிறேன். அப்போ நான் வரட்டுமா. தைரியமா இருடா. இனி உன் கவலை, என் கவலை. நான் பார்த்துக் கொள்கிறேன்.”

மனத்துக்குள் சிரித்துக் கொண்டே தியாகராஜன் கூறினான். பின்னர் எஸ்.ஐ.யிடம் தனியாகப் பேசினான்.

“அவன் ஒரு பெண்ணைக் காப்பாற்றி அவள் ஊரான திருநெல்வேலியில் விட்டு விட்டு வந்திருக்கான் சார். அந்தப் பெண் சாட்சி சொல்ல வந்தால் அந்தப் பெண் ணுக்கு எதுவும் சிக்கல் வந்திடுமோன்னு பயப்படறான். அவன் நல்லவன் சார். கொலையெல்லாம் பண்ண மாட்டான்.”

“நானும் அவர் கொலை பண்ணிட்டார்ன்னு நினைத்து கைது பண்ணவில்லை மிஸ்டர் தியாகராஜன்! சந்தேகத் தின் பேரில்தான் அரெஸ்ட் பண்ணியிருக்கிறோம். கொலை நடந்த நேரத்தில் அவர் எங்கேயிருந்தார்ன்னு

ஆதாரத்தோடு நிரூபிக்கட்டும். அந்த வினாடியே அவரை விட்டு விடுகிறேன்'' என்றார் எஸ்.ஐ.

''நிரூபிக்கிறேன் சார். நான் அதை நிரூபிக்கிறேன். எனக்கு இரண்டு நாள் டைம் கொடுங்க சார். நான் திருநெல்வேலி போய் அந்தப் பெண்ணை கூட்டி வந்து உண்மையைச் சொல்ல வைக்கிறேன்.''

''செய்யுங்க. போலீஸ்காரனும் மனிதன் தான் உங்க ஃபிரெண்ட் குடியிருக்கிற தெருவில் ஒருவர் கூட அவருக்கு எதிராய் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. அது மட்டுமில்லை. அத்தனை பேரும் ஒட்டு மொத்த மாய் சொல்லி வைத்தாற் போல் அவரைப் போல் ஒரு நல்ல மனிதனைப் பார்க்க முடியாதுன்னு சொன்னாங்க. ஹோமஸ் மாமின்னு சொல்லப்படுற சீத்தாலட்சுமியை விசாரிக்கப் போனால் மயக்கமே போட்டு விழுந்துட்டாங்க.

இந்தக் காலத்தில் இப்படி ஒரு நல்ல மனிதனைப் பார்ப்பது அரிது. ஆனால் நானென்ன செய்யட்டும் சொல்லுங்க. கொலையை யார் செய்தான்னு நேரில் பார்த்த சாட்சியில்லை. அதுவே உங்க நண்பருக்கு ஒரு வகையில் சாதகமாகவும் இன்னொரு வகையில் பாதகமாகவும் முடிந்திருக்கு. ஏன்னா கொலை நடந்த அன்று காலையில் உங்கள் நண்பர் அந்த ரௌடியோடு சண்டை போட்டிருக்கார்.

'ராத்திரி வாடா பொலி போட்றேன்'னு உங்க நண்பரைப் பார்த்துக் கத்திய அந்த ரௌடி அந்த ராத்திரியில் கொலையாகிக் கிடக்கிறான். அதே சமயம் உங்க நண்பரோ அந்த நேரத்தில் எங்கேயிருந்தார்ன்னு சொல்ல மறுக்கிறார். கொலை நடந்த ராத்திரி எங்கே, யாரோடு காரில் போனேன்னு கேட்டால் மறைக்கிறார். நான்

என்னதான் செய்வது? அந்த சாட்சி மட்டும் இங்கே வந்து சாட்சி சொன்னால் நாங்க என்ன செய்யப் போகிறோம்? உண்மையை நிரூபியுங்கள். உடனே உங்கள் நண்பரை விட்டு விடுகிறோம்'' என்று காக்கிச் சட்டை போட்டாலும் மனித நேயம் மறவாத அந்த உண்மையான காவல்காரர் நிலைமையை எடுத்துச் சொன்னார்.

பொறுமையாகக் கேட்ட தியாகராஜன் நிலைமையை சரிவரப் புரிந்து கொண்டான். இனி என்ன செய்வது என்று மனதிற்குள் உடனே திட்டம் வகுத்துக் கொண்டான். எஸ்.ஐ.யிடம் நன்றி சொல்லி விடைபெற்றுக் கொண்ட தியாகராஜன் காவ்யா படித்த கல்லூரியை நோக்கி நடந்தான்.

## 8

அன்று தவித்து நின்ற தளிர்கொடிக்கு
காட்டு மரம் பாதுகாப்பு
இன்று தனித்து நிற்கும் நெடுமரத்திற்கு
தளிர்கொடிதான் பாதுகாப்பு
துணைக்கு வந்து சிறைக்குச் சென்ற
தூயவனின் நிலைமைதன்னை
உணராமல் கொடிமலர்தான்
உலவுகின்ற கொடுமைக்கு
நிலவே நீ சாட்சி

''நீங்கள் யார்? காவ்யாவோட அட்ரஸ் உங்களுக்கு எதுக்கு?'' மூக்குக் கண்ணாடியை சரி செய்தவாறு கேட்

நாள் அந்தப் பெண்கள் கல்லூரி விடுதியின் வார்டனம்மாள்.

'என்ன சொல்வது?' என்று யோசித்தான் தியாகராஜன். 'காதல் கோட்டை' படம் கை கொடுத்தது.

"மேடம்! திருநெல்வேலி தான் என் சொந்த ஊர். நேற்று திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு ஒரு வேலையாக வந்தேன். டிரெயினில் நான் ஏறிய கம்பார்ட்மென்டில் ஒரு லேடிஸ் ஹேண்ட் பேக் இருந்தது. யாருடையதுன்னு தெரியவில்லை. திறந்து பார்த்தேன். உள்ளே பணமும், சின்ன நகைப் பெட்டியும் இருந்தது. ஒரு நோட் புக்கில் காவ்யா பி.எஸ்ஸி மூன்றாம் வருடம் என்று எழுதி உங்கள் காலேஜ் பெயர் எழுதியிருந்தது. திருநெல்வேலி பெண்ணோன்னு மனசில் தோணுச்ச. மண் வாசனை பாருங்கள். சொந்த ஊர் பெண்ணாக இருந்தால் நாளைக்குத் திருநெல்வேலி போனதும் நேரிலேயே கொடுத்து விடுவேன். இல்லையென்றால் பரவாயில்லை. இந்த பேக்கை போலீஸில் கொடுத்து விடுகிறேன்" என்று சரளமாக சரடு விட்டான்.

"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

"நான் ஒரு லாயர் மேடம். ஒரு கேஸ் விசயமாகத்தான் நான் சென்னைக்கு வந்தேன். வந்த வேலை முடிந்து விட்டது. இன்று இரவே நான் திருநெல்வேலிக்குப் போக வேண்டும். அதுதான் உங்களைப் பார்க்க வந்தேன்."

வார்டனம்மாள் அவனை ஏற இறங்கப் பார்த்தாள். பார்ப்பதற்கு மிகக் கண்ணியமான தோற்றம் கண்களில் பொய்யில்லை. 'லாயர்' என்று வேறு சொல்லியிருக்கிறான். முகவரியைக் கொடுத்து விட்டாள்.

ஒரு நூல் முனை கிடைத்தால் போதும். கோடு போட வேண்டிய இடத்தில் ரோடே போட்டு விடுவான் தியாக ராஜன். காவ்யா விசயத்திலும் அப்படித்தான் நடந்தது. அசோகன் அறியாமல் அவள் முகவரியைக் கண்டு பிடித்தே விட்டான்.

அன்று இரவே அவனது கார் திருநெல்வேலி நோக்கிப் பாய்ந்தது. விடியற்காலையில் திருநெல்வேலியை அடைந் தவன் ஓட்டலில் ரூம் போட்டு குளித்து உடை மாற்றிய வுடன் காவ்யாவின் வீட்டிற்குப் போனான். அவளது முகவரியைக் கண்டு பிடிப்பது எளிதாகவே இருந்தது. காலிங்பெல்லை அழுத்தியவுடன் கதவைத் திறந்த ஆனந்தன்,

"நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"உள்ளே போய் பேசலாமா?" என்று கூறியவாறு உள்ளே செல்ல முயன்றான் தியாகராஜன்.

"முதலில் நீங்கள் யாருன்னு சொல்லுங்கள். உங்களை உள்ளே விடுவதா வேண்டாமான்னு நான் முடிவு பண்ணி விட்டுச் சொல்கிறேன்" என்றான் ஆனந்தன் வழியை அடைத்தவாறு நின்றபடி.

'அசோகன் சொன்னது சரியாகத்தானிருக்கு' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட தியாகராஜன்.

"உங்கள் தங்கை விசயமாய் பேச வந்திருக்கிறேன்" என்று கூறினான்.

உடனே படக்கென்று விலகி வழி விட்ட ஆனந்தன், தியாகராஜன் பேசிய வார்த்தைகள் யார் காதிலும் விழுந்து விட்டதோ? என்று பயந்தவனாய் பக்கத்து வீடு, எதிர் வீடுகளைப் பார்த்தான். 'அந்த வீடுகளின் வாசல்களில்

நல்ல வேளையாக யாருமில்லை'யென்று நினைத்துக் கொண்டவனாய் தியாகராஜன் உள்ளே வரவும் கதவை அடைத்தவன்.

"என் தங்கை விசயமாய் என்ன பேசப் போகிறீர்கள்? நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"உட்கார்ந்து பேசலாமே" என்ற தியாகராஜன் அங்கிருந்த சேரில் தானாய் அமர்ந்து கொள்ளவும் கடுப்பாகி விட்டான் ஆனந்தன். உள்ளே திரும்பி, "அம்ம்ம்மா!" என்று அலறினான். அவன் போட்ட அலறலில் அவசர மாய் பார்வதம் ஓடி வந்தாள்.

"உங்க அருமை மகள் என்னவோ செய்துட்டு வந்திருக்கிறாள். இவர் என்ன என்னவோ சொல்கிறார்" என்று அவன் கூற,

"ஐயோ! என்னலே சொல்றே. என் மகளா? இருக்கா ளுலே அவள் அப்படிப்பட்டவ இல்லை. என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுட்டான்னு சொன்னால் நான் நம்ப மாட்டேன்" என்று தாய் பதறினாள்.

தியாகராஜன் திகைத்துப் போய் விட்டான்.

"பொறுங்கள்" என்று கையமர்த்தியவன்

"இப்போது நான் என்ன சொல்லிட்டேன்னு நீங்க ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கறீங்க? நான் வந்த விசயத்தை இன்னும் சொல்லவே இல்லையே. நீங்களாக எதுவும் கற்பனை பண்ணிக் கொள்ளாதீர்கள்" என்று கூறினான்.

"நீங்கள் புதுசா என்ன சொல்லப் போறீங்க. உங்களை முன்னே பின்னே எங்களுக்குத் தெரியாது. உங்கள் வயதில் ஒருவர் திடீரென்று வந்து என் தங்கை விசயமாய்

பேச வேண்டுமென்றால் அது என்ன விசயமாக இருக்கும்ன்னு எங்களுக்குத் தெரியாதா?'' என்றான் ஆனந்தன்.

''அப்பவே தலை தலையா அடிச்சுக்கிட்டேன். என் மகள் என் கூடவே இருக்கட்டும். காணாத தேசத்தில் கண் காணாம படிக்க வைக்க வேண்டாம்ன்னு எவ்வளவு சொன்னேன். என் பேச்சை இந்த வீட்டில் ஒரு ஈ, எறும் பாவது கேட்டதா? சொல்லச் சொல்ல மூணு வருசம் மெட்ராஸ் காட்டில் படிக்க விட்டுட்டு இப்ப ஐயோ, அம்மான்னு அடித்துக்கிட்டால் அதுக்கு யார் பொறுப்பு?'' என்று பர்வதம் எரிச்சலுடன் கூறினாள்.

''ஆமாம்மா. தப்பெல்லாம் என் மேல் தான். ஒரு வருசம் வீணாப் போனாப் போகுதுன்னு அப்பவே நான் நினைச்சிருக்கணும். படித்தால் திருநெல்வேலியில் படி இல்லைன்னா படிப்பே வேண்டாம்ன்னு உன் மகள் காலை முறித்துப் போட்டிருக்கணும். நல்லா படிக்கிற பெண் படிப்பு கெடக் கூடாதுன்னு பார்த்தேன் பார். என்னைத் தான்ம்மா சொல்லணும்.''

''ஆமாம்டா. ஆன்னா ஊன்னா அவ கையை ஒடிக்கிற திலும், காலை முறிக்கிறதிலும் அலை. அவ என்னலே செய்வா? அவளை ஏன்லே குத்தம் சொல்றே.''

''உன் மகள் மேல் குற்றப் பத்திரிகை வாசிக்க எனக்கு மட்டும் ஆசையா? அன்றைக்கு என்னன்னா யாரோ கார்காரன் காப்பாத்தினான். கூட வந்தேன்னு வந்து நிற்கிறாள். இன்னைக்கு வேற யாரோ ஒருத்தன் வந்து உன் தங்கை விசயமாய் பேசணும் நீ என்ன சொல்றேன்னு வந்து நம்ம வீட்டுக்குள்ள சட்டமா உட்கார்ந்திருக்கிறான். இந்த இழுவையை இழுத்து விடுகிற உன் மகனை கொஞ்சவா முடியும்? அறைஞ்சு பல்லைப் பேக்கத்தான் முடியும்.''

தாய், மகன் இரண்டு பேரும் மாறி மாறி சண்டை டுக் கொள்வதைப் பார்த்த தியாகராஜனின் தலை றியது. 'என்ன மாதிரிக் குடும்பம்டா இது?' என்று திண ன் உள்ளேயிருந்து வந்த பெரியவரைக் கண்டதும் வாசமானான். 'இவர் காவ்யாவின் அப்பாவாக இருக் . குடும்பத் தலைவர். இவரிடம் நியாயம் கிடைக்கும்' று அவன் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போதே ர்.

"என்னடா ஆனந்தா! என்ன சத்தம்? உங்க அம்மா ம்தான் உனக்குத் தெரியுமில்ல. யாரோ ஒரு புது தன் முன்னால் சத்தம் என்ன வேண்டிக் கிடக்கு" று அதட்டி தியாகராஜனின் வயிற்றில் பால் வார்த்தார். ர் தலையில் கட்டுப் போடப்பட்டிருக்க முகம் சோர் இருந்தது. அவர் பின்னாலேயே கண்களில் கேள்விக் றியோடு தியாகராஜனை அறிமுகமற்ற பார்வை பார்த்த காவ்யா வந்தாள். முதல் பார்வையிலேயே அவளது கான தோற்றம் கண்டு அசந்து போன தியாகராஜன் சோகன் சொன்னது போல் இவள் நிலவு போல் அழ த்தானிருக்கிறாள். இந்தப் பெண் நிலவு அவனைக் பாற்ற சாட்சி சொல்ல வரவேண்டுமே' என்று திற்குள் கவலைப்பட்டுக் கொண்டான்.

"அப்பா நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? டாக்டர் ஸ்ட் யின் பண்ணிக்கக் கூடாது. முழு ரெஸ்டில் இருக்க ன்னு சொல்லியிருக்காரா இல்லையா?" என்று பதறிய அவசரமாய் அவர் உட்கார ஒரு சேரை இழுத்துப் ட்டான் ஆனந்தன். அதில் அமர்ந்தவர் தியாகராஜனை யார்?' என்பது போல் பார்க்க,

"வணக்கம் சார். என் பெயர் தியாகராஜன். சென்னை ல் லாயராக இருக்கிறேன்" என்று தன்னை அறிமுகப் த்திக் கொண்டான் அவன்.

"அந்த ராமாயணமெல்லாம் வேண்டாம். நீங்கள் என்ன விசயமாய் வந்திருக்கிறீர்கள் என்பதை சட்டுபுட்டுன்னு சொல்லிட்டு இடத்தைக் காலி பண்ணுங்கள்" என்றார் ராமநாதன். காவ்யாவின் அப்பா.

மலைத்துப் போனான் தியாகராஜன். 'விருந்தோம்பலில் மகனுக்கு தந்தை கொஞ்சம் கூட சளைத்தவரில்லை' என்று எண்ணிக் கொண்டவன் ஆனந்தன் குணத்தில் தந்தையைக் கொண்டு வளர்ந்திருக்க வேண்டும் என் பதை உடனே புரிந்து கொண்டான்.

"இரண்டு நாள்களுக்கு முன்னால் உங்கள் பெண்ணைக் காப்பாற்றி, காரில் ஊர் வரைக்கும் கொண்டு வந்து விட்டுவிட்டுப் போனானே அசோகன். அவனுடைய நண்பன் நான்."

"அதற்கென்ன இப்போது? அதற்குள் என் மகளைப் பெண் கேட்க அனுப்பி விட்டானா அந்தத் தடி ராஸ்கல்? என் மகளென்ன கடைச்சரக்கா? வர்றவன், போறவனெல் லாம் பெண் கேட்க?" அவர் குரல் கோபத்தில் உயர்ந்தது.

'சரியாப் போச்சு. குடும்பம் மொத்தமே வக்கரித்த குணம் போல. இந்தப் பெண் காவ்யா எப்படிப்பட்ட வள்ன்னு தெரியலையே. அதையும் பேசிப் பார்த்து விடலாம்' என்று நினைத்துக் கொண்ட தியாகராஜன்.

"சார்! உங்கள் மகளைப் பெண் கேட்குமளவிற்கு என் நண்பன் பழகவில்லை. உங்கள் மகளை அவன் முன் பின் பார்த்து அறியாதவன். அன்றைக்கு இரவு உதவி செய்த போதுதான் உங்கள் மகளை முதன் முதலாய் பார்த்திருக் கிறான்" என்று எடுத்துச் சொல்ல ஆரம்பித்தான்.

"போதும் போதும். அதையே எத்தனை தடவை சொல் லுவ? என் கூறு கெட்ட தங்கை கண்டவன் கூட காரில்

ஏறி வந்ததும் போதும். இப்போது யார் யாரோ உள்ளே வந்து உரிமை கொண்டாடிக்கிட்டு கதை சொல்றதும் போதும். எல்லாம் உன்னால் வந்தது'' என்று ஆனந்தன் காவ்யாவை திட்ட பார்வதம்,

''ஏண்டா அவள்தான் தெரியாமல் ஏறி வந்திட்டாள். அந்தத் தடியன் அதை சலுகையாய் எடுத்துக்கிட்டு பின்னாடியே ஆளனுப்புவான் என்று அவள் கனவா கண்டாள்?'' என்று மகளுக்கு ஆதரவாய் பேச,

''ஏம்மா. இவள் ஏறப்போய்த்தானே இவன் வந்திருக்கிறான். இவள் காரில் ஏறாமல் பஸ்ஸிலோ, டிரெயினிலோ வந்திருந்தால் நமக்கு ஏன்ம்மா இந்தத் துன்பம் வந்திருக்கப் போகிறது'' என்று ஆனந்தன் பதிலுக்குக் கத்த.

''கொஞ்சம் நிறுத்தறீங்களா'' என்று தியாகராஜன் சேரைவிட்டு எழுந்து சத்தம் போட்டான்.

''நானும் வந்ததிலிருந்து பார்க்கிறேன். ஆளுக்கு ஆள் நியாயம் பேசுகிறீர்களேயொழிய என்னை ஒரு வார்த்தை பேச விடுகிறீர்களா? மிஸ்டர் ஆனந்தன். நீங்கள் சொன்னது சத்தியமான வார்த்தை. உங்கள் தங்கை பஸ்ஸில் வந்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு என் நண்பனை வற்புறுத்தி அவனை திருநெல்வேலிக்கு வரவைத்தது மிகப் பெரிய தவறு.''

''என்னது. என் தங்கையைக் கொண்டு வந்து விட்டது அவன் குற்றமில்லை. என் தங்கை தான் 'வாவா'வென்று அவனை அழைத்து வந்தாள் என்று பழி போடுகிறாயா? கேட்டாயா காவ்யா. நான் சொன்னால் அண்ணன் கொடுமைக்காரன் என்பாய். காது குளிரக் கேட்டுக் கொள்.''

காவ்யாவின் உடல் நடுங்கியது. 'என்ன நடந்திருக்கிறது? இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது?'

அவளது உள்மனம் எதுவோ நடந்து விட்டிருக்கின்றது என்பதை உணர்த்த அவள் தியாகராஜனை அச்சத்துடன் பார்த்து வினவினாள்.

"என்ன நடந்தது?"

"என்ன நடந்ததா? குடி முழுகிப் போய் விட்டது. மிஸ் காவ்யா! நீங்கள் பயந்ததால் உங்களைக் காரில் கொண்டு வந்து விட வந்ததால் அவன் மிகப் பெரிய ஆபத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறான்."

"ஆபத்தா? என்ன ஆபத்து?"

"அவன் கொலைக் குற்றச் சாட்டில் மாட்டியிருக் கிறான்ம்மா."

"என்னது கொலையா?" என்று ஆனந்தன், பார்வதம், ராமநாதன் மூன்று பேரும் ஒரே குரலில் அலற காவ்யா நிற்க முடியாமல் தளர்ந்து சரிந்தாள்.

# 9

**துன்பக் கடலில் அவள் வீழாமல்**

**கை கொடுத்து அவன் கரை சேர்த்தான்**

**கரைசேர்த்த வள்ளல் மனம்**

**கடல்தன்னில் மூழ்காமல்**

**காப்பாற்ற அவள் துடித்ததற்கு**

**காவல்தன்னில் சிறைபட்டதற்கு**

**நிலவே நீ சாட்சி**

"நான் அப்பவே நினைச்சேன். ரௌடி மாதிரி இருக் கானே. இவன் கூட வந்து நிற்கிறாளேன்னு அவன்

கொலைகாரனா..! தெய்வமே! என் பெண்ணுக்கு எந்தக் கெடுதலும் வராம பத்திரமாக் கொண்டு வந்து சேர்த்திட்டியே காந்திமதியம்மா, நெல்லையப்பா!'' என்று கையெடுத்துக் கும்பிட்டாள் பார்வதம்.

''வெரி ஸ்டேன்ரன்ஜஸ்! ஒரு கொலைகாரன்கூட என் தங்கை தனியாக காரில் வந்திருக்கிறாள்'' என்று அதிர்ச்சியுடன் முணுமுணுத்தான் ஆனந்தன்.

ராமநாதன் வாயையே திறக்காமல் மகளை வெட்டிப் போடுவது உசிதமா? இல்லை உயிரோடு புதைப்பது உசிதமா? என்பது போல் காவ்யாவைப் பார்வையில் எரித்துக் கொண்டிருந்தார். அசோகன் மேல் கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருப்பது கேட்டவுடன் தளர்ந்து சரிந்தவள் தந்தையின் எரிக்கும் பார்வையிலிருந்து தப்பிக்க முழங்கால்களுக்கு இடையில் முகம் புதைத்தாள். குனிந்த தலையை நிமிரவே இல்லை. தியாகராஜன் எரிச்சலாகிவிட்டான்.

''சும்மா அவனை கொலைகாரன், கொலைகாரன்னு சொன்னால் எனக்குக் கெட்ட கோபம் வந்திடும். அவன் கொலை செய்ததை நீங்கள் யாராவது பார்த்தீங்களா? உங்க வீட்டுப் பெண்ணை பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றி கூட்டி வந்திருக்கிறான். அதே ராத்திரியில் அங்கே சென்னையில் கொலை நடந்திருக்கிறது. இங்கே திருநெல்வேலிக்கு வந்து கொண்டிருந்தவன் சூப்பர் மேன் மாதிரி பறந்து போய் கொலை பண்ணி விட்டு வந்தானா? சார்! அவன் கொலை செய்யவில்லை என்பதற்கு உங்கள் பெண் மட்டுமே சாட்சி. அவங்க வந்து ஒரு வார்த்தை சொன்னால் போதும். அசோகன் வெளியே வந்திடுவான்.''

''என்னப்பா சொன்னே? என் பொண்ணு வந்து சாட்சி சொல்லணுமா? என்னன்னுப்பா சொல்லணும்? 'நேற்று ராத்திரி பூராவும் நான் இவன் கூடத்தான் இருந்தேன்'னு சொல்லணுமா'' என்று ஆணியடித்தாற் போல் கேட்டார் ராமநாதன்.

''அப்பா!'' என்று அலறி தலை நிமிர்ந்தாள் காவ்யா.

''என்னை அப்பான்னு கூப்பிட உனக்குத் தகுதி இல்லை. தரம் கெட்டத் தனமாய் காரியம் செய்து விட்டு அப்பாவாம் அப்பா'' என்று கோபமாய் கத்தினார் ராம நாதன்.

அவரது வார்த்தைகள் தகிக்க விதிர்த்துப் போய் வாய் மூடினாள் காவ்யா.

''சார். நான் சொல்வதை கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள்'' என்று மன்றாடிய தியாகராஜனை இடை மறித்தான் ஆனந்தன்.

''திஸ் இஸ் தி லிமிட் மிஸ்டர் தியாகராஜன். என் தங்கை போலீஸ் ஸ்டேசன் வாசலைக் கூட மிதிக்க மாட்டாள். அவள் கல்யாணம் ஆக வேண்டிய பெண். கொலைகாரன் கூட சகவாசம் என்றால் நாளைக்கு யார் அவளைக் கல் யாணம் செய்து கொள்வார்கள்? தவிர நீங்கள் சொல்வது போல் அவனோடு தனியாக காரில் வந்தேன் என்பதை எங்கள் சமூகத்தில் ஏற்றக் கொள்ள மாட்டார்கள்.''

''என் நண்பன் கொலைகாரனல்ல ஆனந்தன். அவன் நிலைமையை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஒரு நிரபராதி தண்டிக்கப் படலாமா?''

''அது உங்கள் பிரச்னை.''

"ஏன் சொல்ல மாட்டீர்கள். உங்கள் தங்கையை நடுக் காட்டில் ஒரு அயோக்கியன் துரத்தியபோது அது உங்கள் தங்கையின் பிரச்னையென்று அவன் போகாமல் உங்கள் தங்கையை முழுதாக உங்களிடம் ஒப்படைத்து இருக் கிறானே. நீங்கள் பேச மாட்டீர்களா. நன்றாகப் பேசுங்கள்."

"என் தங்கையை காப்பாற்றினால் ஒரு கொலைகார னுக்கு சாட்சி சொல்ல என் தங்கை வர வேண்டுமா?"

"திரும்பத் திரும்ப அவன் கொலைகாரனென்று சொல் லாதீர்கள். அவன் நல்லவன். நல்ல குடும்பத்தில் பிறந் தவன்."

"அதுதான் முகரையில் எழுதி ஒட்டியிருக்கே. கன்னங் கரேல்னு ஒரு நிறமும் நெத்தியில் தழும்பும்... ஒரு தடவை அவன் வீட்டுக்குள் வந்து போனதுக்கே ஊர் பூரா பதில் சொல்ல வேண்டியதாப் போச்சு" என்று பர்வதம் தோள் பட்டையில் இடித்துக் கொள்ள,

"கண்ணன் நிறம் கருப்புத்தான்ம்மா. ஆனால் அந்தக் கண்ணன் தான் துயரம் தீர்க்கும் வள்ளல். யார் துன்பத் தையும் பொறுக்காத என் நண்பனும் அந்தக் கண்ணன் போல் தான்ம்மா. நெற்றியில் தழும்பிருந்தால் அவன் ரௌடியா? அவன் மனதால் குழந்தைம்மா" என்று தியாக ராஜன் தொண்டை அடைக்கக் கூறினான்.

"உன் நண்பன் எப்படிப்பட்டவனாயிருந்தால் எங்களுக் கென்ன நீ முதலில் இடத்தைக் காலி பண்ணு" என்றார் ராமநாதன்.

"கடைசியாய் கேட்கிறேன். என்னதான் சொல்கிறீர்கள். உங்கள் பெண்ணை சாட்சி சொல்ல அனுப்ப முடியுமா முடியாதா?"

''என் மகள் நீ சொல்லச் சொல்லும் சாட்சியை ஒரு நாளும் சொல்ல மாட்டாள். நீ இனிமேல் இந்த மாதிரி பினாத்திக்கிட்டு என் வீட்டுப் பக்கம் வருகிற வேலையை விட்டுவிடு. இனி ஒரு தரம் உன்னை இந்த வீட்டுப் பக்கம் பார்த்தால் நடக்கிறதே வேறு'' என்று உறுமினார் ராமநாதன்.

''அப்போ சாட்சி சொல்ல உங்கள் பெண்ணை அனுப்ப மாட்டீர்கள்?''

''ஏண்டா! நான் தமிழில்தானே சொன்னேன். உனக்குப் புரியாத பாஷையிலா சொன்னேன். இல்லை உன் காதுதான் செவிடா?''

''என் காது செவிடா என்ற உங்கள் சந்தேகம் ஒரு பக்கம் இருக்கட்டும் உங்கள் பெண்ணின் காது என்ன செவிடா?''

காவ்யா லேசாக தலை நிமிர்ந்து உட்கார்ந்த நிலையி லேயே தியாகராஜனைப் பார்த்தாள். தியாகராஜனின் கண்கள் கனல் கக்கின.

''சொல்லுங்க மிஸ் காவ்யா! இங்கேயென்ன நாடகமா நடந்துக்கிட்டு இருக்கு? வாயைத் திறக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அன்றைக்கு நீங்கள் எப்படிப்பட்ட ஆபத்தில் மாட்டியிருந்தீர்கள் என்பதை உங்களால் மட்டும் தான் உணர முடியும். மற்றவர்களுக்கு அது ஒரு சம்பவம். கதை. உங்களுக்கு...? தப்பிப் பிழைத் தது நீங்கள் தான். அன்று இரவு மட்டும் என் நண்பன் உங்களைக் காப்பாற்றாமல் நீங்கள் இப்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது போல் வேடிக்கைப் பார்த்து விட்டுப் போயிருந்தால் இந்தச் சிக்கல் எங்களுக்கு ஏற் பட்டிருக்காது. அந்த இரவுக்கு சாட்சி தேடி அலைந்திருக்க மாட்டோம். ஹோட்டல், டீக்கடைப் பையன், டாக்ஸியில்

வந்த வாடகைச் சவாரி, சினிமான்னு ஆயிரம் சாட்சி காட்டி நிரூபித்திருப்பான். நீங்கள்தான் அந்த துன்பம் மிகுந்த இரவை உங்களுக்கு சொந்தமாக்கி என் நண்பனை ஊச லாட வைத்து விட்டீர்களே. இன்று அந்த இரவுக்கு ஒரேயொரு சாட்சி நீங்கள் மட்டும்தான்'' என்று அவள் முகம் பார்த்துப் பொரிந்தான் தியாகராஜன்.

''அவளிடம் என்ன பேச்சு?'' என்று ஆட்சேபித்தார் ராமநாதன்.

''அவர்கள் மேஜர் சார். எனக்குப் பதிலை அவர்களே சொல்லட்டும். அவர்கள் வாயைத் திறந்து நான் சாட்சி சொல்ல வரமாட்டேன்னு சொல்லட்டும். நான் போய் விடுகிறேன்'' என்றான் தியாகராஜன்.

''அவள் சாட்சி சொல்ல மாட்டாள். நீ இப்போ போகப் போகிறாயா? இல்லையா?''

''அதை உங்கள் பெண் அவங்க வாயாலே சொல் லட்டும். சொல்லுங்க காவ்யா. எனக்கு உங்கள் பதில் வேண்டும். மனச்சாட்சின்னு ஒண்ணு உங்களுக்கு இருந்தால் பதில் சொல்லுங்க. இன்றைக்கு அவனிருக்கிற நிலைமைக்கு நீங்கள்தான் காரணம்ங்கறதை புரிந்துக் கிட்டு எனக்கு ஒரு பதில் சொல்லுங்க'' தியாகராஜனின் பார்வை காவ்யாவின் மீதே படர்ந்திருக்க அவள் முடியை கொத்தாகப் பிடித்து எழுப்பிய ராமநாதன்,

''உள்ளே போ. இங்கே ஷோ கேஸ் பொம்மை மாதிரி இருந்துக்கிட்டு என் உயிரை வாங்காதே. சாட்சி சொல் லணுமாம் சாட்சி. அப்படியொரு சாட்சியை நீ சொல்றதை அனுமதிக்கிறதைவிட உன்னை உயிரோடு புதைத்து சமாதி எழுப்பிடுவேன் உள்ளே போ'' என்று அதட்டினார். காவ்யா உள்ளே போகவில்லை. கோபமடைந்த ராமநாதன்

அவளைப் பிடித்து உள்ளே தள்ள அந்த வேகத்தில் அவள் உள்ளறையில் தரையில் விழுந்தாள்.

"ஐயோ" என்று அலறியபடி பர்வதம் மகளருகில் ஓட ராமநாதன் தியாகராஜன் பக்கம் திரும்பினார்.

"கெட் அவுட். வெளியே போன்னு சொல்றேனில்ல. காதில் விழுகலை? நீயா போறியா... இல்லை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளவா. ஆனந்தா! என்னடா பார்த்துக்கிட்டு சும்மா நிற்கிற. அவன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுடா" என்று ராமநாதன் கத்த ஆனந்தன் தியாகராஜன் பக்கம் திரும்பினான்.

"வெல். அநாகரிகத்தின் உச்சத்தில் உங்க குடும்ப மிருக்கு. சுயநலத்தின் முழு உருவமாக நீங்கள் இருக் கிறீர்கள். நான் இப்போது போகிறேன். ஆனால் நீங்கள் யோசித்துப் பாருங்கள். உங்கள் மனச்சாட்சி உங்களை கேள்வி கேட்டால் மயிலாப்பூர், பாரதி காலனி, ஆறாம் நம்பர் வீட்டுக்கு வாங்க என் நண்பனை கொலைப் பழியி லிருந்து காப்பாற்றுங்க" என்று படபடவென்று பேசி விட்டு விர்ரென்று வெளியேறி விட்டான் தியாகராஜன்.

தோற்றுப் போனவனாய் சென்னை திரும்பினான் தியாகராஜன். நண்பன் சொன்னதில் தவறில்லை. அந்தக் குடும்பம் அவளை சாட்சி சொல்ல அனுமதிக்காது. அவளும் அவர்களை மீறிச் செயல்படுகிறவளாய் தெரிய வில்லை. அப்படியென்றால் அசோகனின் நிலை என்ன ஆகும்? அந்த இரவுக்கு சாட்சியாக வானத்தில் முழு நிலவும் பூமியில் காவ்யாவும் மட்டுமே இருக்கிறார்களே. விண் நிலவு சாட்சி சொல்ல வராது. இந்தப் பெண் நிலவு சாட்சி சொல்ல வருமா? வராதா? ஏக்கத்தில் தவித்தது அவன் உள்ளம்.

# 10

கரைதன்னை அலை கடக்கும்

காலம் நேரம் கடுமையானால்

மலைதன்னை கொடிகடக்கும்

மனதில் வைரம் பாய்ந்து விட்டால்

சுடர்கொடி தான் படிதாண்டி

சொந்தம் விட்டுப் போவதற்கு

நிலவே நீ சாட்சி

சுவர் கடிகாரத்தின் 'டிக் டிக்'கென்ற சத்தம் தவிர வேறு சப்தம் எதுவும் கேட்காத நள்ளிரவின் நிசப்தம் தெரு அடங்கி யிருந்தது. காவ்யா மூச்சடக்கி எழுந்தாள். கால் கொலுசை அவிழ்த்து படுக்கையின் மேல் வைத்தாள். தலை யணைக்கு அடியில் மறைத்து வைத்திருந்த கைக்கு அடக்க மான அந்தச் சிறிய மணி பர்சை எடுத்துக் கொண்டாள். மெதுவாய் எழுந்து அடி மேலடி வைத்து முன்னறைக்கு வந்தாள். கதவைத் திறக்கப் போகையில் உள்ளறையில் பார்வதம் புரண்டு படுப்பது தெரிந்தது. மூச்சை அடக்கி சத்தம் செய்யாமல் காத்திருந்தாள். மேற்கொண்டு எந்த அசைவும் பார்வதத்திடம் தெரியாமலிருக்க ஓசைப் படாமல் கதவைத் திறந்தாள். மீண்டும் கதவை சத்தமில் லாமல் மூடியவள் தெருவில் இறங்கி முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டு விடுவிடுவென நடந் தாள். சிறிது தூரம் நடந்த பின் பஸ் நிலையம் தெரிந்தது. நடையை விரைவு படுத்தியவள் பஸ் நிலையத்தை அடைந்தாள். சென்னை செல்லும் பஸ் நின்று கொண்

டிருந்தது. ஏறி அவள் அமர்ந்து கொள்ள காத்திருந்தது போல் பஸ் வேகமெடுத்து சென்னை நோக்கிப் பறந்தது. அவள் பிறந்து வளர்ந்த ஊரான திருநெல்வேலி கண்ணை விட்டு மறைந்தது. திரும்பி பின்னுக்குச் சென்று மறையும் தன் ஊரைப் பார்த்துக் கொண்ட காவ்யாவின் கண்கள் கலங்கியது. கண்களைத் துடைத்துக் கொண்டவள் துக்கத் துடன் சீட்டில் சாய்ந்து அமர்ந்து கண் மூடினாள்.

தியாகராஜன் வந்து சென்றவுடன் வீட்டில் காவ்யா வுக்குக் கட்டுக் காவல் அதிகமாகியது. அவள் மௌனம் காத்தாள். அசோகன் விசயம் பற்றி அவள் வீட்டார் எவ்வளவு பேசினாலும் அவள் வாயே திறக்கவில்லை. அவளது நடவடிக்கைகளில் வீட்டார் திருப்தி அடைய மூன்று நாட்கள் பிடித்தன. கட்டுக்காவல் தளர்த்தப்பட்ட நான்காம் நாள் இரவில் காவ்யா வீட்டை விட்டு வெளியேறி சென்னை பஸ் ஏறி விட்டாள் அசோகனைக் காப்பதற்காக.

வேலைக்கு இருக்கும் பெண் வாசலில் தண்ணீர் தெளித்துப் பெருக்கிக் கோலம் போடுவதை மேற்பார்வை யிட்டுக் கொண்டிருந்த உமா, தியாகராஜனின் மனைவி, வாசலில் தயங்கித் தயங்கி வந்து நின்ற அந்தப் பெண்ணை வியப்புடன் பார்த்தாள். இரவு நேரப் பயணம் செய்த களைப்பு முகத்தில் தெரிந்தது. அந்தக் களைப்பிலும் அழகாயிருந்த அந்தப் பெண்ணின் அழகைக் கண்டு வியந்தவள்.

"யாரைப் பார்க்கணுங்க?" என்றாள்.

"லாயர் தியாகராஜனின் வீடு..?"

"இந்த வீடுதான். உள்ளே வாங்க" என்று காவ்யாவை உள்ளே அழைத்துச் சென்ற உமா வரவேற்பறையில் ஒரு

கையில் காபிக் கோப்பையும் இன்னொரு கையில் பேப்பருமாக அமர்ந்திருந்த தியாகராஜனிடம்.

''இவங்க உங்களைப் பார்க்க வந்திருக்காங்க'' என்று கூறினாள்.

பேப்பரைக் கீழே இறக்கி யாரென்று பார்த்த தியாக ராஜன் அதிர்ச்சியில் பேப்பரை நழுவ விட்டு விட்டு எழுந்தான்.

''வாங்க காவ்யா! வாங்க. உமா அம்மாவைக் கூப்பிடு. நீங்க உட்காருங்க காவ்யா.''

காவ்யா தயக்கமாய் வரவேற்பறை சோபா ஒன்றில் அமர்ந்தாள். உள்ளேயிருந்து தியாகராஜனின் அம்மா மங்களம் உமா பின் தொடர அங்கே வந்தாள்.

''என்னப்பா தியாகு. எதுக்குக் கூப்பிட்டே'' என்றவர் காவ்யாவைப் பார்த்ததும்,

''யாருப்பா இந்தப் பொண்ணு'' என்று வினவினார்.

''அம்மா! இவங்க பெயர் காவ்யா. நம்ம அசோகன் ஒரு பெண்ணைக் காப்பாற்றி திருநெல்வேலியில் விட்டு விட்டு வந்ததாகக் கூறினானே, அந்தப் பெண் இவங்க தான்'' என்று காவ்யாவை அறிமுகப்படுத்தினான் தியாக ராஜன்.

உமா ஆச்சர்யமாய் காவ்யாவின் அருகே போய் அமர்ந்து கொள்ள மங்களம் கூர்மையாய் காவ்யாவைப் பார்த்தாள். அந்த அழகிய பெண்ணின் மருண்ட விழி களில் ஓடிய பயரேகையும் அவளது மெல்லிய உடலின் சிறு நடுக்கமும் அந்த மூதாட்டிக்கு எதையோ உணர்த்த மங்களம் காவ்யாவை நோக்கி, ''ஏம்மா வீட்டில் சொல்லி விட்டுத்தானே கிளம்பி வந்தாய்?'' என்று கேட்டாள்.

காவ்யாவின் கண்கள் கலங்கியது. வீட்டினரை மீறி எதையும் நினைக்கக் கூடச் செய்யாதவள் இன்று அவர் களை மீறி அவர்களுக்குத் தெரியாமல் வீட்டை விட்டே வந்திருக்கிறாள். குற்ற உணர்வில் தவித்தவள்,

"இல்லைங்கம்மா. நான் என் வீட்டிற்குத் தெரியாமல் தான் வந்திருக்கிறேன்" என்றாள். அவள் குரலின் நடுக் கத்தை உணர்ந்த உமா அவள் கைகளை உடனே பற்றிக் கொண்டு மெல்லத் தட்டிக் கொடுத்தாள்.

மங்களம் தியாகராஜனை முறைக்க தியாகராஜன் தோளைக் குலுக்கிக் கொண்டு 'என்ன செய்வது?' என்ற பாவனையில் கைகளை விரித்தான்.

தியாகராஜன் இதை நிச்சயமாய் எதிர்பார்த்திருந்தான். அசோகன் சொன்னது போல் அவள் நல்ல குணம் கொண்ட பெண்ணாக இருந்தால் நன்றி மறக்காமல் அவனைக் காப்பாற்ற தேடி வருவாள் என்று நம்பினான். அப்படி அந்தப் பெண் வீட்டை மீறி அசோகனைக் காப்பாற்ற முனைந்தால் தன் வீட்டிற்கு வர முகவரி தெரிய வேண்டும் என்று தானே அவனது முகவரியை அழுத்தம் திருத்தமாய் அவள் காதில் விழுமாறு சத்தமாகக் கூறி விட்டு வந்தான். எனவே அவள் வீட்டுக்குத் தெரியாமல் வந்ததை அவன் இயல்பாக எடுத்துக் கொள்ள மங்களம் அதிர்ந்தாள். உமா, காவ்யாவை விட மூன்று, நான்கு ஆண்டுகள் மூத்தவள். திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தாயாக இருப்பவள். ஊர் நியாயம் சொல்லும் கிராமத்து நாட்டாண்மைக்காரரின் மகள். அவளுக்கு காவ்யாவின் பக்கம் இருந்த நியாயம் புரிந்தது. அவளுக்கு வேண்டியது மன ஆறுதல் என்பதை உணர்ந்தவளாய் காவ்யாவின் கையை அவள் விடவே இல்லை.

"சொல்லாமல் ஏம்மா வந்தாய்? சொல்லி விட்டு வந் திருக்கலாமே?" என்று மங்களம் கேட்க, தியாகராஜன் குறுக் கிட்டான்.

"அம்மா அவங்களா விடுவாங்க. அவங்களால் வீட்டில் சொல்லிவிட்டு வர முடியாது. சொல்லியிருந்தால் அவங்க வீட்டில் நிச்சயமாய் இவங்களை விட்டிருக்க மாட்டாங்க. வீட்டில் போட்டுப் பூட்டியிருப்பாங்க. காவ்யாவால் வேறு என்ன செய்ய முடியும்? சொல்லாமல் தான் அவங்க வரவேண்டியிருக்கும். காவ்யா இதைத்தான் செய்திருக்க முடியும். அவங்க செய்ததில் தப்பேயில்லை."

"தியாகு! என்ன பேசறேன்னு புரிந்துதான் பேசுறயா? வயதுப் பெண் பெத்தவங்களை மீறி இப்படி வரலாமா? நீ அதை நியாயப்படுத்தி வேற பேசற. இது நல்லாயில்லை தியாகு. உன் கிட்ட நான் இதை எதிர்பார்க்கலே."

"ஆனால் காவ்யா கிட்ட நான் இதை எதிர்பார்த்தேன் அம்மா."

"என்னடா தியாகு சொல்ற?"

"ஆமாம்மா. அசோகன் திரும்பத் திரும்பச் சொன்னான். 'அந்தப் பெண் நல்ல பொண்ணுடா. என் நிலைமை தெரிந்தால் கட்டாயம் என்னைக் காப்பாற்ற ஓடி வந் திரும்'ன்னு. அவன் கணக்கு சரியா இருந்தால் காவ்யா கட்டாயம் அசோகனைக் காப்பாற்ற எப்படியும் வந்திடு வாங்கன்னு நான் எதிர்பார்த்தேன். அதனால்தான் நம்ம அட்ரஸைக் காவ்யாவின் காதில் விழுமாறு சத்தமாய் சொல்லி விட்டு வந்தேன். அவன் கணக்கும் தப்ப வில்லை. என் கணக்கும் தப்பவில்லை."

"ஏண்டா. ஒரு வயசுப் பெண்ணோட வாழ்க்கையில் விளையாடிக்கிட்டு வாயடிக்கிறயா? அந்தப் பெண்

ணோட வாழ்க்கை நீ போட்டுப் பார்க்கிற கூட்டல் கழித்தல் கணக்காடா?"

"அம்மா. ஆபத்துக்குப் பாவமில்லை. அசோகனின் உயிர் இவங்க கையில் தான் இருக்கு. இவங்க இதைச் செய்துதான் ஆகணும்."

'அசோகனின் உயிர்' என்றதும் மங்களம் வேகம் தணித்தாள்.

"தியாகு உன்னால் இந்தப் பெண்ணை தொல்லை பண்ணாமல் வேறு சாட்சி ரெடி பண்ண முடியாதா?"

"ரெடி பண்ணினால் அது பொய் சாட்சியாகாதா அம்மா! அது எப்படி நிலைத்து நிற்கும். மெய்யிருக்கப் பொய் எதற்கு? உண்மையான சாட்சியாக காவ்யா இருக்கும் போது ஏன் பொய் சொல்ல வேண்டும். உண்மைதான் சரியான வழி அம்மா."

"பொய்மையும் வாய்மையிடத்துன்னு வள்ளுவரே சொல்லியிருக்கார். இந்தப் பெண்ணைக் காப்பாற்றுவதற் காக நீ ஏன் பொய் சாட்சி ரெடி பண்ணக் கூடாது?"

"பொய் சாட்சின்னு எவ்வளவு ஈஸியா வழி சொல்றீங்க அம்மா. இதெல்லாம் பேச நல்லாயிருக்கும். செயல்ன்னு வரும்போது நாலையும் யோசிக்கணும். இது கொலைக் கேஸ் அம்மா. நாளைக்கு நான் கொண்டு போய் நிறுத் தினது பொய் சாட்சின்னு போலீஸ் கண்டு பிடித்து விட்ட துன்னு வைங்க. அப்புறம் நான் உண்மை சாட்சியாய் காவ்யாவைக் கொண்டு போய் நிறுத்தினாலும் அவங்க நம்ப மாட்டாங்க. அசோகனை இப்ப சந்தேகத்தின் பேரில் தான் அரெஸ்ட் பண்ணியிருக்காங்க. நீங்க சொல்கிறபடி செய்தால் கன்பர்மா அசோகன்தான் கொலை பண்ணி

யிருப்பான்னு முடிவே பண்ணிடுவாங்க. சும்மா சமாளி, சமாளின்னு சொல்றீங்களே. சமாளிக்கிறதுக்கு இது என்ன சாதாரண கேஸா? கொலைக் கேஸ் அம்மா. எதையாவது பொய்யாய் சொல்லி அவனை வெளியில் கொண்டு வந்து விட்டுப் பொய் சாட்சி பல்டி அடித்து விட்டால் அசோகன் கதி என்னாகிறது? செய்யாத தப்புக்கு அசோகன் தூக்கில் தொங்க வேண்டுமா?''

''சொல்லாதே'' என்று அலறிய மங்களம் காதுகளைப் பொத்திக் கொண்டாள். அவள் கணகளில் இருந்து கண்ணீர் வழிந்தது.

''தியாகு! அசோகன் உன் கூடப் பிறந்த பிறப்பு மாதிரிடா. அவனை நீ எப்பாடு பட்டாவது காப்பாற்றித்தான் ஆக வேண்டும். இந்தப் பெண்ணின் நிலையை நினைத்தால் தான் பாவமாயிருக்குடா'' என்றாள் தாய் இரக்கத்துடன்.

''அம்மா. அன்றைக்கு அசோகன் இவங்களைக் காப்பாற்றாமலிருந்திருந்தால் இவங்க நிலைமை என்னவாகியிருக்கும்? அந்த நிலைமைக்கு இந்த நிலைமை மோசமில்லை'' என்றான் மகன் கடினத்துடன்.

தாய், மகனின் போராட்டம் முடிவுறாது என்று தோன்றிய நிலையில் காவ்யா மனச் சஞ்சலத்துடன் குறுக்கிட்டாள்.

''அம்மா! எனக்காக சாரை எதுவும் திட்ட வேண்டாம். அவர் மேல் தப்பில்லை. அவர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அசோகன் சாருக்கு ஆபத்து என்று தெரிந்த பின்னால் நான் அவரைக் காப்பாற்றக் கிளம்பாமல் இருந்திருக்க மாட்டேன். கொலை நடந்த இரவு என்னுடன் காரில் வந்து கொண்டிருந்தார். இது நடந்த உண்மை.

அப்படியிருக்க நான் அந்த உண்மையைச் சொல்லாமல் இருப்பது நானே அசோகன் சாரைக் கொல்வதற்குச் சமம். என்னால் நன்றி கொல்ல முடியாது. சார் சொல்வது போல் அன்று அசோகன் சார் என்னைக் காப்பாற்றாமல் இருந் திருந்தால் இந்நேரம் என்னைப் புதைத்த இடத்தில் புல் முளைத்திருக்கும். அவர் செய்தது மிகப் பெரிய உத விம்மா. அதற்கு ஈடு இணை கிடையாது. அந்த நன்றியை ஏழேழு ஜென்மத்திற்கும் மறக்க முடியுமா? அம்மா! என்னால் அவருக்கு நல்லது செய்ய முடியா விட்டாலும் சிக்கலையாவது உண்டு பண்ணாமல் இருந்திருக்கலாம். சிக்கல் உருவாகி விட்டது. இப்போது அதிலிருந்து அவரை வெளியே கொண்டு வருவது என் கடமைம்மா."

"ஆனால் காவ்யா உன் வீட்டில்..."

"என் வீட்டுக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக நான் இதைச் செய்யாமல் இருக்க முடியாதும்மா. அம்மா! உங்களுக்கு ஒன்று தெரியுமா?' என் அப்பா ஓர் இரவு அவனோடு தனியாக இருந்தேன்னு என் பொண்ணு சொல்லணுமா'ன்னு கேட்டார். அவர் கேட்டதற்குப் பின்னால்தான் எனக்குப் புரிந்தது. ஓர் இரவு... ஓர் இரவு பூராவும் நான் அவரோடு காரில் பயணம் செய்தேன்ம்மா. வழியில் காபி வாங்கிக் கொடுத்தார். சாப்பாடு வாங்கிக் கொடுத்தார். இரவு பூராவும் தூங்காமல் வண்டியோட்டி னார். அந்த ஓர் இரவின் 14 மணி நேரத்தில் ஓர் வினாடி கூட ஓர் அந்நிய ஆடவனுடன் நாம் தனியாகப் போகி றோம்ங்கிற பய உணர்ச்சி எனக்கு ஏற்படவே இல்லைம்மா. இத்தனைக்கும் நான் என் பெற்றவர்கள், அண்ணன் இல் லாமல் தனியே வெளியூர் சென்றதில்லை. மூன்று வருடம் இங்கே சென்னையில் படித்தாலும் பகல் வேளைகளில்

என் தோழி ஹரிதாவுடன் மட்டுமே வெளியே போவேன். அதுவும் அஷ்ட லட்சுமி கோவிலுக்குப் போவேன். தனியே போனதில்லை. அன்று தான் தனியாகப் போக நேர்ந்தது அம்மா! ஓர் சிறு பார்வை வித்தியாசம் கூட இல்லாமல் பண்பாட்டுடன் பழகினார். என் பயத்தை மதித்து என்னுடன் துணையாக வந்தார். அவர் போன்ற நல்ல மனிதருக்காக எந்த உதவி வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அம்மா! இது உதவி இல்லை. நான் செய்ய வந்திருப்பது என் கடமையை.''

காவ்யா பேசுவதை அமைதியின்றி கேட்டுக் கொண்ட மங்களம் கொஞ்ச நேரம் யோசனையாய் இருந்தாள். அதன் பின்,

''உமா! இந்தப் பெண் மாற்றுத் துணி எடுத்துக்காமல் கிளம்பி வந்திருக்கு. உன் துணிகளை எடுத்துக் கொடு. போம்மா காவ்யா! போய் குளித்துத் துணி மாற்றிக் கொண்டு வா. சாப்பிட்டு விட்டு அசோகனைப் பார்க்கப் போகலாம். அவன் வெளியே வந்த பின்னால் நானே உன் வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டு வருகிறேன். நீ கவலைப்படாமல் போ. உன் நல்ல மனதுக்கும், பொறுப்பான குணத்துக்கும் நியாய புத்திக்கும் நீ நல்லாத்தான் இருப்பே. ஒரு கெடுதலும் உனக்கு வராது. நாங்க வர விடமாட்டோம்'' என்று கூறினாள்.

''நன்றிம்மா'' என்று கூறி விட்டு உமாவைப் பின் தொடர்ந்து சென்ற காவ்யாவைப் பார்த்துக் கொண்டே நின்றாள் மங்களம். தைரியமாகப் பேசினாலும் தளர்ந்த நடையுடன் சென்றவளைப் பார்த்து அந்தத் தாயின் மனம் வலித்தது. 'இது நேரும் என்று ஒரு வாரத்திற்கு முன் இவள் அறிவாளா? கல்லூரி பட்டாம் பூச்சியின் சிறகுகள்

ஒரே வாரத்தில் உதிர்ந்து விட்டதே' என்று நினைத்து மனம் கலங்கினார்.

கோட்டைத் தாண்டிய சீதையின் கதைதான் வீட்டைத் தாண்டிய பெண்களின் கதை என்பதை அறிந்தவரா யிற்றே. அசோகன் மங்களத்திற்கு மகன் தான். ஆனால் அந்த மகனுக்காக தியாகராஜன் உயிரைக் கொடுத்திருக் கலாம். அதை விட்டு இந்தப் பேதைப் பெண்ணின் உயிரை எடுக்கலாமா? என்று கேள்வி கேட்டது அந்த முதிய பெண்மையின் நெஞ்சம்.

## 11

பிறந்தபோது பிறந்த சொந்தம்
துறந்து விட்டுப் போகுமா?
மடியினிலே வளர்த்த சொந்தம்
மறந்து விட்டுப் போகுமா?
குற்றமற்ற பேதைமனம்
உற்றவரைப் பிரிந்ததற்கு
நிலவே நீ சாட்சி.

குனிந்து எதையோ எழுதிக் கொண்டிருந்த எஸ்.ஐ.

''குட்மார்னிங் சார்'' என்ற தியாகராஜனின் குரலைக் கேட்டு நிமிர்ந்தார்.

''இவங்க தான் சார் மிஸ் காவ்யா. அந்த ரெளடி பல வேசம் கொலை நடந்த இரவில் இவங்களைத்தான் ஒரு ஆபத்திலிருந்து காப்பாற்றி திருநெல்வேலி வரை

கொண்டு போய் விட்டுவிட்டு வரப் போயிருந்தான்'' என்று காவ்யாவை எஸ்.ஐ.க்கு அறிமுகப்படுத்தினான்.

தன் முன்னால் நின்ற இளம் பெண்ணை ஏறெடுத்துப் பார்த்தவர் முதலில் எல்லோரையும் போல் 'என்னவொரு அழகான பெண்' என்று மனதிற்குள் வியந்து கொண்டவர் இருவரையும் பார்த்து,

''டேக் யுவர் சீட்'' என்றார் இருவரும் அவர் முன்னால் அமர்ந்தவுடன் எழுதிக் கொண்டிருந்த பைலை மூடி வைத்தவர் பேனாவை ஸ்டாண்டில் சொருகி வைத்து விட்டு நாற்காலியில் நிமிர்ந்து வாகாக அமர்ந்து கொண் டார். அவரது கூர்மையான பார்வை எதிரே அமர்ந்திருந்த இருவரையும் ஒரு நிமிடம் துளைத்து விடுவது போல் பார்த்தது. எதிரேயிருந்தவர்களின் பார்வையில் உண்மை இருந்ததை மனதிற்குள் உறுதி செய்து கொண்டவர், அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் காவ்யாவிடம்,

''சொல்லுங்கம்மா நீங்க யாரு? அசோகனை உங் களுக்கு எப்படித் தெரியும்? அவர் ஏன் உங்களுடன் திருநெல்வேலி வந்தார்?'' என்று வினவினார்.

''என் பெயர் காவ்யா சார். நான் திருநெல்வேலியைச் சேர்ந்தவள். என் அப்பா பெயர் ராமநாதன். அவர் ஸ்டேட் கவர்ன்மென்டில் ஹெட் கிளார்க்காக இருக்கிறார். அண் ணன் பெயர் ஆனந்தன். அவர் பேங்கில் வேலை பார்க் கிறார். மூன்று வருடங்களுக்கு முன்னால் அண்ணனுக்கு மாற்றல் உத்திரவு வந்தது. அதனால் சென்னையில் என்னைக் காலேஜில் சேர்த்து விட்டார்கள். ஆனால் வீட்டை மாற்றுவதற்குள் அண்ணனுடைய மாற்றல் உத்திரவு ரத்தாகி விட்டது. திருநெல்வேலி காலேஜுகளில் எனக்கு இடம் கிடைக்காததால் இங்கேயே ஹாஸ்டலில் தங்கிப் படித்தேன்.''

"உங்கள் காலேஜ் பெயர் என்னம்மா?"

சொன்னாள்.

"என்ன படித்தீங்க?"

"பி.எஸ்ஸி மேத்ஸ்."

"ஸோ. பைனல் எக்ஸாம் முடிந்த மறுநாள் நீங்கள் ஊருக்குக் கிளம்பினதாகச் சொல்கிறீங்க."

"ஆமாம் சார். அண்ணன் வந்து கூப்பிட்டுப் போவதாக இருந்தது. ஆனால் அப்பாவுக்குத் திடீர்னு ஆக்ஸிடெண்ட் ஆகி ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணியிருக்கு. நீ தனியா கிளம்பி வந்திருன்னு அண்ணன் கிட்டயிருந்து திடீர்னு போன் வந்தது. அப்பா பத்தின கவலையில் நான் யோசிக்காமல் உடனே கிளம்பி விட்டேன்."

"நீங்க கிளம்பும்போது நேரம் என்னம்மா?"

"சாயந்திரம் ஐந்து மணியிருக்கும் சார். எக்மோருக்குப் போய் டிரெயின் பிடித்துப் போகலாம்ன்னு நினைத்துக் கிளம்பி விட்டேன் சார். இரண்டு பெட்டிகள் இருந்ததால் பஸ்ஸில் போனால் சிரமம்ன்னு ஆட்டோவில் கிளம்பினேன்" அன்றைய நாளின் மாலைப் பொழுது நினைவில் வர நடந்தவைகளை ஆத்மார்த்தமாய் கூற ஆரம்பித்தாள் காவ்யா. எஸ்.ஐ.க்கு அது புரிந்தாலும் எதையும் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்தால் மேலும் கேள்விகள் கேட்டார்.

"ஏறியவுடன் பாதை மாறிப் போனானா? இல்லை பாதியில் பாதை மாறியதா?"

காவ்யா அன்றைய நாளில் இருந்தாள். கனவில் மிதப்பவள் போல் அந்தச் சம்பவத்தில் பொதிந்தவள், அதன் பின்னால் நடந்தவைகளை வீட்டில் பேச அஞ்சி

மௌனித்திருந்தவள் மனதிலிருந்ததை கொட்ட ஆரம் பித்தாள்.

''அந்த டிரைவர் மோசமானவன் சார். நான் ஏதோ யோசனையில் ஆட்டோ திசை மாறிப் போவதை கவனிக்க வில்லை. அரை மணி நேரமாகியும் ஆட்டோ ஓடிக் கொண்டேயிருந்தது. என்னன்னு பார்த்தால் சென்னைக்கு வெளியில் போற ரோட்டில் ஆட்டோ போய்க் கொண் டிருந்தது.''

''அப்புறம்...?''

''நான் கூச்சல் போட்டேன். அவன் சட்டையைப் பிடித்து உலுக்கி நிறுத்தப் பார்த்தேன். முடியவில்லை. வண்டியில் கம்பி இருந்தது. எடுத்து அடித்தேன். மயங் கிட்டான். நான் என் பெட்டிகளை எடுத்து ஓடி வந்திட் டேன். அப்புறம் பார்த்தால் அவன் பின்னாலேயே துரத்திக் கொண்டு வந்தான். அப்போதுதான் அந்த ரோட்டில் அசோகன் சாரின் கார் வந்தது...''

''அவன் என் மாமனாரை அவரது கிராமத்தில் விட்டு விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தான் சார்'' என்று தியாகராஜன் குறுக்கிட்டுக் கூறினான்.

''அப்படியா?'' என்று கேட்டுக் கொண்ட எஸ்.ஐ. காவ்யாவைப் பார்க்க அவள் தொடர்ந்தாள்.

''அசோகன் சார் அவனை அடித்துப் போட்டு விட்டார். என்னை 'பஸ் ஸ்டாண்டில் இறக்கி விடறேன். திருநெல் வேலிக்குப் போய் விடுங்கள்'ன்னுதான் அவர் சொன்னார். நான் பாவி சார். பயந்த நிலைமையில் இருந்தேன். தனி யாகப் போகப் பயந்து அவரை என்னுடன் துணைக்கு வரச் சொன்னேன் சார். இந்தப் பாவியால்தான் அவர் திரு

நெல்வேலி வரைக்கும் துணையாக காரில் பத்திரமாய் கூட்டிக் கொண்டு போய் விட்டார். நைட்டில் ஒரு பொட்டுக்கூட உறங்காமல் கவனமாய் வண்டியோட்டி வந்தார். ஹி இஸ் எ ஜென்டில்மேன் சார். பக்கா ஜென்டில்மேன். என் அப்பா, அண்ணன் கூடப் போனால் எப்படிப் பாதுகாப்பாய் உணர்வேனோ அப்படிப் பாதுகாப்பாய் உணர்ந்தேன் சார். பாவி. என்னை பத்திரமாய் கொண்டு வந்து சேர்த்து விட்டு அவர் ஆபத்தில் மாட்டிக் கொள்ள காரணமாயிருந்த பாவி சார் நான். என்னால்தான் அவருக்கு இந்த நிலை கடவுள் சத்தியமாய் சொல்கிறேன். அவர் நிரபராதி. அவர் கொலைகாரனில்லை சார். நல்லவர். நான்தான் பாவி. என்னால் தான் அவருக்கு இந்த நிலைமை. என்னைக் காப்பாற்றி விட்டு என் வீட்டில் அவர் எதுவோ பெரிய தவறு செய்தது போல் மன்னிப்புக் கேட்டார். இப்போது... இப்போது... கொலைக் குற்றத்தில் மாட்டியிருக்கிறார். ஒரு நல்ல மனிதருக்கு இப்படித் துன்பம் ஏற்படுத்தவா நான் பிறந்தேன்?'' காவ்யா தாங்க மாட்டாதவளாய் குமுறி அழுதாள். அவள் கூறுவதையும், அழுவதையும் லாக் - அப்பிற்குள் இருந்து கேட்டுக் கொண்டிருந்த அசோகனின் கண்கள் கலங்கியது. தியாகராஜன் பனித்த விழிகளை இமைகளைக் கொட்டி சரிப்படுத்திக் கொள்ள சூழ்நிலையின் கனம் தாங்காமல் எஸ்.ஐ. ஒரு நிமிடம் மௌனமானார்.

''சார். காவ்யா சொல்வதைக் கேட்டீர்கள் அல்லவா? இனி நான் அசோகனை கூப்பிட்டுக் கொண்டு போகலாம் இல்லையா?''

''இல்லை. தியாகராஜன். இன்னும் விசாரணை பாக்கியிருக்கு. இவங்க உண்மையில் திருநெல்வேலியைச்

சேர்ந்தவர்களா இல்லையா? உண்மையில் அன்று சாயந்திரத்திலிருந்து காலை வரை திருநெல்வேலிக்குப் பயணம் போனார்களா இல்லையா? அப்படிப் போயிருந் தால் மறுநாள் காலையில் இவரைத் திருநெல்வேலியில் பார்த்த சாட்சி ஏதாவது இருக்குமில்லையா? அவரையும் விசாரித்துக் கொள்ள வேண்டும்'' என்று அவர் கூறிக் கொண்டிருக்கும்போது 'இதோ நீ கேட்ட இன்னொரு சாட்சி'யென்பது போல் ஆனந்தன் பாய்ந்து காவ்யாவின் முடியைக் கொத்தாகப் பிடித்து கன்னம் கன்னமாய் அறைய லானான்.

## 12

வாழ்க்கைப் பாதையில்
அவள் வழிகள் அடைபட்டதற்கு
தென்றலும் அவளைச் சுட்டதற்கு
நிலவுகூட தனலானதற்கு
மலரெல்லாம் தேளானதற்கு
அவள் மனம் புண்ணாகி நின்றதற்கு
நிலவே நீ சாட்சி

அன்று இரவில் பாத்ரூம் போக எழுந்த பர்வதம் காவ்யாவின் படுக்கையில் அவளைக் காணவில்லை என்றதும் பதறிப் போய் விட்டார். கணவனுக்கும், மகனுக் கும் தெரியாமல் அவள் எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தாள். காற்றில் வாசல் கதவு ஆடப் போய் பார்த்த போது கதவு திறந்திருந்தது. பர்வதத்திற்குப் புரிந்து

விட்டது. மகள் சென்னைக்குச் சென்று விட்டாள் என் பதையறிந்த அவள் தாய் மனம் பதைத்துப் போனது. காவ்யா வீட்டார் பேச்சை மீறிப் போய் விட்டாள் என்பதற் காக அல்ல. நள்ளிரவில் வயதுப் பெண் வெளியே போய் ஏதேனும் ஆபத்தில் மாட்டிக் கொண்டால் என்ன ஆவது என்ற பயத்தால் பூஜையறைக்கு ஓடியவள் 'கடவுளே. என் பெண்ணைக் காப்பாற்று' என்று வேண்டிவிட்டு கணவரை எழுப்ப விரைந்தாள்.

"என்னங்க, என்னங்க" என்று பர்வதம் உலுக்கி எழுப்ப,

"அட ஏண்டி மனுசனை தூங்க விடாம ரோதனை பண்றே. நடு ராத்திரியில் போய் எழுப்பிக்கிட்டு... போடி போய் தூங்கு" என்றவாறு தூக்கக் கலக்கத்துடன் அவர் சுருண்டு படுத்தார்.

"அடச்சே. இந்த மனுசனுக்கு என் தவிப்பு புரியுதா? நேரம் காலம் தெரியாம என்ன தூக்கம் வேண்டிக் கிடக்கு" என்று புலம்பியபடி அவரது தலையணையை அவள் உருவிய வேகத்தில் அவர் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந் தவர் அப்போதுதான் விளக்கு வெளிச்சத்தில் மனைவி குமுறும் அழுகையை அடக்கியபடி நிற்பது புரிந்ததும் பதறி எழுந்தார்.

"என்னடி பர்வதம் சொல்லிட்டு அழுடி. என்ன ஆச்சு... உடம்பு கிடம்பு சரியில்லையா?"

"காவ்யா... நம்ம காவ்யா..."

"காவ்யாவுக்கு என்னடி? அழுகையை நிறுத்திட்டு சொல்லித் தொலை."

"காவ்யாவைக் காணோங்க" பர்வதம் கூறிய வார்த் தைகள் இடிபோல் ராமநாதனின் காதில் இறங்க, அவர்

மனைவியை விலக்கிவிட்டு காவ்யாவின் படுக்கையை நோக்கி விரைந்தார். படுக்கையில் அவளைக் காணாதவர் ஆனந்தனின் அறைக் கதவைத் தட்டினார். தூக்கம் கலைந்து எழுந்த ஆனந்தன் கொட்டாவி விட்டபடி கதவைத் திறந்தான்.

''என்னப்பா இந்நேரத்தில்...''

''வெளியே வாடா சீக்கிரம். காவ்யா வீட்டை விட்டுப் போயிட்டாள்.''

''என்னது'' வினாடியில் தூக்கம் தொலைத்த ஆனந்தன் ஒரு முறை வீடு பூராவும் தேடிப் பார்த்து விட்டுக் காவ்யா வின் படுக்கையருகே வந்தான். படுக்கை மேலிருந்த கொலுசுகள் அவன் கண்ணில் பட்டது. எடுத்துப் பார்தான்.

''என்னடா அது?'' என்று கேட்டார் ராமநாதன்.

''கொலுசுப்பா. திட்டம் போட்டு வெளியேறியிருக் கிறாள். இவள்கிட்ட இப்படி ஒரு கள்ளத்தனம் இருந்திருக் கிறதை நம்பக்கூட முடியலைப்பா. சகஜமா இருந்தாள். நம்பிட்டோம். இப்பக் கழுத்தை அறுத்துட்டாளே. நம்ம வீட்டுப் பெண்ணா இப்படி...?'' ஆனந்தன் கசப்பாய் கூற,

''டேய் ஆனந்தா. அவளைத் தப்பா நினைக்காதேடா. அந்த வக்கீல் பய வந்து கண்டதைச் சொல்லியதும் புள்ளை மனசில் 'ஐயோ பாவம்'ன்னு தோணியிருக்கும்லே. விவரம் தெரியாத பச்சை மண்ணுலே அது'' என்று பர்வதம் மகளுக்காய் பரிந்து பேசினாள்.

''அடிப்போடி போக்கத்தவளே. பச்சை மண் செய்கிற காரியமாடி இது? என்னடா அப்பாவும், அண்ணனும் இவ் வளவு சொல்கிறார்களே. நம்ம நன்மைக்குத்தானே

சொல்றாங்கன்னு நினைச்சுப் பார்க்காமல் இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்திருக்கிறாள். நீ பச்சை மண் ணுங்கறே. அடியே. அவ திட்டம் போட்டு நம்ம கழுத்தை அறுத்திருக்காடி. ஒரு துளிகூட சந்தேகம் வராமல் அந்த கொலைகாரப் பய பேச்சையே எடுக்காமல் சம்பந்தமே இல்லாதது போல் இருந்திட்டு இப்ப வீட்டை விட்டு ஓடிட்டாளே எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் இதை அவள் செய்திருப்பாள்'' என்று ராமநாதன் மனைவியை அடிக்கப் போனார்.

''அப்பா!'' என்று அவரைத் தடுத்து நிறுத்திய ஆனந்தன்.

''இது ராத்திரி நேரம்பா. பகலில் கொஞ்சம் சத்தமாய் பேசினாலே. 'என்ன ஏது'ன்னு இல்லாததும் பொல்லாத தும் பேசுகிற தெருப்பா இது. இந்நேரம் நம்ம வீட்டுப் பொண்ணைக் காணோம்ன்னு சொன்னால் நம்ம மானம், மரியாதை காற்றில் பறந்துவிடாதா? அடக்கி வாசியுங்கள். இப்போது மேற்கொண்டு என்ன செய்வதுன்னு முடிவெடுக் கலாம். அதுதான் முக்கியம். சொல்லுங்கள் என்ன செய்யலாம்?'' என்றான்.

மகனின் வார்த்தைகளில் இருந்த அர்த்தத்தை உணர்ந்த ராமநாதன் யோசனையுடன் குறுக்கும், நெடுக்கும் நடந்தார். ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் மகனைப் பார்த்தவர்,

''ஆனந்தா. அந்த வக்கீல் கடன்காரர். அன்னைக்கு ஏதோ அட்ரஸ் சொன்னானே நினைவிருக்கா?'' என்று வினவினார்.

ஆனந்தனுக்கு மிக நன்றாகவே நினைவிருந்தது. காவ்யாவிடம் அவன் முகவரியைக் கூறியபோது எங்கே

அந்த முகவரி அவள் மனதில் பதிந்து விடுமோ என்ற பயத்தில் அந்த முகவரியை மிக நன்றாக உள்வாங்கி இவன் மனதிற்குள் பதித்துக் கொண்டான்.

"எனக்கு நினைவிருக்குப்பா."

"காவ்யா அந்த வக்கீல் கடன்காரனைத் தேடித்தான் போயிருக்கணும். நீ வாடகைக்காரை எடு. நாம் உடனே சென்னைக்குக் கிளம்பலாம். நம்ம குடும்ப மானத்தை அவ போலீஸ் ஸ்டேஷனில் கூண்டிலேத்துறதுக்கு முன் னாடி அவளைப் பிடிச்சுரணும்லே. கிளம்பு."

"அம்மா நீங்களும் கிளம்புங்க. ஒரு செட் டிரஸ் மட்டும் எதுக்கும் எடுத்துக்கங்க. க்விக். சீக்கிரம்."

"அவ எதுக்குலே. வீண் அலைச்சல்."

"இல்லேப்பா. அவங்க இங்கேயிருந்தா அக்கம் பக்கத்து வீட்டில் ஏதாவது உளறிக் கொட்டுவாங்க. கிளம்பி வரட் டும். அத்தோடு அவங்களும் வந்தால் குடும்பத்தோடு ஏதாவது கோவில், குளம்னு போனோம்ன்னு கதை சொல் லிக்கலாம்."

அவசரமாய் சத்தம் எழுப்பாமல் கிளம்பிய அந்தக் குடும்பம் சென்னைக்கு வந்து தியாகராஜனின் வீட்டைக் கண்டு பிடித்தும் வந்து விட்டது. வாசலில் நின்று கொண் டிருந்த உமாவிடம் ஆனந்தன் மட்டும் காரை விட்டு இறங்கிச் சென்று விசாரித்தான்.

"சார் இல்லிங்களா மேடம்."

"நீங்கள் யார்?"

"நான் ஒரு கேஸ் விஷயமாய் வக்கீல் சாரைப் பார்க்க ணுங்க."

''அவர் இப்பத்தான் மாம்பலம் போலீஸ் ஸ்டேஷன் போனார்'' என்று யதார்த்தமாய் உமா கூறி விட்டாள். பதறிக் கிளம்பின ஆனந்தன் வேகமாய் வந்து காரில் ஏறினான்.

''என்னலே'' என்ற ராமநாதனிடம்,

''அப்பா நாம சீக்கிரம் போய் அவள் சாட்சி சொல்வ தற்குள் பிடித்து விட வேண்டும்'' என்றான்.

''ஓ. அதுக்குள்ள போலீஸ் ஸ்டேஷன் போய் விட்டாளா. எந்த ஸ்டேசனாம் லே.''

''மாம்பலம் போலீஸ் ஸ்டேஷன்.''

காற்றை விட வேகமாகப் பறந்தது கார். போலீஸ் ஸ்டே ஷன் வாசலை அடைந்ததும் ராமநாதனும், ஆனந்தனும் அவசரமாய் உள்ளே பாய்ந்தார்கள். மகளுக்கு என்ன ஆனதோ என்ற தவிப்பிலிருந்த பர்வதம் பின்னாலேயே ஓடினாள். அதற்குள் காவ்யா சொல்ல வேண்டியதை சொல்லி முடித்துவிட எவ்வளவு தடுத்து நிறுத்தியும் அவள் சாட்சி சொல்லியே விட்டாளேயென்ற ஆத்திரத் தில் ஆனந்தன் பாய்ந்து அவளை மிருகத்தனமாய் அடிக்க ஆரம்பித்து விட்டான்.

எஸ்.ஐ.யும், கான்ஸ்டபிளும் சேர்ந்து ஆனந்தனைப் பிரித்துக் காவ்யாவை விடுவித்தனர். அதற்குள் ராமநாதன் கையை ஓங்கிக் கொண்டு பாய்ந்து வர அவரையும் பிடித்து அமர வைத்தார்கள்.

''உட்காருங்க சார். அட உட்காருங்கன்னு சொல்றே னில்லை. இது என்ன போலீஸ் ஸ்டேசனா இல்லை உங் கப்பன் வீடா? நீங்க பாட்டுக்கு போலீஸ் ஸ்டேசனுக்குள்ள வந்து பொம்பளையைப் போட்டு அடிக்கறீங்க. பார்த்தா படிச்சவங்க போல இருக்கீங்க. அறிவில்லை? முட்டிக்கு

முட்டி தட்டி உள்ளே தூக்கிப் போட்டிருவேன் ஜாக்கிரதை'' என்று எஸ்.ஐ. ராமநாதனையும் ஆனந்தனையும் அரட்டிக் கொண்டிருக்க பார்வதம் எங்கே மகனையும், கணவரையும் உண்மையிலேயே உள்ளே தூக்கிப் போட்டு விடுவார்களோ என்று பயந்து போனாள். அந்தப் பயத்துடன் திரும்பியவள் லாக் - அப்புக்குள் இருந்த அசோகனைப் பார்த்து விட்டாள். அவ்வளவுதான் மடை திறந்த வெள்ளமாய் அவனை நோக்கி திட்ட ஆரம்பித்து விட்டாள்.

''அடப்பாவி! நாசக்காரா! உன் ஒருத்தனால என் குடும்பமே போலீஸ் ஸ்டேஷன்ல வந்து நிக்குதேலே. எம் பொண்ணைக் காரில் அழைச்சிட்டு நீ வரலைன்னு நாங்க அழுதோமா? என்னைக்குக் காப்பாத்தினேன்னு கதை சொல்லிக்கிட்டு இந்தக் கடன்காரியைக் கொண்டு வந்து காரில் இறக்கி விட்டயோ அன்னைக்கு என் பொண்ணுக்கும் எங்குடும்பத்துக்கும் கெட்ட காலம் ஆரம்பிச்சுருச்சுலே. நீ நல்லாயிருப்பியா. நாசமாத்தான்லே போவே. உருப்படாம உருக்குலைஞ்சு போவலே'' பார்வதம் அனல் பறக்கும் வார்த்தைகளை வீச,

'இதைவிட சாட்சி வேண்டுமா?' என்பது போல தியாகராஜன் சப் - இன்ஸ்பெக்டரை அர்த்தத்துடன் பார்த்தான். அவன் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட எஸ்.ஐ. லாக் - அப்பைத் திறந்து அசோகனை வெளியே விடச் சொல்லி கான்ஸ்டபிளுக்கு கட்டளை இட்டார். ஆனந்தனையும் ராமநாதனையும் கடுமையாக எச்சரித்தார்.

''ஏய்யா. உங்க மகள் கண்காணாத இடத்தில் ஆபத்தில் மாட்டியிருக்கிற போது ஒரு நல்லவன் காப்பாற்றி வீடு வரைக்கும் கொண்டு வந்து விட்டிருக்கிறானே. அந்த

நல்ல மனிதர்கிட்ட இப்படித்தான் நன்றி கெட்டத்தனமாக நடந்து கொள்வீர்களா? உங்களை மாதிரி ஆளுங்களால்தான் யாருமே ஆபத்துக்கு உதவி செய்யணும்னா அலறுகிறாங்க. போங்கய்யா. ஒழுங்கா வீடு போய் சேருங்க. இனிமேலா வது கொஞ்சமாவது மனிதத் தன்மையோடு நடந்துக்கப் பாருங்க.''

அசோகன் வெளியே வந்ததும் அவசரமாய் ராமநாதனைத் தேடி ஓடினான். அவன் மன்னிப்புக் கேட்க யத்தனிக் கையில் அவர் அவனைப் பாராதது போல் கார் கதவைத் திறந்தபடி,

''ஆனந்தா பர்வதத்தக் கூட்டிக் கொண்டு காரில் ஏறு'' என்றார். அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை யூகித்த ஆனந்தன் பர்வதத்திடம் வந்து, ''வாம்மா போகலாம்'' என்றான். அவளோ மகளின் கையைப் பிடித்து இழுத்து, ''வாடி இல்லைன்னா இதுக்கும் உங்கப்பா கையை ஓங்கப் போகிறார்'' என்றாள்.

''பர்வதம் அவளை விடு'' என்று ராமநாதன் அதட்ட எதுவும் புரியாதவளாய் அவள் மகளின் கையை விட ஆனந்தன் அவளை வலுக்கட்டாயமாய் காரில் ஏற்றி னான். அசோகன் பதறி கை கூப்புவதை லட்சியம் செய் யாமல் அவன் அங்கு நிற்பதையே சட்டை செய்யாமல் தியாகராஜனிடம்,

''பாருய்யா வக்கீல். நீ ஜெயிச்சிட்ட. எம் பொண்ண வீட்டு வாசல்படி தாண்ட வச்சிட்ட. எப்ப அவ வீட்டை விட்டு வெளியே போனாளோ அப்பவே அவ செத்திட் டாள்ன்னு நாங்க தலை முழுகியிருக்கணும். ஆனால் பெத்த பாசம், வளர்த்த கொடுமை பின்னாடியே வந்து கூட்டிப் போயிடலாம்ன்னு வந்தோம். இங்கேயும் நீ

ஜெயிச்சிட்ட. அவ வாயாலேயே அவள் 'ராத்திரி பூராவும் காரில் அவன் கூட தனியா பயணம் செய்தேன்னு' போலீ ஸில் சொல்ல வச்சிட்ட. நீ கெட்டிக்காரன். அதனால் தான் இந்த சின்ன வயசிலேயே 'இவ்வளவு பெரிய ஆள்'ன்னு பெயர் எடுத்திருக்கே. ஆனால் ஒன்னை நினைவில் வைச்சுக்க. இனி அவள் எங்க வீட்டுப் பெண்ணில்லை. எம் மகளுமில்லை. எங்களைப் பொறுத்தவரை அவ செத்தாச்சு'' என்று நிதானமாய் அழுத்தம் திருத்தமாய் பேசியவர் காரில் ஏறிவிட்டார்.

அதுவரையில் அவர் என்ன பேசினாலும் மகளை கைவிட்டு விட மாட்டாரென்று நம்பிக் கொண்டிருந்த பர்வதம் கார் கிளம்புவதை உணர்ந்ததும்,

''ஐயோ! எம் பொண்ணுலே. எம் மகளே. காவ்யா வந்திருடி. சண்டாளப் பாவிகளா! எம் பொண்ணை விட்டுட்டு வர்றீங்களேடா. காவ்யா! காவ்யா!'' என்று கதறினாள். அந்தத் தாய் கதறக் கதற கார் விரைந்து கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டது.

காவ்யா சிலையாக நின்றாள். மறைந்தது கார் மட்டு மல்ல. தன்னைப் பெற்று வளர்த்த பிறந்த வீடு தன்னை உதறிவிட்டு மறைந்து போகிறது என்பதை உணர்ந்தவ ளாய் திக் பிரமையடித்து நின்றாள்.

# 13

புயல் காற்றில் தளிர் கொடிதான்

படர இடமின்றி நின்றது

புண்பட்ட நெடுமரம்தான்

**கொடியின் துணையாய் சென்றது**

**சுழலாகச் சென்றவன் அவள்**

**நிழலாகிப் போனதற்கு**

**நிலவே நீ சாட்சி.**

அசோகனால் அந்தக் காட்சியை காண முடியவில்லை. திருவிழாவில் தொலைந்த குழந்தையாய் காவ்யா மலங்க மலங்க விழித்துக் கொண்டு நின்ற காட்சி அவனது நெஞ்சைப் பிழிந்தது. தோள் மேல் கை வைத்து ஆறுதலாய் அணைத்த தியாகராஜனின் கையை கோபத்துடன் தட்டி விட்டான்.

''ஏன்டா என் மேல் கோபித்துக்கிற?''

''பாருடா அவள் நிலைமையைப் பார். திக்குத் தெரியாத காட்டில் நிற்கும் நிலையில் நிற்பதைப் பார். அவள் குடும்பப் பறவைடா. இப்படி அவள் கூட்டைக் கலைத்து விட்டாயே.''

''நான் வேறு என்னடா செய்திருக்க முடியும்?''

''பேசாதே. காவ்யாவை தொந்தரவு பண்ணாமல் என்னைக் காப்பாத்துன்னுதானே உன்கிட்ட சொன்னேன். உன்னை யாரு திருநெல்வேலி வரை போய் விசயத்தைச் சொல்லச் சொன்னது. இப்பப் பாரு என்ன ஆச்சுன்னு. இதுக்குத்தானேடா நான் தலை தலையாய் அடிச்சுக்கிட்டேன். கடைசியில் நான் பயந்தது போலவே நடந்திருச்சே.''

''இப்ப என்னடா நடந்திருச்சு. அவங்க குடும்பத்தில் அந்தப் பெண்ணைச் சேர்த்துக்கலை. அவ்வளவுதானே. கொலையா பண்ணிட்டாங்க. உயிரோடுதானே அந்தப் பொண்ணு இருக்கு?''

"உன்னை அடிச்சே கொன்னுடுவேன். ராஸ்கல் ஒரு நல்ல குடும்பத்துப் பெண்ணுக்கு அநாதையாய் தெருவில் நிற்க வேண்டிய நிலைமை வந்தால் எப்படியிருக்கும்? ஏண்டா அந்தப் பெண்ணை உயிரோடு கொன்னுட்டு கொலையா பண்ணிட்டேன்னு நியாயம் வேற பேசுற. உன்னால் எப்படிடா முடியுது."

"ரொம்ப சிம்பிள். உனக்கு அந்தப் பெண்ணுடைய பாதுகாப்பு முக்கியம். எனக்கு நீ மட்டும் தான் முக்கியம். உன்னைக் காப்பாற்ற வேண்டி வரும்போது நான் என்னைப் பற்றியே கவலைப்பட மாட்டேன். யாரோ ஒரு பெண்ணைப் பற்றியா கவலைப்படப் போகிறேன்."

"தியாகு. நீ என் நண்பனாக இருக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆனால் என்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலியின் பார்வையில் பட்டதற்கு காவ்யா பாவம் செய்திருக்க வேண்டும்."

"என்னடா அசோக் இப்படி ஒரு வார்த்தையைச் சொல்லிட்ட உன் பார்வை பட்டால் பட்ட மரம் கூட பூப்புக்கும்டா. முட்டாள்."

"இல்லைடா தியாகு. நான் சின்ன வயதிலேயே தாய் தந்தையை தொலைத்தவன். குடும்பம்னு ஒரு கூடில் லாம தான் தோன்றியா அலைகிறவன். நான் காப்பாற்றப் போய் இப்போது ஒரு குணமான பெண் அவள் குடும் பத்தை விட்டுப் பிரிஞ்சு நிற்கிறாளே" அசோகனின் நாத் தழுதழுத்தது. தியாகராஜனுக்கு பேச வாய் வரவில்லை. மௌனம் சாதித்தான். அசோகன் கண்களைச் சிமிட்டி கண்ணீரைக் கட்டுப் படுத்தினான். ஒரு முடிவோடு காவ்யாவின் அருகில் போய் நின்றான். தியாகராஜன்

அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை அறியாத வனாய் தொடர்ந்து வந்தான்.

''காவ்யா!'' என்று அசோகன் அழைக்க காவ்யா ஏறிட்டாள்.

''வாங்க போகலாம்'' என்றான் அசோகன் ஆதரவான குரலில்.

அவள் 'எங்கே?' என்பது போல் பார்க்க,

''இப்போதைக்கு தியாகராஜன் வீட்டிற்குப் போவோம். அம்மாவை அழைத்துக் கொண்டு நான் திருநெல் வேலிக்கு உடனே போகிறேன். உங்கள் வீட்டில் அம்மா பேச வேண்டியவாறு பேசி சமாதானப்படுத்துவார்கள். நாங்கள் வரும் வரை நீங்கள் உமாவுடன் தியாகு வீட்டில் இருங்கள்... காவ்யா... ஒரு வேளை அவர்கள் சமாதான மாகா விட்டால்'' அசோகன் பேச்சை நிறுத்த காவ்யா 'என்ன?' என்பதாய் பார்த்தாள்.

''காவ்யா... உங்கள் வீட்டில் சமாதானமாகா விட்டால்... நீங்கள் தனியாகி விட்டோமென்று கவலைப் படக்கூடாது. உங்கள் வாழ்க்கை என் பொறுப்பு. என் உயிரிருக்கிற வரை நான் உங்கள் சொந்தக்காரன். என்னுடைய சொத்து அனைத்தையும் உங்கள் மேல் எழுதி வைக்கிறேன். மேலே படிக்க வேண்டுமா... படியுங்கள். வேலைக்குப் போக வேண்டுமா... நான் வேலை வாங்கித் தருகிறேன். உங்கள் வீட்டார் பார்ப்பதைவிட கோடி மடங்கு உயர்த்தி யான அந்தஸ்தில் உங்களுக்கு மாப்பிள்ளைப் பார்த்து திரு மணம் செய்து வைக்கிறேன்...'' அசோகன் உணர்ச்சிக் குவியலாய் பேசிக் கொண்டே போக தியாகராஜனின் மூளையில் மணி அடித்தது. 'ஆஹா' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

'கதை அப்படிப் போகிறதா... வாடாவா... தனிக்காட்டு ராஜா.. உன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்து விட்டாளே இந்த அறியாப் பெண்' என்று அதிசயப்பட்டவன், நண் பனின் வாழ்க்கையில் புதுத் திருப்பம் வரப் போகிறது, அது இனிமையான திருப்பமாக இருக்கப் போகிறது என்பதை அறிந்தவனாய் மகிழ்ந்து போனான்.

அசோகனின் உணர்ச்சி மயமான வார்த்தைகள் காவ் யாவை தன்நிலைக்கு கொண்டு வந்தன. தன்நிலையைக் கொஞ்சம் மறந்து எதிரே நின்று கொண்டு இருந்தவனின் நிலையை உணர்ந்தாள். உதடுகளில் இனம் புரியாத சோகப் புன்னகை மலர,

"ஆகட்டும் சார். எப்போது என்னைக் கொடிய நிலையி லிருந்து காப்பாற்றினீர்களோ அப்போதிருந்தே நீங்கள் என் சொந்தக்காரர் போல் தான் சார். உங்கள் அருகில் எனக்கு எந்தவிதப் பயமும் இல்லை. நீங்கள் எனக்கு நன்மையே செய்வீர்கள் என்பதை அறிவேன். நீங்கள் சொன்னது போல் நான் வக்கீல் சார் வீட்டுக்கு வருகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்றாள்.

தியாகராஜன் மனதிற்குள் 'சபாஷ்' என்று சொல்லிக் கொண்டான்.

'அவள் நிலையைக் கண்டால் அவன் வேதனைப் படுகிறான். அவன் வேதனையைக் கண்டு அவள் அதை மறைத்துப் பேசுகிறாள்' ஒருவர் மேல் ஒருவருக்கு இருக்கும் அக்கறை நாளை என்னவாக மாறும்?

அவர்கள் மூவரும் வீட்டிற்குப் போனபோது மங்களம் வாசலிலேயே காத்திருந்தாள். அசோகனைக் கண்டதும் முகம் மலர,

"அசோக்! என் மகனே! உன்னைக் கண்ணால் காணு வதற்குள் எங்கள் உயிர் பறந்திருச்சேடா கண்ணா! உனக் குப் போய் இந்தத் துன்பமா?" என்று அவனைக் கட்டிக் கொண்டு கண் கலங்கினாள்.

அதற்குள் உமா ஆரத்தியுடன் வந்து,

"அத்தை அண்ணனை விடுங்கள். திருஷ்டி கழிக் கணும்" என்று கூற,

"ஆமாமாம். ஊர் கண்ணெல்லாம் என் பிள்ளை மேல் தான். எதற்கும் நான்னு முன்னால் போய் நிற்கிறானில்லை. நன்றாக ஆரத்தி எடும்மா. பொல்லாத கண் பார்வை கழி யட்டும்" என்று அசோகனை விட்டு விலகி நின்றாள் மங் களம். உமா ஆரத்தி எடுத்து முடித்ததும், அசோகனைப் பார்த்து,

"என்னவோப்பா. இப்பவாவது ஆண்டவன் கண் திறந்து உன்னைப் பார்த்தாரே அந்தப் பொண்ணு காவ்யா மட்டும் வராவிட்டால்.. நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்குகிறது. அந்தப் பொண்ணு மட்டும் அக்கறை யெடுத்து உன்னைக் காப்பாற்றா விட்டால் உன் நிலை என்னவாகியிருக்கும்? நீ அந்தப் பெண்ணுக்குத்தான் முதலில் நன்றி சொல்லணும்" என்று மங்களம் கூற அசோ கன் வேதனையோடு காவயாவைப் பார்த்தான். அவனைத் தொடர்ந்து காவ்யாவைப் பார்த்த மங்களம்,

"ஏம்மா காவ்யா முகம் வாடியிருக்கு? வீட்டு நினை வாம்மா? கவலைப்படாதே. உள்ளே வா. சாப்பிட்டவுடன் கிளம்பி விடலாம். நானே கொண்டு வந்து விட்டு விட்டு வருகிறேன்னு சொல்லியிருக்கேனில்லை? அப்புறம் என்ன பயம்? உன் அம்மா அப்பா கிட்ட நான் எடுத்துச்

சொல்கிறேன். தியாகு காரை ரெடி பண்ணு'' என்று கூறினாள்.

''அம்மா...'' என்று தயக்கமாய் அழைத்தான் தியாகராஜன்.

''என்னடா...?''

''வாசலிலேயே நின்று பேசாமல் உள்ளே போய் பேசலாமே.''

''சரிதாண்டா. அசோகன் வந்து விட்ட சந்தோசத்தில் எனக்குத் தலை கால் புரியவில்லை. வாங்க வாங்க உள்ளே போய் பேசலாம்'' என்று மங்களம் குதூகலமாய் உள்ளே செல்ல மற்றவர்கள் மௌனமாய் பின் தொடர்ந்தார்கள்.

உள்ளே வந்தவர்கள் சுரத்தில்லாமல் வரவேற்பறை சோபாக்களில் அமர்வதைக் கண்ட மங்களமும், உமாவும் திகைத்தனர். புத்திசாலியான மங்களம். 'என்னவோ நடந்திருக்கிறது' என்பதை யூகித்து விட்டாள்.

''தியாகு என்னடா நடந்தது? கேட்கிறேனில்ல... மறைக்காம சொல்லு'' அவள் அதட்ட தியாகராஜனின் தைரியம் பறந்து விட்டது. கோர்ட்டில் அமர்ந்திருக்கும் நீதிபதி முன் அவனொரு சட்டப் புலி. ஆனால் வீட்டில் மங்களம் கூட்டியிருக்கும் இந்த நியாய சபையில் அவன் எலியாக மாட்டிக் கொண்டான். தாயார் பயந்தது போலவே நடந்து விட்டதை அவளிடம் சொல்லத் துணியாமல் மென்று விழுங்கினான்.

''தியாகு. நீ முழிக்கிற முழி சரியில்லை. என்னதான் நடந்தது?''

உமாவிற்கு கணவன் சிறு பிள்ளை போல் தாயின் முன்னால் அடங்கி ஒடுங்கி அமர்ந்திருந்தது வேடிக்கை யாக இருந்தது. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு,

''ஏங்க... அத்தைதான் கேட்கிறாங்கல்ல. பதில் சொல்ல இவ்வளவு நேரமா?'' என்று தூண்டி விட்டாள். மனைவியை முறைத்த தியாகராஜன் பல்லைக் கடித்தான்.

''அவளை ஏண்டா முறைக்கிற. கேட்டது நான். எனக்குப் பதில் சொல்லு'' என்று மங்களம் கடிந்து கொள்ள அதற்கு மேல் முடியாதவனாய்.

''அம்மா... காவ்யாவோட அண்ணனும், அப்பாம்மா வும் ஸ்டேசனுக்கே வந்திட்டாங்கம்மா. பெரிய கலாட்டா ஆகிப் போச்சு. கடைசியில்...''

''கடைசியில்.''

''காவ்யா. இனி எங்க பெண்ணில்லை. எங்க பெண் செத்திட்டாள்ன்னு சொல்லி ஸ்டேசன்லயே விட்டுட்டுப் போயிட்டாங்க.''

விக்கித்துப் போய் விட்டாள் மங்களம். 'செத்து விட் டாளா?' 'உயிரோடிக்கும் பெண் செத்து விட்டாளா?' காவ்யா மாதிரியான ஒரு உத்தமமான பெண்ணைப் பெற்றவர்கள் கூறும் வார்த்தையா இது? அவர்கள் மனதிற்கு மாறாக தன் மனதிற்கு சரி என்று பட்டதைச் செய்ததால் அவளை உயிரோடு சாகடிப்பதா? அவள் மனம் என்ன பாடுபட் டிருக்கும்? அவளது தாய்மை உள்ளம் பதறியது.

''தியாகு. உனக்கு இப்பத் திருப்தியாடா? அப்பவே படிச்சுப் படிச்சு சொன்னேனே. ஊரார் வீட்டுப் பெண் ணோட வாழ்க்கையில் இப்படி விளையாடி விட்டாயே...

அந்தப் பெண் உனக்கு என்னடா கெடுதல் பண்ணுச்சு. இங்கிருந்து திருநெல்வேலிக்குப் போய் அந்தப் பெண்ணை வீட்டை விட்டு வரவச்சு இப்ப இந்த நிலைமையில் நிற்க வைச்சுட்டியே.''

''அம்மா அவங்களைக் காப்பாத்தப் போய் தானே அசோகன் ஆபத்தில் மாட்டிக்கிட்டான்...''

''சும்மா சும்மா அதையே கீறல் விழுந்த ரிகார்டு மாதிரி திருப்பித் திருப்பிச் சொல்லாதேடா. இப்படி அவளை உயிரோடு கொல்வதற்கா அன்னைக்கு அவன் காப்பாத்தி னான்...?''

மங்களம் பேசப் பேச தியாகராஜன் பதில் பேச முடி யாமல் வாயடைத்துப் போனான். அசோகனோ, 'ஏண்டா நாம் வெளியில் வந்தோம். நம்மால் தான் அந்தப் பெண் ணுக்கு இந்த நிலை? ஒரு பெண்ணின் வாழ்வில் விளை யாடி விட்டோமே' என்ற நினைவில் குனிந்த தலை நிமி ராமல் குன்றிப் போனான். காவ்யாவைப் பற்றிச் சொல் லவே வேண்டாம். அரை மயக்க நிலையிலிருந்து முழு மயக்க நிலைக்குப் போய்க் கொண்டிருந்தாள். அங்கே யிருந்தவர்களில் யோசிக்கும் திறனோடு நிதானமாய் இருந்தவள் உமா மட்டும் தான். எல்லோரையும் ஒரு அதட்டல் போட்டு 'மேற்கொண்டு என்ன செய்வது?' என்று யோசிக்க வைக்கா விட்டால் சரிப்படாது என்பதை உணர்ந்த உமா, மங்களத்தைப் பார்த்து,

''அத்தை... இப்போ எதுக்கு கோபப்படறீங்க. இப்ப என்ன நடந்திருச்சு'' என்று கேட்டாள்.

''என்னம்மா உமா நீ கூட இவனுக்குச் சப்போர்ட் பண்ற? இவன் செய்தது சரியா?''

"நிச்சயம் சரி. அவர் வேறு என்னதான் செய்திருக்க முடியும்? அவர் என்ன காவ்யாவின் வாழ்க்கையைக் கெடுக்கணும்னு இந்தச் செயலைச் செய்தாரா? இல்லை பொய்யாய் காவ்யாவை இந்த வழக்கில் சம்பந்தப் படுத்தி விட்டாரா? அசோகண்ணன் கொலை செய்யலைன்னு காவ்யாவுக்கு மட்டும் தானே தெரியும். அதனால்தானே உங்க மகன் அவங்களை சாட்சி சொல்லக் கூப்பிட்டார். அதுவும் காவ்யாவைப் போய் தனியாப் பார்த்து, வீட்டை விட்டு வெளியே வந்து சாட்சி சொல்லும்மா'ன்னு சொன்னாரா? இல்லையே பெரியவங்களைத்தானே நேரில் போய் பார்த்திருக்கிறார்? கெஞ்சியிருக்காரு அத்தை. காலில் விழுகாத குறையாய் கெஞ்சியிருக்கார். உங்க மகளைக் கூட்டி வந்து ஒரேயொரு வார்த்தை உண் மையைச் சொல்லி விட்டுப் போங்கன்னு கெஞ்சியிருக் கார். அவங்க நாயை விரட்டுற மாதிரி உங்க மகனை விரட்டி விட்டாங்களா இல்லையா? அப்புறம் காவ்யா என்னதான் செய்வாங்க? அவங்க வீட்டை விட்டு வெளி யேற வேண்டிய கட்டாயம் அத்தை. காவ்யா அதைத்தான் செய்திருக்க முடியும். வேறு வழியே இல்லை."

"ஆனால் இப்ப காவ்யாவோட நிலைமை என்ன ஆகிறது?"

"ஒன்றும் ஆகவில்லை. நாம எல்லாம் இல்லையா? நாம அவங்களை தனியா விட்டு விடுவோமா? அத்தை. காவ்யா வீட்டுக்குத் தெரியாமல் சினிமா பார்க்கக் கூட வெளியில் போனதில்லை. அப்படிப் பட்டவங்க வீட்டை விட்டு வெளியே வந்திருக்காங்கன்னா... எதுக்கு வந் தாங்க...? யாரையாவது காதலிச்சு வெளியேறி விட்டாங் களா? இல்லையே. உண்மையைச் சொல்ல வேண்டிய

இடத்தில் சொல்வதற்காக வெளியே வந்தாங்க. அவங்க மட்டும் உண்மையைச் சொல்ல வெளியே வராமல் இருந்திருந்தால் அசோகண்ணா தூக்கில் தொங்க வேண்டியதுதான். உங்களுக்கு அது சம்மதமா?''

''ஐயோ! என்ன உமா இப்படிப் பேசுற... அசோகனுக்கு ஏதாவது ஒண்ணுன்னா நான் தாங்குவேனா?''

''தெரியுதில்லை. அப்புறம் எதுக்கு இந்த ஆர்ப்பாட்டம் பண்றீங்க. தலையே போனாலும் உண்மையைத்தான் சொல்லணும்னு காவ்யா வந்திருக்காங்க. அது பாராட்டப் பட வேண்டிய விஷயம். அவங்க வந்து சரியான சமயத்தில் சாட்சி சொன்னதால் அசோகண்ணன் வெளியே வந்திட்டார். இது நாம சந்தோசப்பட வேண்டிய விசயம். காவ்யாவின் வீட்டில் கோபப்பட்டு விட்டார்கள். என்ன செய்யலாம்? இது மட்டும் நடந்திருக்கக் கூடாது. என்ன செய்வது? நடந்து விட்டது. விதியை மாற்ற முடியுமா? இனி மேற்கொண்டு என்ன செய்யலாம்னு பெரியவங்க நீங்க பார்த்து ஒரு முடிவெடுப்பீங்களா? அதை விட்டு விட்டு... நீ அப்படிச் செய்திருக்கக் கூடாது... இப்படிச் செய்திருக்கக் கூடாதுன்னு பேசிக்கிட்டு இருக்கீங்களே அத்தை... ஒன்னைத் தெரிஞ்சுக்குங்க... இப்ப நடந்தவைகளை எப்படியும் செய்திருக்க முடியாது. எல்லோருமே... உங்க பிள்ளை, காவ்யா உட்பட எல்லோருமே இப்படித்தான் செய்திருக்க முடியும். இதுதான் சரி. இப்போது முதலில் எல்லாரும் எழுந்து சாப்பிட வாங்க... என்னங்க... அண்ணனைக் குளிக்க வைத்து கூட்டிக் கொண்டு வாங்க... ம்.. சொல்ல மறந்துட்டேனே.... அண்ணனை தலைக்கு குளிக்கச் சொல்லுங்க... பிடிச்ச பீடையெல்லாம் போகட்டும். தலையை முழுகிட்டு நிம்மதியா வாங்கண்ணா... ம்ம்... எழுந்திரிங்க.''

கிராமத்துப் பெரிய தனக்காரரின் மகள். ஊர் நியாயம் சொல்லும் அப்பாவுக்குத் தப்பாமல் நியாயம் பேசி விட்டாள். அவள் சொல்வதில் உள்ள நியாயத்தை உணர்ந்த மங்களம் அமைதியானாள். 'மேலே என்ன செய்வது' என்ற யோசனையோடு அவர் காவ்யாவை எழுப்பி,

"வாம்மா சாப்பிடலாம் வா" என்று அழைத்துக் கொண்டு போனாள். அசோகன் குளித்து விட்டு வர எல்லோரும் ஒருவித மௌனத்தோடு சாப்பிட்டு முடித்தார்கள்.

"உமா காவ்யாவுக்கு மாடியில் உன் ரூமிற்கு பக்கத்து ரூமைக் கொடு. மாற்ற உன் துணிகளை எடுத்து அங்கே அடுக்கி வை. போம்மா காவ்யா. இதை உன் வீடு போல் நினைத்துக் கொள். எனக்குப் பெண்ணில்லாத குறைக்கு நீ வந்திருக்கிறேன்னு நான் நினைக்கிறேன். என்னை உன் அம்மாவாக நினைத்துக் கொள். போய் படுத்து ரெஸ்ட் எடு. எதைப் பற்றியும் கவலைப்படாதே. நாங்களிருக் கிறோம். உமா காவ்யாவை கூட்டிக் கொண்டு போம்மா" என்றார் மங்களம்.

உமா காவ்யாவை அழைத்துக் கொண்டு மாடியேறினாள்.

"தியாகு. நீ வீட்டில் இரு. பத்திரம் அந்தப் பெண் நம்மை நம்பி வந்திருக்கிறது. பார்த்துக் கொள். நானும் அசோகனும் திருநெல்வேலிக்கு இப்போதே கிளம்புகிறோம். அவங்க வீட்டில் பேசி சமாதானப்படுத்தலாம். பெத்தவங்க கோபத் தில் போயிருப்பாங்க. நான் பேசி சரி பண்ணுகிறேன்" என்றவள் உடனே கிளம்பத் தயாரானாள். அசோகன் மங் களம் சொல்படி உடனே வண்டியை எடுத்தான். இரு வரும் அப்போதே பயணத்தைத் தொடங்கி விட்டனர். விடியலின் அருகாமையில் இரவு இருக்கும்போது அவர் கள் காவ்யாவின் வீட்டை அடைந்து விட்டனர்.

அங்கே நடந்தது அசோகனின் வாழ்வைத் திறக்கும் கதவாக இருந்து விட்டது. ஆனால் கதவு திறக்கும் முன்னர் அசோகன் பட்ட வேதனை... அதனால் மங்களம் எடுத்த முடிவு... வாழ்க்கையை தன் போக்கில் வாழ்ந்தவன் வாழ்வில் கடமையைக் கொண்டு வந்தாள் அந்தத் தாய். அந்தக் கடமையை ஏற்க வைத்தாள் மற்றொரு தாய். இதுவும் காலத்தின் விளையாட்டு.

# 14

**அடைக்கலம் என வந்தாள்**
**அடைக்கலம்தான் கொடுத்தான்**
**படைக்களம் காணாமல்**
**பாரினை அவன் வென்றான்**
**பூமகள் மலர் மனதில்**
**புருசோத்தமனாய் அவன் ஆனதற்கு**
**நிலவே நீ சாட்சி**

**கா**வ்யாவின் வீட்டை அடைந்ததும் காரை விட்டிறங்கி அவர்கள் சென்று காலிங் பெல்லில் கை வைக்கும் முன்னரே கதவு திறந்தது. ராமநாதன் நின்றிருந்தார்.

''கார் சத்தம் கேட்டவுடன் நினைச்சேன். கடன்காரன் எவனோ உயிரை எடுக்க வந்திருக்கான்னு நினைச்சது சரியாப் போச்சு. என்னடா வேணும்'' என்று அவர் அதட்ட மங்களம் 'பொறுமையாய் இரு' என்பது போல் அவனுக்கு ஜாடை காட்டினாள்.

"சார் என் பெயர் தான் அசோகன்."

"அசோக சக்ரவர்த்தி பெயரெல்லாம் நல்லாத்தான்டா வைச்சிருக்கே. விளக்குமாத்துக்கு பெயர் பட்டுக் குஞ் சலமாம். பெயர் சொல்லி விளக்குகிறான். இங்கே என்னத் துக்குடா வந்தே. அதைச் சொல்லு. உன்னை வெத்தலை பாக்கு வைத்து அழைத்தேனா நான்...?"

அசோகனின் முகம் மாற மங்களம் அவசரமாகப் பேசினாள்.

"அசோகா! பெரியவர் கோபமாய் இருக்கிறார். நாம் தான் பொறுத்துப் போகணும். ஐயா! என் பெயர் மங்களம். இவனோட நண்பன் தியாகராஜனோட அம்மா நான்."

"ஓகோ! என் குடியைக் கெடுத்த வக்கீலைப் பெத்த மகராசி நீதானா? நல்ல மகனைப் பெற்றிருந்தால் பெருமை யாச் சொல்லிக்கலாம். இந்த மாதிரி கோடாரிக் காம்பை பெத்து வைச்சுக்கிட்டு எங்கேம்மா வந்த பெருமை பேசிக்கிட்டு..."

அசோகன் ஆத்திரமானான். மங்களம் தடுக்க, தடுக்க.

"இதோ பாருங்கள் சார். நீங்க கோபப்பட வேண்டியது என்கிட்ட. என்னை என்ன வேணும்னாலும் பேசுங்க. அடிங்க, கொல்லுங்க. ஆனால் அம்மாவை மட்டும் பேசாதீங்க."

"அடேங்கப்பா! உங்க வீட்டுப் பெண்களைப் பேசினால் மட்டும் என்னமா கோபம் வருது. அதே எங்க வீட்டுப் பெண்ணாயிருந்தால் வீட்டை விட்டு வெளியேற வைப்பே. போலீஸ் ஸ்டேசனில் நிப்பாட்டுவே. ஏன்னா நீயும் உன் பிரெண்டும் கெட்டிக்காரன்க. நான் கேணப் பையன் பாரு. உங்க அம்மாவைப் பேசினால் என்னடா

பண்ணுவ? கொலை பண்ணிடுவியா கொலைகாரப்பாவி. இதில் இவன் என்னவோ நியாயக்காரனாம். நான் இவனை அடிக்கணுமாம். ஏன்... இவனை கொலைகூட பண்ணிக் கலாமாம். நான் ஏண்டா உன்னைக் கொலை பண்ண னும்? எங்களுக்கு கொலையெல்லாம் பண்ணிப் பழக்க மில்லை. அது உன் பழக்கம்டா."

மங்களம் பதறிப் போனாள்.

"அசோகா. பொறு. நீ எதுவும் பேசாதே. ஐயா! நீங்கள் ரொம்பக் கோபமா இருக்கீங்க. உங்க கோபம் நியாயம் தான். ஆனால் நாங்க பேசுவதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்க."

"இது என் காதும்மா. நான் கொடுக்க முடியாது."

அசோகன் முறைக்க மங்களம் மீண்டும் அவனை சமாதானப்படுத்தினாள்.

"இருடா. அவர்தான் கோபத்தில் இருக்காருன்னு தெரியுமில்லை. பொறுமையா இரு. ஐயா. உங்கள் மனைவி இருந்தால் கொஞ்சம் கூப்பிடுங்களேன். நாங்க அவங்க கிட்ட பேசணும்."

"ஏன்... வீட்டில் மிச்சம் இருக்கிற பொம்பளை அவள் மட்டும் தான். அவளையும் வீட்டை விட்டு ஓடி வர வைக்கப் போறியா?"

மங்களமே சலிப்படைந்து விட்டாள். இவரிடம் பேசு வதைவிட குட்டிச் சுவரில் தலையை மோதிக் கொள்ள லாம். மகன் ஏன் தோற்றுப் போனான்? காவ்யா ஏன் வீட்டிற்குத் தெரியாமல் சாட்சி சொல்ல வந்தாள்? என்று இப்போது அவளுக்குப் புரிந்தது. இருப்பினும் பெண் விசயமல்லவா? காவ்யாவின் முகத்திற்காக விக்ரமாதித் தன் போல் மீண்டும் முயற்சியைத் தொடர்ந்தாள்.

"ஐயா. வீட்டுப் பொம்பளைகளுக்கு நல்லது கெட்டது நாலும் தெரியும். அவங்க கிட்டப் பேசினால் அவங்க புரிஞ்சுக்குவாங்க."

"என் வீட்டுப் பொம்பளைக்கு நல்லது மட்டும்தான் தெரியும். உன் கிட்ட பேசினால்தான் கெட்டதும் தெரிய வரும். அதனால் அவள் பேச வரமாட்டாள். நீ நடையைக் கட்டு."

அசோகன் கோபத்தில் கை முஷ்டியை மடக்கியே விட்டான். ஆனால் அந்த நேரம் சுவரில் மாட்டப்பட் டிருந்த காவ்யாவின் படத்தைக் கண்டதும் அவன் கோபம் பறந்தோடியது. இது காவ்யாவின் குடும்பம் இவர் காவ் யாவைப் பெற்றவர். அவன் பொறுமையை சிதற விட் டால் காவ்யாவை அவள் வீட்டில் சேர்க்க முடியாது. அவன் குடும்பமில்லாமல் அநாதையாய் வாழ்வது போதாதா? அவன் முகத்தில் விழித்த பாவத்திற்கு அவள் குடும்ப மிருந்தும் அநாதையாய் வாழ வேண்டுமா? 'பொறு மணமே பொறு' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். 'என்ன நடந்தாலும் சகித்துக் கொள். காவ்யாவிற்காக' என்று கூறிக் கொண்டவன் ராமநாதனிடம் பணிந்து பேசினான்.

"சார் உங்கள் காலில் வேணும்னாலும் விழுகிறேன். உங்க பெண் மேல் எந்தத் தப்புமில்லை. தயவு செய்து உங்கள் பெண்ணை ஏத்துக்கங்க."

"யாருடா என் பொண்ணு. ஓடுகாலியெல்லாம் என் பொண்ணு கிடையாதுடா."

மங்களம் தவிப்புடன் குறுக்கிட்டாள்.

"ஐயா. கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நீங்க பெத்த பெண்ணைப் பற்றி உங்களுக்குத்தான் நல்லாத் தெரி

யும். அது தங்கமான பொண்ணுன்னு நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரியணுங்கிற அவசியமில்லை. அந்தக் குணவதி சொல்கிற ஒற்றை வார்த்தையிலே ஒரு குற்ற மில்லாதவன் உயிர் ஊசலாடுதுன்னா அந்தக் குழந்தை என்னய்யா செய்யும்? வந்து அந்த ஒற்றை வார்த்தையைச் சொல்லி நம்மைக் காப்பாத்தின நல்ல மனிதனை நாமும் காப்பாத்துவோம்னு ஒரு நல்ல பொண்ணு நினைக்கும். உங்க பொண்ணு நல்ல மனசுள்ள பொண்ணு. நல்லது பண்ணியிருக்கு.''

''நல்லது பண்ணிட்டாள்ல. நீயே நடு வீட்டில் வைத்துக் கொள். ஏன் இங்கே வந்து என் உயிரை வாங்கறே. ஆனால் நீ வைத்துக் கொள்ள மாட்டே. பெண்ணில்லையா? நாளைக்குக் கல்யாணம் பண்ணனும். சீர் வரிசை செய்ய ணும். கடைசி வரைக்கும் வைத்துத் தாங்கணும். அதை யெல்லாம் செய்ய பெத்தவன் இந்த இளிச்சவாயன் வேண்டும். ஆனால் அவள் நல்லது செய்வதை மட்டும் உனக்குச் செய்யணும். என்னம்மா... நியாயம் பேசுறம்மா நீ...''

''ஐயா. இப்படிப் பேசினால் எப்படிங்க?''

''உனக்கு நல்லது பண்ணியிருக்கா. நீ கொண்டாடு... எனக்கு அது கெடுதலாயிடுச்சே... அதான் அவள் செத்துப் போனாள்னு அவள் போட்டோவுக்கு மாலை போட்டுக் கும்பிடறேன்.''

அப்போதுதான் அசோகனுக்கு அது உறைத்தது. அவசரமாய் சுவரில் மாட்டியிருந்த காவ்யாவின் போட் டோவைப் பார்த்தான். அதற்கு மாலை போடப்பட்டு ஊதுபத்தி ஏற்றி வைத்திருந்தார்கள். ஏதோ வித்தியாசம் முதலில் அவள் போட்டோவை அவன் பார்த்த போதே

அவனுக்குப் புலப்பட்டது. ஆனால் பரபரப்பில் அவன் மனதில் அது பதிவாகவில்லை. அசோகனும், மங்களமும் உறைந்துபோன அதே நேரம் உள்ளே அறைக்குள் நடைபிணமாய் படுத்திருந்த பர்வதம் தற்செயலாய் பேச்சுக்குரல் கேட்டு எழுந்து வெளியே வந்தவள் அசோ கனைக் கண்டதும் ஆவேசம் கொண்டவளாய் பாய்ந்து அவன் சட்டையைப் பிடித்து உலுக்கலானாள்.

''அடேய் கொலைகாரப்பாவி! சண்டாளா! என் ஆவியை குடிச்சிட்டியேலே. நீ நல்லா இருப்பியா? ஒத்தப் பொண்ணை உயிரைக் கொடுத்து வளர்த்தேனே. அதை உறவு முறையெல்லாம் அறுத்துப் போட்டு விட்டு உன்னைத் தேடி ஓடிவர வச்சிட்டியேலே. அவளை ஒழுங்கா வைச்சுப் பிழைக்கிறயா? இல்லை அவளையும் கொன்னு புதைச்சிட்டியா?''

''அம்மா உள்ளே போங்க'' என்று அதுவரை தந் தையைப் பேச விட்டு விட்டு அமைதியாக இருந்த ஆனந்தன் அதட்ட,

''அவள் பேசட்டும் ஆனந்தா. அவளைப் பேச விடு'' என்றார் ராமநாதன் ஒன்றும் புரியாதவனாய் மகன் தந்தையின் முகம் பார்த்தான். கல்லாகிப் போயிருந்த ராமநாதனின் முகத்திலிருந்து அவனால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை. எனினும் 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்று வளர்ந்தவன் அவன். உடனே மௌனமானான். பர்வதம் தொடர்ந்து அசோகனைப் பார்த்து சத்தம் போட்டுக் கொண்டேயிருந்தாள்.

''என் பொண்ணு தங்கம்லே. தகரத்தை நம்பி ஓடி யாந்துட்டா. அவ தரம் தெரிந்து வைச்சுப் பிழைப்பியாலே. அவ பச்சை மண்ணுலே. அடிச்சா அழுகக் கூடத்

தெரியாதுலே நான் பெத்த கண்ணிற்கு. அவளை இந்தப் பாவிகள் போட்டோவுக்கு மாலை போட்டுக் கும்பிட வைச்சுட்டியேலே. அவளை இவங்க சொல்ற மாதிரி சாகடிக்கப் போறியா இல்லை வாழ வைக்கப் போறியா? சொல்லுலே. என் பெத்த வயிறு பத்தி எரியுதுலே. என் கண்ணுக்குள்ள வைச்சு பொத்திப் பொத்தி வளர்த்தேனே. எங்கண்ணைப் பறிச்சுக்கிட்டுப் போயிட்டியேலே. அவளை உன் கண்ணுக்குள் வைச்சுப் பார்ப்பியாலே. சொல்லுலே... சொல்லுலே'' என்று நெஞ்சினில் அறைந்து கொண்டு அவள் கதறியழுக ராமநாதன் வெளியே தள்ள அவசியமேயில்லாமல் வெளியேறிய அசோகன், மங்களம் தொடர்ந்து ஓடி வந்து ஏறியதைக் கூட கவனிக்காமல் அவள் ஏறினாளா, இல்லையா என்று கூடப் பார்க்காமல் பேய் துரத்துவது போல் வண்டியை விரட்ட ஆரம்பித்தான்.

உள்ளே நின்றிருந்த ராமநாதன், ''ஆனந்தா அவர்கள் போய் விட்டார்களா என்று பார்'' என்றார். வெளியே வந்து திறந்திருந்த கேட்டைப் பூட்டி விட்டு உள்ளே வந்து வாசல் கதவையும் சார்த்திய ஆனந்தன்,

''போயிட்டாங்கப்பா'' என்றான். உடனே காவ்யாவின் போட்டோவின் மேல் போடப்பட்டிருந்த மாலையையும், முன்னால் எரிந்து கொண்டிருந்த ஊதுபத்தியையும் அகற்றியவர் மகளின் போட்டோவை எடுத்து விழிகளில் கண்ணீர் துளிர்க்கப் பார்த்தார். பர்வதம் புரியாதவளாய் கணவனின் முகம் பார்க்க, அதையே ஆனந்தன் வாய் விட்டுக் கேள்வியாய்க் கேட்டான்.

''அப்பா உங்கள் செயல் எதுவுமே எனக்கு விளங்காதது போலிருக்கிறது. நீங்கள் காவ்யாவை வெறுத்து ஒதுக்கியது போல் நடிக்கிறீர்களோ என்று தோன்றுகிறது.''

''ஆனந்தா! இது உனக்கு விளங்காமல் போனதில் அதிசயமில்லை. முப்பது வருடமாய் என்னோடு நிழல் போல் வாழ்ந்து வருகிற என் மனைவிக்கே என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லைங்கிறபோது... நீ என்னடா என் மகன் தானே... உனக்கு எங்கே புரியப் போகிறது.''

''என்னங்க'' என்று பர்வதம் கதறியழுது கணவனின் தோள் மேல் சாய மனைவியை ஆதரவாய் அணைத்துத் தட்டிக் கொடுத்தவர்.

''பர்வதம். இப்போ வந்திட்டுப் போனானே அசோகன். அவன் மேலும் தப்பில்லை. அவனுக்காக வீட்டை விட்டு வெளியே போனாளே காவ்யா அவள் மேலும் தப்பில்லை. ஆனால் நம்ம சமூகம் இருக்கிறதே அது நல்லதையே யோசிக்காது. தப்பைத் தான் யோசிக்கும். அசோகன் நம்ம பெண்ணைக் காப்பாற்றி கூட்டிக் கொண்டு வந்து விட்டது பகலில் இல்லை. இரவில். அதை நம்ம பொண்ணு போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போய் ஒத்துக் கொண்டு விட்டாள். அவனுக்காக நம்மை உதறி விட்டுப் போகிற அளவுக்கு அவன் மேல் காவ்யாவுக்கு அக்கறையிருக்கு. நன்றிக் கடனிருக்கு. ஆனால் உலகம் என்ன சொல்லும்? காவ்யாவுக்கு அசோகன் மேல் காதல்ன்னு சொல்லும். அவனுக்காக வீட்டை விட்டு ஓடிப் போனாள்ன்னு சொல்லும்...''

''அதுக்காக நம்ம பொண்ண கை விட்டு விடுவதா?''

''இல்லைடி. கை பிடித்துக் கொடுத்திருக்கிறேன், அந்த அசோகனிடம். பர்வதம் அவன் நல்லவன்டி. நம்ம பெண்ணை எந்தச் சூழ்நிலையிலும் கைவிட மாட்டான்.''

''அப்பா என்ன சொல்றீங்க?''

"ஆமாம் ஆனந்தா. அவன் பொறுப்பானவன். நடுக் காட்டில் எத்தனை பேர் உயிரைப் பொருட் படுத்தாமல் ஒரு பெண்ணின் மானத்தைக் காப்பாற்றப் போராடு வார்கள்? இவன் போராடியிருக்கிறான். வேலை வெட்டியை விட்டு நம்ம வீட்டுப் பெண்ணை பழுதில்லாமல் நம்ம கிட்ட கொண்டு வந்து சேர்த்திருக்கிறான். காவ்யா மட்டும் என்ன அவனுக்கு குறைந்தவளா? நம் ஒரு பார்வைக்கு அஞ்சி நடந்த பெண் அவன் உயிரைக் காப்பாற்ற மானம் மரியாதையை லட்சியம் பண்ணாமல் வீட்டை விட்டுப் போகவில்லையா? இந்தச் சூழ்நிலையில் அவனுக்குக் காவ்யாவைக் கொடுப்பது தான் சரி."

"அப்போ நீங்களே கல்யாணம் பேசி முடித்திருக்க லாமே அப்பா."

"அது நிர்பந்தம். இப்போது அவனுக்கு உருவாகி யிருப்பது கடமை. காவ்யா அவனது பொறுப்பாகி விட் டாள். கடமையைத் தட்டிக் கழிக்காதவன் அவன். என்ன செய்யப் போகிறான் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். ஆனந்தா! உன் பிரெண்ட் ரமேஷ் சென்னையில் தானே இருக்கிறான்?"

"ஆமாம் அப்பா. அவனிடம் இப்போதே செல்போனில் பேசி விடுகிறேன் அசோகன், தியாகராஜன் இருவரின் வீட்டையும் கண் காணித்து உடனுக்குடன் விவரம் சொல்லச் சொல்கிறேன்."

"நல்லது அப்படியே செய். பர்வதம் எழுந்து வா சாப்பிடு. இப்போது போன அம்மாளைப் பார்த்தாயில் லையா? அந்த அம்மாள் உன்னைப் போல் நூறு மடங்கு காவ்யாவைப் பார்த்துக் கொள்வாங்க. எப்படிப்பட்ட பெண்மணின்னு பார்த்தேயில்ல. அப்புறம் என்ன பயம்?

வலியில்லாம ஆபரேசன் பண்ண முடியாது. ஆபரேசன் பண்ணாம உயிர் பிழைக்க முடியாது. நாளைக்கு நம்ம பொண்ணு ஒரு சொல் வராமல் வாழணும்னா அசோ கனைத்தான் கல்யாணம் செய்துக்கணும். அதுதான் முறை. எப்படி அசோகன் கொலை செய்யவில்லை என்பதற்கு காவ்யா மட்டுமே சாட்சியோ அதே போல் அந்த இரவில் அவளைத் துரத்திக் கொண்டு வந்த அயோக்கியனா லேயோ இல்லைக் காப்பாற்றிக் கூட்டி வந்த அசோகனா லேயோ காவ்யாவுக்கு எந்தவித ஆபத்தும் நேரவில்லை என்பதற்கு அசோகன் மட்டுமே சாட்சி.''

ஆனந்தனுக்குப் புரிந்தது. அவனும் ஆண் தானே. பர்வதத்திற்கும் புரிந்தது. அவளும் பெண் தானே. சீதைக்கே பழிச் சொல் வரும்போது சாமான்ய காவ்யா விற்கு அது வராதா? கணவன் கையாண்ட யுக்தி புரிந்த தால் அவள் நெஞ்சில் அமைதி பிறந்தது.

அங்கே பேய் துரத்துவது போல் வண்டியை ஒட்டிக் கொண்டிருந்த அசோகனைக் கவனித்த மங்களத்திற்கு அந்த முரட்டு மகன் தவிக்கும் தவிப்பு புரிந்தது. காவ்யா வின் தாய் தவித்த தவிப்பைத் தாங்காமல் அதை நினைத்து நினைத்து அவனது உயிர் துடித்தது. பர்வதத்தின் தாயுள்ளம் தவிக்கும் தவிப்பை மங்களத்தால் புரிந்து கொள்ள முடிந்தது. தகப்பனும், உடன் பிறந்தவனும் ஆயிரம் தான் பாசத்தில் குளிப்பாட்டினாலும் தாயின் இடத்தை அவர்களால் நிரப்ப முடியுமா? மகளின் பாதுகாப்பை எண்ணி அந்தத் தாய் தவிப்பதை அறிந்து கொண்ட அதே தாய்மையுள்ளம் கொண்ட மங்களத்தின் மனம் ஒரு முடிவை எடுத்தது.

# 15

**பெண்மையினைச் சுமந்த**

**பெண்மை தீயாகத் தகித்தது.**

**வன்மையினை வளர்த்த பெண்மை**

**தீயின் தகிப்பைப் புரிந்தது.**

**கரை தேடும் கட்டுமரமாய்**

**அவன் கலங்கி நின்றபோது**

**கரை காட்டும் கலங்கரை**

**விளக்காய் அன்னையவள் ஆனதற்கு**

**நிலவே நீ சாட்சி**

தாய்மை! அந்த அன்புக்கு நிகரேது. மூவுலகை அளந்த பெருமாள் பாலகனாய் கை கட்டி நின்றது யசோதையின் தாய்மையிடத்தில் தானே! நீ எது செய்தாலும் மன்னிப்பேன் என்பது தாய்மையின் மகத்துவமல்லவா? அடி படும்போதும், உயிர் பிரியும்போதும், ஏன் உலகில் ஜனிக்கும் போதும் 'அம்மா' என்று தானே மனித ஜீவன் அலறுகின்றது. தொப்புள் கொடி பந்தமல்லவா அது? அந்த அகிலாண்ட ஈஸ்வரியை 'அன்னை'யென்றுதானே அகிலமே கொண்டாடுகின்றது. மனம் சோர்வடையும் போது தாயின் மடியைத் தானே ஊராளும் ராஜாவாக இருந்தாலும் தேடுவார்கள்? அந்த தாய்மையின் வழித் தோன்றல் தானே பர்வதம்?

கோபமாய் பேசினாலும் தாய்மையின் குணத்தில் அவள் இமயம். மென்மையாய்ப் பேசத் தெரியாவிட்

டாலும் மகளின் தன்மை அறிந்த தாய் அவள். பொத்திப் பொத்தி வளர்த்த மகளைச் சென்னையில் படிப்புக்காக விட அவளுக்கு மனமே இல்லை. பின்னாளில் உயிரோடு மகளை உறவின்றிப் பிரியப் போகிறோமென்பதை அந்தத் தாயின் உள்ளம் அன்றே அறிந்ததோ என்னவோ, மிகக் கடுமையாகப் போராடினாள். ஆனால் படிப்பு ஒரு வருடம் வீணாகப் போகிறதென்று ராமநாதன் கண்டிப் பாய் கூறி சென்னையிலேயே படிக்க வைத்தார். இன்று அந்த மகளின் எதிர்காலம் குறித்து அந்தத் தாயின் மனம் என்ன பாடுபடுமென்பதை அறிய முடியாதவளா மங் களம்? அவளும் தாய்தானே. இனம் இனமறியும். தாய்மை யின் பயம் அவளுக்குப் புரிந்தது. அவள் அசோகனைத் திரும்பிப் பார்த்தாள். அவனோ உன்மத்தம் பிடித்தவன் போல் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான்.

''அசோக் வண்டியை கொஞ்சம் ரோட்டோரமாய் நிறுத்துப்பா. நீ நிதானத்தில் இல்லை. கொஞ்ச நேரம் கழித்துக் கிளம்பலாம்.''

ரோட்டின் ஓரமாக காரை நிறுத்தியவன் அப்படியே ஸ்ட்டேரிங்கில் முகம் புதைத்து குமுறி அழுக ஆரம்பித் தான். மங்களம் அப்படியே சிறிது நேரம் விட்டு விட்டாள். கொஞ்சம் கண்ணீர் அடங்கியதும் நிமிர்ந்தவனைப் பார்த்துக் கனிவாக.

''எதுக்குப்பா இந்த அழுகை. சொல்லியழுக இந்த அம்மா பக்கத்தில் இருக்கும்போது உனக்கு ஏண்டா தம்பி இவ்வளவு வேதனை?''

''ஒண்ணுமில்லைம்மா.''

''ஒண்ணுமில்லாததுக்கா இப்படிப் பேய் போல வண் டியை ஒட்டிக்கிட்டுப் போவ. உன்னை சரி பண்ணிக்

கிட்டு வண்டியை எடுப்பா. இல்லாட்டி கட்டாயம் ஆக்ஸி டெண்ட்தான் பண்ணிருவ. உன் நிலைமையைப் பார்த் தால் அப்படித்தான் இருக்கு. அதனால் பார்த்து நிதான மான பின் வண்டியை ஓட்ட ஆரம்பி.''

பதில் சொல்லாமல் கண்ணீரோடு வெளியே வெறித்துக் கொண்டிருந்தவனிடம் ''ஏன்டா கண் கலங்கிக்கிட்டே இருக்க. காவ்யாவோட அப்பா கண்டபடி மரியாதை குறை வாய் பேசிட்டாரேன்னு கஷ்டமா இருக்கா?''

''இல்லைம்மா அதனால் இல்லை.''

''நாம இவ்வளவு பெரிய ஆள். பணத்தாலயும், பலத் தாலயும் உயர்ந்தவன். நம்மைப் போய் இந்தாளு இவ் வளவு பேசும் படியாயிருச்சேன்னு வருத்தப் படறியோ?''

மங்களம் அறிவாள் அந்த முரட்டு மனிதனின் மென்மை யான மனதை. ஒரு தாயின் வேதனை கண்ட தவிப்பில் அவன் கரைகிறான். இது அவளுக்குத் தெரியும். அதை அவன் வாயிலிருந்து வரவழைக்கத் தூண்டில் வீசினாள். அவன் வார்த்தை மீன்களோடு அதில் சிக்கினான்.

''காவ்யாவோட அம்மா பதறுவதைப் பார்த்தால் என் மனசு தாங்கலையே.''

''அவங்களைப் பார்த்தா உன் மனசு வருத்தப்படுது? என்னப்பா நீ. அவங்க பாட்டுக்கு அவங்க மகள் உன் னால்தான் வீட்டை விட்டு வெளியே வந்தாள். அவங்க மகள் இன்னைக்கு நாதியத்துப் போனதுக்கு நீதான் பொறுப்புன்னு பேசினாங்க.''

''உண்மைதானே அம்மா. காவ்யாவை இன்னைக்கு உயிரோடு சமாதி வைத்த பாவி நான்தானேம்மா. அவ

என்னால் தான்ம்மா வீட்டை விட்டு வெளியே வந்தாள். அவங்க குற்றச்சாட்டில் பொய்யில்லையேம்மா.''

''இது என்னடா தம்பி நியாயம். நீ அவளைக் காப் பாத்தின. பதிலுக்கு அவ உன்னைக் காப்பாற்றி இருக் கிறாள். இதுக்கு நீ எப்படிடா தம்பி பொறுப்பாவே?''

''நான் அவளைக் காப்பாத்தினதில் எனக்கு எந்த இழப்புமில்லை அம்மா. ஆனால் அவள் என்னைக் காப் பாத்தினதில் குடும்பத்தையில்ல இழந்து விட்டு நிற் கிறாள்.''

''அசோகா! இப்ப நான் ஒன்னு கேட்கிறேன். உன் மனச்சாட்சியைத் தொட்டுப் பதில் சொல்லு. அவ இழப்பை உன்னால் ஈடு செய்ய முடிஞ்சா செய்வியா?''

''என்னம்மா இப்படிக் கேட்கிறீங்க? என் உயிரைக் கொடுப்பேன்ம்மா. அவ இழப்பை ஈடு செய்வது என் உயிராக இருந்தாலும் கொடுப்பேன்.''

''உயிரைக் கொடுக்க வேணாம்டா கண்ணா! உன்னைக் கொடு போதும்.'

''புரியலைம்மா. நீங்க என்ன சொல்றீங்கன்னு விளங்கவில்லை.''

''இதில் புரியாமல் போக என்னடா இருக்கிறது? நீ காவ்யாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அவளுக் குன்னு ஒரு குடும்பத்தை உருவாக்கிக் கொடு. இதுதான் அவ இழப்புக்கு ஈடாக இருக்க முடியும்.''

''அம்மா. என்னம்மா இப்படிச் சொல்றீங்க.''

''என்னடா... என்னவோ சொல்லக்கூடாததை நான் சொன்னதுபோல் கேட்கிற. காவ்யாவோட அம்மா பேசி னதை கேட்டயில்ல. அந்தப் பொண்ணு உனக்காகத்தான்

வீட்டை விட்டு வெளியே வந்தாள்ன்னு சொன்னாங்களே அது பொய்யா?''

''இல்லைம்மா. காவ்யா எனக்காகத்தான் வீட்டை விட்டு வெளியில் வந்தாள்.''

''அவளை ஒழுங்கா வைத்து வாழ்வியா இல்லை கொன்னு புதைச்சிருவியான்னு கேட்டாங்களே... நினை விருக்கா.''

''கேட்டுட்டாங்களேம்மா என்னைப் பார்த்து அப்படிக் கேட்டுட்டாங்களே.''

''அவங்க சொல்வதை உண்மையாக்கப் போறியா?''

''அம்மா. காவ்யாவை கொல்கிறவனா நான்? நீங்களும் இப்படிப் பேசலாமா?''

''அவ கழுத்தில் ஒரு தாலியைக் கட்டி அவளை ஒழுங்கா வாழவைக்கப் போறியா? இல்லை அவளை இப்போது போலவே அநாதையாய் நிற்க வைக்கப் போறியா?''

''அம்மா அவள் தங்கம். நான் தகரம்ன்னு கூட அவங்க சொன்னாங்க.''

''ஐயோ. மறக்கலைப்பா. அதை நான் மறக்கலை. அத்தோடு அவ தரம் தெரிந்து குடும்பம் நடத்துவியான் னும் கேட்டாங்களே அதையும் மறக்கலை, அசோகா. அவங்க அம்மா முடிவே பண்ணிட்டாங்க. நீதான் காவ்யா வின் மாப்பிள்ளைன்னு. அதை உண்மையாக்கி அவங் களோட கண்ணான மகளை நீ கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றினாலே போதும். அந்தத் தாயின் மனம் குளிர்ந்து விடும்.''

அசோகன் யோசனையாய் காரை விட்டு இறங்கினான். சிறிது நேரம் ரோட்டோரம் மெதுவாக நடந்துவிட்டு வந்தான். வந்தவன் முகம் ஒரு தீர்மானத்துடன் தெளிவாய் இருந்தது.

''என்னப்பா முடிவு பண்ணிட்டயா?''

''அம்மா. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சும் பாங்க. உங்க கண்ணுக்கு என் கிட்ட இருக்கிற குறை தெரியாது. ஆனால் நான் இதைச் சொல்லித்தான் ஆகணும்.''

''மயிலுக்கும் தன் குஞ்சு அழகுதாண்டா. நீ சொல்லு.''

''காவ்யா ரொம்ப அழகானவள் அம்மா. அவ நிழல் பக்கத்தில் நிற்கக்கூட எனக்கு தகுதியில்லைம்மா. இப்ப அவ நிராதரவா நிற்கிற நிலையை நான் யூஸ் பண்ணிக்கிட்டதா ஆயிடக் கூடாது. அதனால்...''

''அதனால்?''

''அவளிடம் சம்மதம் கேளுங்க. அவ என்கிட்ட மனப்பூர்வமா சம்மதம் சொன்னால் உடனே அவள் கழுத்தில் தாலி கட்ட நான் ரெடி. ஆனால் அவள் லேசாத் தயங்கினாலும் நீங்க அவளை வற்புறுத்தக் கூடாது. இந்த உறுதிமொழியை எனக்கு நீங்க தரணும்.''

''சரிப்பா நான் உறுதி தரேன்.''

''அத்தோடு இதையும் அவளிடம் சொல்லிடுங்க. என்னைக் கல்யாணம் பண்ணினால்தான் என் சொத்துக்கள் அவளுக்கு சொந்தம்ன்னு நினைக்க வேண்டாம்னு சொல்லுங்க. என்னோட கடைகளையும் வீடுகளையும் அவள் யாரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் அவள் பேரில்தான் நான் எழுதி வைப்பேன்னு சொல்லுங்க.''

''அதனால் என்னப்பா. அவ வாங்கிக்க தயார்ன்னா நீ கொடு. அப்புறம்..?''

''அவள் மனதுக்கு பிடித்த நல்ல மாப்பிள்ளையாய் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறேன்னு சொல்லுங்க.''

''உன்னை விட நல்ல மாப்பிள்ளை உலகத்தில் யார் இருக்காங்கடா.''

''நான்தான் ஏற்கனவே சொல்லிட்டேன் உங்க கண்ணுக்கு நான் ஒசத்திதான்னு.''

''காவ்யா கண்ணுக்கும் நீ உசத்தியாத்தாண்டா தெரிவாய்.''

''அதை அவள் வாயால் சொல்லட்டும். நம்புகிறேன். நீங்க வற்புறுத்தக் கூடாது.''

தீர்மானம் செய்தபின் அமைதியாய் வண்டியை ஓட்ட அசோகனால் முடிந்தது. அவன் மனமும் அலைகடலாய் கொந்தளித்து சமனப்பட்டிருந்தது. எது வந்த போதும் இறுதி வரை காவ்யாவிற்கு துணை நிற்க வேண்டும் என்ற உறுதி நெஞ்சில் நிலை கொண்டிருந்தது. அவள் தன் பொறுப்பு என்ற உறுதியை நெஞ்சில் நிறுத்தி சென்னை திரும்பினான் அசோகன்.

# 16

விண்ணாக அவளைக் கண்டான்.

வீணாகக் கவலை கொண்டான்.

தன்னோடு தனிமை கண்டான்.

தவிப்போடு விலகல் கொண்டான்.

விண்மீனாய் அவளை எண்ணி
மண்மீனாய் அவன் தவிப்பதற்கு
நிலவே நீ சாட்சி.

காவ்யா அவளுக்கென்று கொடுக்கப்பட்டிருந்த அறையை விட்டு வெளியே வரவேயில்லை. சாப்பிட்ட தாய்.. அதுவும் மற்றவர்களுக்காக.. பெயர் பண்ணிவிட்டு அறையிலேயே அடைந்து கிடந்தாள். அவள் மனம் சொல்ல முடியாத பயத்தில் தவித்தது. தனக்குத்தானே கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள். தான் செய்ததில் என்ன தவறு இருக்கிறது என்று? 'தவறே இல்லை' என்ற பதிலைத்தான் மீண்டும் மீண்டும் அவளது மனச்சாட்சி அளித்தது. செய்யாத தவறுக்காக இவ்வளவு பெரிய தண்டனையா? ஒரே நாளில் அவளது உறவுகள் மறை யுமா? அவ்வாறு மறைதல் நியாயமா? ஒரே நாளில் அவளது உறவுகள் மறையுமா? அவ்வாறு மறைதல் நியாயமா? ஒரே நாளில் அவளது வாழ்வு திசை மாறிவிட் டதே. பெற்று வளர்த்து மடியில் போட்டுச் சீராட்டி வளர்த்த அன்னையின் அன்பு மடி இனி அவளைத் தாலாட்டாதா? பர்வதத்தின் மொழி கடுமைதான். ஆனால் பழாப்பழம் போல் வெளியே முள்ளாகவும் ஊடுருவிப்பார்த்தால் இனிப்பாகவும் இருக்கும் அன்பு அது. அவளுக்கு லேசாக தலைவலி வந்தால் கூட தாங்க முடியாத தாய் அவள். இன்று உயிரோடு அவள் உறவை அறுத்துக் கொண்டு சென்று விட்டாளே. பார்த்து வளர்த்த தந்தையின் கண்டிப்பான மொழிகளை இனி அவள் வாழ்வில் கேட்கக் கிடைக்குமா? உடன் பிறந்தவனின் உரிமை பாராட்டும் பாதுகாப்பு அவளை விட்டுப் போனது போனதுதானா? எண்ணி எண்ணி கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

திருநெல்வேலி போய் திரும்பி வந்த மங்களமும் அசோகனும் அவளிடம் ஏதும் சொல்லாமல் மௌனம் காத்தனர். அவர்களின் மௌனமே அவர்களின் தோல்வியை பறைசாற்ற காவ்யா எதுவும் கேட்காமல் மனதிற்குள் உடைந்தாள்.

அறைக் கதவு தட்டப்பட்டது. எழுந்து கதவைத் திறந்தாள். உமா நின்றிருந்தாள்.

"என்ன காவ்யா என்ன செய்துக்கிட்டு இருக்க?"

"ஒன்னுமில்லைங்க. சும்மா படுத்திருந்தேன்."

"கொஞ்சம் மொட்டை மாடிக்கு வர்றயா. அத்தை கூப்பிடுறாங்க."

பதில் பேசாமல் அவளைப் பின் தொடர்ந்தாள் காவ்யா. மொட்டை மாடியில் சேர்கள் போடப்பட்டு இருந்தன. மங்களம் ஒரு சேரில் அமர்ந்திருந்தாள். சேர்களில் அமராமல் கைகளை முன்புறம் கட்டிக் கொண்டு ஒரு பக்க மாடி கைபிடிச் சுவரில் அசோகனும், அருகே தியாகுவும் அமர்ந்திருந்தனர். மங்களத்தின் மடியில் தியாகுவின் குட்டிப் பெண் அமர்ந்திருந்தது. காவ்யா மாடியேறி வந்து அவர்கள் எல்லோரையும் கண்டதும் எதையோ தொலைத்து விட்ட குழந்தை போல் மருண்டு விழித்தாள். அந்தப் பார்வையைக் கண்டதும் அங்கிருந்த மூவருக்கும் காவ்யாவைத் தொடர்ந்து வந்த உமாவிற்கும் இரக்கம் சுரந்தது.

"இப்படி வந்து உட்காரு காவ்யா," என்று தன் முன்னாலிருந்த சேரைக் காட்டினாள் மங்களம். காவ்யா பணிவுடன் வந்து அமர்ந்து கொண்டாள். உமா அப்படியே மாடி மேல் படிக்கட்டில் அமர்ந்து கொண்டாள். அவளது குழந்தை பாட்டியின் மடியிலிருந்து இறங்கி தவழ்ந்து அருகில் வர

தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள். காவ்யா மங்களத்தின் முகத்தை கலக்கத்துடன் பார்த்தாள். மங்களம் பேச ஆரம்பித்தாள். "காவ்யா. நாங்க திருநெல்வேலி போய் வந்தது தெரியும்தானே." காவ்யா 'ஆமா'மென்பதாக தலையை ஆட்ட மங்களம் தொடர்ந்தாள்.

"உங்க அப்பா அவர் முடிவை மாற்றிக் கொள்ள மறுத்துவிட்டார் காவ்யா. உங்க அண்ணனும் அவரை சப்போர்ட் பண்ணுகிறான். உங்க அம்மா மட்டும்தான் உன்னை நினைத்து புலம்புகிறாங்க. ஆனால் அவங்களால் என்ன செய்ய முடியும்?" காவ்யாவின் கண்கள் அன்னையின் நினைவில் கலங்கின.

"இனி மேலே என்ன செய்வதுன்னு நாம் யோசிச்சாகணும்."

"எனக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு பண்ணி வொர்க்கிங் வுமன்ஸ் ஹாஸ்டலில் சேர்த்துவிட்டால் போதும்மா. வேறு உதவி வேண்டாம்," என்றாள் காவ்யா. அசோகனின் விழிகள் 'பார்த்தாயா' என்பதுபோல் மங்களத்தைப் பார்க்க அவள் அதைக் கவனியாதவள் போல்,

"அது சரி வராது காவ்யா. நாங்கள் இத்தனை பேர் இருக்க நீ அநாதைபோல் ஹாஸ்டலில் தங்குவது சரியாகாது."

"அதற்காக இங்கேயே எத்தனை நாள் நான் தங்க முடியும்?"

"காலம் பூராவும் நீ இங்கே தங்கலாம் காவ்யா. அதில் உனக்கு சந்தேகம் வேண்டாம். ஆனால் குடும்பத்தை இழந்து விட்ட நீ இங்கே ஒட்டமாட்டாய். நீ செய்திருக்கும் உதவி ஈடுசெய்ய முடியாதது. அதனால் உன்னை நல்ல முறையில் வாழவைப்பது எங்களின் கடமையாகிறது காவ்யா."

"ஈடு செய்ய முடியாத உதவி அப்படி என்னம்மா நான் செய்துவிட்டேன்? நடந்த உண்மையை சொல்ல வேண்டிய இடத்தில் சொல்ல வேண்டிய நேரத்தில் சொன்னேன். இது நான் செய்ய வேண்டிய செயல்தானேம்மா."

"அந்த உண்மையை நீ சொன்னதற்கு நீ பட்டுக் கொண்டிருக்கும் துன்பம்தான் எங்களுக்கு சகிக்கவில்லை செல்லம். உன் வீட்டார் உன்னை அடித்திருந்தாலோ இல்லை திட்டியிருந்தாலோ நாங்கள் கவலைப்பட்டிருக்க மாட்டோம். உன் வீட்டாருக்கு உன்மேல் இல்லாத உரிமையான்னு அமைதியாகப் போயிருப்போம். ஆனால் அவங்க உன்னை ஒட்டு மொத்தமா உதறிவிட்டுப் போயிட்டாங்களேம்மா. நீ உன் குடும்பத்தை இழந்து விட்டாயே."

"அதனால் பரவாயில்லை அம்மா. நான் மனதறிந்து எந்தத் தவறும் செய்யவில்லை. ஆனால் கடவுள் ஏனோ என்னை சோதிக்கிறார். நடந்ததுக்கு நீங்கள் யாரும் காரணமில்லையே. எனவே நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டாம்."

"கவலைப்படாமல் இருக்க முடியாது காவ்யா. நீ யாருக்காக வீட்டை விட்டு வெளியில் வந்தாய்?"

"இது என்னம்மா புதிதாய் கேட்கிறீர்கள். அசோகன் சாருக்காகத் தான்."

"அப்போ... இனிமேல் நீ அவனுடைய பொறுப்பாகிறாய் காவ்யா. உன்னைக் காப்பாற்றுவது இனி அவன் கடமையாகிறது."

"நான் படிச்சிருக்கேன்ம்மா. என்னை நானே காப்பாற்றிக் கொள்வேன்."

"புரியாமல் பேசாதேம்மா. வேலை வயிற்றுக்கு சோறு தரும். வாழ்வைத் தராது."

"வாழ்க்கைன்னு நீங்க எதைக் குறிப்பிட்டு சொல்றீங் கம்மா?"

"காவ்யா. குடும்பமாக வாழ்வதுதான் வாழ்க்கைன்னு நான் நினைக்கிறேன். உன்னைக் கடைசி வரைக்கும் காப்பாற்றும் பொறுப்பு தனக்கு இருக்கிறதாக அசோகன் நினைக்கிறான். அவனுடைய கடைகளையும், வீட்டை யும் உன் பெயரில் எழுதி வைத்து நல்ல வாழ்க்கையை அதாவது நல்ல மாப்பிள்ளையையும் தேடிக் கல்யாணம் பண்ணி வைக்கிறதா அவன் சொல்கிறான்."

காவ்யாவின் பார்வை அசோகன் மேல் கேள்வியாய் படிந்து மீண்டது. அந்தப் பார்வையில் ஒரு கேள்வி இருந் ததுபோல அசோகனுக்கு தோன்றியது. என்னவென்று அவன் யோசிக்கையில் காவ்யா பேசினாள்.

"அம்மா உரிமையில்லாத சொத்து எனக்கு வேண் டாம். அவருடைய சொத்துக்கு நான் எப்படி உரிமையுள் ளவள் ஆகமுடியும்? அது அவருடைய பெற்றவர்கள் அவருக்காக விட்டுச் சென்றது. எனவே இனி இப்படிப் பேச வேண்டாம்ன்னு சொல்லுங்கள்."

"நானும் அதையேதான் சொன்னேன். காவ்யா உரிமை யில்லாத சொத்தை ஏத்துக்க மாட்டாள்ன்னு. ஆனால் அந்தப் பிடிவாதக்காரன் தன்னுடையது எல்லாம் உன் னுடையதுன்னு சொல்கிறானேம்மா. அதில் நியாயமும் இருக்கே."

"அம்மா எனக்காக அவர் துன்பப்படறதில் எனக்கு விருப்பமில்லை."

"இதில் உன் விருப்பமோ அவன் விருப்பமோ வரவில் லையம்மா. நீ அவனுக்காக வீட்டை விட்டு வெளியில் வந்துவிட்டாய். இனி கடைசி வரை உன்னைக் காப்பாற் றும் பொறுப்பும் கடமையும் அவனுக்கு இருக்குங்கிறதில் அவன் உறுதியாக இருக்கிறான். என் கருத்தும் அதுதான். அதில் மாற்றமில்லைம்மா."

"அம்மா என்னைச் சுமக்கும் பொறுப்பு அவருக்கு வேண்டாம்."

"வேண்டாம்ன்னு நீ சொல்லிட்டால் ஆச்சா. இது சுகமான சுமைன்னு அவன் நினைக்கிறான், காவ்யா. அவன் ஒரு இடத்திலும், நீ ஒரு இடத்திலும் தனித்தனி யாக இருந்து ஒருவரை நினைத்து ஒருவர் கவலைப் பட்டுக் கொண்டு இருக்கிறதுக்கு ஒரு நல்ல முடிவை நீ ஏன் எடுக்கக் கூடாதும்மா?"

"நானா... நான் என்ன முடிவு எடுக்க?"

"ம்ம்.. நான் சொல்லவா? நீயும் அவனும் கல்யாணம் செய்து கொள்வதுதான் அந்த முடிவு."

"என்.. என்னம்மா... சொல்றீங்க?"

"காவ்யா! தன்னுடையதெல்லாம் உன்னுடையதுன்னு அசோகன் சொல்கிறான். உரிமை இல்லாதது எனக்கு வேண்டாம்ன்னு நீ சொல்கிறாய். நீ உன் குடும்பத்தை இழந்து நிற்கிறாயின்னு நாங்க எல்லோருமே கவலைப் படறோம். நீ அவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவன் ஆசைப்படி அவனுடையது எல்லாம் உன்னுடைய ஆகிவிடும். உன் கொள்கைப்படி உரிமையுள்ள சொத்தாக அது இருக்கும். எங்க எல்லோருடைய விருப்பப்படி உனக்குன்னு ஒரு வீடு குடும்பம் வந்துவிடும். எல்லா

பிரச்சனைகளுக்கும் இது ஒன்னுதான் சரியான தீர்வு காவ்யா.''

காவ்யா மௌனமாய் இருக்க உமா எழுந்து அருகில் வந்தாள்.

''என்ன காவ்யா யோசிக்கிறே. அத்தை சொல்வதுதான் சரி காவ்யா. சரின்ன சொல்லு.''

ஆனால் அசோகனோ, ''உமா அவங்களை வற்புறுத் தாதே. அவங்களுக்கு இஷ்டமில்லைன்னா இந்தக் கல்யாணம் வேண்டாம்,'' என்றான். காவ்யா விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள். ''கொஞ்சம் சும்மாதான் இரேண்டா,'' என்று அசோகனை அதட்டிய மங்களம், ''சொல்லு காவ்யா உனக்கு சம்மதம்தானே,'' என்றாள். அசோகன் சூள் கொட்டி னான்.

''அம்மா உங்க விருப்பத்தை அவங்க மேல் திணிக்கா தீங்க. சம்மதம்தானான்னு கேளுங்கள். சம்மதம்தானேன்னு கேட்காதீர்கள்.''

இப்போது காவ்யாவின் இதழ்கள் விரிந்தன.

''முதலில் அவர் சம்மதித்தாரா அம்மா. அவரை நீங்கள் வற்புறுத்தினீர்களா?'' அசோகனின் கண்கள் மின்னின. இமையோரம் துடிக்க,

''அம்மா எனக்கு சம்மதம்ன்னு சொல்லிடுங்க. அவங்க சம்மதிக்கிறாங்களா?'' என்று ஆர்வத்துடன் வினவ காவ்யா அவனை நேராய் பார்த்து,

''சம்மதம்,'' என்றாள்.

தன் காதுகளையே நம்ப முடியாமல் அசோகன் விழிகளை விரிக்க மங்களம் நிம்மதியான புன்னகை புரிய தியாகு ''ஹோய்'' என்ற கூச்சலுடன் அசோகனைத் தூக்கி

தட்டாமாலை சுற்ற உமா, "கன்கிராஜுலேசன்ஸ் அண்ணா," என்று அசோகனுக்கு கை கொடுக்க எதுவும் புரியாத தியாகராஜனின் குழந்தை கூட கை தட்டி சிரிக்க காவ்யா இது எதிலும் பங்கேற்காமல் வானத்தைப் பார்த்தாள். வானம் மேகங்கள் அகன்று நிர்மலமாய் காட்சி தந்தது. விண்ணும் மண்ணும் தொடும் தூரத்தில் ஒரு வெளிச்சப் புள்ளி மின்னி மறைந்தது.

## 17

மயக்கம் கொஞ்சம் தயக்கம் கொஞ்சம்
    மன்னவன் மனமே போர்க்களமாய்
மறுகல் கொஞ்சம் உருகல் கொஞ்சம்
    மல்லிகை முல்லை உலைக்களமாய்
நிலவோடு கை கோர்த்தும்
    நிழல்மறைத்து அவன் நிற்பதற்கு
நிலவே நீ சாட்சி.

அந்த அதிகாலை நேரத்திலும் பெருமாள் கோவிலில் கூட்டமிருந்தது. கோவில் வாசலில் எட்டு வேன்கள், ஆறு கார்கள் வரிசையாக அணி வகுத்து நிற்க அவற்றிலிருந்து அசோகனின் தெருவைச் சேர்ந்தவர்களும், அவனது டிராவல் ஏஜென்ஸியில் வேலை பார்த்துக் கொண்டிருப்ப வர்களும் குடும்பத்தோடு வந்து இறங்கினர். திருமணப் பெண் அலங்காரத்தில் காவ்யா ஜொலித்தாள். உமா கைக் குழந்தையுடன் அருகில் நின்று கொண்டிருந்தாள். அசோ கனின் நண்பர்கள் வட்டாரம் குடும்பத்துடன் கார்களில்

வந்து இறங்கிக் கொண்டிருந்தனர். மங்களம் மூக்கு கண்ணாடியை சரி பண்ணிக் கொண்டு தியாகராஜனை அடிக்கடி அழைத்து உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டு இருக்க தியாகராஜன் தாயின் அருகே குனிந்து அவற்றைக் காதில் வாங்கிக் கொண்டு உடனுக்குடன் நிறைவேற்றி னான். மெஸ் மாமி கண்களில் நீர் தளும்ப தன் பிள்ளைக்கு திருமணம் போல் பூரிப்புடன் வந்தவர்களை வரவேற் பதும் மற்ற திருமண ஏற்பாடுகளை மங்களத்தை கேட்டுக் கொண்டு செய்வதுமாக இங்கும் அங்கும் ஓடியாடிக் கொண்டிருந்தாள் ஊடே உமாவிடம் வந்து,

''நேற்று ராத்திரி அசோகன் வந்து விடிஞ்சா கல்யாணம் மாமின்னு சொன்னதும் மனசு நிறைஞ்சு போச்சுடி குழந்தே. உடனே கடையை அடைச்சிட்டேன். என் பிள்ளை யாண்டன் கல்யாணம் முடிஞ்சு குடித்தனம் ஆரம்பிச்ச பின்னாடிதான் எனக்கு நிலை கொள்ளும். எங்காத்து கல்யாணம்டி இது. என் பிள்ளையாண்டன், மாட்டுப் பெண்ணுக்கு பக்கத்தில் நாள் பூரா நான்தாண்டி நிக்கணும். ஆத்திலே மாமாவைப் பார்த்துக்க ஆளை வைச்சுட்டேன். அவருக்கு முடியலை. இல்லேன்னா இந்தப் பிள்ளையாண் டனை மாலையும் கழுத்துமா பார்க்க ஓடியே வந்திடுவார்,'' என்று வாய் கொள்ளாமல் பேசினவள் காவ்யாவிடம் வந்து அவள் கன்னத்தை திருஷ்டி வழித்து ரசித்தாள்.

''கொள்ளை அழகுடி மாட்டுப் பெண். என் கண்ணே பட்டுடும் போலிருக்கு. அடிபெண்ணே. எங்காத்து மாப் பிள்ளை காத்திருந்தாலும் காத்திருந்தான். கடைசியில் அப்ஸரஸைப் பிடிச்சுண்டுட்டான். பார்க்க மூக்கும் முழியும் லட்சணமா இப்பத்தான் தேவலோகத்தில் இருந்து இறங் கின மாதிரியில்ல இருக்கேடி. எங்க பிள்ளையாண்டன்

கவிழ்ந்திட்டதில் ஆச்சரியமில்லைடி. எல்லோருக்கும் ஒரு மாமியார்ன்னா உனக்கு ரெண்டு மாமியாராக்கும். தியாகுவோட அம்மா ஒருத்தி. நான் ஒருத்தி. ஆனால் பயப் படாதே. உன்னை கண்ணுக்குள்ள வைச்சு பார்த்துக்கு வோம். கண்ணில விரலை விட்டு ஆட்ட மாட்டோம். நாத்தனார் முறைக்கு நம்ம உமாதான். உன்னை ஆட்டி வைக்க மாட்டா. நீ சொன்ன சொல்லுக்கு அவ ஆடுவா,'' என்று வாய் கொள்ளாமல் கலகலவென்று பேசி அந்தத் திருமணத்தை களை கட்ட வைத்தாள் மெஸ் மாமி.

முதல்நாள் மாலை காவ்யாவின் வாயிலிருந்து 'சம்மதம்' என்று ஒரு சொல் வந்தவுடன் அசோகன் இறக்கை விரித்துப் பறக்க ஆரம்பித்துவிட்டான். தோள் கொடுக்கும் தோழனாய் தியாகராஜனும், தாங்கி நிற்கும் தாய், தங்கையாய் மங்களமும், உமாவும் இருக்க ஆளுக்கொரு வேலையை எடுத்துக் கொண்டு செய்ய ஆரம்பித்தார்கள். திருமணத்திற்கு தேவையான துணிகள் மாங்கல்யம் வாங்க உமா சென்றுவிட மங்களமும், மெஸ் மாமியும் விருந்துக்கு தேவையான உணவு வகைகளை தீர்மானித் தனர். அவசரம் என்பதால் உயர்தர ஹோட்டலில் இருந்து வரவழைக்க தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். தியாகராஜனின் வீட்டின் முன்னாலும் அவன் வீட்டு மொட்டை மாடியிலும் ஷாமியானா கட்டப்பட்டது. பெருமாள் கோவிலில் கல்யாணம், அங்கேயே ரெஜிஸ் டாரை வரவழைத்து திருமணத்தை பதிவு செய்தல், தியாகராஜனின் பங்களா மாடியில் மூன்று வேளையும் விருந்து என்று முடிவு செய்யப்பட்டது.

அசோகன் தன் தெருக்களில் குடியிருந்தவர்கள், நண்பர்கள், டிராவல்ஸ் ஏஜென்ஸியில் வேலை பார்த்தவர்

களை நேரில் சென்று அழைத்தான். தியாகராஜன் கோவில் மற்றும் ரெஜிஸ்டர் ஆபிஸ்களில் வேலைகளை முடித் தான். அனைவரும் மற்ற நெருங்கிய நண்பர்களுக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். அழைத்திருந்த அனைவரும் திருமணத்தில் கலந்துகொண்டு சிறப்பித் தனர். அசோகன் காவ்யாவுக்கென்று நகைகள் வாங்கப் பணம் கொடுத்திருந்தான். உமா அழகான நகை செட்டை வாங்கி வந்திருந்தாள். அவற்றை அணிந்திருந்த காவ்யா வின் அழகு ஜொலித்தது.

கெட்டிமேளம் முழங்க, அனைவரும் வாழ்த்த இறை வனின் ஆலயத்தில் சுபயோக நேரத்தில் காவ்யாவின் கழுத்தில் தாலிகட்டி அவளை மனைவியாக்கிக் கொண் டான். திருமணத்தை முறைப்படி பதிவு பண்ணிவிட்டு வந்தனர். தியாகுவின் இல்லத்தில் விருந்தினர் வந்து கொண்டே இருந்தனர். மாடியில் காலையில் ஆரம்பித்த திருமண விருந்து இரவு வரை நடைபெற்றுக் கொண் டிருந்தது. அந்தந்த வேளைக்கு ஏற்ற உணவு வகைகள் வந்து இறங்கிக் கொண்டிருந்தன.

அதே நேரம் திருநெல்வேலியில் காவ்யாவின் பிறந்த வீட்டில் ஆனந்தனுக்கு அவனது நண்பனிடமிருந்து திருமணத் தகவல் செல்போன் மூலம் வந்தது. பேசி முடித்த ஆனந்தன் தந்தையிடம், “அப்பா” என்றான்.

“சொல்லுடா. என்ன சொன்னான் உன் பிரண்ட்?”

“காவ்யாவிற்கு இன்று காலையில் பார்த்தசாரதி கோவிலில் கல்யாணம் முடிந்து விட்டது. அசோகன் ஒரு குறையுமில்லாமல் சிறப்பாய் கல்யாணத்தை நடத்தி நம் காவ்யாவிற்கு தாலி கட்டி விட்டானாம். கல்யாணத்தை பதிவு கூட பண்ணிவிட்டானாம்.”

"என்னலே சொல்றே. என் பொண்ணு கல்யாணம் முடிஞ்சிட்டதா?" என்று பார்வதம் கண்கலங்க.

"அழாதேடி. நான் என்ன சொன்னேன்? அசோகன் கடமையை தட்டிக் கழிக்கிறவனில்லை. நம்ம பொண்ணை சீர் செஞ்சு கல்யாணம் பண்ணியிருக்கான். ஒரு குறையும் இல்லாம வாழவைப்பான் பாரு," என்று செல்லமாய் கடிந்து கொண்டார் ராமநாதன்.

"அது சரி. வீட்டுக்கு வந்த மாப்பிள்ளையை அவன், இவன்னு சொல்லிக்கிட்டு... இனிமேல் மரியாதையாய் 'அவர்'ன்னு சொல்லிப் பழகுங்க," என்று அவள் பதிலுக்கு கடிந்து கொள்ள, "இதைப்பாருடா.." என்று உரக்க சப்தம் போட்டு ராமநாதன் சிரிக்க ஆனந்தனும் சேர்ந்து சிரித்தான். வெகு நாள்களுக்குப் பின்னர் அந்த வீட்டில் சிரிப்பு சத்தம் கேட்டது.

சென்னையில் தியாகராஜன் இல்லத்தில் இரவு விருந்து முடிந்திருந்தது. விருந்தினர் சென்று வீடு விழா நிகழ்வின் களைப்புடன் சோம்பல் கலந்து காட்சி அளித்தது. மெஸ் மாமி மங்களத்திடம் விடைபெற வந்தார்.

"ஹோட்டல்காரங்க கிட்ட அவா பாத்திரங்களையெல்லாம் ஒப்படைச்சாச்சு. வேலையாளை விட்டு மாடியை அலம்பி முடிச்சாச்சு. இனி நீ பார்த்துக்கிறியாடியம்மா. அவர் தனியா இருப்பார். நான் போய்த்தான் துணைக்கு இருக்கிறவாளை அனுப்பணும்." என்று அவள் கூறிக் கொண்டிருந்தபோது அங்கே தியாகராஜனும் உமாவும் வந்தார்கள். உமாவைப் பார்த்த மங்களம் மெஸ் மாமியிடம், "கொஞ்சம் பொறுங்க," என்றவள் உமாவிடம், "பொண்ணு மாப்பிள்ளைக்கு ரூம் ரெடி பண்ணிட்டியா," என்று கேட்டாள். "அதைத் தான்ம்மா சொல்ல வந்தேன்," என்றான் தியாகராஜன்.

"அந்த ராஸ்கல் பிடிவாதமாய் அவன் ரூமுக்கு காவ்யாவை அழைத்துக்கிட்டு இப்போதே போகணும்கிறான்."

"என்னடா இது புதிதாய் இருக்கிறது. அந்த ஒற்றை ரூமில் பெண்டாட்டியோடு புதுக்குடித்தனம் பண்ணனும் கிறானா? அசோகா, அசோகா," என்று மங்களம் அழைக்க அசோகன் வந்தான்.

"ஏண்டா தியாகு சொல்வது உண்மையா? நீ இப் போதே கிளம்ப வேண்டும்னியா?"

"ஆமாம்மா. நாங்க இப்போதே கிளம்புகிறோம்," என்ற அசோகன் மெஸ் மாமியிடம் திரும்பி, "மாமி இருங்க சேர்ந்தே போகலாம். உங்களை வீட்டில் விட்டு விட்டுப் போகிறோம்," என்றான். மங்களம் பல்லைக் கடித்தாள்.

"ஏண்டா உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கு? மாடி வீட்டை காலி பண்ண ஒரு மாதம் டைம் கேட்டிருக் காங்கன்னு சொன்னியே. அது வரைக்கும் நீயும், காவ்யாவும் நம்ம வீட்டிலேயே இருங்கள். எங்கும் போக வேண்டாம்."

"ஐ ஆம் சாரிம்மா. நானும் கவ்யாவும் இப்போதே கிளம்புவதாய் இருக்கோம். அதில் எந்தவித மாற்றமு மில்லை. ஒற்றை ரூமாய் இருந்தாலென்ன? நான் இருக்கு மிடத்தில் அவளும் இருக்கட்டும்," என்று தீர்மானமாய் அசோகன் கூறிவிட்டான். மங்களமும், தியாகராஜனும், உமாவும் எவ்வளவு வற்புறுத்தியும் அவன் கேட்க மறுத்துவிட்டு உடும்புப் பிடியாய் கிளம்புவதில் குறியாக நிற்கவும் வேறு வழியின்றி அனைவரும் தம்பதிகளை அனுப்ப இசைந்தனர்.

"டேய் உன் மனதில் ஒன்றை நினைத்திட்டால் அதிலேயே குறியா இருப்பேடா. உன்னை மாற்ற

முடியாது. தியாகு, உமா நீங்க இரண்டு பேரும் கூடப் போய் விட்டுவிட்டு வாங்க. உமா போகும்போது பால், பழமெல்லாம் நம்ம வீட்டில் இருந்து கொண்டு போய் விடு,'' என்று மங்களம் கூற உமா தலையாட்டி விட்டு காவ்யாவை கிளப்பச் சென்றாள்.

மங்களத்தின் பாதம் பணிந்த மணமக்கள் காரில் ஏறினர். வழியில் மெஸ் மாமியின் வீட்டில் அவளை இறக்கி விட்டுவிட்டு அசோகனின் ரூமிற்கு சென்றனர். தியாகராஜனும் அசோகனும் சிறிது நேரம் மொட்டை மாடியில் பேசிக் கொண்டிருக்கச் சொல்லிவிட்டு உமா அறையை சுத்தம் செய்து அலங்கரித்து முடித்த பின்னர் அவர்களை அழைக்க இருவரும் இறங்கி வந்தனர். உமாவும் தியாகராஜனும் கிளம்பிச் சென்றபின் அறையில் தனித்து விடப்பட்ட அசோகனும் காவ்யாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 18

பூமழை தூவிடும் மழைக்காலம்

அவன் பாதையில் தேவதை வரும்நேரம்

காதல் மலர்ந்திடும் மனதோரம்

காமன்கணை தாக்கிடும் குளிர்காலம்

பூவோடு தேனும் புன்னகைக்கும் இரவில்

வினாவோடு அவனே துயில் கொண்டதற்கு

நிலவே நீ சாட்சி.

தனித்து விடப்பட்ட காவ்யா தயங்கி தரையில் அமர்ந்தாள். திறந்திருந்த கதவை அடைத்துவிட்டு வந்த அசோகன் அவள் எதிரிலிருந்த கட்டிலில் அமர்ந்தான். ஜன்னல் வழியே வந்த கடல்காற்று உடலை வருடியது. மல்லிகையின் மணம் அவனது நாசியைத் தொட்டது. பழக்கமில்லாத மலர் மனம். அவன் மனம் மயங்கியது. எதிரே தரையில் அமர்ந்திருந்த காவ்யாவைப் பார்த்தான். அவள் கழுத்தில் மின்னிய மஞ்சள் கயிறு அவள் அவனுக்கு சொந்தமென்று அறிவித்தது, அவன் மெதுவாக, "காவ்யா" என்று அழைத்தான். அவள் தலைகுனிந்தவாறு "ஊம்" என்றாள்.

"ஏன் தரையில் உட்கார்ந்திருக்கிறாய். கட்டிலுக்கு வா காவ்யா."

"இருக்கட்டும். இது கொஞ்சம் வசதியாக இருக்கிறது."

"நான் ஏன் உன்னை பிடிவாதமாய் இன்றே நம் ரூமிற்கு அழைத்து வந்துவிட்டேன் தெரியுமா?"

'என்ன?' என்பதாய் அவள் பார்க்க அவன் தொடர்ந்தான்.

"இந்த நாளில்... நாம் வாழ்க்கையை ஆரம்பித்திருக்கும் இந்த நாளில்.. இன்னும் நம் வாழ்க்கையை ஆரம்பிக்கப்போகும் இந்த நேரத்தில் என் வீட்டில்தான் நீ இருக்க வேண்டும் என்று நான் நினைத்தேன். நாம் வாழ்வை ஆரம்பிப்பது என் வீட்டிலாகத்தான் இருக்க வேண்டும். நான் ரொம்ப சுயமரியாதை பார்ப்பவன் காவ்யா... என்ன பார்க்கிற காவ்யா.."

அவன் பேச கேட்டுக் கொண்டிருந்தவளின் பார்வை அறை வாசல் கதவில் படிந்து மீண்டதைப் பார்த்த அவன்

வினவினான். அவள் முகம் சிவக்க 'ஒன்றுமில்லை' யென்பதாய் தலையசைத்தாள். அவள் முகச்சிவப்பை ரசித்த அசோகன் அவள் முகத்திலிருந்து பார்வையை விலக்க இயலாமல் தவித்தான். இருவரும் அறிமுகமான வர்கள். எத்தனையோ வார்த்தைகளை ஒருவர் முகம் பார்த்து மற்றொருவர் பேசியிருக்கின்றனர். ஆனால் இன்று இருவரையும் சூழ்ந்து நின்ற மௌனத்திரையை விலக்க இயலாமல் இருவரும் திணறினர். தாளமாட்டாத அசோகன் பேசினான்.

''காவ்யா. உன்மேல் எனக்கு அளவு கடந்த அன்பும், அக்கறையும் நேற்று சாயந்திரம் வரைக்கும் இருந்தது. ஆனால்..'' காவ்யா விழிகளால் வினவ,

''நேற்று மாலையிலிருந்து அன்பு, காதலாகிவிட்டது. எப்படி என்று தெரியவில்லை.'' காவ்யா மீண்டும் அறை வாசல் கதவைப் பார்த்தாள். பின்னர் ஏதோ சிந்தனையுடன் தரையில் விரலால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். ஒரு எறும்பு அவள் கை மீது ஏற அசோகன் எழுந்து வந்து அதைத் தட்டிவிட்டான். அவன் கை பட்டவுடன் அவள் உடல் சிலிர்த்ததை உணர்ந்து கொண்ட அவன் அவளரு கில் தரையில் அமர்ந்து கொண்டான். அவளது கரம் பற்றினான். அவள் கைகள் நடுங்க ஆரம்பிக்க கிறக்கத் துடன், ''என்ன பயம் காவ்யா. நான் உன்னுடைய அசோகன் இல்லையா?'' என்று கேட்டான்.

அவள் பதில் சொல்லாமல் கைகளை விடுவித்துக் கொண்டு நகர்ந்து உட்கார்ந்தாள்.

அசோகனுக்கு விளங்கவில்லை. ''காவ்யா..?'' என்றான் கேள்வியாக.

அவன் கேள்வி அவளுக்குப் புரிந்தது. அந்தக் கேள்வி யில் இருந்த அழைப்பும், தாகமும் அவளை அவனருகில் அழைத்தது. ஆனால்..? அவள் இன்னும் நகர்ந்து அமர்ந் தாள். அவள் பார்வை மீண்டும் அறை வாசல் கதவிலேயே பதிந்தது. அவளது விலகல் கண்டவன் எழுந்து அறை யில் குறுக்கும் நெடுக்கும் நடந்தான். அவனது கூரிய பார்வை அவளது இதயத்தை துளைத்தது. நடந்து ஓய்ந்தவன் கட்டிலில் அமர்ந்து,

''ச்சு'' என்று சூள் கொட்டினான் சலிப்பாக. அதைக் கண்ட காவ்யா அடி உதடுகளைப் பல்லால் கடித்துக் கொண்டாள். அவன் பார்வையின் கேள்விக்கு என்ன வென்று பதில் சொல்வது..?

''எனக்கு.. நான்.. இன்னும் கொஞ்சம் நாள் அவகாசம் வேண்டும்... ஒரு.. ஒரு மாதம் போகட்டுமே,'' என்றாள் அவஸ்தையாய். இதைச் சொல்வதற்குள் வெட்கத்தில் அவள் முகம் கன்றிச் சிவந்து விட்டது.

'அவகாசம் வேண்டுமா? எதற்காக?' புரியாமல் அவ ளையே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு எதுவோ புரிந்தது போல் இருந்தது. அறிவில் பொறிதட்டியது. இவள் அடைக் கலம் வேண்டி இவனைத் திருமணம் செய்து கொண் டவள். இவன் மேல் உள்ள காதலால் அல்ல. இதை ஏன் அவன் மறந்தான். ஊர், உலகில் உள்ள மற்றவர்கள் போல மண வாழ்க்கை வாழ ஏன் ஆசைப்பட்டான்? அவளுக்கு வேண்டியது பாதுகாப்பான ஒரு கூடு. அதைக் கொடுக் கத்தான் இந்தக் கல்யாணம். அதை மறந்துவிட்டு அவள் மேல் தாபம் கொண்டால் அவள் என்ன செய்வாள். பாவம். ஒரு வினாடியில் அவனது மனம் பொங்கி அடங்கியது. வானில் சிறகடித்த உணர்வுகள் மறைய மண்மேல் கால்

பதித்தான். எழுந்து அவள் முகம் பார்க்காமல் பெட்சீட்டை எடுத்து தரையில் போட்டவன் தலையணை ஒன்றை உருவி எடுத்துக் கொண்டு அதில் படுக்கப்போனான். காவ்யா பதறிப் போனவளாய் எழுந்து,

''ப்ளீஸ் நான் தரையில் படுத்துக்கிறேன்,'' என்று பெட்சீட்டை பிடுங்கி அதை விரித்து படுத்துக் கொண் டாள். ஒரு பெருமூச்சுடன் கட்டிலில் விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான். விடி விளக்கொளியில் ஒரு பக்கமாய் திரும்பி படுத்திருந்த அவளின் உருவம் ஒரு கோட் டோவியம் போல் அழகாய் இருந்தது. 'என்ன மாதிரியான முதலிரவு இது?' என்று நினைத்து அவனுக்குச் சிரிப்பு வந்தது. கைக்கு எட்டும் தூரத்தில் கண்ணுக்கு அழகான மனதுக்கு பிடித்த புது மனைவி. அவள் வேண்டும் என்று உடலும் மனமும் துடிக்கின்றது. ஆனால் அவளோ அவ காசம் கேட்கிறாள். எதற்கு அவகாசம்? அவன் மனைவி யாய் அவள் முழுமையாய் ஆவதற்கு! என்ன என்னவோ சிந்தனைகள் மனதில் ஓட அதிகாலையில் கண் மூடித் தூங்க ஆரம்பித்தான்.

காலையில் சுப்ரபாதம் ஒலிக்கும் சத்தம் கேட்டு கண் விழித்தவனின் நாசிகள் சாம்பிராணி, ஊதுபத்தி வாச னையை நுகர 'கோவிலில் ஏதும் உறங்கிவிட்டோமோ' என்று ஒரு வினாடி தூக்கிவாரிப்போட படக்கென்று எழுந்து உட்கார்ந்தவனின் முன்னால் காபிக்கோப்பை நீட்டப்பட திகைத்து கண் கசக்கிப் பார்த்தான். குளித்து முடித்து ஈரத்தலையின் முனையில் சிறு முடிச்சிட்டு, திலகமிட்டு மங்களகரமாய் காவ்யா நின்று கொண்டிருந் தாள். 'அதற்குள் செட் ஆகிவிட்டாளே' என்ற ஆச்சரியத் துடன் காபியை வாங்கிக் கொண்டவன்,

"காபி எப்படிப் போட்டே?" என்றான். ஒயிலாய் திரும்பியவள்,

"ஏன்? பால், ஜீனி, காபிப்பொடி போட்டுத்தான் போட்டேன்," என்றாள்.

அவன் இதழ்களில் புன்னகை அரும்பியது. அவளது கேலியை ரசித்தவன் அவளைக் குறும்பாய் பார்த்தவாறு,

"என்ன ஒரு கண்டுபிடிப்பு? எனக்கு இத்தனை நாள் இது தெரியாமல் போய்விட்டதே," என்றான். அவள் முகம் வெட்கத்தில் சிவந்தது. அதையும் ரசித்தவாறு,

"இது பிரம்மச்சாரி இருந்த ரூம். இங்கே ஏது ஸ்டவ் பாத்திரங்கள்?"

"மாமிகிட்ட கேட்டேன். சின்ன ஸ்டவ், மண்ணெண்ணை, பாத்திரங்கள் எல்லாம் கொடுத்தாங்க. பால் பாக்கெட், ஜீனி, காபிப்பொடியெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தாங்க. கொஞ்சம் ரவையும் காய்கறியும் வாங்கித் தரச் சொன்னேன் இப்போதுதான் வந்து கொடுத்துவிட்டுப் போறாங்க. நீங்க காபி குடிச்சிட்டு குளிச்சுட்டு வாங்க. ரவை உப்புமா கிளறிவிடுகிறேன். இன்னைக்கு காலை டிபன் சிம்பிள்தான். இனி ஜமாய்ச்சிடறேன்."

ஆச்சரியத்துடன் புருவங்களை உயர்த்தியவாறு காபியை பருகிக் கொண்டே அறையைச் சுற்றி பார்த்தான். அறையின் மூலையில் இருந்த டேபிளை அடுப்படி மேடையாக்கி ஸ்டவ்வை அதில் வைத்திருந்தாள். மூலையில் இரண்டு குடங்கள் தண்ணீருடன் இருந்தன. "இது என்ன தண்ணீர் குடம் புதுசா? குழாயில் தண்ணீர் வருமே?"

"இது நல்ல தண்ணீர் சமையலுக்கு பிடித்து வந்தேன்."

''ஓகோ,'' என்றவாறு அலமாரியைப் பார்த்தான். மேஜையில் இருந்த புத்தகங்கள் மற்றைய பொருட்களை அலமாரியின் கீழ்தட்டில் சீராகவும் அழகாகவும் அடுக்கி யிருந்தாள். மேல்தட்டில் அசோகனது தாய் தந்தையரின் படமும் சுவாமி படமும் இருந்தது. இரண்டு படங்களுக் கும் பூப்போட்டு முன்னால் சிறு விளக்கெரிந்து கொண் டிருந்தது. நெகிழ்ந்தவன் விரைவாய் குளித்துவிட்டு வந்தான். சூடான உப்புமாவை தட்டில் பரிமாறி தண்ணீர் எடுத்து வைத்திருந்தாள். கட்டிலின் முன்னால் ஸ்டூலைப் போட்டு அதில் உணவு பரிமாறப் பட்டிருக்க துண்டினால் முகம் துடைத்துக் கொண்டே வந்து அமர்ந்தவன் சொன்னான்.

''இதோ பார் காவ்யா. மாடியில் பூராவும் ஒரே வீடாய் பெரிதாக இருக்கும். வீட்டை காலி பண்ணச் சொல்லி விட்டேன். ஒரு மாதம் டைம் கேட்டிருக்காங்க. அவங்க காலி பண்ணியதும் வீட்டுக்குத் தேவையான பர்னிச்சர், கிச்சனுக்கு தேவையான பாத்திரங்கள் எல்லாம் வாங்கி விடலாம். இப்போது இந்த ஒரு ரூமில் நாம் புதிதாய் எதை வாங்கினாலும் அது வேஸ்ட்தான். நீ சமையல் பண்ணு கிறேன்னு அலட்டிக்க வேண்டாம். இந்த ஒரு மாதமும் நாம் மாமி மெஸ்ஸில் இருந்து சாப்பாடு வரவழைத்துக் கொள்ளலாம். நீ ரெஸ்ட் எடு.''

''அது சரி கல்யாணம் ஆன பின்னாலும் மெஸ் சாப் பாடா? யாராவது கேட்டால் சிரிக்கப் போறாங்க. இது நேற்று சாயந்திரம் வரைதான் பிரம்மச்சாரி வீடு..'' இயல்பாய் பேசிக் கொண்டிருந்தவள் அவனது பார்வை துளைக்கவும் வாயடைத்துப் போனாள்.

''சொல்லு காவ்யா. நேற்று வரை இது பிரம்மச்சாரி வீடு. இன்று.. இது யார் வீடு? மாறிவிட்டதா?'' என்று குற்றம் சாட்டும் குரலில் வினவினான் அவன்.

காவ்யா அவளது வழக்கமாய் பற்களால் கீழ் உதடு களைக் கடித்தவளாய் சங்கடத்துடன் முகம் திருப்பிக் கொண்டாள். அவன் ஸ்டூலை நகர்த்தும் சத்தம் கேட்டு அவசரமாய் அவனருகில் வந்தவள்,

“தொட்டுக் கொள்ளத் தக்காளிக் கூட்டு வைத்திருக் கிறேன்” என்றவாறு பரிமாற ஆரம்பித்தாள். அசோகன் மௌனமாய் சாப்பிட ஆரம்பித்தவன் உணவின் சுவை யில் கவரப்பட்டவனாய்,

“பரவாயில்லையே சூப்பரா சமையல் பண்ணியிருக் கியே,” என்று பாராட்டியவன் அவளை ஆழ்ந்த பார்வை யால் பார்த்தபடி,

“கல்யாணத்துக்கு பின்னால் மெஸ்ஸில் சாப்பிட்டால் மட்டும்தான் சிரிப்பார்களா? கல்யாணம் ஆன பின்னாலும் பிரம்மச்சாரின்னா சிரிக்கமாட்டாங்களா?” என்று கேட்டான்.

அவ்வளவுதான் காவ்யாவின் முகம் குங்குமமாய் சிவந்தேவிட்டது. முந்தானையை திருகியபடி தலை நிமிர முடியாமல் திணறியவளைப் பார்க்கும்போது மனத்தாங் கல் போய் சிரிப்பு வந்துவிட,

“சரி சரி. நீ தான் உலகத்தில் இல்லாத வழக்கமாய் புருசன் கூட பழகிப் பார்த்த பின்தான்னு அவகாசம் கேட் டிருக்கியே. விடு. பழகிப் பார்த்திட்டால் போச்சு,” என்றான். சிரமப்பட்டு இயல்பு நிலைக்கு குரலைக் கொண்டு வந்த காவ்யா, “வீட்டுக்கு சாமான் வேண்டும் லிஸ்ட் தரேன். வாங்கிக் கொடுங்கள்” என்றாள். “வீடா எது?” என்றான் அசோகன். முறைத்துப் பார்த்த காவ்யா.

“ஏன் நாம் குடியிருக்கிறதைப் பார்த்தால் வீடாய் தெரி யலையா?” என்றாள்.

''இதுவா. ஹஹா... இது ரூம்'' என்று சிரித்தான் அசோகன்.

''எனக்கு இதுதான் வீடு. நான் கேட்கிறதை வாங்கிக் கொடுங்கன்னா கொடுங்க.''

.''பிடிவாதமா காவ்யா..?'' என்றான் ஒரு மாதிரிக் குரலில் அர்த்தத்துடன்.

''ஏன் நான் பிடிவாதம் பிடிக்கக்கூடாதா? அதற்கு எனக்கு உரிமையில்லையா?''

''உரிமையை நீதான் மறுக்கிறாயே..'' மீண்டும் அவன் வம்புக்கு இழுக்க அவள் சிரித்து விட்டாள். சிரிப்பினூடே லிஸ்டை நீட்டினவள்,

''நீங்க எப்படி வாழ்வை ஆரம்பிக்கும்போது அடுத்த வீட்டில் இருக்கக் கூடாதுன்னு நினைக்கறீங்களோ.. அப்படித்தான்.. நானும் நான் வந்த பின்னால் நாம் சாப்பிடும் சாப்பாடு நான் சமைத்த நம் வீட்டுச் சாப்பாடாக இருக்கணும்னு நினைக்கிறேன். கொஞ்ச நாள் எளிமை யான சாப்பாடாக இருக்கும் சகித்துக் கொள்வீர்கள்தானே.''

''நீ வெறும் பழைய சாதம் போட்டு பச்சைமிளகாய் கொடுத்தாலும் சரிதான். எனக்கு அது தேவாமிர்தம்.'' என்று பெருமையுடன் பதிலளித்த அசோகன் அவள் நீட்டிய லிஸ்டை வாங்கிக் கொண்டான். மனைவியின் சுயமரியாதை அவனுக்கு நிறைவைத் தந்தது. தெரு முனையில் இருந்த கடையில் சாமான்களை வாங்கியவன் வீட்டிற்கு வந்து மாடியேறிய போது மாடிப்படியில் STD பூத் ஜெராக்ஸ் கடை நடத்தும் கல்யாணசுந்தரம் சிரித்தான்.

''என்ன சார். புது மாப்பிள்ளை! அதுக்குள்ளே குடும்பப் பொறுப்பு வந்துவிட்டதா?''

சிரிப்புடன் அங்கீகாரமாய் தலை அசைத்தவன் மாடியேறி ரூம் கதவைத் தட்டினான். காவ்யா திறந்ததும் உள்ளே போய் சாமான்களை கொடுத்தவன்,

''காவ்யா மதியம் சாப்பிட வரமாட்டேன். உனக்கு..'' என்று கூற ஆரம்பிக்க,

''எனக்கு நான் பார்த்துக் கொள்வேன். கவலை வேண்டாம்'' என்றாள் காவ்யா.

''சரி. ஏஜென்ஸிக்குப் போனதும் டேவிட்டை அனுப்பி வைக்கிறேன். அவன் ஒரு வேனில் இரண்டு புதிய கட்டில்களையும் ஒரு பீரோவையும் இறக்கி வைத்துவிட்டு இந்தப் பழைய கட்டிலை எடுத்துப் போய்விடுவான். யாரென்று தெரியாமல் பயந்து விடாதே.''

''எதுக்கு இப்போ அதெல்லாம்.''

''நீ தரையில் எறும்பு மத்தியில் படுத்திருக்கணுமா? எப்படியும் நாம் புதிதாய் இதையெல்லாம் வாங்கித்தானே ஆகவேண்டும். என் டிரஸ்ஸையெல்லாம் வைக்க இந்த சுவர் அலமாரி போதும். ஆனால் இப்போது கல்யாணப் பட்டுப்புடவைகள் உன் நகைகளை வைக்க பீரோ வேண்டாமா,'' என்று அசோகன் வினவ,

''ஆமாமில்லை,'' என்று காவ்யா நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''இதுக்குத்தான் கொஞ்சம் கட்டினவன் பேச்சையும் கேட்கணும்கிறது.''

''கொஞ்சமென்ன நிறையவே கேட்கிறேன்.''

''அப்படியா நான் என்ன சொன்னாலும் கேட்பாயா?'' அவன் புருவத்தை இருமுறை உயர்த்திக் கேட்க காவ்யா முகம் சிவந்து முந்தானையை திருகலானாள். அவள் நிலையைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தவன்,

''சரி சரி சேலையை கிழித்து விடாதே. இந்தா இதைப் பிடி'' என்று ஒரு கவரைக் கொடுத்தான். கேள்வியாய் பார்த்த காவ்யா அதைப் பிரிக்க உள்ளே பணமிருந்தது. ''இப்போ எனக்கெதுக்கு பணம்?''

''மாமியைக் கூட்டிக் கொண்டு போய் உனக்கு மாற்றுச் சேலைகளையும் மற்ற துணிகளையும் வாங்கிவிடு. இனி உமாவின் துணிகளை நீ உடுத்தக் கூடாது. அதை மாமி கிட்ட கொடுத்து தேவைப்படறவங்க யாருக்காவது கொடுத்து விடச் சொல்லு. நானே வாங்கியிருப்பேன். சேலை, நைட்டி மட்டும்தான் நான் வாங்க முடியும். மற்றவை களை நீ பார்த்து வாங்கினால்தான் உனக்கு வசதி.''

''சரி போய் வாங்கி வந்து விடுகிறேன்.''

''அப்புறம் காவ்யா! உன் அம்மாவுக்கு நம்ம கல் யாணம் பத்தி எழுதிப் போட்டுவிடு. போனில் பேசலாம். அங்கே உன் அப்பாவோ, அண்ணனோ எடுத்துவிட்டால் தேவையில்லாத தகராறு வரும் என்பதோடு நீ சொல்ல வந்ததை சொல்ல முடியாமல் போகும். உன் அம்மா அன்றைக்கு ரொம்பப் பதட்டப்பட்டாங்க காவ்யா. உனக்கு கல்யாணமாகி விட்டதுன்னு சொன்னால் கவலை குறை யும். இன்னும் என்னைப்பற்றி நல்லதாக நாலு வார்த் தைகள் சேர்த்து எழுதிப் போட்டால் கவலை குறையும்.''

''உங்களைப் பற்றி நல்லதாக எழுதாமல் வேறு எப்படி எழுத முடியும்?''

வெள்ளை மனத்துடன் காவ்யா கேட்க. அசோகனின் மனம் அசைந்தது.

'இது போதும் பெண்ணே. உன் மனம் என்னருகில் இருக்கும்போது நீயும் என்னருகில் வந்துவிடுவாய்'

நிறைவாய் சிரித்தவன், "போய் வரவா?" என்று கொஞ்ச லாய் கேட்க மென்மையான புன்னகையுடன் காவ்யா தலை அசைத்தாள். முதல்நாள் காலையில் ஒன்று சேர்ந்த வர்கள் போல இல்லாமல் காலம் காலமாய் வாழ்ந்தவர்கள் போல் இருவர் மனமும் உணர அசோகன் மெல்லிய சீழ்க்கையொழியோடு வேலைக்குக் கிளம்பினான்.

# 19

**ஒருநாள் வாழ்வேன் உன்னுடனே**

**என் உயிராய் மதிக்கும் உன்நினைவுடனே**

**அறிமுகமான திருமுகமே உனையறியாமல்**

**விலகிடுமோ என் மனமே**

**உன் நெஞ்சம் தன்னில்**

**மஞ்சம் கொள்ள வஞ்சியவள் காத்திருப்பதற்கு**

**நிலவே நீ சாட்சி.**

இரவு வீடு திரும்பும்போது மனதில் கடந்த சில நாட்களாக அரித்த வேதனை மறைந்து மனம் நிம்மதியாக இருந்தது. காவ்யாவை நிராதரவாக்கி விட்ட குற்றவுணர்வு இல்லாமல் அவள் தன் வீட்டில் தன் மனைவியென்ற சொந்தத்துடன் இருக்கிறாள் என்ற உணர்வே மன அமை தியைத் தந்தது. அந்த அமைதியோடு கதவைத் தட்டி னான். திறந்தவளோ எளிமையான புது நூல் புடவையில் கழுத்தில் மஞ்சள் கயிறுடன் ஒரு சங்கிலியும், காதினில் சிறு தோடு, கைகளில் இரண்டு வளையல்கள் தவிர வேறு அணிகலன்கள் இல்லாமலேயே தேவதையாக நின்றாள்.

பின்னலிட்ட தலையில் வைத்திருந்த சிறு முல்லைச்சரம் கூட அவளுக்கு அலாதியான அழகைத் தந்தது. 'பிரம்மன் படைப்பின் எல்லா அழகுகளையும் ஒன்று சேர்த்து இவளை உருவாக்கி விட்டாரோ' என்று வியந்தவன் உள்ளே நுழைந்தவாறு,

''நகைகள் நிறைய வாங்கிக் கொடுத்திருக்கிறேனே எதுக்கு பூஜை போடவா?'' என்று கேட்டான். அவனை நிமிர்ந்து பார்த்தவள் புதிராகச் சிரித்தாள்.

''அந்த வீட்டுக்குப் போனதும் போட்டுக் கொள் கிறேன்.''

''ஏன் இந்த ரூமும் உனக்கு வீடுதானே..'' என்று சிரிப்புடன் வினவினவன் பேசிக்கொண்டே உடையை மாற்றினான். ''குளித்து விட்டு வருகிறேன்,'' என்று கூறி விட்டுச் சென்று அவன் குளித்து வருவதற்குள் காலை யிலே செய்தது போலவே கட்டிலின் அருகே ஸ்டூலை வைத்து அதில் உணவு பரிமாற தயாராக இருந்தாள் காவ்யா. அவள் தோற்றத்தைப் போலவே எளிமையான ஆனால் சுவையான உணவு. சாதம் வடித்து சாம்பார் வைத்து அப்பளம் பொரித்திருந்தாள். தொட்டுக் கொள்ள ஊறுகாய் பருப்பு ரசம் வைத்திருந்தாள். கடைத் தயிர் வைத்திருந்தாள்.

''நாளைக்கு வீட்டுத் தயிர். இன்று மட்டும்தான் கடைத் தயிர்'' என்றாள். அவன் புன்னகையுடன், ''அதனா லென்ன வீட்டுக்காரி சொன்னால் சரிதான்,'' என்றான். சாப் பிட்டு முடித்தவுடன், ''உண்மையிலேயே நல்லா இருக்கு சாப்பாடு,'' என்று கூற, ''பொய்யாய் கூடச் சொல்வீர்களா?'' என்று சிரித்தாலும் அவள் முகம் மலர்ந்துவிட்டது. தானும் சாப்பிட்டு, சாப்பிட்ட இடத்தை சுத்தம் பண்ணியவள்

அவனுக்கு பால் சுட வைத்துக் கொடுத்தாள். இரவு படுக்கும் முன்னர் பாலருந்திப் பழக்கமில்லாதவன் வியப் புடன் வாங்கிக் கொண்டான். வயிற்றுக்கு இதமாக பால் உள்ளே இறங்கியது மிக இதமாக இருந்தது. சிறு வயதி லிருந்து தாயில்லாப் பிள்ளையாக வளர்ந்தவன் அவன். கவனிக்க ஆளில்லாத காட்டு மரம் அவன். இன்று அவனுக்காக சமைத்து அவன் முகம் பார்த்து பரிமாறி அவள் கவனித்த விதம் மன நெகிழ்வைத் தந்தது.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க," அவன் பால் சாப்பிட்ட தம்ளரை வாங்கிக் கொண்டே அவள் கேட்டாள். அவன் கண்கள் கலங்கின. அவள் பதறிப்போய்,

"என்னங்க.. ஏன் கலங்கறீங்க" என்றாள்.

"இல்லை காவ்யா. தாய்க்கு பின் தாரம்கிறது எவ்வளவு பெரிய உண்மை? அம்மா என்னைக் கவனித்துக்கிட்டது நிழல்போல்தான் நினைவில் இருக்கிறது. இன்று நீ வயிறார நான் சாப்பிட சமைத்து..." எண்ணியதை சொல்லி முடிக்கும் முன்னர் அவள் கடிந்து கொண்டாள்.

"நல்லாத்தானிருக்கு நீங்க பேசுவது? ஒரு மனைவி சமைத்து சாப்பாடு போடுவது பெரிய விசயமா. தூங் குங்கள் பேசாமல்."

அறையில் புதிதாய் வாங்கிய இரு கட்டில்களும் இடைவெளி விட்டுப் போடப்பட்டிருந்தன. அழகாய் மெத்தை விரிப்பு வாங்கி விரித்திருந்தாள். அவளது பரிவான கவனிப்பில் கட்டில்களுக்கு இடையேயான இடைவெளி அவனுக்கு ஒரு பொருட்டாக தோன்ற வில்லை. கட்டிலில் அமர்ந்து தலையணையை மடியில் வைத்து அதில் கைகளை ஊன்றிக் கொண்டவன் அறையைச் சுற்றிப் பார்வையை சுழலவிட்டான். அறையின் வாசலுக்

கும், ஜன்னல்களுக்கும் கெட்டியான திரைச்சீலை மாட்டியிருந்தாள்.

''இது என்ன புதிதாய் வாங்கினியா?''

''ஆமாம். இன்று ஷாப்பிங் போனபோது வாங்கி வந்தேன்.''

''வெரிகுட். அறையை சுத்தமா மாற்றிவிட்டாயே. அடையாளமே தெரியவில்லை. என் ரூம் கூட இவ்வளவு அழகாய் மாறும்ன்னு நான் நினைக்கவே இல்லை. ம்ம்ம். பெண்ணின் கை பட்டால் மந்திரக்கோல் பட்டதுபோல் இடமே மாறிவிடும்போல..'' என்றவன் சிரித்துக்கொண்டான்.

அவளது கட்டிலில் அவன் புறமாக திரும்பி படுத்துக் கொண்டு அவன் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்தவள், ''என்ன சிரிப்பு..?'' என்று கேட்டாள்.

''இல்லை... காலையில் கண் விழித்ததும் சுப்ரபாதப் பாட்டும் ஊதுபத்தி வாசனையுமா இருந்ததா..? ஒரு வேளை கோவிலில் படுத்துத் தூங்கி விட்டோமோ என்று நினைத்துவிட்டேன்..'' என்று அவன் கூற பொங்கி வந்த சிரிப்புடன், ''அப்புறம்...?'' என்றாள் காவ்யா.

''அப்புறமென்ன என் கண் முன் காபி கோப்பையை நீட்டினாயா? கடவுள் காபியெல்லாம் கொடுக்கமாட்டாரேன்னு தெளிஞ்சேன்னு வைய்யேன்.''

காவ்யா வாய்விட்டு கலகலவென்று சிரித்தாள். அவள் சிரிப்பதை ரசித்தவன்,

''ஆனால் ஒண்ணு உண்மை காவ்யா?'' என்றான்.

''என்னவாம்?'' என்றாள் அவள் உரையாடலின் சுவாரஸ்யத்தில்.

''உன்னை மாதிரி தேவதை கால்பட்டால் வீடு கோவிலாகத்தான் ஆகிவிடும்.''

''கேலி செய்யாமல் படுத்துத் தூங்குகிறீர்களா?'' என்று முகம் சிவக்க அவள் கூறினாள்.

''ஆனால் உனக்கெதுக்கு இந்த வேலை? அந்த வீட்டுக்குப் போன பின்னால் வேலைக்கு ஆள் வைத்து விடுவேன். அங்கே இதையெல்லாம் வைத்துக் கொள்ளக் கூடாதா? இப்ப ரெஸ்ட் எடுக்கலாமில்ல?''

''எனக்கும் பொழுது போகணுமில்ல?''

''அதுவும் சரிதான். இந்த ரூமில் பாதுகாப்பில்லைன்னு டி.வி. கூட நான் வைத்துக் கொள்ளவில்லை....'' என்றவன் அவள் படக்கென்று நிமிர்ந்து பார்ப்பதைக் கண்டதும், ''என்னடா..?'' என்றான். அவனது அந்த அழைப்பில் குளிர்ந்தவள் பார்வை கதவில் பதிந்து மீண்டது.

''ஒன்றுமில்லை. தூக்கம் வருகிறது. தூங்கலாமா?''

''ம்ம். தூங்கலாம். குட்நைட் காவ்யா,'' என்றபடி எழுந்து விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான் அசோகன்.

வெகுநாட்களுக்கு பின் கிடைத்த அமைதியாய் இருவரும் ஒருவருக்கொருவர் பாதுகாப்பாகவும் ஒருவரின் அருகாமையில் மற்றவர் இருக்கும் நிறைவிலும் நிம்மதியாய் ஒரே கூரையின் கீழ் உறங்கினார்கள்.

''பால் பொங்கி விட்டது காவ்யா. இறக்கி வைத்து சுவாமியின் முன் விளக்கேற்றி வணங்கு,'' என்றாள் உமா. பால் பொங்கிய பாத்திரத்தை காவ்யா இறக்கி வைத்து விட்டுக் கடவுள் படத்தின் முன் விளக்கேற்ற மெஸ் மாமி பால் பாத்திரத்தை சுற்றி மஞ்சள் குங்குமம் இட்டாள். உமாவும், மெஸ் மாமியும் பால் பாத்திரத்தை சுவாமி

படத்தின் முன் வைத்துவிட்டு முன்னறைக்கு வந் தார்கள்.

"எல்லோரும் வாங்க. பால்காய்ச்சியாச்சு," என்று உமா கூறவும் எல்லோரும் எழுந்து சாமி கும்பிட வந்தார்கள். தியாகராஜனின் கையிலிருந்த அவனது குழந்தை தாயிடம் தாவ, உமா வாங்கிக் கொண்டாள். மங்களம் வீட்டைச் சுற்றிப் பார்த்து விட்டு, "பரவாயில்லைடா அசோகா. புதிது போல் ஆக்கிவிட்டாய்," என்றாள்.

மாடி வீட்டில் குடியிருந்தவர் வீட்டைக் காலி பண்ணி கொடுத்து விட்டார். அசோகன், காவ்யாவிடம் கலந்து பேசி அவளுக்கு பிடித்த வர்ணங்களைப் பூசி புதிது போல் வீட்டை ஆக்கியிருந்தான். வீட்டிற்கு தேவையான சோபா, டைனில் டேபிள், டிரெஸ்ஸிங் டேபிள் மற்றும் சமைய லறைக்கு தேவையான மிக்ஸி முதல் பிரிட்ஜ் வரை அனைத்து பர்னிச்சர்களையும் வாங்கிப் போட்டிருந்தான். அவற்றை உரிய இடங்களில் வைத்து இல்லத்தை மேலும் அழகூட்டி இருந்தாள் காவ்யா. சுவர்களில் அழகிய ஓவியங்களை வாங்கி மாட்டி வைத்திருந்தாள்.

"அடடா அசோகா உன் ஆம்படையா கண்ணுக்கு மட்டும் ரதியில்லடா. அவ காலடி எடுத்து வைத்து உன் ஆத்தையே அழகாக்கிட்டா. காசை காசுன்னு பார்க்காமல் நீ சாமான்களை வாங்கிப்போட்டு என்னடா ஆச்சு. எதை எங்கே வைத்தால் அழகாயிருக்கும்ன்னு உனக்கு தோணுச்சோ. அதுதான் பொம்மனாட்டி இருக்கிற அகம் கிறது," மெஸ் மாமி வாயார மனமார பாராட்டினாள்.

மங்களம் பெருமையாய் காவ்யாவைப் பார்த்து புன் னகைத்தாள். காவ்யாவோ "போங்க மாமி. எப்பப் பார்த் தாலும் என்னை ஏதாவது சொல்லிக்கிட்டு..." என்று

வெட்கத்துடன் சிணுங்கினாள். அசோகன் அதை ரசிக்க உமா காட்டிய ஜாடையில் அசோகனைக் கவனித்த தியாகராஜன் அவனை ரசிக்க ஆரம்பித்தான்.

"உன் அகம் மட்டுமில்லைடி குழந்தே. உன் ஆத்துக் காரனையும் பாரு எப்படி மினுமினுக்கிறான். மாமி சாப் பாட்டில் என் பிள்ளையாண்டன் வத்திப்போய் கிடந்தான். ஆத்துக்காரி கவனிப்பில் கன்னத்திலே சதை போட்டு உடம்பெல்லாம் உப்பி ஜம்முன்னு ஆயிட்டானே," என்றாள் மாமி கரிசனையுடன்.

உள்ளே புதிதாக வாங்கியிருந்த டிரெஸ்ஸிங் டேபிளின் முன்னாடி நின்று கொண்டிருந்த அசோகன் ஆளுயுரக் கண்ணாடியில் தன்னைத்தானே பார்த்துக் கொண்டான். மாமி சொல்வது உண்மையென்பதை சதைப்பிடிப்பான அவனது தோற்றம் தெரிவித்தது. வெளியே ஹாலில் மாமி நிறுத்தாமல் பேசிக் கொண்டிருந்தாள்.

"பெத்தவா இல்லாம தானாய் வளர்ந்த குழந்தைடி. அவன் சாப்பிட்டதை யார் கண்டா? சாப்பிடாததை யார் கண்டா? நல்லது கெட்டதை யார் கேட்டா? இப்ப பெத்த தாய்க்கும் மேலா நீ கவனிச்சுக்கறே. தாய்க்கு பின்னால் தாரம்கிறது உன் வகையில் சரியாகத்தாண்டி இருக்கு," என்றாள் மாமி மெச்சுதலாய்.

இருபது வயது வரை பெற்றவர்கள் கவனிப்பில் வளர்ந்த தன்னாலேயே இந்தப் பிரிவை தாங்க முடிய வில்லையே. மனம் பதறுகின்றது. தன்னுடைய பெற் றோராவது உயிரோடு இருக்கின்றார்கள். என்றாவது ஒருநாள் பார்த்துக் கொள்ளலாம். சிறு வயதிலேயே தாய் தந்தையை இழந்தவனுக்கு எப்படியிருக்கும்? தாய்மை உணர்வு அவள் இதயத்தில் முட்டி எழுந்தது. அசோ

கனைப் பார்க்கும்போது, 'நீ இத்தனை கஷ்டப்பட்டா தனியாக வளர்ந்தாய்?' என்ற ஆதுரம் பொங்கியது. சிந்தனையோடு மாமியின் உதவியுடன் மங்களத்தின் மேற்பார்வையில் விரைவாய் விருந்தை சமைத்தாள். அனைவருக்கும் டைனிங் டேபிளில் தலைவாழை இலை போட்டு அப்பளம் வடை, பாயசத்துடன் விருந்து பறிமாறினாள். சாப்பிட்டு முடித்தவுடன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த மங்களத்தின் குடும்பம் விடை பெற்றுச் சென்றுவிட மாமியும் கடைக்குப் போவதற்காக கிளம்பிப் போய்விட அசோகனும் டிராவல் ஏஜென்ஸிக்கு கிளம்பினான். காவ்யா, "என்னங்க...," என்று தயக்கமாய் அழைக்க கேள்வியாக நிமிர்ந்து பார்த்தான் அசோகன்.

"என்ன காவ்யா பணம் எதுவும் வேணுமா?"

"பணம் வேண்டாம். எனக்கு கொஞ்சம் வெளியே போகணும்?"

"மாமியைக் கூப்பிட்டுக் கொண்டு போய்வா. இதற் கெல்லாம் என்கிட்ட பெர்மிசன் வாங்கிட்டுத்தான் போக ணுமா? நீ மாமியோடு போய் விட்டுவா?"

"மாமிதான் எனக்கு தாலிகட்டியிருக்கிறார்களா?" காவ்யா வெடுக்கென்று வினவ அசோகனின் உடலில் ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் பாய்ந்தது.

"என்னடி சொன்னே?" அவன் கண்கள் மின்ன கேட்க, அவள் வெட்கத்தில் முகம் சிவக்க முகம் திருப்பிக் கொண்டாள். அவள் முகத்தை திருப்பிக் கொண்டாலும் அகத்தில் தனக்கு இடம் கொடுத்து விட்டாளென்பதை அறிந்தவனாய் அசோகன் அவளை நெருங்கினான். கனிவு வயப்பட்ட இருவரும் காதல் வயப்பட்டு விட்டதை அறிந்த காலம் நகைப்புடன் நகர்ந்தது.

# 20

அன்றொரு நாள் இதே நிலவில்
அவர்கள் சென்றனர் வழித்துணையாய்
பின்னொரு நாள் இதே நிலவில்
அவர்கள் இணைந்தனர்
வாழ்க்கைத் துணையாய்
இருமனமும் திருமணத்தில்
ஒருமனதாய் ஆனதற்கு
நிலவே நீ சாட்சி.

காதல் வயப்பட்ட அசோகன் அவளை நெருங்கி சிவந்திருந்த அவள் முகத்தை தன்புறத்தில் திருப்பினான். அவன் முகம் பார்க்க வெட்கப்பட்டு அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள் அவள். எத்தனை முயன்றும் அவள் முகத்தை நிமிர்த்த முடியாமல் போக பேரலையாய் எழுந்த உணர்வுகளுடன் அவளை இறுகக் கட்டிக் கொண்டான் அவன். எத்தனை யுகங்கள் என்று தோன்றிய நிமிடங்கள் ஓட அவன் அவள் காதருகில் குனிந்து,

''ஏய்ய்.. இன்று என்னடி புது கரிசனம் உன் புருசன் மீது?'' என்று கேட்டான்.

''அதை இப்போ சொல்ல மாட்டேன்,'' என்று அவன் பிடியிலிருந்து அவள் விலகி எழ,

''எங்கே போகிறாய்?'' என்று அவளை விட மறுத்து தனக்குள் அடக்கிக் கொண்டவன் கேட்டான். ''கோவிலுக்குப் போக வேண்டும்,'' என்றாள் காவ்யா.

''எந்தக் கோவிலுக்கு?'' என்று அவன் காதலுடன் வினவ அவன் மார்பில் விரல்களால் கோலமிட்டபடி, ''அஷ்டலட்சுமி கோவிலுக்கு,'' என்றாள் காவ்யா.

''அந்தக் கோவில் உனக்குப் பிடிக்குமா?'' என்று அவன் வினவ,

''ஆமாம். என்னை கூட்டிப் போவீர்களா? ப்ளீஸ்,'' என்றாள் அவள்.

''இதுக்குப் போய் ப்ளீஸ் போடுவானேன். இன்று முழுவதும் உன்னுடன்தான். ஏஜென்ஸிக்கு போன் பண்ணி சொல்லிவிடுகிறேன். நீ குளித்து டிரஸ் பண்ணிக் கிளம்பு.'' என்றவன் போனில் தொழில் விசயம் பேச ஆரம்பிக்க அவள் உள்ளே போனாள்.

சற்று நேரத்தில் இருவரும் குளித்து முடித்து குதூகலமாய் காரில் கிளம்பினார்கள். அருகில் அமர்ந்திருந்த மனைவியை ஓரக்கண்ணால் பார்த்தபடி காரை ஓட்டினான் அசோகன். நீல வண்ணப்பட்டு உடுத்தியிருந்தாள். நீண்ட பின்னலில் முல்லைச் சரம் சூடியிருந்தாள். காதுகளில் கல் ஜிமிக்கி ஆட, கழுத்தில் கல் அட்டிகை போட்டு கை நிறைய பொன் வளையல்கள் குலுங்க பேசிக் கொண்டு வந்தவளைப் பார்த்து,

'இந்த ஜ்வலிப்பு எனக்குச் சொந்தமா?' என்ற பிரமிப்பு தட்டியது.

''ஏன் காவ்யா? இப்போது எவ்வளவு அழகாய் பாந்தமாய் இருக்கிறாய் தெரியுமா? இந்த வீட்டிற்கு வந்தவுடன் போட்டுக் கொள்ளும் இந்த நகைகளை முதலில் எல்லாம் ஏன் போட மறுத்தாய்?'' என்று அவன் வினவ,

''எல்லாம் காரணமாகத்தான்'' என்று சிரித்தாள் அவள்.

''என்ன காரணம்?'' என்று கேட்டவனிடம்,

''அப்புறம் சொல்கிறேன். இப்போது கோவிலுக்குப் போகலாம்'' என்றாள் அவள்.

கோவிலருகே காரை நிறுத்திப் பூட்டிவிட்டு இறங்கி நடந்தார்கள். ஒவ்வொரு சந்நிதானத்திலும் ஒவ்வொரு தேவியிடமும் கண்மூடி பக்திப் பரவசத்துடன் வேண்டிக் கொண்டிருந்தவளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். தரிசனம் முடிந்ததும் கோவிலுக்கு வெளியே வந்து கடலோரம் நடந்தார்கள். கடல் காற்றில் அவள் புடவை முந்தானை அவன் முகத்தில் மோத அவளுடன் இணைந்து நடக்கையில் அவன் மனம் மிக லேசானது. எங்கிருந்தோ உல்லாசம் மிதந்து வந்துஅவனுள் குடி புகுந்து கொள்ள ஆனந்தமானான். வழக்கமான சீழ்க்கை யொலி அவன் உதடுகளில் ஒலிக்க இருகைகளையும் பேன்ட் பாக்கெட்டில் விட்டவாறு நடந்தான். காவ்யா அவனை அள்ளி விழுங்கி விடுவதுபோல் பார்க்க அதைக் கவனித்தவன் சீழ்கையை நிறுத்தாமல் புருவத்தை 'என்ன' என்பதாக உயர்த்தினான்.

''இப்போதுதான் நான் முதன்முதலில் உங்களைப் பார்த்தபோது எப்படி இருந்தீங்களோ அப்படியிருக்கீங்க,'' என்றாள் காவ்யா.

''என்னை முதன் முதலாய் பார்த்தபோது என்ன நினைத்தாய்?'' என்று சீழ்க்கையிலே அவன் பாடலாகப் பாட,

''நான் உன்னை நினைத்தேன்,'' என்று பதிலுக்கு இனிய குரலில் வாய்விட்டுப் பாடியவள் புன்னகையோடு

மணலில் அமர்ந்தாள். அவளருகே மணலில் வானம் பார்த்தபடி அண்ணாந்து கைகளை தலையணை போல் கொடுத்து படுத்த அசோகன்,

“காவ்யா..” என்று மென்மையாக அழைத்தான்.

அவள், “ம்ம்ம்” என்றபடி அவனைப் பார்த்தாள்.

“சென்னையில்தான் இருக்கிறேன். இந்தக் கோவிலுக்கு வந்ததில்லை. வெண்மையான கடைசலுடன் எவ்வளவு அழகான பளிங்குக்கோவில்? நீ இந்தக் கோவிலுக்கு அடிக்கடி வருவாயா?” என்று கேட்டான்.

“இங்கே படித்த மூன்று வருடங்களும் வெள்ளிக்கிழமையானால் என் தோழி ஹரிதாவுடன் வந்துவிடுவேன். மகாலட்சுமி என் இஷ்ட தெய்வம்.”

“அப்போ நமக்கு பெண் பிறந்தால் மகாலட்சுமின்னு பேர் வைத்து விடலாம்.”

குழந்தையின் பேச்சை எடுத்ததும் பேச முடியாமல் சங்கோஜப்பட்டவள், தலைகுனிந்து கொண்டு மணலில் கோலம் போட்டாள். அவளையே ஒருக்களித்து மணலில் படுத்துக்கொண்டு கைகளை தலைக்கு முட்டுக் கொடுத்தவாறு பார்த்துக் கொண்டு இருந்தவன், “மணலில் என்ன எழுதுகிறாய் காவ்யா?” என்று கேட்டான்.

“ஒன்றுமில்லை,” என்று கிசுகிசுப்பாக பதில் சொன்னாள்.

“ஒன்றுமே..யில்லையா?” என்று கிறங்கிய குரலில் வினவினான்.

பதிலுக்கு அவள் மோகனமாய் நகைத்தாள். அந்த நகைப்பில் மயங்கியவன் தாபத்தோடு எழுந்து அவள்

விரல்களைப் பற்றினான். மன்மதன் கரும்பு வில்லை யெடுத்து அதில் மலரம்பைப் பூட்டி நாணேற்றி அந்த இருவரையும் குறி பார்த்தான். அவன் விடுத்த அம்பு குறி தவறாமல் அந்த இருவரையும் தாக்கி மலர் வளையத்தில் சிக்கிக் கொள்ள வைத்தது. காலம் அப்படியே நகர்ந்திருந் தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் காவ்யாவோடு சிறிது விளையாடிப் பார்க்க ஆசைப்பட்ட காலம் கலகல வென நகைத்தது ஹரிதாவின் உருவத்தில்.

‘‘காவ்யா’’ என்ற ஆரவாரமான குரல் கேட்டு கணவ னிடமிருந்து விலகி அமர்ந்த காவ்யா திரும்பிப் பார்த்தாள். பார்த்தவள் ‘‘ஹரிதா,’’ என்றாள் ஆனந்தக் கூச்சலாய், ஓடி வந்து அவள் கழுத்தைக் கட்டிக் கொண்ட ஹரிதாவிற்கு மூச்சு இரைத்தது.

‘‘காவ்யா நீ தானேடி. நீயேதானடி. என்னால் நம்பவே முடியலை.’’

‘‘ஏண்டி நம்ப முடியாமல் போகிற அளவுக்கு அடை யாளம் தெரியாமல் நான் மாறிவிட்டேனா? என்று சிரித்த படி ஹரிதாவின் கையைப் பிடித்து இழுத்து அருகில் அமர வைத்தாள்.

‘‘ரிசல்ட் வந்துவிட்டது காவ்யா. நீ தான் காலேஜ் பர்ஸ்ட். யுனிவர்சிட்டி ரேங்க் வாங்கியிருக்கடி. நீ சர்டிபி கேட் வாங்கக் கூட வரவில்லைன்னு காலேஜில் சொன் னாங்க. அதனால் உன்னைப் பார்க்க திருநெல்வேலிக்கு உன் வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கே உங்க அப்பா வும், அண்ணாவும் ஆயிரம் கதை சொன்னாங்க,’’ என்று மூச்சு விடாமல் ஹரிதா பேசிக் கொண்டே போக, ‘திரு

நெல்வேலி' என்ற பெயரைக் கேட்டதும் முகம் சுருங்கி விட்ட அசோகன் சட்டென்று எழுந்து மணலை தட்டி விட்டுவிட்டு கடலோரம் சென்று நடக்க ஆரம்பித் தான்.

''காவ்யா.. அவர்தானே உன் ஹஸ்பெண்ட்? வெரி ஹேண்ட்சம்டி.'' என்று ஹரிதா கூற,

''அவர் என் ஹஸ்பெண்ட்தான் என்பதை எப்படிக் கண்டுபிடித்தாய்?'' என்று காவ்யா குறும்பாகக் கேட் டாள்.

''ஆ..ஆ... நான் பின்னாலிருந்து வரும்போதே உங்க ரெண்டு பேரோட ரொமான்ஸைப் பார்த்துட்டேன் மேடம். அம்மா பாட்டு பாடறாங்க ஐயா சைட் அடிக்கிறாரு..''

''அப்புறம் ஏண்டி பூஜை வேளைக்கரடியாய் குறுக்கே வந்தாய்?''

''கொஞ்ச நேரம் கழித்து வரலாம்ன்னு நினைத்தால் நேரமில்லையே. இன்னும் ஒரு மணி நேரம் தான் டைம். அப்பா வந்து விடுவார் பெங்களூருக்குப் போகணும்.''

''சும்மா உன்னோடு வம்பிழுக்க சொன்னேன்டி. நாங்க வீட்டில் போய் கொஞ்சிக்குவோம். என் ஆசை ஹரிதா வோடு பேசுவதை விட வேறு முக்கியமான வேலை எனக்கு இப்போது இல்லை. சொல்லு நீ எப்படி இருக்கே? எவ்வளவு மார்க் வாங்கின? மேலே என்ன படிக்கப் போகிற?''

''அதையேன் கேட்கிற? என் ஐடியா இப்போது மாறி விட்டது..'' என்று கூறிய ஹரிதாவின் முகம் குங்குமமாய் சிவக்க,

‘‘வாரே... வாஹ்.. கடைசியில் அப்படிப் போகிறதா கதை? கள்ளி! யாரடி இந்தக் கள்ளியின் உள்ளம் கவர்ந்த கள்வன்?’’ என்று காவ்யா கேட்டாள்.

‘‘அவர் பெயர் முகேஷ். பாம்பேயில் பெரிய பிஸினஸ் மேன். அப்பாவின் நண்பரின் மகன். படிக்கணுமா.. எவ்வளவு வேண்டுமானாலும் படி. என்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு பாம்பே வந்து படின்னார். நானும் ஒகே சொல்லிட்டேன். அதற்காகத்தாண்டி... என் கல்யாண இன்விடேசனை உனக்கும் உன் வீட்டிற்கும் கொடுக்க திருநெல்வேலி போனேன். நீயில்லை. உன் அம்மா நீ காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு சொன்னாங்க. உன் அப்பாவும், அண்ணாவும் உன் கணவரைப் பற்றி ரொம்பப் பெருமையா பேசினார்கள்..’’

பேசிக் கொண்டிருந்தவளை அவசரமாய் இடைமறித் தாள் காவ்யா.

‘‘என்னடி... என்னடி சொன்னே.. அப்பாவும் அண்ண னும் என் ஹஸ்பெண்டை பத்திப் பெருமையா பேசினாங் களா உண்மையாத்தான் சொல்கிறாயா?’’

‘‘நம்பமுடியவில்லைதானே. அம்மா எல்லாம் சொன்னாங்க காவ்யா. நீ தனியா ஊருக்கு கிளம்பியதில் ஆரம்பித்து இன்றுவரை என்ன நடந்ததுன்னு சொன் னாங்க. நாணயத்திற்கு இருபக்கம் காவ்யா. அப்பாவோட பக்கம் என்னன்னா எப்படி அசோகன் கொலை குற்ற வாளியில்லையென்பதற்கு நீ சாட்சியோ அதுபோல் நீ சுத்தமானவள் என்பதற்கு அசோகன் மட்டுமே சாட்சி என்பதுதான். அசோகன் நல்லவர், நேர்மையானவர்ன்னு

அப்பா நம்பினார். நம்புகிறார். அதனால் உன்னைக் காப்பாற்றும் கடமையை அசோகனுக்கு உருவாக்கினார். அவர் கணக்குத் தப்பவில்லை. அசோகன் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டார். காவ்யா ஆனந்தனண்ணா சொல்கிறார் உன் கணவர் தொழிலில் கெட்டிக்காரராம். பணக்காரர் என்ற பந்தா கிடையாதாம். அம்மா சொல் றாங்க 'எங்க காவ்யா மகாராணி போல் வாழறாள்'ன்னு. 'இவ்வளவு பாசத்தை வைத்துக் கொண்டு ஏன் ஒதுங்கி இருக்கிறீர்கள்'ன்னு நான் கேட்டேன். காலம் வரும். காவ்யாவின் கணவருக்கு எங்கள் மேல் உள்ள கோபம் குறையும். அதுவரை தள்ளியிருந்து எங்கள் வீட்டுப் பெண் வாழ்வதை பார்க்கிறோம்ன்னு சொல்றாங்க,'' ஹரிதா சொல்லச் சொல்ல காவ்யாவின் கண்ணீர் பெருகியது. இழந்த சொந்தம் என்று நினைத்து நிலைத்த சொந்தம் என்று ஆனதை அறிந்த ஆனந்தக் கண்ணீரா? இல்லை கொடுமைக்காரனாக தன்னை காட்டிக் கொண்டு மகளைத் தியாகம் செய்த தந்தை செய்த தியாகத்தை எண்ணியதால் வந்த கண்ணீரா? சொல்லத் தெரிய வில்லை காவ்யாவிற்கு.

கடலோரம் சென்ற அசோகன் திரும்பி வந்தான். காவ்யாவின் கண்ணீர் கண்டதும் அவன் புருவங்கள் உயர்ந்தன. ஹரிதாவின் பக்கம் கோபமாய் திரும்பி,

''ஹலோ. நீங்கள் திருநெல்வேலி போய் வந்தால் உங்கள் மனதோடு அங்கே நடந்தவைகளை வைத்துக் கொள்ள மாட்டீர்களா? அந்த ராட்சஷர்கள் திட்டினதை அப்படியே இங்கே வந்து கொட்ட வேண்டுமா?'' என்று பொரிந்தவன் காவ்யாவின் பக்கம் திரும்பி, ''உன்

அண்ணன், அப்பா பேச்சை இப்படியே கடலோ விட்டு விட்டு வருவதானால் என் கூட வா. இல்லையென்றால் இங்கேயே உட்கார்ந்து அழு,'' என்றபடி காரை நோக்கி நடக்கலானான்.

அவனது கோபத்தை வாய் பிளக்க பார்த்து நின்ற ஹரிதா,

''ஹலோ மாப்பிள்ளை சார். நீங்க என்ன எங்க காவ்யாவை அம்போன்னு விட்டுவிட்டுப் போகலாம்னு பார்த்தீங்களா? அது ஒன்னும் அவ்வளவு ஈஸியில்லை சார். காலேஜில் படிக்கும்போது வினோத்துன்னு ஒரு பணக்கார ஹீரோ சுற்றி சுற்றி வந்தான். அவனைத் திரும்பிக் கூட பார்க்காதவள் உங்க பின்னால் நாய்குட்டி மாதிரி ஓடி வருகிறாள். எல்லாம் தாலிக்கயிறு செய்த மாயம். ம்ம். ஜமாயுங்க. நீங்க உங்கள் பெண்டாட்டியை கூட்டிக்கொண்டு போங்க சார். என்னைக் கூட்டிக் கொண்டு போக என் அப்பா வந்துவிட்டார். என் கல் யாணத்திற்கு என் பிரண்டை கூட்டிக் கொண்டு வரமாட்டேன்னு சொல்லிடாதீங்க சார். கருணை காட் டுங்கள்,'' என்றவள் 'களுக்'கென்று சிரித்தபடி காவ்யா வின் காதில் ''சூப்பர் ஹீரோவை பிடிச்சிருக்கடி. பெண் டாட்டி கண்ணில் கண்ணீரைப் பார்த்தால் என்னமா கோபம் வருது. ம்ம். என் முகேஷ் இந்த அளவுக்கு இருக் கணும்,'' என்று கூறி விட்டுக் கையாட்டிக் கொண்டே காத்திருந்த காரில் போய் ஏறிக் கொண்டாள்.

ஹரிதா சென்றபின் மௌனம் ஒரு போர்வையாய் காவ்யாவையும் அசோகனையும் சுற்றிக் கொள்ள

ஆளுக்கொரு நினைவுடன் அவர்களது காரை நோக்கிச் சென்றார்கள்.

## 21

துள்ளித் திரிந்தது ஒரு காலம்

அன்னை மடியில் துயின்றது ஒருகாலம்,

பள்ளி பயின்றது ஒருகாலம்

தந்தை மனதை அறிந்தது ஒருகாலம்

வழி தேடியது ஒருகாலம்

அண்ணன் வலியை புரிந்தது ஒருகாலம்

காலங்களாலே அவள் வாழ்வு மாறுவதற்கு

நிலவே நீ சாட்சி.

வீட்டு வாசலில் இறக்கிவிட்ட அசோகன் போய் வருகிறேனென்று கூடச் சொல்லாமல் காரை கிளப்பிக் கொண்டு போக முயல காவ்யா தடுத்தாள்.

''கோவிலுக்கு போய் வந்தால் வீட்டில் ஒரு நிமிச மாவது உட்கார்ந்து விட்டுப் போகணும்.''

தோளைக் குலுக்கினாலும் அவள் பேச்சை அலட்சியம் செய்யாமல் அவளைத் தொடர்ந்து வந்து ஹாலில் அமர்ந்தான் அவன். மின்விசிறியை சுழலவிட்டுவிட்டு சென்று பிரிட்ஜில் இருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து வந்து தந்தாள் காவ்யா. வியப்பான பார்வையுடன் வாங்கிப்

பருகினான். குளிர்ச்சியான தண்ணீர் தொண்டையில் இறங்கி தாகம் தணித்தது.

"வெளியே போய்விட்டு வந்தால் நாக்கு வரளும். தண்ணீர் தாகம்ன்னு தெரியாது. இப்போ நீ கொடுக்கவும் ரொம்ப ரிலிஃபா இருக்கு. இந்த பழக்கெல்லாம் எப்படி பழகினே?"

"இது என்ன கேள்வி? விவரம் தெரிந்த வயதிலிருந்து அம்மா சொல்லிக் கொடுத்ததுதான்."

"ஸோ. எங்கேயிருந்தாலும்.. யார் உன்னை என்ன செய்தாலும் பிறந்த வீட்டை மறக்கமாட்ட?"

காவ்யா எதையோ சொல்ல வாயெடுக்க அதைக் கவனிக்காதவன் போல் அவன் விருட்டென்று எழுந்து வெளியே சென்று விட்டான். ஸ்தம்பித்துவிட்ட காவ்யா பயந்துவிட்டாள். எப்படி அவனுக்குப் புரியவைப்பது? என்னவென்று சொல்வது..? பெற்றவரும், உடன்பிறந்தவனும் நமது நலம் விரும்பிகள் என்று சொல்ல வாய்வரை வரும் வார்த்தைகளை எப்படி வெளியில் உதிர்ப்பது? வழி தெரியாமல் தவித்தாள். 'காலம் வரும் என்று அப்பா சொன்னாராமே... என்று அந்தக் காலம் வரும்?' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள்.

"இருட்டிவிட்டது விளக்கைக் கூடப் போடாமல் என்ன பெருமூச்சு? பொழுது சாயும் நேரத்தில் வீட்டில் வாழ வந்த பெண் விளக்கைப் போடாமல் ஏக்கப் பெருமூச்சு விட வேண்டுமென்று தான் உன் அம்மா சொல்லி வளர்த்தார்களா?" என்ற குத்தல் மொழிகளைத் தொடர்ந்து அறையில் விளக்கு எரிந்தது. அசோகன் நின்று கொண்

டிருந்தான் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த காவ்யா விற்கு அவன் தன் அம்மாவை இழுத்தது கோபத்தை உண்டு பண்ணியது. இருந்தாலும் இயல்பான பொறுமை யுடன் காபி போட சமையலறைக்குச் சென்றாள். பின் னோடு வந்தவன்,

''புருசன் கேட்டால் சட்டை செய்யாமல் போகணு மின்னு யார் சொல்லி வளர்த்தார்கள்? உன் அப்பாவும், அண்ணனுமா?'' என்றான்.

காவ்யா திரும்பி முறைத்தாள். மீண்டும் மௌனமாகி வேலையைத் தொடர்ந்தாள். சூடான காபியை கோப் பையில் ஊற்றி அவனிடம் நீட்ட எரிச்சலுடன் அவளை நோக்கியபடி வாங்கிப் பருகியவன் அப்படியே சமையல் மேடையில் வைத்துவிட்டு,

''கோபம் வந்தால் நேரே பேசி விடுவது என் வழக்கம். ஆனால் பிடிக்காத புருசனுக்கு கொதிக்கற காபியைக் கொடுக்கிறதுதான் உன் குடும்ப வழக்கமா?'' என்று கேட்டான். இப்போது காவ்யா வெகுண்டாள்.

''என் குடும்பத்தைப் பற்றி இன்று அதிகம் பேசு கிறீர்கள். பிடிக்காத மனைவின்னு அபாண்டமாய் பேசி துன்புறுத்துவது உங்கள் வழக்கமாக இருக்கலாம். எனக்கு அந்த வழக்கம் இல்லை.''

''இப்போது சொன்னாயே இது மிகச்சரி. அப்பேர்ப்பட்ட உன் அப்பாவுடனே உன் அம்மா குடும்பம் நடத்தி முப்பது வருடங்களாய் குப்பை கொட்டியிருக்கும் போது.. நீ வெற்றிகரமாய் குடும்பம் நடத்தி விடுவாய்... ஒரு

விசயத்தை ஒத்துக் கொண்டதற்கு என் மனப்பூர்வமான நன்றி.''

''எதற்கு என்று நான் கேட்காவிட்டால் நீங்கள் அதற்கும் ஏதாவது சொல்லி விடுவீர்கள். இன்று என்னிடம் குற்றம் கண்டுபிடிப்பதுதான் உங்கள் குறிக்கோளாக இருக்கிறது. எனவே கேட்டு விடுகிறேன்.. எதற்கு?''

''அதுதான். என்னைப் பிடிக்காத புருசனென்று ஒத்துக் கொண்டதற்கு.''

அசோகன் அவிழ்த்துப் போட்ட ஷூவில் காலை நுழைத்துக் கொண்டு வெளியேறி மாடிப்படி இறங்கிப் போய்விட்டான். காவ்யா ஓடிச்சென்று பால்கனியில் நின்று எட்டிப் பார்த்தாள். அவன் தனது இரு சக்கர வாகனத்தை கிளப்பிக் கொண்டு புயல் வேகத்தில் போவது தெரிந்தது. காவ்யாவிற்கு அழுகை ஆரம்பித்தது. இன்று எப்பேர்ப்பட்ட நாள்...? புது வீடு பால்காய்ச்சி குடித்தனம் வந்திருக்கிறார்கள். அத்தோடு... காலையில் வீடு வந்திருந்த உறவினர் சென்றபின் நேர்ந்த அற்புத அனுபவம்... இன்று போய் இப்படியா இருமனமும் விரிசல் காண வேண்டும். பெருமாளே! இது என்ன சோதனை தாங்க முடியாத வேதனை. பெற்றவர்களின் பேச்சை அவள் எடுக்கவே இல்லையே. அப்பா தெரிந்து தான் சொல்லியிருக்கிறார். காலம்தான் அசோகனின் காயத்தை ஆற்றும் என்று. காத்திருக்கலாம் என்றுதானே அவளும் நினைத்தாள். இப்படித் தண்டிக்கிறானே. ஆனால் காவ்யா அறியமாட்டாள். அசோகனின் சினத்திற்குக் காரணம் தன் பெற்றோர் பற்றிய பேச்சை ஹரிதா பேசியது

அல்ல... 'வினோத்' என்றவனைப் பற்றி ஹரிதா பேசிய பேச்சுத்தான் அவனது கோபத்தை தூண்டிவிட்டிருக்கிறது என்பதை.

அசோகன் நல்லவன். மிகமிக நல்லவன். அதே சமயம் பிடிவாதக்காரன். கோபக்காரன். அவனுடையது என்பது உயிரற்ற வீடு, வயல், சொத்து, பணமாகத்தான் இதுவரை இருந்தது. இளமையில் பெற்றோரை இழந்தவனுக்கு கிடைத்த நட்புக்கள் அவன் வாழ்வை இதமாக்கியிருக் கலாம். ஆனால் சோலையாக்கவில்லை. தனக்கென்று சொந்தமென்று உயிரோடு உள்ள உறவாய் அமையக் கொடுத்து வைக்காதவனின் வாழ்வில் பாலைவனச் சோலையாய் காவ்யா வந்தாள். அவளுக்கு எதுவுமில்லை யென்ற பரிதாபம் தோன்றி அவளைக் காக்கும் பொறுப்பை ஏற்றவனுக்கு தனக்குத்தான் எதுவுமில்லை, தன்னைப் போற்றிக் காக்கும் சொந்தமாய், உறவாய், உயிராய், வாழ்க்கையாய் அவள் வந்திருக்கிறாள் என்பது பிடிபட்ட போது அவள் மேலிருந்த அன்பு, காதலாகி, காதல் அவள் தனக்கு மட்டும் சொந்தமென்று கொண்டாடும் உரிமை யாகி அவளை சிறைவைத்தது. இன்று அவளுக்கு இவ்வளவு நடந்தும் பெற்றவர், உடன்பிறந்தவன் மேலி ருக்கும் பாசம் போகவில்லையென்பது மனத்தாங்கலா யிருக்கும்போது அவளை தனக்கு முன்னால் ஒருவன் விரும்பியிருக்கிறான், அதை அவளிடம் தெரிவித்தும் இருக்கிறான் என்பதை தாங்கிக் கொள்ள முடியவில்லை. தன் காவ்யாவை ஒருவன் நினைத்ததாவது... என்ற கோபம் தலைக்கேற அந்தக் கோபம் ஹரிதா 'வினோத்' என்பவனைப் பற்றிப் பேசும்போது கடிந்து கொள்ளாத

காவ்யாவின் பக்கம் திரும்பியது. மனதிலிருப்பதை வெளிக்காட்ட முடியாமல் அவளைப் புண்படப் பேசினான். அவளோடு வேண்டும் என்றே சண்டை வளர்த்தான்.

இரவு வெகுநேரம் வரை அசோகன் திரும்பவில்லை. காவ்யா சாப்பிடாமல் காத்திருந்தாள். கணவன் வந்தவுடன் உணவு பரிமாறினாள். அவன் மௌனமாகச் சாப்பிட்டு அவளோடு ஓர் வார்த்தை கூடப் பேசாமல் சென்று படுத்துவிட்டான். அவனது விலகலைக் கண்டும் மனம் நொந்தவள் அமைதியின்றி தானும் உறங்கச் சென்றாள்.

அடுத்தடுத்த தினங்களில் இருவரிடையேயும் 'மௌன ராகம்' கொடிகட்டிப் பறந்தது. அவசியமற்ற வார்த்தைகள் பேசாமல் 'தாமரையிலைத் தண்ணீர்' போல் ஒருவருக் கொருவர் ஒட்டாமல் வாழ்க்கையை நடத்தினர்.

திருமணமான முதல் இரவில் அவள் ஒரு மாதகால அவகாசம் கேட்டதற்கு இப்போது புதுவிளக்கம் கண்டு பிடித்தான் அசோகன். வினோத்தை மறந்து தன்னை அவள் மனம் ஏற்கவே ஒருமாதகால அவகாசம் கேட்டாள் என்று நம்பினான்.

கணவனே ஆனாலும் சுயமரியாதையை விட்டுவிட்டு எப்படி வாழ்வது? என்ற மனக்குமைச்சல் காவ்யாவிற்கு. நெருங்கி, நெருங்கி அவள் போனாலும் அவன் விலகி விலகிப் போவது போல் தோன்ற அவளது இயல்பான சங்கோஜ சுபாவத்தால் அவளும் தனக்குள் ஒரு வட்டம் போட்டுக் கொண்டு சுருங்கிவிட்டாள்.

அவனது தேவைகளை கவனிப்பதில் ஒரு குறையும் வைப்பதில்லை காவ்யா. அவனுக்கான துணிகளை

கடைகளுக்குப் போய் அவள்தான் வாங்கி வருகிறாள். அவை அவனுக்கு மிகப் பொருத்தமாகவும் அழகாகவும் இருக்கும். அவன் குளித்து வருமுன்னர் அவன் அன்று உடுத்தவேண்டிய உடைகளை பொருத்தமானதாக எடுத்து வைத்துவிடுவாள். ஷூ பாலிஷ் போடப்பட்டு அன்றன்று துவைக்கப்பட்ட சாக்ஸோடு தயாராக இருக்கும். தோற்றத்தில் அக்கறைகாட்டாதவனை ஜாடை பேசி தினந்தோறும் ஷேவ் செய்ய வைத்தாள். மதிய உணவிற்கு அவன் வராவிட்டால் அவள் சாப்பிட மாட்டாளென்பதை அறிந்த வைத்திருந்தவன் ஒழுங்காக வந்து சாப்பிட்டுச் செல்லுமாறு அவனை வழக்கப்படுத்தி யிருந்தாள். இதமான நேரங்களும் இடையில் வந்து போகாமல் இல்லை.

அன்று அப்படித்தான் குளித்துவிட்டு வந்தவனுக்கு உடைகள் தயாராய் எடுத்து வைக்கப்பட்டிருக்க லேசான மனத்தோடு அவற்றை எடுத்துப் பார்த்தான். கிரிம்கலர் பேண்ட். மெரூன் கலர் சர்ட். புன்முறுவலோடு அணிந்து கிளம்பத் தயாராகி வாசல் கதவைத் திறக்கப் போனவன், "ச்சை," என்று அழுத்துக் கொண்டான். சட்டையின் பட்டன் ஒன்று அறுந்து விழுந்திருந்தது. இனி சட்டை தேடி எடுத்து மாற்ற வேண்டும் என்று சலித்தபடி அவன் ஷூவை அவிழ்க்க முனையும் போது "ஒரு நிமிசம்!" என்ற படி காவ்யா அருகில் வந்தாள். கையில் ஊசி, நூல் வைத்திருந்தாள். அறுந்து விழுந்திருந்த பட்டனை எடுத்து அவன் சட்டையில் வைத்து வினாடியில் தைத்து முடித்துவிட்டாள். அவள் நெருங்கி விலகியபோது வந்த முல்லை மலரின் வாசம் அவனை சொர்க்கத்திற்கு அழைத்துச்

செல்ல மனம் மயங்கியவன் கிறக்கமாய் "போய் வரவா?'3 என்றான். மலரெனும் சிரிப்போடு அவள் தலை அசைத் தாள். பிரிய மனமில்லாமல் பிரிந்து சென்று தன் வண் டியை எடுத்தவன் மனம் வேதனைப்பட்டது. அந்த வினோத் கடன்காரனுக்கு சைட் அடிக்க வேறு பெண் கிடைக்கவில்லையா? அவனுக்கு காவ்யாதான் கிடைத் தாளா என்று பொறுமியபடி வண்டியை எடுத்தவன் எதிரே சிரித்த முகமாய் வந்த மெஸ் மாமியை கவனிக்காமல் போய் விட்டான். அசோகனின் குழப்பமான நிலைமையை நொடியில் கணித்த மெஸ் மாமி யோசனையுடன் மாடி யேறினாள். காலிங்பெல்லை அழுத்தவும் கதவைத் திறந்த காவ்யாவைக் கண்டதும், "என்னடி மாட்டுப் பெண்ணே! என்ன பண்ணின்டு இருக்கே" என்று கேட்டபடி உள்ளே போனாள்.

"வாங்க மாமி உட்காருங்க," என்று காவ்யா சிரித்தபடி உபசரித்துவிட்டு எதிரேயிருந்த சோபாவில் அமர,

"இன்னைக்கு மெஸ்ஸில் காலை வேலையெல்லாம் சீக்கிரம் முடிஞ்சிடுத்து. உன்னை ஒரு எட்டுப் பார்த்துட்டு போகலாமேன்னு வந்தேன். சித்த நாழி உன்கிட்ட பேசிக் கிட்டு இருந்தாத் தேவலை. சமையல் வேலை ஏதும் இருக்கோ" என்றாள் மாமி.

"இன்னும் ஒன் அவர் கழித்து ஆரம்பித்தால் போதும் மாமி. நீங்க சொல்லுங்க."

"பிள்ளையாண்டன் முகத்தில் சுரத்தேயில்லாம நான் வர்றதைக் கூடக் கவனிக்காம வண்டியை எடுத்துட்டுப் போறான். எதித்தாப்புல பார்த்திட்டுத்தாண்டி வரேன்.

கொஞ்ச நாளா நானும் பார்க்கிறேன் அசோகன் எதையோ மனசில போட்டுக் குழப்பிக்கிட்டு இருக்காப்புல இருக்கே. என்னடி விசயம். ஆம்படையானை நன்னா கவனிக்கிறயா இல்லை அம்போன்னு அவன் பாட்டுக்கு போக வர இருக்கட்டும்ன்னு விட்டுட்டியா?''

''ஐயோ என்ன மாமி இப்படிப் பேசுறீங்க. நானாவது அவரைக் கண்டுகொள்ளாமல் இருப்பதாவது. அவர் ஏதோ நினைவில் உங்களைக் கவனிக்காமல் போனால் என்மேல் பழியா?'' என்று மழுப்பலாய் சிரித்தாள் காவ்யா.

''யாருகிட்டடி மாட்டுப் பொண்ணே காதுகுத்தறே. நான் உன்னை மாதிரி பொம்மனாட்டிகளை தெரிந்தவ தாண்டி. என் புத்திக்கு சந்தேகம் வந்தா ஏதோ நடந்திருக் காம இருக்காது. சொல்லு. அசோகன் தினமும் ராத்திரிக்கு எத்தனை மணிக்கு வர்றான்.''

''அது தினமும் லேட்டாத்தான்... ஒரு பத்தரை பதினொரு மணிக்குத்தான் வருகிறார்.''

''ஏண்டிம்மா. நீயென்ன பல்லுப் போன கிழவியா? வயசா போயிடுத்து? புதுசா கல்யாணமானவ ஒரு சினிமா, பீச்சுன்னு போவாள்ன்னு கண்டோம். அதுவுமில்லைன்னா நாள் கிழமைன்னா கோவிலுக்காவது போவாள்ன்னு பார்த்தா இங்கே அதுவுமில்லையே. ஏண்டிம்மா. தெரி யாமல்தான் கேட்கிறேன். பொம்மனாட்டி பாட்டுக்கு ஆத்துக்குள்ளே அடுக்களையே கதின்னு கிடக்க, ஆம் படையான் ராத்தூங்க மட்டும் வீட்டுக்கு வந்தால் கேட்க நன்னாவே இல்லைடி. இதுதான் நீ குடித்தனம் பண்ற லட்சணமா?''

“அவருக்கு வேலை அதிகம். மாமி. அதனால்தான் லேட்டா வர்றார்.”

“அப்படின்னு நீ சொன்னா நான் நம்பிடணுமா? எங்கானும் ஷாப்பிங் போகணுமின்னா என்னோட பிராணனை வாங்கி தொணைக்கு அழைச்சுண்டு போற. அந்த ஷாப்பிங்கை ஆத்துக்காரனோடு போய் முடிக்கக் கூடாதோ.”

எப்படிப் போக என்று காவ்யாவிற்கு ஆற்றாமையாய் வந்தது. சுயமரியாதையை விட்டுவிட்டு, அவனிடம் எப்படிக் காதலை யாசிப்பது? அவளது மனதைப் படித்தவள் போல,

“ஆம்படையான்கிட்ட என்னடி சுயமரியாதை வேண் டிக்கிடக்கு?” என்றாள் மாமி. மெஸ் மாமி அதை மட்டுமா கூறினாள். குருஷேத்திர யுத்தத்தில் படைக் கருவிகளை தூக்கி எறிந்த பார்த்தனுக்கு சாரதியாய் கீதையை உப தேசம் செய்த பார்த்தசாரதி போல் காவ்யாவுக்கு உபதேசம் செய்து வழிகாட்டினாள். கண்ணனின் உரையைக் கேட்டு காண்டிபம் எடுத்த அர்ஜுனன் போல் மாமியின் உரையைக் கேட்டு போர்க்கொடி தூக்கினாள் காவ்யா. அன்று இரவு வீடு திரும்பிய அசோகனிடம் போர் முரசு கொட்டினாள். இருவருக்கும் இடையே மூண்ட வார்த்தை யுத்தத்தில் அவளும் வென்றாள். அவனும் வென்றான். அவர்களுடைய காதலும் வென்றது.

## 22

**நிலவின்றி வானில்லை, நீரின்றி உலகில்லை**
**மலரின்றி தேனில்லை,**
**மனதின்றி காதலில்லை**
**அன்பே நீ கொடி முல்லை,**
**நீயின்றி நானில்லை**
**உயிரின்றி ஊனில்லை,**
**நானின்றி நீயில்லை.**
**ஈருடல் அங்கே ஓருயிர் ஆனதற்கு**
**நிலவே நீ சாட்சி.**

மனதில் நினைத்ததை மெஸ்மாமி அப்படியே சொல்லி விட காவ்யா திகைத்தாள். 'இவளென்ன யட்சினியா? மனதில் நினைத்ததை மனதில் புகுந்து பார்த்தது போல் அப்படியே சொல்கிறாளே' என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கையில்,

''என்னடி திகைச்சுப் போயிட்ட. என்னடா மாமி மனசில் நினைச்சதைக் கண்டு பிடிச்சிட்டாள்னா.. நானும் உன் வயசைத்தாண்டி வந்தவ தாண்டிக் கொழந்தே! பொம்மனாட்டி வீம்பு எனக்குத் தெரியாதா? ஆனா மாட்டுப் பொண்ணே! நீயொன்னை மறந்திட்ட. பொம்ம னாட்டி வீம்பு பிடிச்சா ஆம்படையான் என்ன நினைப்பான். அவளுக்கு நம்மை பிடிக்கலைன்னு நினைச்சிர மாட் டானாடி.''

"என்ன மாமி இப்படிச் சொல்றீங்க. அவரைப் பிடிக் காமலா கல்யாணம் செய்துக்கிட்டேன்? எவ்வளவு கம்பீர மானவர் அவர். அந்த உயரமும், செதுக்கிய முகமும், சிறுமை கண்டு பொங்கும் கோபமும் அவரோடு சேர்ந்து நடந்துபோனால் எனக்குச் சிலிர்த்துப்போகும் மாமி. இவ ருக்கு மனைவியா வர நாம் என்ன புண்ணியம் செய் திருக்கோமோன்னு தோணும் மாமி."

"அடித்தங்கமே!"என்று அவள் கன்னத்தைக் கிள்ளி னாள் மாமி.

"இவ்வளவு ஆசையை உன் ஆம்படையான் மேல வைச்சிருக்கியே. இதில ஒரு துளியையாவது அவன்கிட்ட சொல்லப்படாதோ. புருசன் பொண்டாட்டிக்குள்ளே ஊடல் வரலாம்டி ஆனால் அதை முளைக்கும்போதே கிள்ளி எறிஞ்சுடணும். இல்லை அது வேர் விட்டு மரம் ஆகிருச்சுன்னுவை வெட்டுறது கஷ்டம். மாமி சொல் லிட்டேன். கெட்டிக்காரத்தனமாய் பிழைச்சுக்கோ. பாருடி காவ்யா நீ புத்திசாலியா இருந்தால் மட்டும் போதாது. கெட்டிக்காரியாயும் இருக்கணும். முதல்ல உன் ஆம்படை யான் மனசில் என்ன இருக்குன்னு கண்டுபிடித்து சரி பண்ணப்பாரு. சரி. நாழியாயிடுத்து. நான் கிளம்ப றேண்டி."

மெஸ்மாமி போய்விட்டாள். காவ்யா சிந்தனையில் ஆழ்ந்தாள். மதியம் உணவிற்காக அசோகன் வீடு திரும்பியபோது காவ்யா ஒரு முடிவோடு எதிர்கொண் டாள். டைனிங் டேபிளில் அவன் கைகழுவி விட்டு அமர சமையலறையில் நுழைந்தவள், உள்ளே பாத்திரங்களை ஓசையுடன் உருட்டினாள். காத்திருந்த அசோகனின் முன்

சப்தம் எழுப்பியவாறு, 'ணங்'கென்ற ஓசையுடன் பாத்திரங்களை வைத்தாள்.

''எதுக்கு இப்போ பாத்திரங்களை உடைக்கிற? மெல்ல வைக்கத் தெரியாதா?''

''உடைக்கலை சாமி. நான் எதற்கு உங்கள் வீட்டுப் பாத்திரங்களை உடைக்கப் போகிறேன்? நாதியில்லாதவளுக்கு வாழ்க்கை கொடுத்திருக்கீங்கள்ல. அதிகாரம் பண்ணுங்க.''

''என்னடி பேச்சு திசை மாறுது. உன் வீடு, என் வீடுன்னு பேச்செல்லாம் பெரிய பேச்சா வருது. இதில் வாழ்க்கை கொடுத்திருக்கேன்னு வேற சொல்ற. நல்லாயில்லை. சொல்லிட்டேன்.''

''எதுதான் நல்லாயிருக்கு இந்த வீட்டில்?''

''ஆமாடி இந்த வீட்டில் எதுவும் நல்லாயிருக்காதுதான். அந்த வினோத் வீட்டில் எல்லாம் சரியாக இருந்திருக்கும்?''

''எந்த வினோத்?'' என்று புரியாமல் கேட்டவளுக்கு மூளையில் மின்னலடித்தது. இவன் பெற்றவர்கள் மேல் கோபமாய் இருக்கிறான் என்று நினைத்தது தவறாகி விட்டது. கதை இப்படிப் போகிறதா? வெகுண்டு எழுந்து விட்டாள் காவ்யா. அப்படியே அவனது முன்னுச்சி முடியைப் பிடித்து அவன் முகத்தின் நேரே குனிந்து பேசினாள்.

''என்ன சொன்னே? எங்கே என் முகத்தைப் பார்த்துச் சொல்லு. என்னை யாருன்னு நினைச்சே? உன்னை நினைச்சுக்கிட்டு நான் உருகி வழிகிறேன். நீயானால்

மனதில் தோணினதை பேசிட்டேல்ல. இதுக்காகவா உன் கிட்டத் தாலியை வாங்கிக்கிட்டேன்.''

அசோகன் பரிதவித்துப் போய் விட்டான். முதன் முதலாய் அவனை நினைத்து உருகுவதாய் அவள் சொல்கிறாள். ''இல்லை காவ்யா...''

''எது இல்லை? உன் மனதில் அந்த வினோத் மேல் காட்டம் இல்லையா?''

''அது... அந்த ஹரிதா அன்னைக்குச் சொன்னதை வைத்துச் சொல்லிட்டேன் காவ்யா.''

''அவ என்ன சொன்னாள்? அவன் என் பின்னால் சுற்றினான். நான் அவனைத் திரும்பிக் கூட பார்க்கவில்லைன்னு தானே சொன்னாள். யார் மேல் யார் பொறாமைப் படுவது? நீயும் அவனும் ஒன்றா? உன் கால் தூசி பெறுவானா அவன்? அவனை எனக்குப் பிடிக்காதுன்னு சொன்னேனில்லை. ஏன் பிடிக்காதுன்னு தெரியுமா? நாங்க காலேஜில் படித்துக்கிட்டு இருந்தப்போ ஒரு சம்பவம் நடந்தது. எங்க காலேஜில் படிக்கும் ஒரு பெண் பஸ் ஸ்டாப்பில் நின்னுக்கிட்டு இருந்தப்போ அவனும் அவன் நண்பர்களும் ஈவ் டீஸிங் செய்ததில் அந்தப் பெண் ரோட்டில் தடுமாறி விழுந்து பின்னந் தலையில் அடிபட்டு ஸ்பாட்டிலேயே செத்துப் போனாள். இவன் அதைத் தட்டிக் கேட்காதது மட்டுமில்லை. பின்னால் கோர்ட்டில் அவன் நண்பர்களுக்கு ஆதரவா சாட்சி சொன்னான். அவனைப் பார்த்தாலே கொன்னுடணும்னு எனக்கு வெறி வரும். அவன் பெயரைக் கேட்டாலே குமட்டும். உடம்பு பதறும், அருவெறுப்பில் வெறுத்துப்

போய் விடுவேன். அவன் ஒரு ஆண் மகனா? பெண்மையை அவமானப்படுத்துபவன் அவமரியாதை செய்பவன் ஒரு நல்ல தாய்க்கு மகனாக இருக்க முடியுமா?'' அவள் உடல் பதறப் பேச அவள் நிலையையும் ஆவேசத்தையும் கண்டு அவன் பதறிப் போனான்.

''போதும் காவ்யா. போதும் ஏதோ சிறு பிள்ளைத் தனமாய் கேட்டு விட்டேன். விட்டுவிடு.''

''எப்படி விட முடியும். வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோன்னு நீ மனசுக்குள் தோன்றியதைப் பேசுவ. நான் கேட்டுக் கொண்டிருக்கனுமா? இதற்கு என்ன காரணம். நீ ஆண் பிள்ளைங்கிற திமிர்தானே.''

''காவ்யா உன் மனதிற்குப் பிடித்தா என்னைத் திருமணம் செய்தாய்? சூழ்நிலையால்தானே...?''

''எதை வைத்து உன்னை எனக்குப் பிடிக்காதுன்னு சொல்கிறாய்? உன்னை முதன் முதலில் பார்த்தபோதே உன் கம்பீரத்திலும், ரௌத்ரத்திலும் மனதைப் பறி கொடுத்தவள் நான்.''

''ரௌத்ரமா?''

''ஆமாம். ரௌத்ரம்தான். பாரதியார் என்ன சொன்னார் தெரியுமா? 'ரௌத்ரம் பழகு'ன்னு சொன்னார். ரௌத்ரம் ஆண்மைக்கு அழகு. சிறுமைகண்டு பொங்கா விட்டால் அவன் ஆண் மகனேயில்லைன்னு நினைப்பவள் நான். சிறுமையை செய்த வினோத்தை மதிப்பேனா? கண்முன் நடந்த அநியாயத்தை தட்டிக் கேட்காத அவனெல்லாம் ஒரு மனிதப் பிறவியா? நீ தட்டிக் கேட்டாயே. முன் பின் தெரியாத எனக்காக உன் உயிரையும் பொருட்படுத்தாமல்

சுத்தியோடு நின்றிருந்தவன் மேல் பாய்ந்தாயே. எனக்கு சிறுமை வந்துவிடக் கூடாது என்பதற்காக கொலைப் பழியை ஏற்றுக் கொண்டு என் பெயரை போலீஸில் மறைத்தாயே. அதற்குப் பின்னால் என்னைப் பெற்ற வர்கள் கை கழுவி விட்டுப் போனபோது என்னைப் பற்றி எதுவும் விசாரிக்காமல் தாலி கட்டி எனக்கு வாழ்க்கை கொடுத்தாயே. உன்னைப் போன்ற ஒரு மனிதன் என் கணவனாக கிடைக்க நான் ஏழேழு ஜென்மத்திலும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்'' ஆத்திரத்தில் முகம் சிவந்தது காவ்யாவிற்கு.

''மன்னித்து விடு காவ்யா. என்னை மன்னித்து விடு. இந்த உலகமே என்னை நீதாண்டா ராஜான்னு சொல்லி யிருந்தாலும் சந்தோசப்பட்டிருக்க மாட்டேன். உன் மனதில் எனக்கு இவ்வளவு பெரிய இடத்தைக் கொடுத் திருக்கிறாயே. எனக்கு அது போதும் காவ்யா'' அவன் குழந்தையாய் அவள் கைகளில் முகம் புதைத்துக் கொள்ள ஆவேசம் வடிந்து அவள் மெல்ல மெல்ல அமைதி யானாள். அவன் தலையை விரல்களால் அளைந்தபடி,

''போகட்டும் விடுங்க. நீங்க என்னைத் தெரிஞ்சுக் கலைங்கிற கோபத்தில் பேசி விட்டேன். அது சரி நாம் மனது விட்டுப் பேசினால் தானே ஒருத்தரையொருத்தர் தெரிந்திருக்க முடியும். பேசலாம்ன்னு அஷ்டலட்சுமி கோவிலுக்குப் போனோம். அங்கே ஹரிதா வந்திட்டா.''

''சும்மா இல்லைடி. பூஜை வேளை கரடியாய் வந்தாள்.''

அன்றைய நினைவில் அசோகன் கூற காவ்யா முகம் சிவந்தாள்.

“இங்கே பாருங்கள். பெண்கள் தங்களோட கணவனாக வரும் ஆண் மகனிடம் முதலில் என்ன விரும்புவார்கள் தெரியுமா?... பாதுகாப்பை விரும்புவார்கள். நீங்கள் நமது முதல் சந்திப்பிலேயே என்னைப் பாதுகாத்தீர்கள். திரு மணம் என்பதன் அடிப்படையே பெண்ணுக்கு பாதுகாப்பு என்பதுதான். அதைப் புரிந்துக்காமல் நீங்களிருந்தால் எப்படிங்க?”

அசோகன் அவள் விரல்களைப் பற்றி ஒவ்வொன்றாய் சுண்டி இழுத்தவாறு பேசினான்.

“ஏண்டி. இவ்வளவு காதலையும், அன்பையும் என் மேல் வைச்சிருக்கியே. மனுசன் முதலிரவுன்னு எவ்வளவு ஆசையாய் நெருங்கி வந்தேன். அன்றைக்கு நீ எப்படி விலகிப் போனாய்...? சும்மாவும் விலகவில்லை. ஒரு மாதம் டைம் கேட்டு விலகினாய்.”

அவ்வளவுதான். இதைக் கேட்ட காவ்யா பொங்கிப் பொங்கிச் சிரித்தாள். கைகளால் வாயைப் பொத்திக் கொண்டு அடக்க மாட்டாமல் சிரித்தாள். ஊடே, “கட வுளே” என்று கூறித் தலையில் அடித்துக் கொண்டு சிரித் தாள். அசோகன் புரியாமல் பேந்தப் பேந்த விழித்து “என்னடி....?” என்று கேட்டான்.

“என்ன, என்னடி? இந்த வீட்டைக் காலி பண்ணிக் குடுக்க குடியிருந்தவர் எவ்வளவு நாள் டைம் கேட்டிருந் தார்னு சொன்னீங்க.”

“ஏன் ஒரு மாதம் டைம் கேட்டிருந்தார்?”

“அந்த ஒரு மாதம் தானே நானும் டைம் கேட்டேன்.”

"புரியவில்லை காவ்யா. அது ஒரு ரூம் தான் என்பதற் காகவா டைம் கேட்டாய்? அப்படின்னா சின்ன ஸ்டவ் வாங்கி வைத்துச் சமைத்துப் போட நீ தயங்கவில்லையே."

"ம்ம்... மரமண்டை, சமைப்பதும் மற்றதும் ஒன்னா...? பேச்சு மட்டும் வாய் கிழியுது. நானே சொல்கிறேன். அந்த ரூம் எங்கேயிருக்கு?"

"ஏன் மாடிப்படி கிட்ட எடுத்தவுடன் முதலில் அந்த ரூம் தானே..."

"மாடிப்படிக்கு அடியில் என்ன இருக்கு...?"

"ஜெராக்ஸ் அன்ட் எஸ்.டி.டி. பூத் இருக்கு..."

"அது இருபத்தி நாலு மணி நேரமும் வொர்க் பண்ணு கிற பூத்துதானே."

"ஆமாம் காவ்யா. நீயென்ன நம்ம வாழ்க்கைக்கும் கடைக்கும் என்ன சம்பந்தம்."

"அது சரி... ஐயாவோட ரூமுக்கு மரக்கதவா. இல்லை கிரில் கதவா... என்ன கதவுன்னு சொல்லுங்க. சம்பந்தம் இருக்கா இல்லையான்னு நான் சொல்கிறேன்."

"ஏய்ய்" அவனுக்குப் புரிந்து விட்டது. அவன் ரூமின் கதவு சல்லடையாய் பூ வேலை செய்த கிரில் கதவு. அதன் ஓட்டைகள் மூலம் நன்கு உள்ளே பார்க்க முடியும். தனிக்கட்டை. பிரம்மச்சாரி. இரவு தூங்க மட்டும் அறைக்கு வருபவன் கண்ணில் அது ஒரு பெரிய விசய மாகப் பட்டதே இல்லை. அதனால் தான் காவ்யா வந்தவுடன் மிகக் கனமான திரைச்சீலை வாங்கிப் போட்டு மறைத்திருக்கிறாள்.

"புரிந்ததா சார்? குடிசையானாலும் நம்ம வீட்டில் தான் இருக்கணும்னு நீங்க நினைச்சது எனக்கு ரொம்பப் பிடிச்சது. அந்த ரூமிலிருந்து வீட்டிற்கு வர குடியிருந்தவர் கேட்ட ஒரு மாத டைமை நானும் கேட்டேன்."

"நல்ல வேளைடி. அவங்க ஒரு மாதத்தில் காலி பண்ணிட்டாங்க ஒரு வருடம்ன்னு இழுத்திருந்தால் என் கதி என்னாகிறது. ஏண்டி இதை என்கிட்ட முன்னாடியே இது இது... இப்படி இப்படின்னு சொல்லியிருக்கலா மில்ல."

"எது எது எப்படி எப்படின்னு... எப்படி என் வாயால் சொல்லுவதாம்?" காவ்யா நாணத்துடன் வினவினாள்..

அசோகன் ஆமோதிப்பாய் தலை அசைத்தான். முதல் நாளிலேயே இதை எப்படிச் சொல்லவாள். காவ்யா வெட்கமும் மென்மையும் நிறைந்த பெண். புது வீடு போய் பால் காய்ச்சிய அன்று காலையில் அவள் காட்டிய நெருக்கமும்... அதன் பின் நிகழ்ந்ததும்... நினைவுக்கு வர அவன் மூச்சு சூடேறியது. இவன் தான் மடத்தனமாய் இத்தனை நாளும் விலகியிருந்தது... அவன் எண்ண வோட்டத்தை தடுத்து நிறுத்தியது காவ்யாவின் குரல்.

"அப்புறம்... ஐயா மனசுக்குள்ள பெரிய பட்டிமன்றம் நடத்தறாப்புல இருக்கே."

"அதுவா உன் தலையில் ஓங்கி குட்டு வைக்கவா... இல்லை கன்னத்தில்..." என்றவன் செயலில் இறங்க காவ்யா விலகாமல், "இது மதிய நேரம்" என்று முணு முணுத்தாள்.

"ஆமாடி... இனிமே டைம் சொன்னே கொன்னுடு வேன்" என்றவன் ஆவேசமாய் சேர்த்து அணைக்க காவ்யா பேச்சிழந்து இன்ப சாகரத்தில் மூழ்கினாள்.

## 23

அது காதல் மலர்ந்திடும் காலம்
மனச் சிறகுகள் விரிந்திடும் நேரம்
மோகத்தில் அவனிருக்க
சந்தேக மேகத்தில் முகம்மறைத்தவனே
சோகத்தைப் போக்கி பெண் நிலவே
நீ முகம் காட்டியதற்கு
நிலவே நீ சாட்சி.

அர்ச்சகர் வந்து எல்லோரிடமும் இருந்து அர்ச்சனைத் தட்டைப் பெற்றுக் கொண்டார். பர்வதத்தின் முறை வந்த போது கொடுத்து விட்டு 'காவ்யா, ரோகிணி நட்சத்திரம்' என்றாள். பக்கத்தில் நின்றிருந்த பக்கத்து வீட்டு சந்தான லட்சுமி.

"என்ன பர்வதம் கோவிலுக்குப் போகலாம் வாக்கான்னே. வந்தால் காவ்யா பெயருக்கு அர்ச்சனை செய்கிற. சரிவிடு. பெத்த மனசு பித்து. பிள்ளை மனசு கல்லுன்னு அவள் பாட்டுக்கு காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போயிட் டாலும் உன் மனசு பதறத்தானே செய்யும். ஆனால் இன்னைக்குன்னு ஏன் உன் மகள் பெயருக்கு அர்ச்சனை

செய்கிற? இன்னைக்கு அவள் பிறந்த நாளுமில்லையே. இருபது வருசமா ஒரே தெருவில் பக்கத்து பக்கத்து வீடுகளில் குடியிருக்கிறோம். இது கூட எனக்குத் தெரியாதா?'' என்று வினவினாள்.

பர்வதம் புன்னகையுடன், ''ஆமாக்கா. இன்று காவ்யாவின் பிறந்த நாள் இல்லை. அவளுக்குன்னு ஒரு குழந்தை பிறக்கப் போகுதுன்னு செய்தி தெரிஞ்ச நாள். எங்க காவ்யா உண்டாகியிருக்காளாம்'' என்றாள்.

''அப்படியா சந்தோசம். ஆமாம் உனக்கெப்படித் தெரியும்?''

''காவ்யாதான் வாரத்திற்கு இரண்டு தடவை லெட்டர் போடுகிறாளே.''

''அதுதான் சரி. வீட்டில் ஆம்பளைகள் முறுக்கிக்கிட்டு இருக்கிறாப்புல பொம்பளைங்க நாமளும் இருக்க முடியாதுல்ல. உன் மகளுக்குப் பத்திரமாய் எப்படி இருக்கணும்னு எழுதிப் போட்டு விடு.''

''போடணும்க்கா. ஆனால் என் கையால் ஆக்கிப் போட்டு என் தங்கத்தை உள்ளங்கையில் வைத்துத் தாங்க எனக்குக் கொடுப்பினை இல்லாமப் போச்சே.''

''யாருடி இவ... நேரம் காலம் புரியாம பேசிக்கிட்டு. இப்பத்தான் அவ உண்டாகியிருக்கான்னு சொல்லியிருக்க இல்ல. நாளைக்குப் பேரனோ, பேத்தியோ பிறந்து விட்டால் உன் புருசனும், மகனும், தாத்தன், தாய்மாமன் சீர் செய்ய பறந்து போய் கூட்டி வந்து விடுவார்கள். பச்சை மண்ணு முகத்தைப் பார்த்தால் பத்தும் பறந்து போய் விடுங்கறப்போ கோபம் மட்டும் எப்படி நிலைச்சிருக்கும்.''

அர்ச்சகர் தீபாராதனை தட்டைக் காட்டி காந்திமதி அம்மனுக்கும் நெல்லையப்பருக்கும் ஆரத்தி எடுத்தார். ஆரத்தி ஒளியில் அம்பாளின் கண்களில் அருள் பாலிக்க அம்மையப்பனை வணங்கிய இருவரும் கோவிலை வலம் வந்த பின் சிறிது நேரம் அமர்ந்து விட்டு வீடு திரும்பினர்.

வீட்டில் ராமநாதனிடமும், ஆனந்தனிடமும் விபூதி பிரசாதத்தைக் கொடுத்து விட்டு அமர்ந்தாள் பர்வதம்.

''என்ன பர்வதம் நாம திட்டம் போட்டபடி சந்தான லட்சுமியிடம் பேசினாயா?''

''ஆமாம் பேசினேன். அவளே 'நாளைக்கு குழந்தை பிறந்தா எல்லாரும் ஒன்னாச் சேர்ந்திடுவாங்கன்னு' ஆறுதல் சொன்னா.''

''இப்படியே பேச்சைக் கொண்டு போ. நாளை பின்னே காவ்யா குழந்தையோடு நம்ம வீட்டுக்கு வரப் போக ஆரம்பிக்கும்போது யாரும் வம்பு பேச மாட்டாங்க.''

''ம்ம்... ஆனால்... அந்த அம்பாசமுத்திரம் பெண் வீட்டாருக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க. நாம ஆனந்தனுக்கு அந்தப் பொண்ணைப் பாத்து சம்மதம்ன்னு சொல்லி ஏழெட்டு மாதமாகிப் போச்சுல்ல. நிச்சயம் பண்ணி தேதி குறிக்க எப்ப வர்றீங்கன்னு போன் மேல போன் வருதே. நம்ம காவ்யா காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டான்னு மத்தவங்களுக்கு சொன்னது போல் அவங்களுக்கும் சொல்லியாச்சு. இது ஊர் உலகத்தில் நடக்கிற சமாச்சாரம்தானே. நம்ம வீட்டுப் பொண்ணு கல்யாணத்த நாம ஏத்துக்கிட்டு பொண்ணு, மாப்பிள்ளையை முறைப்படி கல்யாணத்துக்கு அழைச்சிரலாம்ன்னு அவங்க வீட்

டில் சொல்றாங்க. அதைப் பத்தி ஒரு பேச்சையில்லையே.

''நாம என்ன சொல்ல பர்வதம். ஆனந்தன் இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்கிறானே.''

''என்னலே ஆனந்தா. அப்பா இப்படிச் சொல்லுறாரே.''

''ஆமாம்மா. காவ்யா தன் புருசன் புள்ளையோடு நம்ம வீட்டுக்கு வரட்டும் அவள் வந்து நாத்தனார் முடிச்சை என்னைக்குப் போடுறாளோ அன்னைக்கு நான் தாலி கட்டுகிறேன்.''

''ஏண்டா ஆனந்தா அப்படிச் சொல்றே. இப்பவே நாம் சென்னைக்குப் போய் அவளைப் பார்ப்போம். மாப்பிள்ளை கிட்ட சமாதானம் பேசுவோம்.''

''இப்ப வேண்டாம்பா. காவ்யா உண்டாகி இருக்கிற சமயத்தில் பதட்டம் வேண்டாம். அசோகன் நம்மைப் புரிந்துக்குவார்ன்னு என்ன நிச்சயம்? மாறாக நிலைமை மோசமாகி விட்டால்... கர்ப்பிணிப் பெண்ணுக்கு மனச் சங்கடம் வேண்டாம்.''

''அது சரிடா. அப்போ அந்த அம்பாசமுத்திரம் பெண்...?''

''இன்னும் ஒருவருடம் ஆகும்ன்னு சொல்லுங்க. காத்திருந்தால் காத்திருக்கட்டும். இல்லைன்னா நல்ல இடம் வந்தால் அவங்க பெண்ணைக் கொடுத்து விடட்டும்.''

அப்போது போன் அடிக்க பர்வதம் எழுந்து போனை எடுத்தாள். போனின் வாய்ப் பகுதியை மூடியவாறு ராமநாதனிடம், ''அவங்கதான்'' என்றாள். அந்தப் பெண்ணின் மீது ஆனந்தனுக்கு எவ்வளவு அன்பு என்று ராம

நாதனுக்குத் தெரியும். இருந்தும் இப்படி ஒரு பதில் சொல்ல வேண்டி வந்து விட்டதே என்று வருந்தியபடி அவர் எழுந்து போனின் அருகே செல்ல ஆனந்தன் மன வேதனையுடன் உள்ளே சென்று விட்டான். சற்று நேரத்தில் கதவு தட்டப்பட எழுந்து சென்றான்.

''அந்தப் பெண் அகிலா லைனில் இருக்குப்பா. உன் கூட பேசணுமாம்'' என்றார் ராமநாதன். அகிலா ஆனந்தனுக்கு பார்த்து வைத்திருந்த பெண்.

ஆனந்தன் யோசனையுடன் வந்து போனை எடுத்துப் பேசினான்.

''ஹலோ ஆனந்தன் பேசுகிறேன்'' என்றதும் மறு முனையில் அந்தப் பெண் அகிலா பேசினாள்.

''கல்யாணத்தை ஒரு வருடம் கழித்துத்தான் வைக்க முடியும். காத்திருக்க விருப்பமில்லைன்னா வேறு யாருக்காவது கட்டிக் கொடுத்திடுங்கன்னு சொன்னீங்களாமே.''

''ஆமாம். அதுக்கென்ன இப்ப? உங்க வீட்டில் அவசரப்பட்டால் யாருக்கு...''

''பொறுங்க. எங்க வீட்டில் அவசரப்பட்டால்ன்னு தானே இப்பவும் உங்க வாயில் வருது. அகிலா இஷ்டப் பட்டால்ன்னு ஏன் வரலை...?''

ஆனந்தன் மௌனம் சாதிக்க அகிலா தொடர்ந்து பேசினாள்.

''ஏன்னா நான் இஷ்டப்பட மாட்டேன்னு உங்களுக்குத் தெரியும். இப்ப என்ன? நான் உங்க வீட்டுக்கு முறைப்படி

உங்க மனைவியாகவும் உங்களைப் பெத்தவங்களுக்கு மருமகளாகவும் வர ஒரு வருடம் காத்திருக்கனும் அவ் வளவுதானே! இதைச் சொல்லலாமே. உங்களுக்காக நான் இந்த ஜென்மம் பூராவும் காத்திருப்பேனே. அதை விட்டு விட்டு ஏன் வார்த்தைகளைக் கொட்டனும்? உங்கள் தங்கை நாத்தனார் முடிச்சு என்றைக்கு போடுகிறாளோ அன்று நீங்கள் தாலி கட்டுங்கள். நான் கழுத்தை நீட்டு கிறேன். இனி என் வீட்டிலிருந்து யாரும் நம் கல்யாண விஷயமாகப் போன் பண்ணி உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டார்கள். ஆனால் நான் தினமும் போன் பண்ணுவேன் உங்களுடன் பேசாமல் என்னால் ஒரு நாள் கூட இருக்க முடியாது."

ஆனந்தனின் கண்கள் கலங்கின, "அகிலா நான் கொடுத்து வைத்தவன்" என்றான்.

"என்னை விடவா?" என்று பதில் கேள்வி கேட்டு விட்டு அவள் போனை வைத்தாள். மகனின் ஒளிர்ந்த முகம் உணர்த்திய சேதி புரிய ராமநாதன் மகிழ்ச்சியுடன்

"பர்வதம் பாயசம் வை. நம் மருமகளும் நமக்கு நல்ல சேதி சொல்லியிருக்கு" என்றார். பர்வதம் மகிழ்வுடன் உள்ளே சென்றாள்.

காலிங் பெல் சத்தம் கேட்டதும் காவ்யா கதவைத் திறந்தாள். உமா கையில் குழந்தையுடன் நின்றிருக்க மங்களம் கையில் பெரிய சில்வர் தூக்குடன் நின்றிருந் தாள். பின்னால் தியாகராஜன் பெரிய எவர்சில்வர் டப் பாவைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

"அண்ணா. என்னண்ணா இது நீங்க போய் சுமந்துக் கிட்டு இங்கே கொடுங்க" என்று காவ்யா வாங்க முயல.

"விடும்மா. அவன் தானே சுமந்து வரணும். தங்கைக்கு வளைகாப்புன்னா அண்ணன்காரன்தானே செய்யணும். சுமக்கட்டும்" என்றபடி மங்களம் உள்ளே வர உமா குழந்தையை சோபாவில் உட்கார வைத்து விட்டு முந் தானையை இழுத்துச் செருகியபடி சமையலறையில் நுழைந்தாள்.

"உட்காரு உமா. உனக்கும் அம்மா, அண்ணனுக்கும் காபி போடுகிறேன்" என்று காவ்யா கூற.

"நீ போய் உன் அம்மாவோடும், அண்ணனோடும் உட்கார். குழந்தையைப் பார்த்துக்கிட்டால் போதும்" என்றபடி அவள் மளமளவென்று வேலையை ஆரம்பிக்க மெஸ் மாமி ஆர்ப்பாட்டமாய் உள்ளே நுழைந்தாள்.

"என்னடி பெண்டுகளா? என்ன பண்ணிக்கிட்டு இருக்கேள். சித்ரான்னம் தயார் செய்ய இந்த மாமியை அடிச்சுக்க ஆள் இருக்கா? என்னடி உமா சாமானெல்லாம் வாங்கியாச்சா? அட இங்கே இத்தனை பைகளில் நிரப்பி வாங்கியிருக்கியே கெட்டிக்காரிதான்."

"மாமி. நேற்றே சாமானையெல்லாம் சொல்லச் சொல்ல வாங்கி வந்து இறக்கி வைத்து விட்டுப் போயிட்டாங்க" என்று காவ்யா குற்றம் சாட்ட.

"ஏம்மா. பிறந்த வீட்டிலிருந்துதான் எல்லா சாமானும் வாங்கி வரணும்மா. அதுதான் முறை. உப்பு புளி கூட நாங்கதான் கொண்டு வரணும்மா" என்றாள் மங்களம்.

காவ்யாவின் மனம் வருந்தியது. ஒரு வார்த்தை சொன்னால் திருநெல்வேலியிலிருந்து ஊரையே இறக்குமதி செய்து சென்னை நகரையே கலக்கி வளைகாப்பு பண்ணி விடுவார்கள் அவளது பிறந்த வீட்டில். ஆனால் பெற்ற மகளின் நல்வாழ்வுக்காக அவர்கள் கெட்ட பெயரை ஏற்றுக் கொண்டு விலகியிருக்கிறார்கள் என்று இது மாறும்? அவள் முகம் வாடியதைக் கண்ட மங்களம்,

"காவ்யா நான்தான் உன் அம்மா. தியாகுதான் உன் அண்ணன். ஒரு குறைவும் வராமல் நாங்க சீரும் சிறப்புமா உனக்கு முறை செய்வோம். யாரும் இல்லைன்னு வருந்தக்கூடாது" என்றாள்.

காவ்யாவின் மனம் நெகிழ்ந்தது. யாருமில்லையென்று அவள் நின்றபோது அணைத்து, இல்லத்தில் தங்க வைத்து அசோகனுக்கு மணம் முடித்து வைத்து இன்று வளைகாப்பும் செய்ய வந்திருக்கும் இந்தத் தாய், பெற்ற தாயை விட மேலானவள் அல்லவா? அவள் மனம் நோகலாமா? பெற்றவர்களும் உடன் பிறந்தவனும் நல்லவர்களாகவே இருக்கட்டும். அது இவர்கள் யாருக்கும் தெரிந்தாலும் சரி. தெரியாவிட்டாலும் சரி. அதைக் காலம் முடிவு செய்யட்டும். இன்று நன்றி மறவாதவளாக கணவனைச் சேர்ந்தவர்கள் மனது போல் வாழ வேண்டும் என்ற முடிவோடு,

"நீங்களெல்லாரும் இருக்கும்போது யாருமில்லைன்னு நான் நினைப்பேனா அம்மா. நீங்கள் சொன்னபடி கேட்கிறேன்" என்றாள் சாதுப் பெண்ணாக.

அழைத்திருந்த விருந்தினர், அக்கம் பக்கம் வீட்டினர், டிராவல் ஏஜன்ஸியில் வேலை பார்த்தவர்களின் வீட்டுப் பெண்கள் அனைவரும் வந்துவிட நல்ல நேரதில் மணப் பெண் போல் தலைப்பின்னலில் பூத்தைத்து பட்டுச் சேலையுடுத்தி கழுத்து, கைகள் கொள்ளாத நகைகள் அணிந்திருந்த காவ்யாவை ஹாலின் நடு மையத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர வைத்து வளை யல்கள் அடுக்கினார்கள். மருதாணியிட்டிருந்த கைகளில் நிறைய வளையல்கள் குலுங்க கணவனை நிமிர்ந்து பார்த்தாள் காவ்யா. மனைவியின் தாய்மைக் கோலத்தில் மனம் லயித்தவன் வைத்த கண் வாங்காமல் மனைவியை ரசிக்க விழா இனிதே முடிந்தது. சாஸ்திரப்படி அன்று பிறந்த வீட்டுக்கு அழைத்துப் போக வேண்டுமென்பதால் மங்களம் குடும்பத்தார் காவ்யாவை அன்று அவர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்று விட மறுநாளே அசோகன் போய் கையோடு அழைத்து வந்து விட்டான்.

அடுத்த ஒரு மாதத்தில் அசோகனுக்கு சிங்கக் குட்டி போல் ஒரு மகன் பிறந்தான். அசோகன் சிறகேயில்லாமல் வானில் பறந்தான்.

## 24

பூவோடு பொட்டும் தந்தான்
பூவைக்கு வாழ்வும் தந்தான்
தன் நட்பை அவள் உறவாய்
தாரைதான் வார்த்துக் கொடுத்தான்

**அவள் உறவை தன்உறவாய்**

**ஏற்றமுடன் ஏற்றுக் கொண்டான்**

**புண்ணான மனங்களெல்லாம்**

**பொன்னான மனங்களானதற்கு**

**நிலவே நீ சாட்சி**

அசோகனின் வீட்டு முன்னால் கார் வந்து நின்றது. அசோகனும், தியாகராஜனும் முன் கதவைத் திறந்து கொண்டு இறங்கினார்கள். அசோகன் காரின் பின் கதவைத் திறந்து விட காவ்யா இறங்கி உள்ளே அமர்ந் திருந்த மங்களத்தின் கையிலிருந்த குழந்தையை வாங்கிக் கொண்டாள். மங்களம் இறங்க,

''காவ்யா குழந்தையோடு நில்லுடி'' என்றவாறு மெஸ் மாமி ஆரத்தித் தட்டோடு வந்து ஆரத்தி எடுத்து காவ் யாவையும், குழந்தையையும் அழைத்துச் சென்றாள். மாடியேறும்போது அசோகன் வந்து குழந்தையை வாங்கிக் கொள்ள,

''டேய் அப்பா. ஸீன் போடாதேடா'' என்று அவன் முதுகில் அறைந்தான் தியாகு.

''குழந்தையை வைத்துக்கிட்டு எப்படிடா படி ஏறு வாள்'' என்றான் அசோகன் கரிசனையாக. எல்லோரும் உள்ளே சென்று அமர்ந்தவுடன் மங்களம்,

''அசோகா. வீட்டு வேலைக்கு ஆள் வச்சிருக்கே. சரி. கொஞ்ச நாள் சமையலுக்கு ஆள் வைத்து விடு. காவ்யா பச்சை உடம்புக்காரி'' என்றாள்.

''அதெல்லாம் ஆள் வந்தாச்சு. நம்ம மெஸ்ஸில் வேலை பார்த்தவள் தான். நல்லா சமைப்பாள். அங்கயற்கண்ணின்னு பேரு. கார்த்தாலேயே வந்து வேலையை ஆரம்பிச்சுட்டா. பிள்ளை குட்டியெல்லாம் பெற்று வளர்த்து கல்யாணமும் பண்ணிக் கொடுத்து பேரன் பேத்தியெல்லாம் பார்த்தவ. குழந்தைக்கு குளிப்பாட்ட காவ்யாவுக்கு பூண்டுக் குழம்புன்னு பத்திய சாப்பாடும் செய்வா. கோழிக் குழம்புன்னு உங்களவா அசைவ சமையலும் செய்து தூள் பரத்துவா'' என்றாள் மெஸ் மாமி.

''மாமி வாயில் கோழிக் குழம்புகிற பேர் வருகிறதா?'' என்று ஆச்சர்யமாய் வினவினான் தியாகராஜன். மங்களம் சிரித்தாள்.

''நெருப்புன்னா வாய் வெந்திடுமா? அசைவ சாப்பாடுன்னா அசோகன் பிளந்து கட்டுவான். அவனை என் பிள்ளையாண்டனா நினைக்கலியா? அவனுக்கு ஆன சமையலைச் செய்ய அதற்கான ஆளைத்தானே அனுப்ப முடியும்'' என்று மாமி சிரித்தாள். அனைவரும் குழந்தைக்கு புண்ணியாசனம் செய்ய தீர்மானித்து ஏற்பாடு செய்தனர். ஒரு மாதக் குழந்தையான அசோகனின் மதுரமான மகனுக்கு புண்ணியாசனம் செய்து 'ஸ்ரீதரன்' என்ற பெயரும் வைத்தனர். மனதிலிருந்த பிறந்த வீட்டுப் பாசத்தை மனதிலேயே புதைத்துக் கொண்டு வாழ்ந்தாள் காவ்யா.

ஒவ்வொரு நாளும் மகனின் வளர்ச்சி மாற்றங்களில் மனம் லயிப்பவள், 'இவனை எப்போது அம்மாவிடம் காட்டு

வோம். எப்போது அப்பா இவனைத் தூக்குவார்? அண்ணன் கைகளில் இவன் எப்போது ஊஞ்சலாடுவான்? என்ற ஏக்கம் அவள் மனதை அரித்துக் கொண்டிருந்தது.

பச்சைப் பசேலென்ற வயல் வெளியினூடே கார் போய்க் கொண்டிருந்தது. அசோகன் காரைச் செலுத்திக் கொண்டிருக்க மடியில் ஸ்ரீதரனை வைத்துக் கொண்டு காவ்யா அருகில் அமர்ந்திருந்தாள். பின் சீட்டில் மெஸ் மாமியும், வீட்டு சமையல் செய்யும் அங்கயற்கண்ணியும் அமர்ந்திருந்தனர். ஸ்ரீதரனின் முதல் வருடப் பிறந்த நாளைக் கொண்டாடி விட்டு அசோகனின் பூர்வீக கிராமத் திற்கு ஸ்ரீதரனுக்கு குல தெய்வக் கோவிலில் முதல் மொட்டை போட வேண்டுமென்பதற்காக மொட்டை யெடுத்த பின் அங்கேயே காது குத்தி விட முடிவு செய்து கிளம்பி வந்திருந்தனர். இரண்டு நாள்கள் அவர்களது கிராம வீட்டில் அவர்கள் தங்கி இருப்பது, இரண்டு நாள்கள் சென்ற பின்னர் மூன்றாம் நாள் தியாகராஜனின் குடும்பத்தார் சென்னையிலிருந்து வந்து அவர்களுடன் சேர்ந்து கொள்வது; நான்காம் நாள் குல தெய்வக் கோவிலில் மொட்டையெடுத்து காது குத்தி விடுவது என்று பேசி முடிவு செய்திருந்தனர். கிராமத்தில் கார் நுழைந்தது. கிராம ஜனங்கள் 'யார் புதிதாக ஊருக்குள் வந்திருக்கிறார்கள்?' என்று வியப்புடன் பேசியவாறு வேடிக்கைப் பார்க்கக் கூடிவிட அசோகனின் பெரிய பூர்விக கிராமத்து வீட்டின் முன் கார் சென்று நின்றது.

கார் கதவைத் திறந்து இறங்கிய அசோகனைக் கண் டதும்,

"அட நம்ம வேலாயுதத்தின் பேரன் நாராயணனின் மகன் வந்திருக்கான் போல இருக்கே" என்று ஒரு பெரியவர் கூற உறவுக்காரர்கள் சூழ்ந்து கொண்டனர்.

"ஏன் ராசா அம்மாப்பா போயிட்டால் இந்த ஊருமா இல்லாமப் போயிருச்சு. கண்காணாமலே இத்தனை நாள் இருந்திட்டயே ராசா" என்று ஒரு கிழவி கூறினாள்.

"இது யார் உன் பெண்டாட்டியா? கண்ணுக்கு அழகா இருக்கம்மா" என்று ஒரு பெண் கூறி அருகில் வந்து காவ்யாவின் முகம் பார்த்து திருஷ்டி கழித்தாள்.

"பையன் பிறந்திருக்கானா? வாடா ராசாப் பயலே! உன்னால தான் உன் அப்பன் பிறந்த மண்ணில் கால் வைத்திருக்கிறான்" என்று ஒரு பெண் கூறினாள்.

"எங்கே எந்தக் காட்டில் போய் பொழச்சாலும் பிள்ளை பிறந்திட்டா முதல் மொட்டை குல தெய்வம் கோவிலில் தான் போட வேண்டும். எந்தக் காட்டு ராசான்னாலும் குல தெய்வத்த தேடி வந்து தானே ஆகணும்" என்று ஒரு பொக்கை வாய் கிழவி கூற அங்கே நீண்ட நேரம் கலகலப்பு இருந்தது.

அசோகனின் பிறந்த வீடு பெரிதாக நிலா முற்றத் துடன் சுற்றுப் பக்க அறைகளோடு அமைந்திருந்தது. அன்ன பூரணி வந்தவுடன் சமையல் வேலையை குத் தகைக்கு எடுத்துவிட மெஸ் மாமி, காவ்யாவும் குழந்தை யும் தங்க ஏற்பாடுகளைக் கவனித்தாள். வீடு சுத்தமாக பராமரிக்கப்பட்டு இருந்தது. வீடு பூராவும் கிராமத்து மனிதர்களால் நிறைந்திருந்தது. அவர்களின் அன்பான

விசாரிப்பைக் கேட்ட அசோகனுக்கு தாய் தந்தையே வந்து விசாரித்தது போல் இருந்தது.

அது ஒரு நெகிழ்வான உணர்வு. ஒவ்வொரு மனிதரும் தங்கள் வேர்களை சந்திக்கும்போது அதை உணர்வார்கள். சென்னையில் அவன் அசோகன். டிராவல் ஏஜன்ஸி தைத்திருப்பவன் காவ்யாவின் கணவன். ஸ்ரீதரனின் தந்தை. ஆனால் இந்தக் கிராமத்தில் அவன் வேலாயுதத் தின் பேரன். நாராயணனின் மகன். பிறந்த ஊர் பெற்ற தாயின் மடி. அந்த மண்ணை நேசிக்காமல் அம்பானி முதல் அடிமட்ட மனிதர் வரை இருக்க முடியாது. அசோகன் அந்த உணர்வுக் கலவையில் சிக்கியிருந்தான். இரண்டு நாள்களும் காவ்யாவுடன் மகனை வீட்டில் மெஸ் மாமி பொறுப்பில் விட்டு விட்டு தோட்டம், வயல்களை யெல்லாம் காண்பித்தான். காவ்யாவும் அவனுடன் கைகோர்த்தபடி அனைத்தையும் ரசித்தாள்.

இரண்டு நாள்கள் கழித்து மூன்றாம் நாள் தியாக ராஜனின் குடும்பம் வந்து இணைந்து கொண்டது. விருந்து உண்டு பேசி மகிழ்ந்து வெகு நேரம் கழித்து முற்றத்தில் ஜமுக்காளம், பாய் விரித்து ஆண்கள் படுத்திருக்க சுற்று அறைகளில் பெண்கள் உறங்கினர்.

நான்காம் நாள் அதிகாலையில் அங்கயற் கண்ணி அதிகாலையிலேயே காபியுடன் அனைவரையும் எழுப்பி விட எல்லோரும் சீக்கிரம் குளித்து உணவுண்டு கோவி லுக்குக் கிளம்பிச் சென்றனர். கோவிலில் ஊர் பெரிய வர்கள், மற்றும் உறவுக்காரர்களின் குடும்பத்தார் குழுமி யிருந்தனர். அசோகனின் மகனுக்கு மொட்டையெடுக்கக் கத்தியுடன் வந்த முடிவெட்டுபவர்,

''குழந்தைக்கு தாய்மாமன் எங்கே? தாய்மாமன் மடியில் உட்கார வைங்க'' என்று கூற, காவ்யா தியாகராஜனை அழைக்கத் திரும்ப,

''இதோ வந்து விட்டேன். என் மருமகனை என் மடியில் உட்கார வையுங்க'' என்றவாறு அங்கே போடப் பட்டிருந்த மனையில் அமர்ந்தது... தியாகராஜன் அல்ல... ஆனந்தன்!

''அண்ணா!'' என்று ஆனந்தக் கூச்சலிட்ட காவ்யாவை தோளோடு யாரோ அணைத்துக் கொள்ள திரும்பிப் பார்த்தாள். பர்வதம்...!

''அம்மா'' என்று கட்டிக் கொண்டவளின் தலையை யாரோ வருட நிமிர்ந்து பார்த்தாள். ராமநாதன்...!

''அப்பா'' என்று பாதம் பணிந்தாள் காவ்யா.

கோவிலுக்கு உள்ளே விரிக்கப்பட்டிருந்த ஜமுக் காளத்தை ராமநாதன் கொண்டு வந்திருந்த சீர்வரிசைத் தட்டுகள் நிரப்பின. மகளுக்கு நகைகள்.

பேரனுக்குத் தங்கத்தில் அரை ஞாண் கயிறு, தங்க வளையல்கள், சங்கிலி என்று அணிவகுத்து நின்றன பிறந்த வீட்டு சீர்வரிசைகள்.

காவ்யா தயக்கமாய் அசோகனைப் பார்க்க அவன் ஆதரவாய் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''நான் தான் அவர்களை வரச் சொன்னேன்'' என்று அவன் கூற அவள் திக்கு முக்காடிப் போனாள்.

''காவ்யா! பிறந்த மண்ணில் கால் வைத்ததற்கே எனக்கு இவ்வளவு ஆனந்தம் என்றால் பெற்றவர்கள், கூடப் பிறந்தவன் பாசத்தில் வளர்ந்த உனக்கு எப்படி இருந்திருக்கும். எல்லா மகிழ்ச்சியையும் உனக்குத் தந்து விட்டேன். உன் குடும்பத்தையும் உனக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டாமான்னு நினைச்சப்போதான் தாய் மாமன் மடியில் வைத்துத்தான் குழந்தைக்கு காது குத் தணும்கிற வழக்கத்தை ஊரில் சொல்லி உனக்குத் தகவல் தரச் சொன்னார்கள். தகவல் சொன்னதுதான் தாமதம். 'இப்பவே கிளம்பி வருகிறோம். நீங்கள் அழைக்கும் ஒரு வார்த்தைக்காகத்தான் காத்திருந்தோம்ன்னு சொல்லிட் டுக் கிளம்பியும் வந்திட்டாங்க'' என்றான் அசோகன்.

தாய்க்கு பிறந்த வீட்டை மீட்டுக் கொடுத்த காவ்யா வின் மகன் ஆனந்தமாய் தாய் மாமன் ஆனந்தனின் மடியில் அமர்ந்து மொட்டையெடுத்து காது குத்திக் கொண்டான்.

மாமனார், மாமியாரின் வேண்டுகோளுக்கு இணங்கி மனைவி மகனுடன் திருநெல்வேலிக்கு மறு வீடு சென் றான் அசோகன்.

அம்பாசமுத்திரத்திற்கு கணவனுடன் சென்று பூ வைத்து அகிலா ஆனந்தனின் திருமணத்தை உறுதி செய்து திரும்பி வந்தாள் காவ்யா.

சுபயோக சுபதினத்தில் முதல் இரண்டு முடிச்சுக்களை ஆனந்தன் போட மூன்றாவது முடிச்சான நாத்தனார் முடிச்சைப் போட்டு ஆனந்தன் அகிலாவின் திருமணத்தை நடத்தி வைத்தாள் காவ்யா.

பார்வதம், "எனக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள்" என்று பார்ப்பவர்களிடமெல்லாம் பெருமையாக்க் கூறி வந்தாள். அசோகன் இரண்டாவது மகனாம். அகிலா இரண்டாவது மகளாம்.

இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டே அவர்களது அன்பிற்கும், பாசத்திற்கும் சாட்சியான நிலவு நகர்ந்தது.

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in


நிலவே
நீ சாட்சி
முத்துலட்சுமி ரா